**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் பிர்க்காவுக்கு உட்பட்ட சார்பு நீதிமன்றத்திற்குத் தொடர்பான வழக்குகள் இப்போது ஆரணி (Sub-Court) சார்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றன. கலசப்பாக்கத்தில் அப்படி ஒரு நீதிமன்றம் தேவை என்று சொன்னால் அரசே, ஒரு முடிவு எடுத்து இந்த ஊரில் இந்த நீதிமன்றத்தை ஆரம்பிக்கலாம் என்பது அல்ல. வழக்குகளினுடைய தொகையைப் பார்த்து, தேவை என்று கருதினால் உயர் நீதிமன்றம் பரிந்துரையின்பேரில்தான், அரசு அங்கே ஒரு நீதிமன்றத்தை அமைக்க ஆவன செய்கிறது. எனவே, இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து அரசின் கவனத்தில் இருக்கிறது. உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி அவர்களின் பரிந்துரை கிடைத்தால், கலசப்பாக்கத்திலே ஆரம்பிப்பதிலே எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் முடிந்ததும், தீர்ப்பு நகல்கள் (Judgement copies) உடனடியாக வழங்குவதுபோல், மாவட்டங்களில் அமைந்துள்ள நீதிமன்றங்களிலும் இதேபோன்று வழக்குகள் முடிந்ததும் தீர்ப்பின் நகல்கள் (மணியடிக்கப்பெற்றது) உடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது. மூலக்கேள்வி சப்-கோர்ட் தொடங்கப்படுமா என்பது பற்றி.

[2007 ஏப்ரல் 27

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** சம்பந்தப்பட்டதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சம்பந்தப்பட்டது, இதுவா?

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாவட்டங்களில் அமைந்துள்ள நீதிமன்றங்களிலும் இதேபோல் தீர்ப்புகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே மன்றத்தில் அறிவித்திருக்கிறோம். புதிய நீதிமன்றங்கள் கட்டுவதற்காகவும், இருக்கின்ற நீதிமன்றங்களிலே, infrastructure அதிகம் செய்வதற்காகவும், கணினிமயம் ஆக்குவதற்கும், சுமார் ரூ.270 கோடி முதல் முறையாக முதல்வர் அவர்கள், இந்தச் சட்டத் துறைக்கு ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். எனவே, அந்தப் பணத்தை வைத்துக்கொண்டுதான் உயர் நீதிமன்றம்தான் எந்தெந்த இடத்தில் எதைச் செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்து மாநில அரசும் உயர் நீதிமன்றத்துடன் விவாதித்து, மாநில அளவிலும், மாவட்டங்கள் அளவிலும் இப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா என்பதைக் கலந்தாலோசித்து, முடியும் என்றால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை பேரூராட்சியில் இயங்கிக் கொண்டிருக்கும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் மிகவும் பழுதடைந்த நிலையில் அங்குள்ள வழக்கறிஞர்களே அதைச் சரி செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால் மிகவும் பழுதடைந்த அந்தக் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை புதிய கட்டடத்தில் அமைத்துத் தருவதற்கு இந்த அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல நீதிமன்றங்கள் பழுதடைந்த



2007 ஏப்ரல் 27]

நிலையில்தான் இருக்கின்றன. அப்படிப்பட்ட நீதிமன்றங்களைக் கட்டுவதற்காக சென்ற ஆட்சியில் 2 கோடி ரூபாய்கூட ஒதுக்கப்படவில்லை. ஆனால், இப்போது கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் 76 கோடி ரூபாய் புதிய நீதிமன்றக் கட்டடங்களுக்கு ஒதுக்கியிருக்கிறோம். பல மடங்கு அதிகமாக்கி இருக்கிறோம். 70, 75 கோடி ரூபாய் என்று சொன்னால் 5 மடங்கு, அதாவது 5 ஆல் பெருக்கினால் எவ்வளவு தொகை வருகிறதோ அந்தத் தொகைக்கு உரிய கட்டடங்களை எடுத்துக் கொள்ளலாம். ஆகையினால், பரவலாக இந்த முறை, பழைய நீதிமன்றங்களைப் புதுப்பிக்கவும் அல்லது பழுதுபார்ப்பதற்கும் முக்கிய நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுகுறித்து அதிகக் கவலை கொண்டு இருப்பாரேயானால் ஒரு கடிதம் எனக்கு எழுதித் தருவாரேயானால், உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரையோடு அது செப்பனிட்டுத் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி நகரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் உள்ளது. இங்கு சார்பு நீதிமன்றம் அமைப்பதற்குப் போதுமான இடவசதியும் உள்ளது. திருத்தணி, பள்ளிப்பட்டு, ஆகிய இடங்களில் உள்ள நீதிமன்றங்களில் இருந்து திருவள்ளூர் சார்பு நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு பள்ளிப்பட்டிலிருந்து திருவள்ளூருக்கு 90 கிலோ மீட்டரும், திருத்தணியிலிருந்து திருவள்ளூர் சார்பு நீதிமன்றத்திற்கு 45 கிலோ மீட்டர் தூரமும் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. திருத்தணியிலே இருக்கின்ற ஒருங்கிணைந்த நீதிமன்றத்திலே சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இப்போது நிலுவையிலே உள்ளது. எனவே, அந்தப் பகுதி மக்களுடைய நலனைக் கருத்தில்கொண்டு, திருவள்ளூருக்கு 90 கிலோ மீட்டர் செல்வதையும் 45 கிலோ மீட்டர் செல்வதையும் தடுப்பதற்கு அங்கே திருத்தணி நகரத்திலேயே அந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திலே சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கை நியாயமானது. ஆனால் அதுகுறித்து அவர் சொன்னார், அம்மா ஆட்சியிலே ஆய்விலே இருந்தது என்று. அது ஆய்வில் இருந்ததாகத்

தெரியவில்லை. காரணம், அப்படி ஆய்விலே இருந்திருந்தால் உயர் நீதிமன்றம் இந்த முறை எங்களுக்கு அனுப்பிய அந்த recommendation-ல் இருந்து எடுத்துக்கொள்ளலாம் என்று அவர்கள் பரிந்துரை செய்தார்களே, அதிலே செய்திருக்க வேண்டும். ஆகையினாலே, அவர்கள் ஆய்விலே இல்லை. ஆனால், நீங்கள் இப்பொழுது சொன்னதற்குப் பிறகு அரசு அதை ஆய்விலே எடுத்துக் கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவியிலே இயங்கி வருகின்ற நீதிமன்றங்களுக்கு எத்தனையோ ஆண்டுகளாக இடம் ஒதுக்கப்பட்டும் இதுவரை யாரும் அதிலே அக்கறை எடுத்துக் கொண்டு கட்டடம் கட்டித் தருவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. இந்த அரசு கண்டிப்பாக கட்டித்தரும் என்று நம்பிக்கையோடு இருக்கிறோம். அதோடு வக்கீல் சங்கத் தலைவர்கள் எல்லாம் அமைச்சரை திருநெல்வேலியிலே வந்து பார்த்து மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். நானும் வெட்டுத் தீர்மானம் எல்லாம் கொடுத்திருக்கிறேன். இந்த ஆண்டு எப்படியாவது அந்த நீதிமன்றங்களுக்குக் கட்டடம், புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பீர்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த ஊர்களில் கட்டடங்கள் கட்டுவது என்பதை ஏற்கெனவே மானியக் கோரிக்கை வந்த நேரத்தில் விவரமாக நாங்கள் தெரிவித்திருக்கிறோம். புதியதாகக் கட்டடங்கள் தேவை என்று சொன்னால் அவற்றை உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரையின்பேரில்தான் அரசு செய்யும். அங்கே நான் வந்த போது அங்கேயிருக்கிற வழக்கறிஞர்கள் என்னிடத்திலே மனுக்களைத் தந்திருக்கிறார்கள். அவற்றை உயர் நீதிமன்றத்திற்கு நான் அனுப்பி வைத்திருக்கிறேன். இந்த விவாதத்தில் எப்பொழுதுமே எந்தச் செயலைச் செய்தாலும், Law and Justice-ல் நாங்களாக ஒரு Suo motu-ஆக ஒரு முடிவு எடுக்க முடியாது. உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையைப் பெற்றுதான் நாங்கள் இதைச் செய்ய முடியும். ஆகையினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நான் அன்றைக்கே நீதிபதிகளிடத்திலே தந்திருக்கிறேன். அதுகுறித்து அரசு கவனத்தில் கொண்டு தக்க நேரத்தில் தக்க முடிவு எடுக்கும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் மகளிர் நீதிமன்றம் இல்லாத காரணத்தினால், மகளிர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், மகளிருக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும், மகளிர் நீதிமன்றத்தின் அவசியம் கருதி, அம்மாவட்டத்தில் தொடங்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**144—**

## அறிவியல் மையம்

***8705—திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியில் கோளரங்கம், அறிவியல் பூங்கா, மரபுசாரா எரிசக்திப் பூங்கா மற்றும் சுற்றுச்சூழலியல் காட்சிக்கூடம் உள்ளடக்கிய அறிவியல் மையம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதியில் கோளரங்கம், அறிவியல் பூங்கா, மரபுசாரா எரிசக்திப் பூங்கா மற்றும் சுற்றுச்சூழலியல் காட்சிக்கூடம் உள்ளடக்கிய அறிவியல் மையம் ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

[2007 ஏப்ரல் 27

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியிலோ அல்லது மாவட்டத் தலைநகராக இருக்கின்ற திருவண்ணாமலை பெருந்திட்ட வளாகத்திலேயோ கோளரங்கம், அறிவியல் பூங்கா, மரபுசாரா எரிசக்திப் பூங்கா, அறிவியல் மையம் தொடங்குவதற்கு அரசின்மூலமாக ஆய்வு இல்லாவிட்டாலும், மேற்கு வங்கத்திலே இருப்பதைப்போல தனியார் துறை கூட்டுறவின்மூலம் சயின்ஸ் சிட்டி பல்வேறு பகுதிகளிலே அமைக்கப்படுவதைப்போல அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சென்னை, திருச்சி ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே கோளரங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. வேலூரில் ஒன்று அமைக்கப்பட்டு சுற்றுச்சூழல், தொழிற்சாலை, தோல் தொழில்நுட்பம், கண்டுபிடிப்புகள் பற்றிய காட்சிக்கூடம் ஆகியவற்றை உள்ளடக்கி ஒரு அறிவியல் மையம் அங்கே உருவாக்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆரணியைப் பொறுத்தவரையில் பக்கத்திலேயே இருக்கிறது. திருவண்ணாமலையும் அதன் பக்கத்து மாவட்டம்தான். அங்கேயிருந்து 50, 60 கிலோமீட்டரில்தான் வேலூர் இருக்கிறது. ஆகவே, தனியார்கள் இதுபோன்று தொடங்குவதற்கு முன்வருவார்கள் என்றால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன்.

**திரு. கோ. ஐயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரம், வரலாறு போன்ற பாடப் பிரிவுகளில் பயிலும் மாணவ மாணவிகள் தமிழில் பயின்றால் அவர்களுக்குத் தமிழ் ஆர்வத்தை வளர்க்கின்ற விதமாக அரசு வருடத்திற்கு 500 ரூபாய் ஊக்கத் தொகை வழங்குகின்றது. ஆனால், பி.ஏ. இலக்கியத்தைத் தமிழிலே தானாக முன்வந்து ஆர்வத்துடன் பயில்கின்ற மாணவ மாணவிகளுக்கு இந்த உதவித் தொகை வழங்குவதில்லை. தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர்



2007 ஏப்ரல் 27]

அவர்களின் நல்லாட்சியில், அவர்களுக்கும் இந்த உதவித் தொகை வழங்கி உதவுவதற்கு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிப்பது என்பது வேறு, தமிழை இலக்கியப் பாடமாகப் படிப்பது என்பது வேறு. எனினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற இந்தப் பரிந்துரையைத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் தொடங்கப்படவிருக்கிற அறிவியல் பூங்காவிற்கு இப்போதுதான் அவர்கள் கடைக்கால் எடுக்கக்கூடிய பணியைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதனுடைய திட்ட மதிப்பீடு என்ன? அதைச் செயல்படுத்துகிறவர்கள் யார்? மத்திய அரசினுடைய பங்களிப்பு இதில் ஏதாவது உண்டா? அங்கு கட்டப்படுகிற அந்த அறிவியல் பூங்கா ஒரு சொசைட்டியின் மூலமாகக் கட்டப்படுவதாகச் சொல்கிறார்கள். அங்கு என்னென்ன வசதிகள் இந்த அறிவியல் பூங்காவில் கிடைக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், வேலூரில் மாவட்ட அளவிலான மாவட்ட அறிவியல் மையம் ஒன்றினை ரூபாய் 230 இலட்சம் செலவில், அரசின் நிதியுதவியுடன், வருகிற நிதியாண்டு 2007-2008-லேயே கட்டி முடிப்பதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதிலே சுற்றுச்சூழல் கேலரி-Environment Gallery, தொழிற்சாலை கேலரி-Gallery on Industry, தோல் தொழில்நுட்ப கேலரி-Gallery on Leather, கண்டுபிடிப்புகள் பற்றிய காட்சிக் கூடம்-Hall of Discovery ஆகிய நான்கும் இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் அமைந்திருக்கின்றன.

[2007 ஏப்ரல் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**145—**

### சொந்தக் கட்டடம்

***12739—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரத்தில் பணிமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஒட்டன்சத்திரத்தில் சில நிலங்களின் விவரம் சேகரிக்கப்பட்டுள்ளன. அவற்றைப் போக்குவரத்துக் கழக நிலத் தேர்வுக் குழு தேர்விற்குப் பின்னர் நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கான கோரிக்கை நமூனாக்கள் உரிய படிவத்தில் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கப்பட்டு நில ஆர்ஜித நடவடிக்கைக்குப் பின், விரைவில் அவ்விடத்தில் பணிமனை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரத்திலே 1980 ஆம் ஆண்டு முதல் அந்தப் பணிமனை வாடகை இடத்தில் இயங்கி வருகிறது. அங்கே அந்தப் பணிமனையிலிருந்து சுமார் 25 நகரப் பேருந்துகளும், 15 புறநகர் பேருந்துகளும் தினந்தோறும் இயங்கி வருகின்றன. அந்தப் பணிமனையானது சுமார் 80 சென்ட் அளவிலே சிறிய இடத்தில் அமைந்திருப்பதால் அந்த இடத்தில் ஒரே நேரத்தில் 40 பேருந்துகளையும் நிறுத்தி, பராமரிக்க முடியாத சூழ்நிலை உள்ளது.



2007 ஏப்ரல் 27]

தினந்தோறும் 15 பேருந்துகளை வெளியில் நிறுத்தித்தான் பராமரிக்கிறார்கள். அந்தப் பேருந்துகளுக்குப் போதுமான பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு தன்னுடைய பதிலுரையிலே ஒட்டன்சத்திரத்திலே நிலத்தின் விவரம் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும், போக்குவரத்துத் தேர்வுக் குழு நிலம் தேர்வு செய்த பின்னர் அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உரிய கோரிக்கை அனுப்பப்பட்டு நிறைவேற்றித் தரப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அதற்குப் போதுமான நிதியை ஒதுக்கி இந்த ஆண்டே பணிமனை அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் கிராமம் புல எண் 40/1 மற்றும் 40/2 மூன்று ஏக்கர் 61 சென்ட் நிலத்தில் பணிமனை கட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நில எடுப்பு அறிக்கைகள் நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்ட காரணத்தால் அது காலாவதியாகிவிட்டது. தற்போது ஒட்டன்சத்திரத்தைச் சுற்றி மூன்று கிலோ மீட்டர் சுற்றளவிலே ஆறு மாற்று நிலங்கள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. விரைவிலே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அது அனுப்பிவைக்கப்படும். சட்டமன்ற உறுப்பினரும் உடன் இருந்து விரைவாக அந்த இடத்தைப் போக்குவரத்துக் கழகத்திற்கு அளித்தால் உடனடியாக அந்தப் பணிமனையை இந்த ஆண்டே தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மேலாண்மை இயக்குநர்கள் மதுரை, கும்பகோணம், சேலத்தினைச் சேர்ந்த மூன்று மேலாண்மை இயக்குநர்கள் சில மாதங்களுக்கு முன்பாக ஒட்டன்சத்திரத்திற்கு வந்து பணிமனை அமைப்பதற்கான இடங்களைத் தேர்வு செய்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினருடன் இருந்து அந்த இடத்தை வாங்கித்தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அரசு நிர்ணயம் செய்கின்ற விலைக்கு கண்டிப்பாக நான் வாங்கித் தருவதற்கு

[2007 ஏப்ரல் 27

முயற்சி செய்கின்றேன். அந்தப் பணிமனையை அமைப்பதற்கு எவ்வளவு நிலம் தேவைப்படுகிறது என்பதை அறிவதுடன், எனது ஓட்டன்சத்திரம் பகுதியைப் பொறுத்த அளவிலே இப்போது வட்டாரப் போக்குவரத்து வாகன ஆய்வாளர் அலகு அலுவலகம் இல்லாமல், பழனிக்கும், திண்டுக்கல்லுக்கும் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அங்கே மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் ஒன்றை அமைத்துத்தருவதற்கு முன்வருவார்களா என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிமனை அமைப்பதற்கு குறைந்தபட்சம் நான்கு ஏக்கர் நிலமாவது தேவை. அந்தவகையிலே நீங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக அரசு நிலத்தைப் போக்குவரத்துக் கழகத்திற்கு அறிவிப்பீர்களேயானால் குறைந்தபட்சம் 40 இலட்சத்திலிருந்து கூடுதலாக 80 இலட்சம் வரை செலவு ஆகும். அந்தப் பணிமனையை உடனே அமைப்பதற்கு போக்குவரத்துக் கழகம் இந்த ஆண்டு செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் unit office வட்டாரப் போக்குவரத்துக் கழகத்தினுடைய கிளை அலுவலகங்கள் கடந்த ஆண்டு ஐந்து இடங்களிலே மாவட்டத்திலே, மாநிலத்திலே தொடங்கப்பட்டன. இந்த ஆண்டு ஐந்து இடங்களிலே தொடங்கப்பட்டிருக்கின்றன. எங்கெங்கெல்லாம் அதிகமாகத் தேவை இருக்கிறது என்பதைக் கண்டறிந்து அதிகாரிகள் சொல்கிற அறிக்கையின் பேரிலேதான் அந்த அலுவலகங்கள் தொடங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் ஒட்டன்சத்திரத்தில் கேட்டிருக்கிறார்கள். நிதிநிலை சம்பந்தப்பட்ட விஷயம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் தொடர்புகொண்டு பேசி, உங்களுக்குத் தேவையானதை இந்தத் துறை செய்து தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி.

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்டது கொல்லிமலை ஒன்றியம். கொல்லிமலை ஒன்றியத்திலே சுமார் நான்கு ஏக்கர் நிலம் ஏற்கெனவே அரசுப் போக்குவரத்துத் துறைமூலமாக வாங்கப்பட்டு சுமார் ஏழு ஆண்டுகளாகக் கிடப்பிலே போடப்பட்டுள்ளது. அந்த நிலத்தில்



2007 ஏப்ரல் 27]

பணிமனை அமைக்க அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஏழு, எட்டு ஆண்டுகளாக ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் சொந்த இடம் இருந்த இடங்களிலே பணிமனை தொடங்கப்படாமல் இருந்ததை கடந்த ஆண்டு பத்திற்கும் மேற்பட்ட இடங்களிலே புதிய பணிமனைகள் இப்போது தொடங்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த வரிசையிலே முன்னுரிமை தந்து வரும் ஆண்டிலே அதுபற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிமனைகள் உருவாக்கப்படுவதோடு, அங்கு வாகனங்களைப் பராமரிப்பதற்கான பராமரிப்பு ஊழியர்கள் மிகவும் தேவைப்படுகிறது. தற்போது ஓட்டுநர்கள் தேர்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிற சூழ்நிலையில் வாகனப் பராமரிப்பிற்கான ஊழியர்கள் தேர்வு விரைவில் நடத்தப்பட வேண்டும். அதற்கான திட்டம் ஏதும் அரசிடம் இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு துறையிலும் இருக்கின்ற காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பவேண்டுமென்று உத்தரவு தந்திருக்கிறார்கள். முதல்கட்டமாக ஓட்டுநரும், நடத்துநர்களும் இங்கே எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். மற்றபடி, A.E., J.E., வேலைகளுக்கு டிப்ளோமா படித்தவர்கள், பொறியியல் பட்டம் பெற்றவர்களுக்கான வேலைகளுக்கு நபர்களைத் தேர்வு செய்ய இப்போது வேலைகள் நடைபெற்றுக்கொண்டிக்கின்றன. விரைவிலே மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலமாக அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2007 ஏப்ரல் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி பணிமனையில் மழைக்காலங்களில் தண்ணீர் அங்கு கீழ் படி மூழ்குகின்ற அளவிற்கு உள்ளது. பத்து நாட்களுக்கு முன்னர் தண்ணீரில் மூழ்குகின்ற அளவில் அந்தப் பணிமனை இருந்தது. அந்தப் பணிமனையின் தரை தளம் உயர்த்தப்படுமா அல்லது வேறு இடத்திற்கு மாற்றி அமைக்கப்படுமா என்பதைப் பேரவைத் தலைவர்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஓடுகின்ற பேருந்துகளில் கிட்டத்தட்ட ஒன்பதாயிரம் பேருந்துகள் கழிக்கப்பட்டிருக்க வேண்டிய பேருந்துகள். ஆனால், போக்குவரத்துக் கழகங்கள் அதிகம் இலாபம் ஈட்டாத காரணத்தால், போக்குவரத்துக் கழகங்களால், உங்களால், கடந்த 5 ஆண்டுகளில் வெறும் 5,600 பேருந்துகள்தான் வாங்கப்பட்டன. இப்பொழுது, நம்முடைய முதலமைச்சர் பொறுப்பேற்ற இந்த 12 மாதங்களில் 5,600 பேருந்துகளை அரசுப் பணம் தந்து வாங்கித் தந்திருக்கிறார்கள்.

*முற்பகல் 10-10*

அதோடுமட்டுமல்ல, மாநகரத்தில் இருக்கின்ற பேருந்து நிலையங்களின் சாலை மிகவும் உயரமாக ஆகிவிட்டது, பேருந்து நிலையங்கள் எல்லாம் பள்ளமாக இருக்கின்றன என்று சொல்லி, இந்த ஆண்டு தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற அப்படிப்பட்ட பேருந்து நிலையங்களின் தரை தளத்தை உயர்த்துவதற்காக, 110 கோடி ரூபாய் தேவை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டோம். முதற்கட்டமாக 15 கோடி ரூபாய் இப்போது அனுமதி அளித்திருக்கிறார்கள். அதிலே முன்னுரிமை தந்து, மாநகரத்தில் இருக்கின்ற பேருந்து நிலையங்கள் எல்லாவற்றையும் சரி செய்ய இந்த ஆண்டு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். விரைவிலே கோவில்பட்டி பேருந்து நிலையத்தையும் தரையை உயர்த்துவதற்கான முயற்சியை இந்தத் துறை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.



2007 ஏப்ரல் 27]

**146—**

## கயிறு தொழிற்சாலை

***4978—திரு. த.அ. மேகநாதன்:**

*மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*காவேரிப்பட்டினம் தொகுதியில் கயிறு தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவேரிப்பட்டினம் தொகுதியில் அரசு சார்பில் கயிறு தொழிற்சாலை அமைக்க அரசிடம் தற்போது கருத்துரு ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், எனது காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதி, கிராமங்கள் சூழ்ந்த விவசாயிகள் நிறைந்த ஒரு பகுதியாகும். இங்கு தென்னை அதிகமாகப் பயிரிடப்பட்டு வருகின்றது. கொப்பரைத் தேங்காய், வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. தென்னங்கீற்றை சீர்படுத்தி, அதனையும் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர். இங்கு கிடைக்கும் இளநீர் அதிகமாக அருகிலே உள்ள பெங்களூருக்கு எடுத்துச் சென்று விற்று வருகின்றனர். இங்கு சிறு சிறு தனியார் நார்த் தொழிற்சாலைகள் உள்ளன. நார்களைப் பயன்படுத்தி வெளி மாநிலங்களில் உள்ள கயிறு தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு அனுப்பி வைக்கின்றனர். ஆகையால், இங்கு கிடைக்கும் நார்களைப் பயன்படுத்தும் வகையில் கயிறுகளை உற்பத்தி செய்ய அரசு ஒரு கயிறு தொழிற்சாலை அமைத்தால், பல நூறு கிராமங்களில் உள்ளவர்கள் வேலைவாய்ப்பைப் பெற முடியும். எனவே, அரசு பரிசீலனை செய்து, ஒரு கயிறு தொழிற்சாலையை எனது காவேரிப்பட்டினம் தொகுதியில் அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டினம் தொகுதியில் 4,397 ஹெக்டேர் நிலத்தில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

காவேரிப்பட்டினம் தொகுதியில் சுமார் 8 தனியார் கயிறு தொழிற்சாலைகள் இயங்கிவருகின்றன. வேறு ஒரு திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற்று தனியார் சுருள் கயிறு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று ரூ.52.64 இலட்சம் மதிப்பீட்டில் காவேரிப்பட்டினம் தொகுதியில் 28-9-2006 அன்று தொடங்கப்பட்டு, இதன்மூலம் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகின்றது. காவேரிப்பட்டினம் தொகுதியில் அரசு சார்பில் தொழிற்சாலை அமைக்க அரசிடம் தற்போது கருத்துரு இல்லை. எனினும், தனியார் கயிறு தொழிற்சாலை தொடங்க ஆர்வம் உள்ள தொழில் முனைவோர்கள், கிருஷ்ணகிரி மாவட்டத் தொழில் மைய பொது மேலாளரை அணுகினால், தக்க ஆலோசனையும், பல்வேறு உதவிகளையும் செய்து தருவார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மறுபரிசீலனை செய்து கயிறு தொழிற்சாலை அமைத்தால், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. எனவே, அரசு அதை அமைக்க ஆவன செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25 தொழில் முனைவோர் ஒன்று சேர்ந்து, மாவட்டத் தொழில் மைய பொது மேலாளரை அணுகினால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, தொழில் தொடங்க ஏற்பாடுகள் செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைச் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன், மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**147—**

## தனி வட்டம்

***8241—திரு. ஆ. அருண்மொழிதேவன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் பகுதியைத் தனி வட்டமாக அமைத்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீமுஷ்ணம் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியைச் சுற்றிலும் சுமார் நூற்றுக்கணக்கான கிராமங்கள் உள்ளன. பெரும்பாலான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வருகின்ற ஒரு சூழ்நிலை உள்ளது. தற்போது, காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் இந்தப் பகுதி அமைந்துள்ளது. காட்டுமன்னார்கோவிலுக்குச் செல்லவேண்டும் என்று சொன்னால், சுமார் 40 அல்லது 50 கிலோ மீட்டர் தூரம் கடந்து செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. அதுவும் காட்டுமன்னார்கோவில் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால், பெரம்பலூர் மாவட்ட எல்லையைக் கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலையும் உள்ளது. தூரம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மக்கள் வட்டாட்சியர் அலுவலகப் பணிகளைச் செய்ய உரிய நேரத்தில் செல்ல முடியாத சூழ்நிலை உள்ளது. முதியோர் உதவித் தொகை பெறுவதற்கு தகுதியுடையவர்கள்கூட மனு செய்வதற்குச் சிரமப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளதால், மனு செய்யாத நிலைகூட உள்ளது. இந்தியாவிலே இப்போது முக்கியமான 8 விஷ்ணு ஸ்தலங்கள் உள்ளன. அவற்றில் ஸ்ரீமுஷ்ணத்தில் உள்ள அருள்மிகு பூவராகவ சுவாமி திருக்கோயிலும் ஒன்றாகும். சிதம்பரம் வருவாய்க் கோட்டத்தில் இருக்கின்ற, சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் ஆகிய வருவாய் வட்டங்கள் மிகப் பெரிய வருவாய் வட்டங்களாகும். எனவே, ஸ்ரீமுஷ்ணம் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில், பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற அந்த ஸ்ரீமுஷ்ணம் பகுதியினுடைய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், தனி வட்டம் அமைத்தால் கண்டிப்பாக அந்தப் பகுதி முன்னேறும் என்பதாலும், தனி வட்டம் அமைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2007 ஏப்ரல் 27

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வைத்திருக்கின்ற கோரிக்கை இப்போது தேர்தல் ஆணையத்தினுடைய எல்லை வரையறைப் பணி முடிகின்ற தருவாயில் இருக்கின்றது. இப்போது கடைசிக் கட்டத்தை எட்டியிருக்கின்றது. இன்னும் ஓரிரு மாதங்களிலே கண்டிப்பாக நம்முடைய தேர்தல் ஆணையத்தினுடைய எல்லை வரையறைப் பணி முடிந்தவுடனே தமிழகத்திலே எந்தெந்த வட்டங்கள் அத்தியாவசியமாகத் தொடங்கப்பட வேண்டும் என்பதை அரசு ஆய்வு செய்து முடிவு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் வருவாய்க் கோட்டத்திலே, சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி, காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதி, புவனகிரி சட்டமன்றத் தொகுதி ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. இரண்டு தாலுகா அலுவலகங்கள்தான் இருக்கின்றன. எனவே மிகப் பெரிய இரண்டு வட்டங்களையும் பிரித்தால் அந்தப் பகுதி முன்னேற்றம் அடையும் என்ற கருத்தில்தான் சொன்னேன். விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 3 சட்டமன்றத் தொகுதிகள் ஒரே கோட்டத்தில் வருகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார். குறிப்பாக அவர் சொல்லியிருக்கின்ற ஸ்ரீமுஷ்ணம் வட்டாட்சியர் அலுவலகம் அமைவதற்கு மொத்தமாக 158 சதுர கிலோ மீட்டர்தான் அதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மக்கள் தொகைகூட 76 ஆயிரம்தான் என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. வருவாய்க் கிராமங்கள் 38 என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்தவகையிலே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல சிதம்பரம் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியிலே எவ்வளவு கிராமங்கள் வருகின்றன, மொத்த மக்கள் தொகை எவ்வளவு, வருவாய்க் கிராமங்கள் எத்தனை என்பதை எல்லாம் எதிர்காலத்திலே கணக்கிட்டு, வாய்ப்பு இருந்தால் அரசு கண்டிப்பாகப் பரிசீலிக்கும்.



2007 ஏப்ரல் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**148—**

## கட்டட வசதி

***1980—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் வட்டம், தெற்கு கருங்குளம் ஊராட்சி, சங்கனாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் பழுதடைந்துள்ளதால் செப்பனிட்டு, சுற்றுப்புறச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி சுகாதாரப் பகுதி மாவட்டத்தைச் சார்ந்த சங்கனாபுரம் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக 2006-2007-ல் ரூ.1,05,000/- நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுப்புறச் சுவர் கட்ட அரசால் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திசையன்விளை ஆரம்ப சுகாதார மையத்தை 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தந்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எங்களுடைய வழிகாட்டி தளபதி அவர்களுக்கும், சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2007 ஏப்ரல் 27

சங்கனாபுரம் அரசு ஆரம்ப சுகாதார மையம் கட்டப்பட்ட காலம் முதல் இன்றுவரை பழுது பார்க்கப்படவில்லை. கட்டடங்களைப் பழுது பார்த்துக் கொடுத்தாலும், அந்தப் பகுதியில் சுற்றுச் சுவர் இல்லாத காரணத்தினால் இரவு நேரங்களில் கால்நடைகள் எல்லாம் சென்று அங்கே தங்குகின்ற சூழல் ஏற்பட்டு, காலையிலே மருத்துவர்களும், நோயாளிகளும் செல்வதற்கு இடைஞ்சலாக இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டடம் பழுது பார்க்க நிதியொதுக்கியது போல, சுற்றுச் சுவர் கட்டுவதற்கும் நிதி ஒதுக்குவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதைப்போல பல இடங்களிலே இதுபோன்ற பிரச்சினை இருப்பது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. ஆகவேதான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு பராமரிப்புப் பணிகளுக்காக 17 கோடி ரூபாய் வழங்கினார்கள். இந்த ஆண்டு இன்னொரு 17 கோடி ரூபாய் சேர்த்து 34 கோடி ரூபாய் பராமரிப்புப் பணிகளுக்காக வழங்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் சரி பார்த்து, எந்தப் பகுதிக்கு எது தேவையோ அதைச் சரியான முறையிலே இந்த அரசாங்கம் செய்து கொடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் எல்லாம் பழுது பார்க்கப்படாமல் இருந்தன. நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 138 கோடி ரூபாயைக் கொடுத்து தமிழகம் முழுவதும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளைச் சரி செய்யக் கொடுத்ததுபோன்று நீங்களும் அதிகமான நிதியை ஒதுக்கி, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களையும் பழுது நீக்கி, சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுப்பீர்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2007 ஏப்ரல் 27]

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதைப்போல, நம்முடைய அரசாங்கத்தின்மூலம் 34 கோடி ரூபாய் வழங்க இருக்கிறோம். இதேபோன்று, நபார்டிலே இப்படிப்பட்ட கட்டடங்கள் கட்டுவதற்காக கடனுதவி நாங்கள் கேட்டிருக்கிறோம். அதையும் கொடுப்பதாக அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அப்படி வருகின்ற நேரத்திலே இந்தப் பணிகளையெல்லாம் செய்யவிருக்கிறோம். மொத்தம் 1,417 மருத்துவமனைகள் D.P.H.-இலே இருக்கின்றன. ஏறத்தாழ வருடத்திற்கு 7 கோடியே 56 இலட்சம் நோயாளிகள் இந்த Primary Health Centre-களை உபயோகப்படுத்துகிறார்கள். ஆகவே, இதையெல்லாம் அரசாங்கம் முக்கியமாகக் கருதி, வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**149—**

## விளையாட்டு மைதானம்

***1447—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, முகையூர் கிராமத்தில் விளையாட்டு மைதானத்தை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முகையூர் தொகுதி, முகையூர் கிராமத்தில் ஒரு விளையாட்டு மைதானம் உருவாக்கிக் கொடுக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

[2007 ஏப்ரல் 27

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகையூர் தொகுதி, முகையூர் கிராமத்தில் மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, நடுநிலைப் பள்ளி என்று பல பள்ளிகள் இருக்கின்றன. ஒரு விளையாட்டு மைதானம் இருந்தால் அங்கே இருக்கின்ற மாணவர்கள் விளையாடுவதற்கு வசதியாக இருக்கும். எனவே, அங்கே ஒரு விளையாட்டு மைதானம் அமைத்துத் தர அரசு முன்வருமா எனக் கேட்க விரும்புகிறேன். மேலும், காணை ஒன்றியத்தில் பனைமலைப்பேட்டையில் மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகள் இருப்பதால் அங்கேயும் ஒரு விளையாட்டு மைதானம் அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு கிராமத்திற்கும் விளையாட்டு மைதானம் என்பது நடைமுறையிலே சாத்தியப்படாது. இருந்தாலும் தலைவர் கலைஞர் அரசு கிராமங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டுள்ளது. நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதுவரை எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் ஒவ்வொரு கிராமத்திற்கும் விளையாட்டு மைதானங்களும் மற்றும் உபகரணங்களும் கொடுப்பதற்கான வழிகளை வகுத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கிராமத்தில் மட்டுமல்ல, எல்லாக் கிராமங்களுக்கும் உள்ளாட்சித் துறைமூலமாக நடக்கின்ற அந்தப் பணிகளோடு, மாண்புமிகு தலைவருடைய ஆணையின்படி, விளையாட்டுத் துறையும் அதிலே பங்கெடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தொகுதிக்குட்பட்ட மானூர் ஊராட்சி ஒன்றியத்தில் நல்லம்மாள்புரம் என்ற ஒரு பஞ்சாயத்து



2007 ஏப்ரல் 27]

உள்ளது. அதைச்சுற்றி 10 பஞ்சாயத்துகள் உள்ளன. நல்லம்மாள்புரத்தில் ஒரு மேல்நிலைப் பள்ளியும் உள்ளது. எனவே அங்கு பயிலுகின்ற மாணவர்களும், படித்து விட்டு இருக்கின்ற இளைஞர்களும் உடல் ஆரோக்கியத்தைப் பேணும்பொருட்டு, நல்லம்மாள்புரத்தில் ஒரு விளையாட்டுத் திடல் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட நல்லம்மாள்புரம் விளையாட்டு மைதானம், அவர் சொன்னபடி அந்தப் பள்ளிக்கூடத்திலே அமைப்பதற்கு, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் செய்யலாம். அந்தத் திட்டம் இருந்தாலும், இன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் கிராமங்களில் புதைந்து கிடக்கிற விளையாட்டுத் திறனை வெளிக்கொணர வேண்டுமென்பதில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு, கிராமங்களில் விளையாட்டுத் துறை அதிகக் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எங்களுக்கு உத்தரவிட்டிருப்பதை நாங்கள் ஏற்று, வழி நடத்தவிருக்கிறோம் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். அனைத்துக் கிராமங்களிலும் இந்தத் துறை மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களும் அதிகப் பங்கெடுத்து, கிராமங்களில் உள்ள இளைஞர்கள் விளையாடுவதற்காக நடவடிக்கை எடுக்கலாம். ஏற்கெனவே 2006-2007 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய, மாவட்ட, மாநில அளவில் கிராமங்களில் உள்ள நண்பர்கள் எல்லாம் விளையாடுவதற்காக வருடம் ஒன்றுக்கு 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அதுவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 150, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**150—**

**புறவழிச் சாலை**

***11872—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 27

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு நகரத்திற்கு புறவழிச் சாலை உடனடியாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதியில், செய்யாறு நகருக்கு புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) திட்டம் அடுத்த மாத இறுதியில் தொடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்டுங்கள் திறக்கப்படும் என்பது பழமொழி. தட்டாமலே திறக்கப்படும் டாக்டர் கலைஞர் அரசு என்பது புதுமொழி. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் கூறியதுபோல நெடுஞ்சாலைத் துறையை நெடுஞ்சோலைத் துறையாகவும் கவனித்துக்கொண்டிருக்கின்ற இந்த அரசிற்கு என்னுடைய பணிவான மேலும் ஒரு வேண்டுகோள்.

பிரம்மதேசம்புதூர் என்கின்ற ஊரில் பாலம் ஒன்றை நெடுங்காலமாக நானும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதற்குண்டான ஆயத்தப் பணிகளும் நிறைவடைகின்ற இந்த நேரத்திலே அறிவிப்பிலே எதிர்பார்த்தேன். ஆனால், நபார்டு திட்டத்திற்குச் சென்றிருக்கிறது என்ற ஒரு பதிலை எனக்குத் தந்தார்கள். அதற்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, செய்யாறு மக்களின் சார்பாக நன்றி சொல்ல எனக்கு வார்த்தை இல்லை என்பதுபோல, நன்றி என்று கூறி சாதாரணமாக என்னால் உட்கார முடியாது. எனவே உங்களைக் கையெடுத்துக் கும்பிட்டு விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நன்றிதானே சொன்னார்? ரைட், (குறுக்கீடு) திரு. ஜாண் ஜோசப். (குறுக்கீடு)



2007 ஏப்ரல் 27]

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சிறப்பு அனுமதியின் பெயரில் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் விஷ்ணுபிரசாத் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, சிறப்பு அறிவிப்பாக செய்யாறு நகருக்குப் புறவழிச் சாலை அமைப்பதற்காக ஒருங்கிணைந்த கிராமச் சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், சுமார் ரூ.4 கோடி மதிப்பிலே அந்தத் திட்டம் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது. புறவழிச் சாலைக்கு உரிய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, எல்லைக் கற்கள் நடப்பட்டு நிலம் தயாராக இருக்கின்றது. அந்தத் திட்டப் பணியினுடைய மதிப்பு சுமார் ரூ.4 கோடியாக இருப்பதால், அடுத்த மாதம் இரண்டாவது வாரத்திலே நம்முடைய அரசினுடைய, துறையினுடைய ஒப்பந்த ஆணையத்தினுடைய அனுமதி வழங்கப்பட்டு, அந்தத் திட்டம் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல பாலத்தைப்பற்றியும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு அதுகுறித்தும் பரிசீலித்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் இரண்டாவது பெரிய நகரமான மார்த்தாண்டம் நகரம் பெரும் போக்குவரத்து நெரிசலால் திணறிக் கொண்டிருக்கிறது. குழித்துறை முதல் மார்த்தாண்டம் வரையுள்ள 1½ கி.மீ. தூரத்தைக் கடப்பதற்கு சுமார் 15 நிமிட நேரத்தை வாகனங்கள் எடுத்துக்கொள்கின்றன. ஆகவே; இப்பகுதியின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, புறவழிச் சாலை அமைக்க, நெடுஞ்சாலைத் துறை முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, சாலைக் கட்டமைப்பு வசதியை மேம்படுத்த வேண்டுமென்று எடுத்துரைத்து, வரலாற்றிலே இல்லாத அளவிற்கு நெடுஞ்சாலைத் துறைக்குக் கூடுதல் நிதியைத் தந்து, கடந்த ஆண்டும் சரி, இந்த ஆண்டும் சரி, பல்வேறு பணிகள்

[2007 ஏப்ரல் 27

தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. புறவழிச் சாலைக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்பு அனுமதி வழங்கி, அதற்குரிய பணிகள், இந்த ஆண்டுமட்டும் ஏறத்தாழ 10 நகரங்களிலே புறவழிச் சாலைகள் அமைப்பதற்காக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமாக இருக்குமானால், அரசு ஆய்வு செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. மாண்புமிகு பேரவைத் தலைவரை பதவியிலிருந்து நீக்குவது குறித்து வரப்பெற்ற தீர்மானம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் (குறுக்கீடுகள்) கொஞ்ச நேரம் பொறுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஓ. பன்னீர்செல்வம் மற்றும் டி. ஜெயக்குமார் ஆகியோர் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 68-ன்கீழ் சட்டமன்றப் பேரவைத் தலைவரை அவருடைய பதவியிலிருந்து நீக்குவது குறித்து ஒரு தீர்மானத்தை முன்மொழிய 25-4-2007 அன்று ஓர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் மற்றும் திரு. டி. ஜெயக்குமார், இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறீர்களா? (குறுக்கீடுகள்) அதெல்லாம் தெரியும். நீங்கள் முன்மொழிகிறீர்களா? (குறுக்கீடுகள்) அதெல்லாம் நீங்கள் உட்காருங்கள். அதெல்லாம் தெரியும். முதலிலே பன்னீர்செல்வம் முன்மொழிகிறீர்களா? (குறுக்கீடுகள்) இருக்கட்டும்,

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மீது இந்திய அரசமைப்புச் சட்டம் 179-வது பிரிவு, உட்பிரிவு (c)-யின்படி பதவியிலிருந்து நீக்குவதற்காகத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் சொல்லிவிட்டேனே. முன்மொழிகிறீர்களா என்று கேட்கிறேன். Yes or no என்று சொல்லுங்கள்.



2007 ஏப்ரல் 27]

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** 14 நாட்கள் கழித்த பின்பு, அத்தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் இந்திய அரசமைப்புச் சட்டம் 179, உட்பிரிவு (c)-யின்படி கொடுக்கப்பட்டிருக்கிறது, விதி 68-ன்கீழ். ஆனால் 179, உட்பிரிவு (c) என்ன சொல்கிறது என்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் பார்த்துவிட்டோம் நாங்கள். நீங்கள் முன்மொழிகிறீர்களா, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சட்டம் எல்லாம் தெரியும், சொல்லுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** முன் அறிவிப்பு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் தெரியும்.

**திரு. டி. ஜெயக்குமார்:** முன் அறிவிப்புக் கொடுக்கப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குப் பிறகு அதை அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்து Agenda-விலே சேர்க்கப்பட்ட பிறகுதான் இது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள்மீது நம்பிக்கையில்லை என்று சொல்லிவிட்டபிறகு, எப்பொழுது உங்கள்மீது நம்பிக்கையில்லை என்று சொல்லிவிட்டார்களோ, அப்பொழுதே, 'இந்த இருக்கையைவிட்டு நான் எழுந்துவிடுகிறேன்' என்று எழுந்துவிட்டு, நீங்கள் அதை எடுத்துக்கொள்வது உங்களுடைய பெருந்தன்மையைப் பொறுத்தது. ஆனால், சட்டப்படி 14 நாட்கள் கழித்துதான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள்.

ஒன்றே ஒன்றைக் கேட்கிறேன்; ஒத்திவைப்புத் தீர்மானமாக இருந்தாலும், கவன ஈர்ப்புத் தீர்மானமாக இருந்தாலும், அதற்கான அறிவிப்பை பேரவை கூடுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு, பேரவைச் செயலாளரிடம் கொடுக்கவேண்டும். கொஞ்சம் தாமதமானால், அரை மணி நேரத்திற்கு முன்பு பேரவைத் தலைவரிடம் கொடுக்கவேண்டும். ஆனால், இதுவரைக்கும் அப்படிக் கொடுத்திருக்கிறார்களா? பேரவை கூடுவதற்கு 5 நிமிடங்களுக்கு முன்பு

கொடுத்துவிட்டு, எடுத்துக்கொள்கிறார்கள். ஆக, அதற்கு மட்டும் சட்டம் தேவையில்லை; இதற்கு மட்டும் சட்டம் தேவைப்படுகிறதா என்று கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம், இவையெல்லாம், அதற்கெனக் குறித்த நியமன நியதிப்படி தங்களிடத்திலே கொடுக்கப்படாமல், பலமுறை எதிர்க்கட்சி நண்பர்களால் தரப்பட்டு, அவற்றையெல்லாம் நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் இங்கே எடுத்துக்காட்டினார்கள். தங்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு இதைக்கூட ஒரு காரணமாகக் கருதலாம். ஏனென்றால், அப்பொழுதே நீங்கள் இதிலேயெல்லாம் கொஞ்சம் கறாராக இருந்திருந்தால், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் உங்கள்மீது வந்திருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் விட்டுக்கொடுக்கின்ற போக்கில், பரந்த மனப்பான்மையில், ஒரு நிமிடத்திற்குமுன் கொடுத்தால் என்ன, ஒரு மணி நேரத்திற்குமுன் கொடுத்தால் என்ன, கொடுத்ததை நாம் ஏற்றுக்கொண்டு, அதற்கு பதிலளிப்போம் என்ற அந்த மனப்பான்மையைக் கொண்ட காரணத்தால், அதற்குரிய தண்டனைதான் இப்பொழுது உங்களுக்கு அளிக்கப்படவிருக்கிறது. அது தண்டனையா; அது நிறைவேறுகிறதா என்பது வேறு விஷயம்.

இருந்தாலும்கூட, அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல், 14 நாட்களா அல்லது 10 நாட்களா அல்லது 13 நாட்களா என்பதை யோசித்து முடிவெடுக்க, அலுவல் ஆய்வுக் குழுவிலே, எந்த நாளில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று தீர்மானிக்கலாம். ஒருவேளை அவர்கள் 11 ஆம் தேதி அன்று எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னாலும் சொல்வார்கள். ஏனென்றால், அப்படித்தான் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவேண்டிய வகையிலே தெரிந்திருக்கிறது. ஆகவே, அலுவல் ஆய்வுக் குழு கூடி, அதை முடிவு செய்வது நலம் என்று கருதுகின்றேன். அதைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அலுவல் ஆய்வுக் குழு இன்று நண்பகல் 12-00 மணிக்குக் கூடி முடிவு செய்யும். (குறுக்கீடு)



**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) வேறு subject-ஆ? வேறு subject-ஆக இருந்தால் சொல்லுங்கள். இல்லையென்றால், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

## 3. தகவல் கோரல்

**உறுப்பினர்கள் திருவாளர்கள் வி.பி. கலைராஜன், பொள்ளாச்சி வி. ஜெயராமன், சி.வி. சண்முகம், இரா. விசுவநாதன் ஆகியோர் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதி வேண்டுதல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 5-4-2007-ல் சட்டமன்றத்திலேயிருந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்களான திரு. வி.பி. கலைராஜன், திரு. சி.வி. சண்முகம், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. இரா. விசுவநாதன் ஆகிய 4 பேர்களையும், இந்தக் கூட்டத்தொடர் முடியும்வரையிலும், சட்டமன்ற நடவடிக்கைகளிலிருந்து நீக்கி வைத்திருக்கிறீர்கள். அவர்கள் மக்கள் பணி ஆற்றுவதற்கு, அவர்களை மீண்டும் சட்டமன்றத்திலே அனுமதிப்பதற்கு, அனுமதியளிக்க வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வலியுறுத்தி அமர்கிறேன். (குறுக்கீடு)

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தயவுசெய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துத் தோழமைக் கட்சிகளின் கருத்தை இதில் அறிந்துகொள்ளவேண்டும். ஏனென்றால், அந்த நடவடிக்கை எடுக்கப்பட்ட அன்று, அத்தனைபேரும் அதை ஆதரித்திருக்கிறார்கள். மறுபடியும் அதைத் தளர்த்தலாம் என்று அவர்கள் எண்ணியபோதுகூட,

அதற்கான முன்னுரையை அவர்கள் வழங்கியபோதுகூட. அவர்களுக்குக் 'கிளிப் பிள்ளை' என்ற பட்டம் கொடுக்கப்பட்டு, அந்தக் 'கிளிப் பிள்ளை' என்று சொன்னதைக்கூட நாங்கள் திரும்பப் பெறமாட்டோம்; அதை அவைக்குறிப்பிலேயிருந்து எடுக்கமாட்டோம் என்றெல்லாம் எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் அன்றைக்குப் பிடிவாதமாக இருந்தார். இப்பொழுது 4 பேர்மீது அல்லது 5 பேர்மீது பெருந்தன்மையாக, அவர்கள்மீது கருணை காட்டி அல்லது அவர்கள் செய்த அந்தத் தவறை விலக்கி வைத்து; மீண்டும் அவையிலே அவர்களை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். இதற்கிடையிலே உங்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கின்றது. பெருந்தன்மை என்பது ஒருவழிப்பாதை அல்ல என்பதையும் நினைவுபடுத்தி, இருந்தாலும் நாம் ஒருவழிப் பாதையிலே செல்வோம்; நம் வழி ஒரு வழி, அது தனி வழி (மேசையைத் தட்டும் ஒலி) என்ற முறையிலே, அந்த வழியிலே செல்வோம் என்ற முறையில் நம்முடைய தோழமைக் கட்சித் தலைவர்களுடைய அபிப்பிராயத்தையும் நாங்கள் அறிந்து, பின்னர் நான் என்னுடைய கருத்தை, கழகத்தின் சார்பாக, ஆளுங்கட்சியின் சார்பாக அறிவித்து முடிவெடுக்கலாம்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடுகள்) உங்கள் சார்பில்தான் ஒரு ஆள் சொல்லியாகிவிட்டதல்லவா? (குறுக்கீடு) தோழமைக் கட்சிதான் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் சொல்லவேண்டிய கருத்தைச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) சொல்ல வேண்டிய கருத்தை அவர் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) அப்போது நீங்கள் முதலிலேயே சொல்லியிருக்கலாம் அல்லவா? (குறுக்கீடுகள்) திரு. அன்பழகன். எச்சரிக்கிறேன். தெரிகிறதா? உட்கார்ந்துகொண்டே பேசினீர்களென்றால் நடவடிக்கை எடுப்பேன். ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'சொன்னதைச் சொல்கின்ற கிளிப் பிள்ளை' என்ற வார்த்தையை நான் பிடிவாதமாக அவைக்குறிப்பிலிருந்து நீக்கக்கூடாது என்று கருத்தைச் சொல்லியதாகக்கூடச் சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. சொன்னதைச் சொல்கின்ற கிளிப் பிள்ளைகளாக





இருக்கிறார்கள் என்று விளக்கம்தான் சொன்னேனேயொழிய, நீக்குவதும், நீக்காததும் உங்களுடைய பொறுப்பு என்றுதான் நான் அன்றைக்குச் சொன்னேன். நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துப் பார்த்துக்கொள்ளுங்கள். நான் பிடிவாதமாக அதை சபைக் குறிப்பிலிருந்து நீக்கக்கூடாது என்று சொல்லவில்லை என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடு) சரி. B.A.C.-ல் பேசிக்கொள்ளலாம். நீங்கள் பேசுங்கள்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே நடைபெற்ற நிகழ்ச்சியின் காரணமாக நான்கு சட்டமன்ற உறுப்பினர்களை நீங்கள் இந்த அவையைவிட்டு நீக்கி வைத்திருக்கின்றீர்கள். அன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டதற்கிணங்க, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே கேட்டுக்கொண்டதற்கிணங்க, இங்கே நாங்களெல்லாம் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் 'நீங்கள் வருத்தத்தையாவது தெரிவியுங்கள்; அப்படி இல்லாவிட்டால் குறைந்தபட்சமாக இனிமேல் இப்படி நடக்காது. அதற்கு நாங்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறோம்' என்று நீங்கள் கூறுங்கள் என்று நாங்களெல்லாம் வேண்டுகோள் வைத்தோம். நாங்கள் அனைவரும் ஒரே வேண்டுகோளை, அந்த நான்கு சட்டமன்ற உறுப்பினர்களும் அவர்களுடைய ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான் அப்படிப்பட்ட வேண்டுகோளை வைத்தோம். ஆனாலும், அவர்கள் அந்த வேண்டுகோளைக் கொச்சைப்படுத்துவது போன்று, 'சொன்னதைச் சொல்லுகின்ற கிளிப் பிள்ளைகள் போன்று எல்லோரும் ஒரே அணியிலே சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்' என்று இங்கே கூறினார்கள். இருந்தாலும், இத்தனை நாட்கள் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே கலந்துகொள்ளவில்லை. இப்போதாவது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரோ அல்லது எதிர்க்கட்சிக் கொறடா அவர்களோ, இதற்கு நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறோம்; இனிமேல் இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடக்காமல் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று அவர்கள் உறுதியளித்தார்களானால் அவர்களை இந்த மன்றத்திலே அனுமதிப்பதிலே காங்கிரஸ் கட்சிக்கு எந்தவிதமானத் தடையும் இல்லை என்பதைத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேரவையிலே நான்கு சட்டப் பேரவை உறுப்பினர்கள் இந்த அவைக்கு வரவேண்டாம் என்று தங்களாலே நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நாட்டினுடைய மக்கள் பிரச்சினைகளை எடுத்துவைக்க, ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு, மீண்டும் அவர்களை அவைக்கு அழைக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்களும் குரல் கொடுத்தோம். இதற்காக எதிர்க்கட்சியினுடைய தலைவரோ, அல்லது துணைத் தலைவரோ அல்லது கொறடாவோ, எங்களையெல்லாம் அவர்கள், எங்களுக்கு ஆதரவு கொடுங்கள் என்று கேட்கவில்லை. அவர்களும் சக சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற அடிப்படையிலே, அன்றையதினம் எங்களுடைய தலைவர் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். சற்று வருத்தம் தெரிவிக்க வேண்டும் அல்லது இனி இந்த மாதிரி அசம்பாவிதம் நடக்கக்கூடாது, இதுபோன்ற நிகழ்வுகள் நடக்கக்கூடாது. அதற்காக உத்தரவாதம் எடுத்துக் கொள்கிறோம் என்ற ஓர் உறுதிமொழியை எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவரோ அல்லது கொறடாவோ கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். அதுகூட கொடுக்க மனமில்லாமல் எங்களையெல்லாம் அன்றைக்கு, 'சொல்வதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகள்' என்று சொன்னீர்கள். நாங்கள் தலைவர் கலைஞர் அவர்களுக்கு செல்லப்பிள்ளைகளாக இருந்து கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நாங்கள் இங்கே சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேசமயத்திலே, எங்களுடைய ஜனநாயகக் கடமைகளை ஆற்றுவதில் என்றைக்கும் நாங்கள் தவறியதில்லை. நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வருடைய ஆட்சியிலே ஒருசில தவறுகள் எங்காவது இருந்தாலும், அதையும் நாங்கள் சுட்டிக்காட்ட என்றைக்கும் தவறியதில்லை. எனவே, அந்தவகையிலே தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்லித்தான் நாங்கள் செய்யவேண்டிய கடமை எங்களுக்கில்லை.

*(முற்பகல் 10-40)*

அதேசமயத்திலே இந்த ஜனநாயகக் கடமையில், எங்களுக்கும் தன்மானம் இருக்கிறது; சிந்தனை இருக்கிறது; ஞானோதயம் இருக்கிறது. அந்தவகையிலேதான் அன்றைக்கு நாங்கள் ஆதரவு கொடுத்தோம். இப்போதும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகச் சொல்கிறோம்.





ஜனநாயகக் கடமையாற்றுவதற்கு நான்கு சட்டமன்ற உறுப்பினர்களும் மீண்டும் அவைக்கு வர வேண்டும். அதற்காக, இதுபோன்ற தவறுகள் இனி நடைபெறாது என்ற உத்தரவாதத்தை நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவரும், கொறடா அவர்களும் வழங்க வேண்டுமென தங்கள்மூலம் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நான்கு சட்டப் பேரவை உறுப்பினர்கள் இந்தச் சபையிலே நடந்து கொண்ட முறை, சபை மரபுகளுக்கு முற்றிலும் மாறான, ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செயல் என்பதிலே எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆகவே, அதற்குரிய தண்டனை அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. சற்றேறக்குறைய 20, 22 நாட்களுக்கு மேலாக அவர்கள் இந்தச் சபை நடவடிக்கைகளில் ஈடுபட வாய்ப்பில்லாமல் வெளியே நிறுத்தப்பட்டிருப்பது ஒரு பெரும் தண்டனை என்றுதான் நான் கருதுகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுபோன்ற செயல்களிலே பரந்த மனப்பான்மையோடு செயலாற்றக்கூடியவர். ஆகவே நம்முடைய 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அதனுடைய தலைவர் இங்கே இல்லாத காரணத்தினால், அதனுடைய துணைத் தலைவர் வருத்தமோ, மன்னிப்போ என்று இல்லாவிட்டாலும்கூட, சபையில் இதுபோன்ற நிகழ்வுகள் இனிமேல் எதிர்காலத்திலே நடக்காது என்கிற ஓர் உறுதியை இந்தச் சபையிலே முறைப்படி அவர்கள் தெரிவிப்பதிலே எந்தத் தவறும் இல்லையென்று நான் கருதுகிறேன். கடந்த முறையும் நான் இதைத்தான் வலியுறுத்திச் சொன்னேன். இது மன்னிப்பு அல்ல, ஏனென்றால் சபையில் இதுபோன்ற செயல்கள் எதிர்காலத்தில் நடக்காது என்று, நடந்த தவறுக்கு வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று நான் சுட்டிக்காட்டுவது எந்தவகையிலும் தவறு அல்ல என்றுதான் மீண்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்தவகையிலே அந்த நான்கு பேர்களும் இந்தச் சபைக்கு வருவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையிலேதான் இருக்கிறது. உண்மையிலேயே உங்களுக்கு, அவர்கள் சபைக்கு வந்து பணியாற்ற

வேண்டும் என்ற விருப்பம் இருந்தால், சபையில் இதுபோன்ற தகாத செயல்கள் இனி நடக்காது என்று நீங்கள் தெரிவித்து, அதன் அடிப்படையில் அந்தத் தண்டனையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே எங்கள் அமைப்பின் சார்பிலே பாலபாரதி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இதுபோன்ற பாதிப்புக்கு ஆளாகக்கூடிய கட்சி மற்ற கட்சிகளுக்கு முறைப்படி கடிதம்மூலமாகவோ, நேரடியாகவோ, சந்தித்து ஆதரவுகோருகிற ஒரு பழக்கம்கூட கடந்த காலத்தில் இருந்தது. ஏனோ அதுகூட அவர்கள் விரும்பவில்லை என்றுதான் தெரிகிறது. அவர்கள் விரும்பவில்லையென்றாலும்கூட, அவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்ற முறையிலே அவர்களுக்கு ஆதரவாக இங்கே நான் இந்தக் கருத்தைப் பதிவு செய்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நமது சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் இந்தக் கருத்தை இங்கே பதிவு செய்திருக்கிறேன். அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் நான்கு பேர்களுடைய செயல்பாட்டைக் குறித்து இங்கே நாம் பேசியிருக்கிறோம். இப்போது இந்த அவையிலே ஐந்து நிமிடங்களுக்குள்ளாகவே பல்வேறு தகவல்கள் இங்கே பரிமாறப்பட்டு, அது திரும்பவும் அலுவல் ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்படுகிறது. இதிலே ஒரு சிறப்பு என்னவென்றால், நமது மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் முன்னதாகக் கொண்டுவந்த தீர்மானமும் அவரே கொண்டு வந்தார்; இரண்டாவதாக வைக்கின்ற கோரிக்கையும் அவரே வைத்திருக்கிறார். ஆகவே, இது நமது சட்டமன்றத்தினுடைய உயர்ந்த ஜனநாயக மரபுகளை எடுத்துக்காட்டுவதாகத்தான் இந்த விவாதம் அமைந்திருக்கிறது. ஆனால் எனக்கு இருக்கிற ஐயம் என்னவென்றால், முன்னதாகவே எடுத்ததற்குப் பின்னதாக இதை எடுத்துப் பேசுகிறபொழுது, அதன்மீது அச்சப்பட்டு இதன்மீது முடிவெடுக்கப் பார்க்கிறோமோ என்றுகூட எனக்குத் தோன்றுகிறது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதன்மீது அவர்களுக்கே உரித்தான அந்தப் பெருந்தன்மையோடு இந்தச் செய்தியைப் பொறுத்தவரை எதிர்க்கட்சித் தலைவர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள் என்ன செய்ய விரும்புகிறார்கள் என்று அவர்கள் கேட்க விரும்புகிறார்கள். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சட்டமன்ற உறுப்பினர்கள்





தங்களுடைய கடமையாற்ற வேண்டுமென்பதிலே உறுதியாக இருப்பார்கள். எப்பொழுதுமே இருந்திருக்கிறார்கள். அதைத்தான் அன்றைய தினமும் நாங்கள் சொன்னோம். நான் தொடக்கத்தில் பேசுகிறபோதும் அதைத்தான் சொன்னேன். அது வேறுவிதமாகத் திசைமாறிப்போய்விட்டது. இப்பொழுதுகூட நாங்கள் தோழமைக் கட்சிகள் பேசிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு செய்திக்கு விளக்கம் அளித்துவிட்டு திரும்பவும் சாமர்த்தியமாக அமர்ந்து கொண்டுவிட்டார். ஆகவே, அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்றே தெரிந்துகொள்ள முடியாத நிலையிலே நாம் ஒரு முடிவுக்குப் போக வேண்டியிருக்கிறது. எது எப்படி இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால், அவர்கள் ஜனநாயகக் கடமையாற்ற வேண்டுமென்பதிலே எல்லோருக்கும் ஓரே கருத்து இருக்கிறது. அவர்கள் இங்கே வர வேண்டும், இந்த நிகழ்ச்சிகளிலே பங்கேற்க வேண்டும். மக்களுக்குக் கடமையாற்ற வேண்டும் என்பதிலே மாற்றுக் கருத்தேயில்லை. ஆனால், நடந்த செயல்களுக்கு உரிய வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்பதிலே அவர்கள் மாறுபடுகிறார்கள். ஆனால், இப்படி நடக்காது என்பதைப்பற்றி, இந்த அவையிலே ஏற்கெனவே மற்ற தலைவர்கள் முன்மொழிந்து பேசியிருக்கிறார்களா, இல்லையா என்பதைக்கூட, அவைக் குறிப்பிலேயிருந்து நீங்கள் எடுத்துப் பார்க்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

சென்ற 2001-2006 ஆம் ஆண்டுகளிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றன. அவற்றிலே, நம்முடைய மூத்த தலைவர்களாக இருக்கக்கூடியவர்கள்கூட, மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்கள்கூட சில கருத்துகளை இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறார்கள். அப்படியெல்லாம் இருக்கிறபொழுது, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், இதன்மீது ஒரு கருத்தைச் சொல்லி, அதைச் சரி செய்வதற்கான முயற்சியை எடுக்கவில்லையே என்பது எனக்குரிய வருத்தம். எது எப்படியிருந்தாலும் சரி, முன்னதாகக் கொடுத்த தீர்மானத்திற்கும் பின்னதாக வைக்கிற கோரிக்கையையும் பார்க்கிறபோது, முன்னதாகக் கொடுத்த தீர்மானம் என்பது, இன்றைக்கே தோல்வியடைந்து, உங்கள்மீது நம்பிக்கை வைத்துக் கோருகிறார்கள். நீங்கள் பரிசீலியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டசபையில். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் சார். நீங்களும் சேர்ந்துதானே அன்றைக்கு முடிவெடுத்திருக்கிறீர்கள்? உட்காருங்கள்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** ஒரே நிமிடம். ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன். சட்டமன்றத்தில் சில பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. இரா. விசுவநாதன், திரு. சி.வி. சண்முகம், திரு. வி.பி. கலைராஜன் ஆகியோரை சட்ட சபையிலிருந்து. இந்தக் கூட்டத்தொடர் முடியும்வரை நீக்கம் செய்துள்ளீர்கள். ஏற்கெனவே மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, சட்டமன்றக் கட்சித் தலைவர், அண்ணன் கண்ணப்பன் அவர்கள் இதுகுறித்து தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள், இந்தச் சட்டமன்றத்திற்கு வந்து கடமையாற்ற வேண்டும்; தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற பல பிரச்சினைகள் குறித்துப் பேச வேண்டும். இந்தத் தண்டனை துரதிருஷ்டவசமானது. பெரிய தண்டனை என்றே கருதுகிறேன். ஏற்கெனவே சட்டமன்றத்தில் இதுபோன்ற பல நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன. மன்னிப்போ, வருத்தமோ கேட்காமலேகூட சட்டமன்றத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கருத்தில்கொண்டு, அந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களை, சட்டமன்றத்திற்குள் அனுமதித்து, அவர்கள் தங்களுடைய கடமையை ஆற்றுவதற்கு, நீங்கள் அந்தத் தண்டனையை மறுபரிசீலனை செய்ய வேண்டும், அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆண்டிலே நடைபெறுகின்ற கூட்டத்தொடர்களிலே, நிதிநிலை அறிக்கை மீதான கூட்டத்தொடர்தான் மிகவும் முக்கியமானது. அதிலும், பெரும்பாலான, மிக முக்கியமான மானியக் கோரிக்கைகளெல்லாம் இப்போது முடிவடைந்திருக்கின்றன. ஏற்கெனவே அந்த உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தண்டனை போதுமானது என்பதுதான் பெரும்பாலான உறுப்பினர்களின் கருத்தாக இருக்கின்றது. ஆனால், இத்தகைய





சம்பவங்கள் மீண்டும் நடைபெறாதவிதத்தில், அவர்கள் ஒரு உறுதிப்பாட்டை, உத்தரவாதத்தைக் கொடுப்பார்களேயானால், அதை ஏற்று அந்த உறுப்பினர்கள்மீதான தண்டனையை ரத்துச் செய்து, அவர்கள் தங்களது ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு நீங்கள் உதவ வேண்டுமென்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய இதயந்திறந்து, ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு, தொடர்ந்து அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு, முதலில் இங்கிருந்து, இந்தக் கூட்டத்தொடர் முடியும்வரையிலே விலக்கிவைக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்களை மீண்டும் அனுமதிக்கலாம் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கிடையே, ஒரு நிபந்தனையையும் சொல்லியிருக்கிறார்கள். அது, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களால் ஏற்கப்பட்டுள்ளதா, இல்லையா என்பது, இன்னமும் தெரியவில்லை. எழுந்து நின்று சொல்லப் போகிறாரா அல்லது அங்கே இருந்தே தலையை அசைக்கப் போகிறாரா, அல்லது புன்னகைமூலம் எனக்குப் புரிய வைக்கப் போகிறாரா, தெரியவில்லை. (சிரிப்பு) சிலபேருடைய முகத்தைப் பார்த்து, என்ன கருதுகிறார்கள் என்று தெரிந்துகொள்ள முடியும். நம்முடைய திரு. செங்கோட்டையன் அவர்களுடைய முகத்தைத் தவிர—தெரிந்துகொள்ள முடியும்—(சிரிப்பு) அவர் அதை வெளிப்படுத்தாமல் இருப்பதிலே மிகுந்த தந்திரசாலி. அது எனக்குத் தெரியும். எனக்குத் தெரியும் என்பதும் அவருக்குத் தெரியும். (சிரிப்பு) எனவே, நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், தன்னுடைய கருத்தை, எதுவுமே சொல்லாமல் ஒரு முடிவு எடுத்தார்கள் என்றால் நன்றாக இருக்காது, எங்களுக்கு அல்ல, அவைக்குப் பெருமை இல்லை. இந்த அவையிலே நாம் கட்டிக் காக்கின்ற பெருமைக்குப் பெருமை இல்லை. ஆகவே, அவர்கள் எழுந்து, இரண்டொரு வார்த்தைகள் இதைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இரண்டு முறை இந்தப் பிரச்சினை குறித்து இங்கு பேசப்பட்டுள்ளது. இப்போது நம்முடைய மற்ற, மற்ற கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் ஏற்கெனவே என்ன கருத்தைச் சொன்னார்களோ, அதே கருத்தைத்தான் திரும்பவும் இங்கே சொல்லியிருக்கின்றார்கள். சம்பவம் நடந்தது குறித்து ஏற்கெனவே நான் விளக்கிக் கூறியிருக்கின்றேன். அன்றைக்கு நடந்த பிரச்சினை இரு தரப்பிலும் நடந்தது என்றும் சொல்லியிருக்கின்றேன்.

இந்தப் பிரச்சினை, இப்போது எழுப்பியிருக்கின்ற இந்த ஆலோசனைகள், அறிவுரைகள் எல்லாம் அன்றைக்கே சொல்லப்பட்டு, நீங்கள் ஒரு தீர்ப்பு வழங்கியிருந்தீர்களென்றால், இப்போது நான் திரும்பவும் எழுந்து, அதற்குள் கருத்து சொல்ல வேண்டுமென்ற நிலை ஏற்பட்டிருக்காது. நீங்கள் முடிவு செய்து, தவறு செய்ததாக ஒரு தரப்பு முடிவு செய்து, அதற்குரிய தண்டனையையும் அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒருவர் தண்டனை அனுபவித்ததற்குப் பின்னாலும், அவரிடம் மீண்டும் இதுமாதிரியான செயல்களைச் செய்யமாட்டோம் என்று வாக்குறுதி பெறுகின்ற ஒரு சூழ்நிலையை, இங்கே ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றீர்கள். அன்றைக்கு நடந்த சம்பவம் அனைவருக்கும் நன்றாகவே தெரியும். ஆனால், இந்தச் சபை முடிவு செய்து, அவர்களுக்கு உரிய தண்டனையை வழங்கி, அந்தத் தண்டனையையும் அனுபவித்துக்கொண்டிருக்கின்றார்கள். தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கிற காரணத்தினால், அவர்களை மீண்டும் சபைக்கு அழைத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் அவர்களுக்குரிய பணியைச் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றுதான் நாங்கள் இந்தச் சட்டமன்றத்திலே கோரிக்கை வைத்திருக்கின்றோம் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இப்படிச் சொல்லவேண்டும் என்று ஆளுங்கட்சியின் சார்பாகவும், ஆளுங்கட்சியினுடைய தோழமைக் கட்சிகளின் சார்பாகவும் சொல்லப்பட்ட பிறகும், அதே வார்த்தைகளைத் திரும்பச் சொல்லாமல், ஆனால் எந்த வார்த்தையைச் சொன்னால், அத்தனை வார்த்தைகளுக்கும் பொருத்தமாக இருக்கும் என்று, ஒரு வார்த்தையைச் சொல்லியிருக்கின்றார்.





தண்டனையை அனுபவித்து விட்டார்கள். ஆகவே, அவர்கள் அனுமதிக்கப்பட வேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டதிலிருந்து, தண்டனை என்பது ஒரு குற்றத்திற்காக வழங்கப்படுவது; நான் அதைத் தண்டனை என்று குறிப்பிட விரும்பவில்லை. ஏனென்றால், ஒரு ஜனநாயக அரங்கில், பல பெரியவர்கள் இங்கே, எந்த மன்றத்தில் ஜனநாயகத்தைக் காத்திருக்கின்றார்களோ, அந்த மன்றத்தில் ஒருவருக்குத் தண்டனை கொடுத்தோம் என்று நானும் பெருமைப்பட்டுக்கொள்ளத் தயாராக இல்லை, நம்முடைய சபாநாயகர் அவர்களும் அதற்குத் தயாராக இருக்கமாட்டார் என்றே நான் கருதுகின்றேன். ஆகவே, தண்டனை என்று சொல்லாமல், ஒரு பரிகாரம், அவர்கள் இங்கே நடந்து கொண்ட விதத்திற்கு, இது இந்த அவைக்கு சரியல்ல, சரியல்லாத ஒன்றைச் செய்யும்பொழுது அதற்குப் பரிகாரம் தேட வேண்டுமென்ற முறையிலேதான் அவர்கள் இத்தனை நாள் இங்கே அனுமதிக்கப்படாமல் இருந்தார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இங்கே பேசும்போது இதுவரையிலே இல்லாத அளவிற்குத் தண்டனை கொடுக்கப்பட்டதாக இராமகிருஷ்ணன் குறிப்பிட்டார் என்று எனக்கு நினைவு. அவர் இப்போதுதான் முதல்தடவையாகச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறார். (குறுக்கீடு) இரண்டாவது முறையா! இரண்டாவது முறையாக வந்தும் தெரியாததால் நான் வருத்தப்படுகிறேன்.

*முற்பகல் 10-55*

இந்தச் சட்டமன்றத்திலேதான், பத்திரிகைச் சுதந்திரத்தை காலில் போட்டு மிதித்து, ஒரு பத்திரிகை ஆசிரியரை கூண்டிலே நிறுத்திய சம்பவங்கள் எல்லாம், அந்தக் கொடிய தண்டனை எல்லாம் இங்கே விதிக்கப்பட்டிருக்கிறது. அதோடு ஒப்பிடும்போது இது சாதாரண ஒரு பரிகாரம்தான். அந்தப் பரிகாரத்தை நாம் அனைவரும் சேர்ந்து நான்கு பேருக்கு வழங்கினோம். பெருந்தன்மையோடு இதை நாம் அணுக வேண்டுமென்று தோழமைக் கட்சிகளினுடைய அன்பிற்குரிய தலைவர்கள் எல்லாம் கூறியிருப்பதால் நானும் அவர்களுடைய கருத்திற்கிணங்கி, 'நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அந்தக் கருத்திற்கு ஏற்ப இந்த அவை நடப்பதற்கு நாம் அனைவரும் துணைபுரிவோம் என்று சொல்லி, அந்த நான்கு நண்பர்களையும், இந்தக் கூட்டத்தொடரில் அனுமதிக்க வேண்டுமென்று அவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

## 4. அரசினர் தீர்மானம்

### உறுப்பினர்கள் திருவாளர்கள் வி.பி. கலைராஜன், பொள்ளாச்சி வி. ஜெயராமன், சி.வி. சண்முகம், இரா. விசுவநாதன் ஆகியோர் 28-4-2007 முதல் பேரவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "5-4-2007 அன்று பேரவையில் திரு. வி.பி. கலைராஜன், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. சி.வி. சண்முகம், திரு. இரா. விசுவநாதன் ஆகியோர் பேரவையின் நடவடிக்கைகளை இடைமறித்தும், பேரவை விதிகளுக்கு மாறாக சக உறுப்பினர்களை அச்சுறுத்தும் வகையில் பேரவையில் நடந்துகொண்டதாலும், இக் கூட்டத்தொடரின் எஞ்சிய நாட்கள் முழுவதற்கும் பேரவைப் பணிகளிலிருந்து தற்காலிகமாக நீக்கி வைக்கலாம்" என்ற தீர்மானம் இப்பேரவையால் நிறைவேற்றப்பட்டது.

"எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பேரவையில் கலந்துகொண்டு தங்களுடைய ஜனநாயகக் கடமைகளை ஆற்ற வேண்டுமென்ற உயரிய நோக்கத்துடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு விடுத்த வேண்டுகோளினை ஏற்று, மேற்கூறிய உறுப்பினர்கள் இனிமேல் இதுபோன்ற விரும்பத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்ற எச்சரிக்கையுடன், நாளை (28-4-2007) முதல் பேரவையின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளலாம்" என்ற தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

திருவாளர்கள் வி.பி. கலைராஜன், இரா. விசுவநாதன், சி.வி. சண்முகம் மற்றும் பொள்ளாச்சி வி. ஜெயராமன் ஆகியோருக்கு



5-4-2007 அன்று வழங்கப்பட்ட பரிகாரம் குறைக்கப்பட்டு, 28-4-2007 முதல் அவர்கள் அவைக்கு வரலாம் என்று ஆணையிடுகிறேன்.

மேலும், அவையின் நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தும் வகையில் இடையூறு செய்வது, மற்ற உறுப்பினர்களின் மனதைப் புண்படுத்தும் வகையில் தேவையற்ற வார்த்தைகளைப் பேசுவது போன்ற செயல்களை அவர்கள் தவிர்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

## 5. கவன ஈர்ப்பு

### பூந்தமல்லி அருகில் கூடப்பாக்கத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பல குடிசைகள் எரிந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணிக்கு பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.. வேல்முருகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பூந்தமல்லி அருகில் கூடப்பாக்கத்தில் தீ விபத்தில் பல குடிசைகள் எரிந்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதே பொருள் சம்பந்தமாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்களும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய பெயரையும் இதில் சேர்த்துக்கொள்ளலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

திருவள்ளூர் மாவட்டம், போரூர் ஏரியிலிருந்து ஆக்ரமணம் அகற்றியதால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு திருவள்ளூர்

[திரு. இ. பெரியசாமி] [2007 ஏப்ரல் 27

மாவட்டம், பூந்தமல்லி வட்டம், கூடப்பாக்கம் கிராமத்தில் தலா 0.01 சென்ட் வீதம் 2,156 நபர்களுக்கு இலவச வீட்டுமனை தற்காலிகமாக ஒதுக்கப்பட்டது. இதில் 1,824 நபர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட காலி மனையில் குடிசை வீடுகள் அமைத்து வசித்து வருகின்றனர். 9-4-2007 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் 435 குடிசைகளும், 15-4-2007 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் 21 குடிசைகளும் தீப்பற்றி எரிந்து விட்டன. 452 குடிசைகள் முழுவதுமாக எரிந்துவிட்டன. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா ரூ.2,000/- வீதமும் 4 குடிசைகள் பகுதியாக எரிந்ததால் தலா ரூ.1,000/- வீதமும், ஆக மொத்தம் ரூ.9,08,000/- நிவாரணத் தொகை வழங்க வேண்டும். இதுவரை பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் ரூ.8,54,000/- வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை, பயனாளிகள் மேற்படி இடத்தில் வசிக்காததால் நிவாரணத் தொகை பெற்றுக்கொள்ள வரவில்லை. இதைத் தவிர ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், தவிர புடவை மற்றும் வேட்டி ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

2. மேலும், குடியிருப்புகள் அனைத்தும் ஓலைக் குடிசைகளாக உள்ளன. இந்த இடத்தின் அருகில் நீர்நிலை ஏதும் இல்லை. மேற்கண்ட குடியிருப்புகள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு உள்ளன:

| வ. எண் | புல எண் | விஸ்தீரணம் (ஹெக்டேர்) | பிரிக்கப்பட்ட மனைகள் | ஏற்கெனவே ஒதுக்கப் பட்டவை | குடிசைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | 341/3 | 11.00.0 | 1,915 | 1,915 | 1,737 |
| 2. | 341/4 | 2.15.0 | 116 | 116 | 77 |
| 3. | 341/5 | 3.85.0 | 600 | 125 | 10 |
| மொத்தம் | | 17.00.0 | 2,631 | 2,156 | 1,824 |

மேற்கண்ட குடிசைகள் அருகருகே உள்ளதனால் பெரும்பான்மையான குடிசைகள் மேலும் இதுபோன்று விபத்துக்குள்ளாக வாய்ப்புள்ளது. தவிர, இப்பகுதி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பகுதிக்குட்பட்டு வராததால், இதனைச் சிறப்பு இனமாகக் கருதி, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் தனி வீடுகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சம்பவத்தினால். மனித உயிர்ச்சேதம் மற்றும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏதுமில்லை.



2007 ஏப்ரல் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நன்கு படித்துப் பார்த்தேன். அதில் 452 குடிசைகள் முழுவதுமாக எரிந்து போய்விட்டதற்காக குடும்பத்திற்கு ரூ.2,000/- வீதமும், நான்கு குடிசைகள் பகுதியாக எரிந்ததால் தலா ரூ.1,000/- வீதமும், மொத்தம் ரூ.9,08,000/- நிவாரணத் தொகை வழங்கப் பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-00

மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் நான் கொண்டுவர விரும்புவது, இன்றைய விலைவாசி சூழ்நிலை, இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில். இந்த ஏழை குடிசை மக்கள் வாழ்கின்ற இந்த இடங்கள் இதுபோன்று தீ விபத்துகளில் பாதிப்புக்குள்ளானால், அவர்களுக்கு 2 ஆயிரம் ரூபாயும், 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் என்பதும், அவர்கள் தங்களுடைய வாழ்க்கையைப் புனரமைத்துக்கொள்வதற்குப் போதுமானதாக இல்லாத காரணத்தினால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த 2 ஆயிரம் ரூபாய் என்பதை 5 ஆயிரம் ரூபாயாகவும், அதேபோல் 5 கிலோ அரிசி என்பதை 50 கிலோ அரிசியாகவும், ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் என்பதை 10 லிட்டர் மண்ணெண்ணெய்யாகவும் கொடுத்து, அவர்கள் உடனடியாகத் தங்களுடைய இல்லங்களைப் புனரமைத்து, அவற்றில் தொடர்ந்து வாழ்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம். (குறுக்கீடு) ஒரே சப்ஜெக்ட்தான்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கூடப்பாக்கம் என்ற கிராமத்தில், போரூர் ஏரியிலே இருந்து காலி செய்து அங்கே கொண்டுபோய் மக்களைக் குடி வைத்தார்கள். அதிலே 2,156 பேர் அங்கே குடி வைக்கப்பட்டனர். அதிலே முக்கால்வாசி பேர் அங்கே குடி போகவில்லை. 500 வீடுகளிலே இப்போது இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தப் பகுதியிலே காலியாக குடிசைகள் இருந்த காரணத்தினால், ஏதோ ஒரு சமூக

விரோதச் செயல் அங்கே நடைபெற்று, அதன்மூலமாக சுமார் முதல் நாள் 435 வீடுகளும், 5, 6 நாட்கள் கழித்து 21 வீடுகளும் தீ விபத்துக்குள்ளாயின. அதற்கு 2 ஆயிரம் ரூபாயும், 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், புடவை, வேட்டி முதலியவையெல்லாம் கொடுக்கப்பட்டன. 9 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் அதற்கு நிவாரணம் கொடுக்கின்றபொழுது, அங்கே அந்தப் பணத்தை வாங்குவதற்குக்கூட ஆள் வரவில்லை. ஏன் வரவில்லை என்று சொன்னால், அவர்கள் அங்கே குடி போகவேயில்லை. இப்படிப்பட்ட நிலை அங்கே இருக்கிறது. காலி செய்துவிட்டு ஒரு சென்ட் நிலத்தை வாங்குவதற்கு அவர்கள் எதிலே வந்தார்கள் என்று சொன்னால்—நான்கூட அந்த இடத்தைக் கொடுக்கின்றபொழுது அங்கே போய் இருந்தேன்—ஒரு காரிலே, இரண்டு செல் ஃபோன்களை வைத்திருக்கின்ற நபருக்கு ஒரு சென்ட் நிலம் அங்கே கொடுக்கப்பட்டது. ஒரு சென்ட் நிலத்தை வாங்குவதற்கு ஒரு கார், இரண்டு செல் ஃபோன்களோடு ஒரு நண்பர் வந்து, அங்கே நின்று, வாங்கிக்கொள்கிறார். ஏனென்று சொன்னால், அந்தப் பகுதியில் நிலத்தினுடைய விலை அதிகமாக ஆகிவிட்டது. அதனாலே அதன் அருமை கருதி, அவர்கள் அங்கே அதை வாங்கி இருக்கிறார்கள். ஆனால், பாதிப்பேர் அங்கே குடி போகவில்லை. இருந்தாலும், மனிதாபிமானத்தோடு இப்படிப்பட்ட செயல்கள் 2 ஆயிரம் ரூபாய், 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், புடவை, வேட்டி முதலியவற்றையெல்லாம் அரசு கொடுத்திருக்கிறது. அதற்காக இந்த அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று சொன்னால், அங்கே உண்மையிலேயே வாழ்கின்ற மக்களுக்கு எரியாத வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அவர்களும், அதேபோல மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களும், கூடப்பாக்கத்திலே நடந்த தீ விபத்து சம்பந்தமாக ஒரு சில கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் சுட்டிக்காட்டியதைப்போல, போரூர் ஏரியினுடைய ஆக்கிரமணங்களை அகற்றுகின்றபொழுது, ஏறத்தாழ 2,156 பேருக்கு இந்த அரசு ஒரு சென்ட் வீதம் இடத்தை ஒதுக்கித் தந்தது. இதிலே, அங்கே குடியேறி குடிசை





போட்டவர்கள் 1,824 பேர். அங்கே குடிசை போட்டு, குடியேறுவதற்கு ஏற்ற வகையிலே செய்து அங்கே வந்து குடியேறினார்கள். இதிலே 9-4-2007 மற்றும் 15-4-2007 தீ விபத்திலே ஏறத்தாழ 452 குடிசைகள் முழுவதுமாக எரிந்தன. பகுதியாக பாதிக்கப்பட்ட 4 குடிசை வீடுகளைச் சேர்த்து அரசினுடைய நிவாரணத் தொகையாக ஏறத்தாழ உடனே 9 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது. இதிலே, வழங்கப்பட்டதிலே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள் அங்கே 500, 542 குடும்பங்கள்தான் குடியேறியதாகத் தெரிவித்தார்கள். ஆனால், ஏறத்தாழ 8 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் அளவிற்கு அங்கே குடிசை போட்டுக் குடியிருந்தவர்கள் நிவாரணத் தொகையைப் பெற்றுக்கொண்டார்கள். இதிலே அந்த நிவாரணத் தொகையைப் பெறாதவர்கள் 27 நபர்கள்தான். அவர்கள் 54 ஆயிரம் ரூபாயை இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை.

*முற்பகல் 11-05*

இதிலே குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அவர்கள் அங்கு இருக்கின்றவர்களுக்கு நிவாரணத் தொகையைக் கூடுதலாக வழங்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். தமிழகத்திலே தொடர்ந்து வீடு தீப்பற்றி எரிந்தால் 2,000 ரூபாய் அரசு வழங்குவது என்பது உடனடி நிவாரணம்தான். நிரந்தரமாக அவர்கள் நிவாரணம் பெறுவதற்கு பல வழிவகைகள் இருக்கின்றன. இதிலேகூட நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள் அரசின் சார்பாக தீப்பிடித்து எரியாத வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இது சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு உட்படாத பகுதியிலே, ஊரகப் பகுதியிலே அமைந்திருக்கிற காரணத்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எங்களுக்கு அனுப்பியிருக்கின்ற கருத்துருவின் அடிப்படையிலே, எதிர்காலத்திலே சிறப்பு நேர்வாகக் கருதி, நம்முடைய குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக தனியாக வீடுகள் அமைத்துத் தருவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதேசமயத்திலே, அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, வசதி படைத்தவர்கள் இடஒதுக்கீட்டை ஒருவேளை பெற்றிருந்தால்—ஒருவேளை குளத்தை ஆக்கிரமித்திருக்கலாம், வசதி உள்ளவர்கள் ஆக்கிரமித்திருக்கலாம், இப்போது இடமும் பெற்றிருக்கலாம்.—அவற்றைக் கண்டறிந்து

நிச்சயமாக அவற்றை அரசு இரத்து செய்யும் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, சென்னை, மதுரை, கோவை, திருச்சி இதுபோன்ற பெருநகரங்களில் ஆயிரக்கணக்கான குடிசை மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் வாழ்ந்து வருகின்ற அந்த இடங்களில் இதுபோன்று திடீர் தீ விபத்து ஏற்பட்டு, தீ விபத்திற்குள்ளாகி அந்த வீடுகள் எல்லாம் எரிகின்றபோது அதை அணைப்பதற்கு தீயணைப்பு வண்டிகள் அந்தப் பகுதிக்குச் செல்ல முடியாத ஒரு சூழல் இருக்கிறது. அவர்கள் நெருக்கடி காரணமாக, நெருக்கடியாக, வண்டிகள் செல்வதற்குக்கூட வழியில்லாமல், நடந்து செல்வதற்கேகூட வழி இல்லாமல் அந்தக் குடிசைகளை அமைத்துக்கொள்கிறார்கள். எதிர்காலத்தில் அரசு அந்தக் குடிசைப் பகுதிகளையெல்லாம் கண்டறிந்து, இதுபோன்று தீ விபத்து ஏற்படுகின்ற பகுதிகளுக்கு உடனடியாக வண்டி, வாகனங்கள் சென்று அணைப்பதற்கு ஏதுவான வழிவகைகளைக் காண்பதற்கும், குறிப்பாக இதுபோன்று தீயணைப்பு வண்டிகள் வந்து அந்தத் தீயை உடனடியாக அணைப்பதற்கு ஏதுவாக அதுபோன்ற பகுதிகளில், ஒரு தீயணைப்பு நிலையம் தொடங்குவதற்கும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** கேள்விதான். இல்லை, நிரந்தரமாக, இதுபோன்ற தீ விபத்துகள் ஏற்படாத அளவிற்கு, இந்தக் குடிசைகளுக்கெல்லாம், அரசு ஒரு கணக்கெடுத்து, அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை இந்த நேரத்திலே கேட்பதோடு, எதிர்காலத்தில் இதுபோன்று—அதாவது, அடுக்குமாடி வீடுகள் இல்லாவிட்டாலும்கூட, தீப்பிடிக்காத வீடுகள் அதாவது, asbestos sheets கொண்டு அமைத்துத் தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் சுட்டிக்காட்டியதைப்போல, ஒவ்வொரு குடிசை இருக்கிற இடத்திலும் தீயணைப்பு நிலையம் அமைக்க முடியாது. (குறுக்கீடு) சொல்கிறேன். பொதுவாக, நம்முடைய இந்தியாவிலே, தலைவர் கலைஞர்தான் குடிசைகள் தீப்பிடித்து எரிவதை மாற்றுவதற்காக, குடிசைமாற்று வாரியம் என்ற ஒன்றை அமைத்தவர் என்பதை இங்கிருக்கிற மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படியாக, தீப்பிடித்து எரியாத வீடுகளெல்லாம் தொடர்ந்து இந்த அரசால் கட்டித் தரப்படுகின்றன. சென்னை மாநகரத்திலேகூட, மத்தியப் பகுதியிலே பலமுறை தீப்பிடித்து எரிந்த வீடுகளையெல்லாம், தீப்பிடிக்காத வீடுகளாக கட்டித் தரப்பட்டன. நம்முடைய, இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர், சென்னை மாநகரத்தினுடைய மேயராக இருந்த காலத்திலே, தீப்பிடிக்காத வீடுகள், பல்லாயிரக்கணக்கான வீடுகள், கடந்த 1996-ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை சென்னை மாநகரினுடைய மத்தியப் பகுதியிலே, குடிசை வீடுகளை மாற்றி, தீப்பிடிக்காத வீடுகள் கட்டித் தரப்பட்டன. அதேபோல நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சொன்னதைப்போல, எதிர்காலத்திலே இப்படிப்பட்ட அதிகமாகக் குடியிருப்பு இருக்கின்ற, குடிசைகள் போட்டு குடியிருக்கின்ற இடங்களிலே தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டித் தருவதற்கு குடிசைமாற்று வாரியத்தின்மூலமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

# 6. அறிக்கைகள் அளித்தல்

## மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

***திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2006-2007 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 7 முதல் 12 வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11-10

## 7. மானியக் கோரிக்கைகள், 2007-2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 6 - கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)**

**(ஆ) கோரிக்கை எண் 7 - மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)**

**(இ) கோரிக்கை எண் 8 - பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)**

---

**(அ) கோரிக்கை எண் 6 - கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 6-கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி. பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,25,18,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 138, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2717, திரு. து. அமரமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5370, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8715, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11370, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2671, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5145, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6529, திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7003, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7882, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8033, திரு. கே.வி. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8760, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10262, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11119, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8947, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1323, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1388, திரு. அ. தமிழரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1903, திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதி, சோழபுரம், பாகாயங்கோட்டை போன்ற கிராமங்களில் உள்ள கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் செயல்படாமல் உள்ளன. அவற்றைச் செயல்படச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2734, திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், இராசாளிபட்டி, நம்பம்பட்டி மற்றும் குன்றாண்டார் கோவில் ஒன்றியம், ஒடுவம்பட்டி ஆகிய 3 இடங்களிலும் துணை கால்நடை மருந்தகங்கள் செயல்படவில்லை. அவற்றைச் செயல்படச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும்



மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3323, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மேற்குத் தொகுதியில் உள்ள கால்நடை மருத்துவமனை மிகவும் மோசமாக உள்ளது. அதனைப் புதுப்பித்துக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3466, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாசுதேவநல்லூர் தொகுதி, வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம், முள்ளிக்குளத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4604, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் தொகுதியில் அயன்கொல்லங்கொண்டான் ஊராட்சியில் கால்நடை துணை சுகாதார மையம் புதிதாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4884, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை அனுப்பானடி, கீரைத்துறை பகுதியில் உள்ள கால்நடை மருத்துவ நிலையங்களைத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5195, திரு. சு. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5268, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், சோளிங்கர் தொகுதிக்கு உட்பட்ட காவேரிப்பாக்கத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5345, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.



**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியில், கால்நடை பராமரிப்பு மையங்களில் காலியாக உள்ள பணியிடங்களில் மருத்துவர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5392, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகத்தில் கால்நடைகளுக்குச் சிகிச்சையளிக்க நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5473, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் தொகுதி, முள்ளிப்பாடி பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5568, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், முல்லையில் உள்ள கால்நடை மருந்தகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5616, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5661, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5695, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி, பள்ளிபாளையம் ஒன்றியம், சமயசங்கரி மேற்கு தொட்டிபாளையம் ஊராட்சி கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6008, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதியில் அதிகமான கால்நடைகள் உள்ளன. இங்குள்ள கால்நடை மையங்களுக்குப் போதிய மருத்துவர்களை நியமித்து, போதிய மருந்துகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6077, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியில் உள்ள நாவற்குளம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6151, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி தொகுதியில் ஆரம்பாக்கம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை புதிதாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6224, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவில்லிபுத்தூர் தொகுதி, ஆயர்தர்மம் ஊராட்சி, சுரைக்காய்ப்பட்டி பகுதியில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டியதன் அவசியம்

குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6242, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6272, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் உள்ள கால்நடை கிளை மருத்துவ நிலையங்களை கால்நடை மருந்தகங்களாக நிலை உயர்த்தித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6309, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 6331, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6376, திரு. ராம. சுப்புராம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6390, திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6420, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டியில் இயங்கிவரும் கால்நடை மருத்துவமனைக்குச் சுற்றுச்சுவர் மற்றும் தேவையான கட்டட வசதி ஏற்படுத்தித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6549, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதியிலுள்ள திப்பம்பட்டி, பணப்பட்டி, தாளக்கரை ஊராட்சி டி. நல்லிக்கவுண்டன்பாளையம் ஆகிய இடங்களில் உள்ள தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருத்துவமனைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து கட்டடம் கட்டித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6665, திரு. செ. சின்னசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6697, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக விவசாயிகளுக்கு உழவு மாடுகள் வாங்க அரசு சிறப்புத் திட்டத்தின்மூலம் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6891, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் தொகுதியில் கால்நடை பராமரிப்புத் துறையில் கால்நடை ஆய்வாளர்கள் பணியிடங்கள் தற்போது காலியாக உள்ளதை உடனே நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7101, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கால்நடை மருத்துவத்தில் அடிப்படையான சில பயிற்சிகளைக் கிராமப்புற இளைஞர்களுக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,25,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7136, திரு. ஆர்.எம். பழனிசாமி, இருக்கையில் இல்லை.

மீனவ மக்களைப் பொறுத்தவரையிலே, கடல் சீற்றத்தால் பாதிக்கப்படுவது, காணாமல் போவது, சிங்கள கடற்படை வெறியர்களால் தாக்கப்படுவது, கொல்லப்படுவது, பிற மாநில மீனவர்களால் துன்புறுத்தப்படுவது இவை எல்லாம் அடிக்கடி அவர்கள் சந்திக்கக்கூடிய அவலங்களாக, அல்லல்களாக இருந்து கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட துன்பங்களிலிருந்து

மீனவர்களைப் பாதுகாத்து அவர்களை அச்சமின்றி தொழில் செய்வதற்கு உரிய முயற்சிகளை இந்த அரசு எடுக்கவேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, இப்படிப்பட்ட நிகழ்வுகள் அடிக்கடி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் அடிக்கடி மீன்பிடிக்கச் செல்கின்ற மீனவர்கள் காணாமல் போகின்ற நிகழ்ச்சிகள் எல்லாம் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சமீபத்திலேகூட எங்களுடைய மாவட்டத்தில் கோடிமுனை என்ற ஊரில் 12 மீனவ மக்கள் காணாமல் போய் ஏறத்தாழ 50 நாட்கள் ஆகின்றன. காணாமல் போன அந்த மீனவர்களுடைய குடும்பங்களுக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் தாயுள்ளத்தோடு ஒரு குடும்பத்திற்கு மாதம் 1,500 ரூபாய் உதவித்தொகை வழங்கியதற்காக டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களுடைய சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த சின்னத்துறை என்ற கிராமத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் சிங்கள வெறியர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட அந்த மீனவர்களுடைய குடும்பங்களுக்கு, ஒரு குடும்பத்திற்கு ஐந்து இலட்சம் ரூபாய்வீதம் டாக்டர் கலைஞர் அவர்கள் தாயுள்ளத்தோடு கொடுத்து அந்த குடும்பத்தை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், அந்தக் குடும்பத்தைச் சார்ந்த ஒருவருக்கு வேலைவாய்ப்பையும் வழங்கி இருக்கிறார் என்று சொன்னால் தமிழகத்திலே உண்மையான மீனவ நண்பன் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதை அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்படி அடிக்கடி மீனவர்கள் காணாமல் போகின்ற நிகழ்ச்சி நடைபெறுகின்ற காரணத்தால் காணாமல் போகின்ற மீனவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு அதிக வசதிகளைக் கொண்ட விசைப் படகுகளை எப்போதும் தயார் நிலையிலே குளச்சலிலே வைக்கவேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்வதற்கு விரும்புகின்றேன். அதேபோன்று, காணாமல் போகின்ற மீனவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு வசதியாக ஹெலிகாப்டர் வசதிகளை ஏற்படுத்தவேண்டும். குமரி மாவட்டத்தில் குளச்சலிலே அதற்கு வசதியாக Helipad வசதியை ஏற்படுத்தவேண்டும் என்று மீன்வளத் துறையை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்திய இலங்கை கடல் எல்லையை வரையறை செய்து மீனவர்கள் எளிதில் கடல் எல்லையைத் தெரிந்துகொள்கிற அளவிற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.



குமரி மாவட்ட மீனவர்கள் ஒரு வருடத்தில் எட்டு மாதங்கள் சொந்த ஊரில் தொழில் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. கடல் சீற்றத்தாலும், கடல் அரிப்பாலும், அலைகளாலும் பாதிக்கப்படுகின்ற நேரத்தில் அவர்களெல்லாம் கேரளா போன்ற மாநிலங்களுக்கு மீன்பிடிக்கச் செல்லவேண்டியிருக்கிறது. பக்கத்து மாநிலங்களுக்கு மீன்பிடிக்கச் செல்கின்ற நேரத்தில் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த நிலைகள் எல்லாம் மாறவேண்டும் என்றால் கன்னியாகுமரி மாவட்டத்திலே, குளச்சலிலே மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட வேண்டும். தேங்காய்பட்டணத்திலும் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட வேண்டும். அதேபோன்று முட்டம், இராஜாக்கமங்கலம் துறை ஆகிய மீனவக் கிராமங்களிலே அந்த கிராம மக்களே தாமாக முன்வந்து BOOT திட்டத்திலே மீன்பிடித் துறைமுகம் அமைக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தைப் பொறுத்தவரையிலே குமரி மாவட்ட மீனவ மக்களுடைய நீண்டநெடுங் கனவாக அது இருந்துகொண்டிருக்கிறது.

கடந்த பட்ஜெட்டிலே, தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் 23½ கோடி ரூபாய் மதிப்பீட்டிலே மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஓராண்டு காலம் ஆகிவிட்டது. கருணை உள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த மீன்பிடித் துறைமுகத் திட்டத்தை அடிக்கல் நாட்டி, தொடங்கி வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே, இராஜாக்கமங்கலம் துறை மீனவர் கிராமத்தில் கடலரிப்பு ஏற்பட்டு, 200 வீடுகள் கடலில் அடித்துச் செல்லக்கூடிய அபாயகரமான சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, இந்தச் சூழ்நிலையிலிருந்து இராஜாக்கமங்கலம் துறை மீனவ கிராம மக்களைப் பாதுகாக்கின்ற வகையில், அவர்கள் எல்லாம் பயமின்றி அந்த ஊரிலே வசிக்கின்ற வகையில், இராஜாக்கமங்கலம் துறை ஊருக்கு உடனடியாக ஒரு தூண்டில் வளைவு அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மேல மணக்குடி கிராமத்தில் அமைக்கப் பட்டிருக்கின்ற, அந்தக் கிராமத்தினுடைய கீழ்ப் பகுதியிலே அமைக்கப்பட்டிருக்கின்ற தூண்டில் வளைவின் காரணத்தினால், அந்தக் கிராமத்தில் மேற்குப் பகுதிகள் ஏறத்தாழ 1½ கிலோ மீட்டர் தூரத்திற்குக் கடல் அரிப்பு ஏற்பட்டு, அந்தக் கடற்கரையிலே மீன்பிடிப்பதற்கு மீனவர்கள் மரங்களை, வல்லங்களை இறக்குகின்ற அந்தப் பகுதி இப்பொழுது பாறைகளாகக் காட்சியளிப்பதால், ஏறத்தாழ ஒரு வருடமாக அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 3,000 மீனவர்கள், மீன்பிடிக்க முடியாத ஒரு சூழ்நிலையிலே வறுமையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்றால், அந்தக் கிராமத்திற்கு உடனடியாக ஒரு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம் இருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எஸ். ஜெயபால்:** சார், 15 நிமிடங்கள் எங்களுக்கு வேண்டும் இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை இன்னொருவருக்குக் கொடுத்திருக்கிறோம்.

**திரு. எஸ். ஜெயபால்:** எனவே, அந்தக் கிராமத்திற்கு உடனடியாக ஒரு தூண்டில் வளைவை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். குளச்சல் சட்டமன்றத் தொகுதியிலே இருக்கக்கூடிய அழிக்கால், கடியபட்டணம், மண்டைக்காடு புதூர், பெரியவிளை, கொட்டில்பாடு ஆகிய மீனவக் கிராமங்களுக்கு தூண்டில் வளைவுகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுனாமியால் சிதறடிக்கப்பட்ட சைமன் காலனி தூண்டில் வளைவிலுள்ள பெரிய கற்களால் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அந்தக் கற்களை அகற்றிக் கொடுப்பதற்கு அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் இரண்டு இலட்சம் மீனவர்கள் வசிக்கிறார்கள். 36,000 மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த மீனவர்கள் பிடிக்கக்கூடிய மீன்கள் கெட்டுப்போகாமல் இருக்க, மீன் பதப்படுத்தக்கூடிய நிலையங்களை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



கடல் சார்ந்த கல்வி நிலையத்தை Marine Technology கல்லூரியை குமரி மாவட்டத்தில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். படித்தவர்கள் நிறைந்த குமரி மாவட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், குளச்சலில் பெட்டக துறைமுகத்தைக் கொண்டு வந்து குமரி மாவட்ட வளர்ச்சிக்கு இந்த அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, குமரி மாவட்டத்திலே கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். குளச்சலில் செயல்படும் மீன்வள ஆராய்ச்சி மையத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிய மணல் அதிகமாக காணப்படும் குமரி கடற்கரையில், மணல் அள்ளப்படுவதால், கடல் சீற்றம் ஏற்படுகின்றபோது கடல் ஊருக்குள்ளே புகுந்து செல்கின்ற அபாயம் ஏற்படுகிறது. எனவே, மணல் அள்ளப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்குக் கால்நடை வளர்ப்பதற்கு பயிற்சியளித்து, பால் பண்ணை, கோழிப் பண்ணை, பன்றிப் பண்ணைகள் தொடங்க கடனுதவி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார், முடித்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன். (குறுக்கீடு)

**திரு. எஸ். ஜெயபால்:** கேரள மாநிலம், கொல்லம், கொச்சி, எர்ணாகுளம் போன்ற பகுதிகளுக்கு மீன்பிடித் தொழில் செய்யச் செல்கின்ற மீனவர்கள் செல்வதற்கு வசதியாக குளச்சலிலிருந்து எர்ணாகுளத்திற்கு பேருந்து வசதியைச் செய்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அழிக்கால் மீனவர்கள் காலங்காலமாக வழிபட்டுவந்த கிறிஸ்தவ வழிபாட்டு ஸ்தலத்தை இடித்து தரைமட்டமாக்கிய விஷமிகளை 2 மாதங்களாக காவல் துறை கைது செய்யவில்லை. இதனால், மதக் கலவரம் ஏற்படும் நிலையுள்ளது. எனவே, கிறிஸ்தவ குருசடியை இடித்த விஷமிகளை உடனே கண்டுபிடித்து கைது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்களின் கடன்களைத் தள்ளுபடி செய்ததைப் போன்று, மீனவ மக்களின் கூட்டுறவுச் சங்கக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குமரி மாவட்டத்திலுள்ள இந்து பரவர் இனத்தவர்களை எஸ்.சி. பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குளச்சல் தொகுதி, சைமன் காலனி, முன்னாள் மீன்வளத் துறை அமைச்சர் மாண்புமிகு லூர்தம்மாள் சைமன் அவர்களால் உருவாக்கப்பட்ட சைமன் காலனியில் வசிக்கும் சுமார் 150 குடும்பங்களுக்கு 40 ஆண்டுகளாக அவர்கள் வாழும் மனைகளுக்கு வீட்டு உடைமைப் பட்டா வழங்கப்படவில்லை. எனவே, இவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க ஆணையிட வேண்டுமென்று அரசை வலியுறுத்துகின்றேன். குமரி மாவட்டத்தில் வசிக்கும் உள் நாட்டு மீனவர்களும் பரவர் இனத்தைச் சேர்ந்தவர்கள்தான். எனவே, மீனவர்களுக்குரிய சலுகைகளை உள்நாட்டு மீனவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மீனவர்கள் பயன்படுத்தும் . . .

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தா. உதயசூரியன். *(குறுக்கீடு)*

**திரு. எஸ். ஜெயபால்:** ஒரு நிமிடம் நன்றியை மட்டும் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யார் கேட்டார், நன்றி யார் கேட்டார்? உட்காருங்கள். திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கத் தமிழ் படைத்த சரித்திரமாய், தமிழகத்தின் தலைமகனாய், மூன்றெழுத்துத் தமிழுக்கு முகவரி தந்த நான்கெழுத்தாய், சமூக நீதி காத்த தென்பாண்டிச் சிங்கமாய், வாழும் தமிழாய், வருங்கால வரலாறு, வரலாற்று அறிஞர் அண்ணாவின் தம்பியாய், ஈரோட்டுப் பாசறையில் பகுத்தறிவுத் தேரோட்டும் காவலராய், சிராய்ப்புகள் பல கண்டும் சிகரம் தொட்ட தலைமையாய், ஐந்து முறை முதல்வராய், ஐம்பதாண்டு உறுப்பினராய், தமிழகச் சட்டமன்றத்தில் சாதனை படைத்த தனி வரலாறாய், சோதனைகள் எது வந்தாலும், சாதனையாய் மாற்றுகின்ற சங்கதி தெரிந்தவராய், உங்கள் சுட்டு விரலைப் பிடித்துக் கொண்டு, உங்களது நிழலில் நடை பயிலுவதை நாங்களெல்லாம் நாலந்தாவில் பயில்வதாய் நினைக்கின்றோம். உங்களை வாழ்த்த



எனக்கு வயதும் இல்லை, பொன்விழா நாளிலே இங்கே எங்களுக்கு வாழ்த்தவும் வாய்ப்பில்லை அதனால் இன்றே வாழ்த்துகிறேன், வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* எங்களுடைய நிதி அமைச்சருக்கும், உள்ளாட்சியில் நல்லாட்சி செய்து கொண்டிருக்கும் மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்களுக்கும், எங்கள் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், வாய்ப்புத் தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன். கால்நடை, பால் வளம், மீன்வளத் துறை மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

இந்த அவையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு குறளைச் சொல்லி ஆரம்பித்தார்கள்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்று சொல்லி, எந்த அறத்தை மறந்தார்க்கும் வாழ்வு உண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தார்க்கு வாழ்வு இல்லை என்று இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஆனால் எங்களுடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் ஒரு கடமையைச் செய்தால், கடமையை எண்ணி கைமாறு செய்யாதே; ஒருவருக்கு திட்டத்தையோ, ஒரு உதவியையோ செய்தால் அதை மீண்டும் அவர்கள் விசுவாசமாக இருப்பதை நாம் நினைத்துப் பார்க்கக்கூடாது என்று கொள்கை ரீதியாக ஐயா பெரியார் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொண்டு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நாட்டு மக்களுக்குப் பல்வேறு திட்டங்களைக் கைமாறு எண்ணாமல் செய்கின்ற ஒரே முதலமைச்சர் எங்கள் முதலமைச்சர் என்பதை *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த நேரத்தில் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

1991-1996 வரை நடைபெற்ற ஆட்சிக் காலக்கட்டத்தில் மருத்துவமனைகளிலே நோயாளியாக இருக்கின்றபோது அவர்களை உறவினர்களோ அல்லது நண்பர்களோ சென்று பார்க்கின்றபோது நுழைவுக் கட்டணமாக 2 ரூபாய் கட்டினால்தான் மருத்துவமனைக்குள் செல்லுகின்ற ஓர் அவல நிலை இருந்தது. அந்த அவல நிலையைப் போக்குவதற்கு 1996 ஆம் ஆண்டு எங்கள் தலைவர் முதலமைச்சராக வந்தவுடன் அந்த 2 ரூபாய் நுழைவுக் கட்டணத்தை நீக்கினார்கள். அந்தப் பெருமை எங்கள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல தரை வரி, கூரை வரி எல்லாம் போட்டார்கள். இந்த முதலமைச்சர் இடத்தில் உட்கார்ந்த உடனேயே நாட்டு மக்களுக்கு அந்தத் தரை வரியையும் நீக்கிய பெருமை எங்கள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. அதேபோல 1996-97 மானியக் கோரிக்கையில் பேசுகின்றபோது ஆறறிவு படைத்த மனிதர்கள் எல்லாம் மருத்துவமனையில் தங்கி நோயாளிகளாக இருக்கின்றபோது, அவர்களைப் பார்க்கச் செல்வதற்கு 2 ரூபாய் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. ஆனால் வாயில்லா ஐந்தறிவு ஜீவன்களுக்கு குடல் புழு போக்குவதற்கு, மருந்து கொடுப்பதற்கு ஒரு ரூபாய் மருந்தகத்தில் வசூலிக்கப்பட்டது. ஆறறிவு படைத்த மனிதர்களுக்கு நுழைவுக் கட்டணம் 2 ரூபாய் என்பது தள்ளுபடி செய்யப்பட்டது. அன்றைய அண்ணன் பொங்கலூர் பழனிச்சாமி அவர்கள் கால்நடைத் துறை அமைச்சராக இருந்தார். நான் கோரிக்கை வைத்தேன். ஆறறிவு படைத்த மனிதர்களுக்கே 2 ரூபாய் கட்டணத்தை இரத்து செய்த டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இந்த ஐந்தறிவு படைத்த வாயில்லா ஜீவன்களுக்கு குடல் புழு நீக்குவதற்கு ஒரு ரூபாய் வசூலிக்கப்படுகிறது மருந்தகத்தில், அதை அறவே இரத்து செய்ய வேண்டும் என்று சொன்னவுடன், முதலமைச்சர் திரும்பிப் பார்த்து அன்றைய அமைச்சர் அவர்கள் இன்றிலிருந்து இரத்து என்று சொன்ன பெருமை எங்களுடைய முதலமைச்சருக்கு உண்டு என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல் 2004 ஆம் ஆண்டு இவர்கள் ஆட்சியில் அம்மா ஆட்சியில் செல்லப் பிராணிகளான நாய், பூனை போன்றவற்றிற்குச் சிகிச்சை பெறுவதற்காக நுழைவுக் கட்டணம் 5 ரூபாய், சிகிச்சைக் கட்டணம் 5 ரூபாய், 10 ரூபாய் வாங்கிக் கொண்டுதான் மருந்தகத்திலே அந்தச் செல்லப் பிராணிகளுக்கு வைத்தியம் செய்யப்பட்டது. மொத்தம் 10 ரூபாய் வாங்கிக் கொண்டுதான் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு தினமும் அந்த நாய்க்கோ, பூனைக்கோ இதுபோன்ற செல்லப் பிராணிகளுக்கு தினமும் சிகிச்சை பெறவேண்டும் என்று சொன்னால் 3 ரூபாய் வாங்கிக் கொண்டுதான் சிகிச்சை பெறுகின்ற அவல நிலை மருந்தகத்தில் இந்த வாயில்லா ஜீவன்களுக்கு உருவாக்கப்பட்டது. ஆனால், 9-1-2007-லிருந்து இந்த நுழைவுக் கட்டணம் 5 ரூபாய், சிகிச்சைக் கட்டணம் 5 ரூபாய், 10 ரூபாயையும், தினமும் சிகிச்சைக் கட்டணமாக வசூலிக்கின்ற இந்த 3 ரூபாயையும் அறவே இரத்துச் செய்த ஒரு முதலமைச்சர்தான் எங்களுடைய முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான், நான் முதலிலே சுட்டிக்காட்டினேன், முட்டை போட்டிருக்கிறார், டி.வி. கொடுத்திருக்கிறார். Gas stove



கொடுத்திருக்கிறார். அதேபோல் திருமண நிதி 15 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார். இவர்கள் எல்லாம் வாய் உள்ளவர்கள். கலைஞர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் நாம் வாக்களிக்க வேண்டும் என்றுகூட அவர்கள் சொல்லக்கூடும். பிள்ளைகளும்கூட 3 முட்டைகளைச் சாப்பிட்டுவிட்டு தாய் தந்தையரைப் பார்த்து நீங்கள் கொடுக்கவில்லை, எங்கள் கலைஞர் கொடுத்திருக்கிறார். ஆகவே, அதற்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களியுங்கள் என்று சொல்லக்கூடும். ஆனால் இந்த வாயில்லா ஜீவன்கள் நாய்களும், பூனைகளும் இவர்களுக்கு நுழைவுக் கட்டணமாக வருகின்ற இந்தப் பணத்தை இப்போது இரத்துச் செய்தார் என்று சொன்னால் பெரியாருடைய கொள்கையை ஏற்றுக்கொண்டு 'கைமாறு எண்ணி கடமையைச் செய்யாதே' என்ற வார்த்தையைப் பின்பற்றி இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்ற எங்கள் அய்யா முதலமைச்சர் கலைஞர் அவர்களை இந்த நேரத்தில் போற்றி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12-00

அதேபோல, விழுப்புரம் மாவட்டத்தில், எங்களுடைய தொகுதியிலே, சின்னசேலத்திலே ஆட்டுப் பண்ணை இருக்கின்றது. சுமார் 1,866 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த ஆட்டுப் பண்ணை இருக்கின்றது. இந்த ஆட்டுப் பண்ணை, 1957 ஆம் ஆண்டு ஆராய்ச்சிப் பண்ணையாக இருந்தது. அதற்குப்பிறகு இப்போது ஆட்டுப் பண்ணையாக இருக்கிறது. 1,866 ஏக்கர் நிலப்பரப்பில், மேச்சேரி செம்மறி ஆடுகள் 950, சென்னை சிவப்பு செம்மறி ஆடுகள் 150, ஜமுனா பாரி ஆடுகள் 60 வளர்கின்றன. சின்னசேலத்தில் இவ்வளவு பரப்பளவில் இருக்கின்ற இந்த இடத்தில், குறைவான எண்ணிக்கையில்தான் ஆடுகள் இருக்கின்றன.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களும் எங்களுடைய பண்ணையில் வந்து பார்வையிட்டுவிட்டுச் சென்றார்கள். அவர்களிடம் சில விளக்கங்களையெல்லாம் நாங்கள் சொன்னதனுடைய அடிப்படையில்--இதுவரை 1999 ஆம் ஆண்டு, சேலம் மேச்சேரி செம்மறி ஆடு, கிடா வாங்கி, இனவிருத்தி செய்வதற்கு பணம் ஒதுக்கப்பட்டது. ஆனால், இடையிலே 5 ஆண்டுக் காலம், இதற்கெல்லாம் பணம் ஒதுக்கப்படவில்லை. ஆனால், எங்களுடைய அமைச்சர் அவர்கள், அந்தப் பண்ணையைப் பார்வையிட்டதற்குப் பிறகு, சொன்னதை ஏற்றுக்கொண்டு--40 ஆயிரம் ரூபாயை, மேச்சேரி இனக் கிடா வாங்குவதற்கு இன்றைக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும், சேலம் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலமாக, இப்போது அந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பொதுவாக ஆடுகள், மேச்சேரி ஆடுகள், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம் போன்ற மாவட்டங்களில், சென்னை சிவப்பு ஆடுகள் அதிகமாக வளரக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. அதேபோல, சேலம், ஈரோடு மாவட்டங்களில் மேச்சேரி ஆடுகள்; திருச்சி, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் கருப்பு குரும்பாடுகள்; மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் கீழக் கரிசல் ஆடுகள் வளர்கின்றன. இவையெல்லாம், ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தட்பவெப்பச் சூழ்நிலையைப் பொறுத்து வளருகின்ற பக்குவம் படைத்தவை. ஆகவே, எங்களுடைய தொகுதியில் இருக்கின்ற சின்னசேலம் ஆட்டுப் பண்ணைக்கு—இந்த சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம் போன்ற மாவட்டங்களுக்கு சென்னை சிவப்பு ஆடுகள்—Chennai Red என்று சொல்வார்கள்—இந்த சிவப்பு ஆட்டுக் கறிதான், இறைச்சிதான் நன்றாக இருக்கும். ஆகவே, 10 கிலோ என்று சொன்னால், கிட்டத்தட்ட 6½ கிலோ அளவிற்குக் கறி, இறைச்சி அதில் அதிகமாக இருக்கும்; மீதி எலும்பும், தோலுமாக இருக்கும். ஆகவே, இந்தச் சிவப்பு செம்மறி ஆடுகளை, எங்களுடைய சின்னசேலம் ஆட்டுப் பண்ணைக்கு அதிகமாகத் தருவித்து, இனப் பெருக்கங்களை உருவாக்கி, அந்தச் சுற்று வட்டாரத்திலே இருக்கின்ற கிராமப்புற விவசாயிகள் பயனடைகின்ற வகையில், அந்த இனப் பெருக்கத்தை உருவாக்கித் தருவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவிட வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, ஜமுனா பாரி ஆடுகள்; காதுகள் நீளமாக இருக்கும். ஒரு கிடா 80 கிலோ எடை உள்ளதாக இருக்கும். பெட்டை ஆடு 50 கிலோ எடை உள்ளதாக இருக்கும். ஆனால், முதன்முதலாக உத்தரப் பிரதேச மாநிலத்திலிருந்துதான் இந்த ஜமுனா பாரி ஆடுகள், சின்னசேலம் ஆட்டுப் பண்ணைக்குக் கொண்டுவரப்பட்டன. சின்னசேலம் ஆட்டுப் பண்ணையிலிருந்துதான், தமிழகம் முழுவதும், எல்லாப் பகுதிகளுக்கும் இந்த ஜமுனா பாரி ஆடுகள் இனவிருத்தி செய்வதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இப்போது ஜமுனா பாரி ஆடுகள், சுமார் 60-தான் இருக்கின்றன. ஆகவே, இதை இனவிருத்தி செய்கின்றபோது, உள்ளினச் சேர்க்கையினால், அந்த ஜமுனா பாரி ஆட்டினுடைய உயரம் குறைகிறது; எடை குறைகிறது; நோய் எதிர்ப்புச் சக்தி குறைகிறது. ஆகவே, புதிதாகக் கிடாக்களைத் தருவித்து, அந்தக் கிடாக்களின்மூலமாக இனவிருத்தி செய்கின்றபோது, அந்த ஆட்டினுடைய தன்மை குறையாமல், ஓங்கி நிற்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.



அதேபோல, ஒவ்வோர் ஆண்டும் இந்த ஆட்டுப் பண்ணையிலிருந்து ஜமுனா பாரி ஆடுகளும், மேச்சேரி செம்மறி ஆடுகளும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. ஆண்டு ஒன்றுக்கு 40 ஜமுனா பாரி ஆடுகளும், 250 மேச்சேரி செம்மறி ஆடுகளும் வழங்கப்படுகின்றன. இவ்வளவு அதிகமாக, 1,867 ஏக்கர் சதுரப் பரப்பில் இருக்கின்ற இந்த இடங்களில், நிறைய ஆடுகளைத் தருவித்து, இனவிருத்தியைச் செய்து, விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள், நிலமில்லாத விவசாயிகள், குறு விவசாயிகள் பயனடைகின்ற வகையில் உறுதுணையாக இருக்கிற இந்த ஆடுகளை, அதிகமாக உற்பத்தி செய்திட வேண்டுமென அன்புடன் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலமாக, எங்களுடைய அய்யா தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், எங்களுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களும், ஒவ்வோர் ஊராட்சியிலும், ஓர் ஒன்றியத்தில் 50 கிராமங்களைத் தேர்வு செய்து, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை உருவாக்கித் தந்திட சென்ற ஆண்டு முடிவெடுத்திருக்கிறார்கள். ஆகவே, எங்கெல்லாம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒவ்வோர் ஊராட்சிக்கும் கொடுக்கப்படுகிறதோ, அந்த ஊராட்சியில் உள்ள சுய உதவிக் குழுவைச் சார்ந்த பெண்களுக்கு, கிடாரிக் கன்றுகளையும், பெட்டை ஆடுகளையும் நீங்கள் மானியமாகவோ அல்லது இலவசமாகவே, ஒரு குறிப்பிட்ட சாராருக்கு, அந்தச் சுய உதவிக் குழுவினருக்கு வழங்கினால், இந்த ஆடுகளையும், மாடுகளையும், கலப்பின முறையில் வளர்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல தீவனம் தேவைப்படுகின்றது. பொதுவாக, கோ-1, கோ-2, கோ-3; இந்த கோ-1, கோ-2 புல்களும் சுனை உள்ளது. அதேபோல, கினியா...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உதயசூரியனா? ஆட்டுக்கார வேலனா? *(சிரிப்பு)*

**திரு. தா. உதயசூரியன்:** ஆகவே, இந்தக் கினியா என்கின்ற புல் ரகம் தென்னந் தோப்புகளிலே வளரக்கூடியது. சைலோ என்கின்ற விதை இருக்கின்றது. அந்த சைலோ என்கின்ற விதையை, மழை பெய்தவுடன், அந்த ஈரப்பதத்தில் விதைத்துவிட்டால், தொடர்ந்து முளைத்துக் கொண்டே இருக்கும். மாடோ, ஆடோ அதை மேய்ந்துவிட்டால், பிறகு

மழை பெய்கின்றபோது, spore உருவாகி, அந்த விதைகள் உருவாகி, மீண்டும் இந்த சைலோ வளர்வதற்கு வாய்ப்பாக இருக்கும். இப்போது கிட்டத்தட்ட 5 சைலோ உரக்குழிகளை ரூ.20 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டுவது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-05*

இந்த சைலோ விதைகளை வனத் துறையிடம் தொடர்பு கொண்டு சமூகக் காடுகள் திட்டத்தில் எங்கெங்கெல்லாம் யூக்கலிப்டஸ் மரம் இருக்கிறதோ, கருவேல மரம் இருக்கிறதோ, வெள்ளை வேல மரம் இருக்கிறதோ, அங்கெல்லாம், அதை வனத் துறையின்மூலமாக விதைத்துவிட்டால் செம்மறி ஆடுகள் அல்லது ஆடு, மாடுகள் போன்றவற்றை மேய்ப்பதற்கு அவர்களுக்கு பாஸ் கொடுப்பதன்மூலம், வனத் துறையும் வருவாய் ஈட்டுவதற்கு வாய்ப்பாக இருக்கும். விவசாயிகளுக்கும் நல்ல வாய்ப்பாக இருக்கும் என்பதால் அதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த பசும்புல்லைத் தீவனமாகக் கொடுத்தால்தான் மாடுகள், எருமை மாடாக இருந்தாலும் பசு மாடாக இருந்தாலும் அதிகமான அளவு பாலைக் கொடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அடர் தீவனம் கொடுத்தால் கொள்முதல் செய்பவர்களுக்கு அதிகச் செலவாகும். ஆகவே, அதிக பிண்ணாக்கோ, பருத்திக்கொட்டையோ அல்லது தீவனமோ வாங்குகிறோம் என்று சொன்னால் அதிகச் செலவாகும். செலவு இல்லாமல் இருப்பதற்கு இந்த கோ-3 புல்லை நீங்கள் அதிகம் பயிர் செய்து—இங்கேகூட கிட்டத்தட்ட ஒரு பண்ணையில் அதிகமாக இந்த கோ-3 புல் உலக வங்கி நிதியுதவியுடன் இப்போது உருவாக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீவனப் பயிர்களை அதிகமாக உற்பத்தி செய்து—பெரும்பாலான விவசாயப் பெருங்குடி மக்கள் வழங்குவதற்கு வாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய சின்னசேலம் தொகுதியிலுள்ள நயினார் பாளையத்திற்கு அருகிலுள்ள அனுமனந்தல் என்ற கிராமத்திற்கு ஒரு மருந்தகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தந்திட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி அவர்கள். சார் பத்து நிமிடங்கள், பத்தே நிமிடங்கள்தான்.

**திரு. மு.க. பெரியசாமி:** சரி, பேசுகிறேன் அய்யா.

*'சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்*
*கோடாமை சான்றோர்க் கணி'*

என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கு இலக்கணமாகத் திகழும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்களே,

*"கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்*
*கழையிடை ஏறிய சாறும்,*
*பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்*
*பாகிடை ஏறிய சுவையும்*
*நனிபசு பொழியும் பாலும் - தென்னை*
*நல்கிய குளிரிள நீரும்*
*இனியன என்பேன் எனினும் - தமிழை*
*என்னுயிர் என்பேன் கண்டீர்!*

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் வாய்மொழிக்கிணங்க,

'தாய் வளர்த்து நாம் வளர்ந்தோம், தமிழ் வளர்த்து நாம் வாழ்வோம்' என்ற எம் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும்,

*'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்*
*தாழாது உஞற்று பவர்'*

என்ற அய்யன் திருவள்ளுவனின் வாக்கிற்கிணங்க "சட்டமன்றப் பொன்விழா நாயகன்", விடாமுயற்சியும், சோர்வுமின்றி தளராது 83 வயதிலும் தமிழ் கூறும் நல்லுலகம் தலைநிமிர்ந்து தன்னிகரில்லா நிதிநிலை அறிக்கை தந்திட்ட முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இளைய தலைமுறையின் எழுச்சி நாயகன், நடமாடும் சுகாதாரக் களஞ்சியம், நடுவண் அரசின் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மருத்துவர் சின்னய்யா அவர்களுக்கும், உள்ளாட்சியில் நல்லாட்சி நடத்தி, நாளைய ஆட்சிக்கு இலக்கணம் வகுத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு தளபதி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், ஓய்வறியா உழைப்பாளி

அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும், என்னுடைய மனமார்ந்த நன்றியைச் சொல்லி, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது எனக்கு விவாதம் செய்வதற்கு வாய்ப்பளித்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.

நாட்டின் உற்பத்தித் துறை 3 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், முதன்மைத் துறையில் முக்கியத் துறையான வேளாண்மையில், கால்நடை, மீன்வளம் மற்றும் பால் வளம் ஆகியவை அங்கம் வகிக்கின்றன. இதற்கு முக்கியக் காரணம் இந்தத் துறைகள் 65 சதவிகிதம் கிராமப்புற ஏழை எளிய சிறு குறு விவசாயிகளின் வாழ்வாதாரங்களை, சமூகப் பொருளாதார மேம்பாட்டை நிர்ணயிக்கின்ற முக்கியச் சக்திகளாக இருக்கின்றன. அரசினுடைய கொள்கைக் குறிப்பிலும் இது சொல்லப்பட்டிருக்கிறது.

பண்டையக் காலந்தொட்டே கால்நடைகள் துணை வருவாயை ஈட்டித்தரும் நடமாடும் வங்கிகளாக இருக்கின்றன. கால்நடைகளைப் பொறுத்தமட்டில் இழுவைத் திறனையும், இயற்கை உரங்களையும் அளிப்பதுடன், பல்வேறு தொழில்களுக்கு தோல், இரத்தம், கால், குளம்பு, எலும்பு, கொம்பு போன்ற மூலப்பொருள்களையும் அளித்து வருகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, மனித குலத்திற்கு மிகப்பெரிய ஆபத்தாக உள்ள சர்க்கரை ஆட்கொல்லி நோய்க்கு இன்சுலினை வழங்குகிறது. இதனால்தான் கால்நடைகளை 'கோமாதா எங்கள் குலமாதா' என்று பண்டைய காலந்தொட்டே போற்றுகிறார்கள்போலும்.

மேலும், ஒரு நபருக்கு 250 கிராம் பால் கொடுக்க வேண்டும் என்ற தமிழக அரசின் அரிய திட்டத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மனமார நாங்கள் பாராட்டுகிறோம். இப்படி கால்நடைகளும், பால் வளமும் பிரிக்க முடியாத வகையில் நாட்டின் வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றன.

பிற்பகல் 12-10

பசுமைப் புரட்சியில் வெற்றி கண்ட நாம், இன்று வெண்மைப் புரட்சியில் பால் உற்பத்தியில் எட்டாவது இடத்திலும், முட்டை உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும், வெள்ளாடு, வெண்பன்றி, வான்கோழி, ஈமு கோழி, காடை கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் இவ்வகை கால்நடைகளைத் திறம்படப் பராமரிப்பதன்மூலம், மக்கள் கிராமங்களில் இருந்து நகர்ப்புறங்களுக்கு



குடியேறுவதைத் தவிர்க்கலாம். வேலையற்ற கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கலாம். இப்படிப்பட்ட கால்நடைகளின் உற்பத்தித் திறனையும் விரிவான விரிவாக்கத்தையும் அதிகப்படுத்தி, தகுதியுள்ள அனைவருக்கும் உயர் இன, கலப்பினக் கன்றுகளை ஊராட்சிதோறும், நிறுத்தப்பட்ட மானியத்துடன் தகுதியுள்ள நபர்களுக்கு வழங்கிட அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏனைய கால்நடைகள், அவை வளர்வதற்கு வாய்ப்புள்ள இடங்களில் மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்கி கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி, காலப்போக்கில் இலவசத் திட்டங்கள் என்ற எதிர்பார்ப்பை முற்றிலும் குறைத்து தங்களது சொந்தக் காலிலேயே, சுய முயற்சியில், சுயமரியாதையோடு வாழ, வழிவகை செய்ய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இலவசம் என்பது உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்று என்பதை நான் பா.ம.க. சார்பாக இங்கே மாமன்றத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். ஆகவே, பண்டைய காலந்தொட்டு நடமாடும் கால்நடை அறிவியல் மற்றும் விஞ்ஞான முன்னேற்றத்தின் காரணமாக உயர் உற்பத்தித் திறன் கொண்ட உயர் கலப்பினக் கால்நடைகள் இப்போதும் தமிழகம் முழுவதும் அனைத்துக் கிராமங்களிலும் வளர்க்கப்பட்டு வருகின்றன. அவற்றிற்குரிய சுற்றுப்புறச்சூழல், தட்ப வெட்பச் சூழ்நிலை காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளது. மேலும் இவற்றை நீண்ட தூரங்களுக்கு மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்வதற்கும் முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, ஊராட்சி மன்றங்களிலே அங்கேயே அந்த மருத்துவமனைகளை நிறுவி அவற்றிற்கு வேண்டிய அனைத்து மருத்துவ வசதிகள், செயற்கை முறையில் கருவூட்டல் மற்றும் அறுவை சிகிச்சை ஆகியவற்றைச் செய்வதற்கு ஊராட்சிதோறும் அரசு மருத்துவ அலுவலர்களை நியமிக்க வேண்டும்.

கடந்தகால ஆட்சியில் ஏறக்குறைய 1,700 மருத்துவர்கள் நியமிக்கப்படாமல் கட்டப்பட்ட அனைத்து மருத்துவமனைகளும் இப்போது காலியாகத்தான் இருக்கின்றன. ஆகவே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு கலைஞர் அவர்கள் நெசவாளர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு, அதைப்போல போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு என்று அனைத்துத் தரப்புத் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்கியிருக்கிறார்கள். இப்போது இளைஞர்கள் நாள்தோறும் வேலை, வேலை என்று அவர்களுடைய அலுவலகங்களைத் தேடி வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலே,

இப்போது கிராமப்புற மக்களுக்கு மிகப் பெரிய பொருளாதார மேம்பாட்டைக் கொடுக்கிற, கால்நடைகளுக்கு மருத்துவம் செய்கிற மருத்துவ அலுவலர்களை அனைத்து நிலையங்களிலும் நியமித்து அவர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களை ஊக்கப்படுத்துகிற வகையிலே அவர்களுக்கு risk allowance 200 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்த வேண்டும். மேலும் போக்குவரத்துச் செலவை 150 ரூபாயிலிருந்து 250 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். இப்படி அனைத்து நிலைகளிலும் காலிப் பணியிடங்களை இந்த அரசு நிரப்பி, கிராமப்புற மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

அதைப்போல என்னுடைய தொகுதி ஒரு நீண்ட மீனவர் பகுதியைச் சார்ந்தது; கடற்பகுதியைச் சார்ந்தது; 57 கிராமங்களை உள்ளடக்கி இருக்கிறது. இன்று நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏறக்குறைய 30 கிலோ மீட்டருக்கு நமக்கு மீன்பிடித் துறைமுகம், இறங்குதளங்களை அமைத்துக்கொடுக்க இருக்கிறார்கள், அமைக்க இருக்கிறார்கள். நீண்ட நெடுங்காலமாக பூம்புகார் ஓர் இயற்கைத் துறைமுகம். அந்தக் காலத்திருந்து இந்தக் காலம்வரை அந்த மக்கள் நீண்டநாள் கோரிக்கை ஒன்றை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட வேண்டும் என்ற அந்த மக்களுடைய கோரிக்கையை இந்த மாமன்றத்திலே நான் வைத்து வலியுறுத்த விரும்புகிறேன். அதை அவர்கள் எங்களுக்கு வழங்க வேண்டும்.

அதைப்போல இன்று அண்மைக் கடல் மீன்பிடிப்பாலே மீன்வளம் மிகவும் குறைந்திருக்கிறது. ஆகவே, குறைந்த அந்த மீன்வளத்தை நாம் மேம்படுத்த வேண்டும். இப்போது மீன்பிடித் தொழில் மிக வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. அன்னியச்செலாவணி வெகுவாக ஈட்டிக்கொண்டிருக்கிறது. படகுகள் அதிகமாக வழங்கப்பட்டுவிட்டன. விசைப் படகுகள் தமிழ்நாடு முழுவதும் அதிக அளவில் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மீன்பிடித் தொழில் மிகவும் வளர்ந்திருக்கிறது. இந்தக் காலத்தில் அப்படி இருக்கிறபொழுது, அண்மைக் கடல் மீன் பிடிப்பு என்ற நிலையை மாற்றி, ஆழ் கடல் மீன் பிடிப்பு, தூண்டில் மீன் பிடிப்பு, இப்படிப் பல்வேறு வகைகளை இங்கே கொண்டுவந்து, பெரிய, சிறிய கன்னி வலைகளைப் பயன்படுத்துவதையும், இரட்டை மடி வலைகள் மற்றும் சுருக்கு வலைகள் ஆகியவற்றையெல்லாம் தடை செய்து, அந்த மீன்வளத்தை உருவாக்க வேண்டும். ஆகவே, சிறப்பான அந்த மீன்வளத்தைப் பெருக்குவதற்கு நீங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.



பிற்பகல் 12-15

அதைப்போல, உள்நாட்டு மீனவர்களுக்கும், புயல் காலங்களிலே நிவாரண நிதியை வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும். ஆகவே, இப்படிப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குவதோடு, கடற்கரையைப் பாதுகாக்க, புயல், வெள்ளம், சூறாவளி மற்றும் ஆழிப் பேரலைகளிலிருந்து பாதுகாக்க, மேங்ரோஸ், சவுக்கு போன்ற பசுமை அரண்களைக் கடற்கரை முழுவதும் அமைத்து, இயற்கைச் சீற்றத்திலிருந்து நமது மக்களைப் பாதுகாக்க வேண்டும். சுனாமியால் ஏற்பட்ட பாதிப்பிற்குப்பின், நமது அரசு சிறப்பாகச் செயல்பட்டு, அனைத்து மீனவ மக்களுக்கும் மற்றும் அந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நிரந்தரக் குடியிருப்புகளைக் கட்டி, இன்று ஒரு மாபெரும் சாதனையைச் செய்திருக்கிற அரசு, உலகத்திலேயே நமது தமிழக அரசுதான் என்பதை யாராலும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட அந்த மீனவர்களுக்கு, இப்போது மானிய விலையிலே மாதம் 1,500 லிட்டர் டீசல் வழங்கப்படுகிறது. ஆனால், மீன் பிடிப்புத் தொழில் என்பது, வருடத்தில் 6 மாத காலமோ, அல்லது 3 மாத காலமோதான் நடைபெறுகிறது. ஆகவே, அந்த டீசலை, அவர்கள் எந்த மாதத்தில் விரும்புகிறார்களோ அந்த மாதத்தில் அந்த டீசலை அவர்களுக்கு வழங்கி, அந்த உதவியை அவர்களுக்குச் செய்ய வேண்டும். ஆகவே, 1,000 மீட்டர் வரை, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. 500 மீட்டரிலேயிருந்து 1,000 மீட்டராக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதையும், 1,500 மீட்டராக உயர்த்தி, அனைத்து மக்களுக்கும், உலக வங்கி உதவியோடு, வீடு கட்டும் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர், திரு. ஞா. ஜாண் ஜோசப். (குறுக்கீடு)

**திரு. மு.க. பெரியசாமி:** ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். எனவே, பூம்புகார் தொகுதி, முழுக்க, முழுக்க கடற்கரை மாவட்டத்திலே இருக்கிறது. அங்கே ஓர் அரசுக் கல்லூரி, நமது இந்து சமய அறநிலைய மற்றும் ஆட்சித் துறையின் சார்பாக நடத்தப்படுகிறது. அதிலே முழுக்க, முழுக்க தலித் மக்களும், பின்தங்கிய மக்களும்தான் 3,000 பேர் படிக்கிறார்கள். அதை ஒரு கடற்கரைப் பல்கலைக்கழகமாக அங்கீகரிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி ஒன்று தொடங்குவதாக நமது அரசு முடிவெடுத்திருக்கிறது. வரும் நிதியாண்டிலே, நாகை மாவட்டத்தின் சார்பாக தரங்கம்பாடியிலே அந்த மருத்துவக் கல்லூரியை நீங்கள் அமைக்க வேண்டும். அந்த மருத்துவக் கல்லூரிக்கு மிகச் சிறப்பான இடம், அனைத்து நோய்களையும் சரி செய்கின்ற, மன மகிழ்வை ஏற்படுத்தும் ஒரு வாய்ப்பு அங்கே அதிகமாக இருக்கிறது. ஆகவே, அதையும் நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர், திரு. ஞா. ஜாண் ஜோசப், உங்கள் உரையை 7 நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ள வேண்டும்.

***திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாலும், மீனும், இறைச்சியும் சம்பந்தப்பட்ட இம்மூன்று முக்கியமான துறைகள் குறித்து, திருக்குறள்போல, சுருங்கக் கூறுவதற்கேனும் வாய்ப்புத் தருமாறு முதலில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு நல வாரியம், மீனவர் கூட்டுறவுச் சங்கக் கடன் ரூ.19.56 கோடி தள்ளுபடி, மீனவர்களுக்குக் கம்பியில்லாத் தொலை தொடர்பு வசதிகள், கடலில் காணாமல் போகும் மீனவர்கள் குடும்பத்திற்கு தினமும் ரூ.50 நிதியுதவி, காணாமல் போகும் மீனவர்களைத் தேட கன்னியாகுமரி மாவட்டத்தில் ஹெலிகாப்டர் மற்றும் அதிவேகப் படகு வசதி போன்ற அறிவிப்புகளை வெளியிட்டு, மீனவ மக்களை வியப்பிற்குள் ஆழ்த்திய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மீன்வளத் துறைக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

*பிற்பகல் 12-20*

மீன் உலர்த்துவோரையும், மீன் விற்பனை செய்வோரையும் மீனவர்களாக அறிவித்ததைப்போன்று, மால் முடித்தல், இரை கொருத்தல் போன்ற தொழிலில் ஈடுபடுவோரையும் மீனவர்களாக அறிவிக்க வேண்டுகிறேன்.

குமரி மாவட்ட உள்நாட்டு மீனவர்கள், குளம், குட்டை மற்றும் ஆற்றில் மீன் பிடிப்பவர்கள் போன்றவர்கள் இல்லை. கடற்கரை மீனவர்களைப் போன்றே இவர்களும் தொழில் செய்கின்றனர். எனவே, இவர்களையும் மீனவர் பட்டியலில் சேர்க்க வேண்டும்.



கடலில் காணாமல் போகும் மீனவர்களை, காணாமல் போனவர்கள் என்று அறிவிக்க ஏழு ஆண்டுகள் ஆகவேண்டும் என்ற நிபந்தனை மிக, மிகக் கடுமையானது. இதை இரண்டு ஆண்டுகளாகக் குறைக்க வேண்டும். 1-11-1995 அன்று, எனது தொகுதிக்குட்பட்ட நான்கு பேர் மீன் பிடிக்கச் சென்று கடலில் காணாமல் போயினர். 12-1-2000 அன்று, அதாவது ஐந்து ஆண்டுகள் கழித்து மீன்வளத் துறை இயக்குநர் எழுதிய கடிதத்தில், அவர்கள் நார்வே நாட்டில் இருப்பதாகவும், அவர்களை மீட்டுக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீண்டும் ஆறு ஆண்டுகள் நகர்ந்து போயின. அவர்களை மீட்கவும் இல்லை, காணாமல் போனவர்களாக அறிவிக்கவும் இல்லை. ஏதோ அனுமானத்தின் அடிப்படையில் அக்கடிதம் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. எனவே, அக்குடும்பங்களை மனோரீதியான சித்திரவதைக்கு மேலும் ஆளாக்காமல், காணாமல் போனவர்களுக்குரிய சலுகைகளை அளிக்க வேண்டும்.

கடலில், கட்டுமரங்கள், படகுகள், விசைப் படகுகள் உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்கள் மூழ்கினாலோ, தீப்பிடித்தாலோ, சேதம் அடைந்தாலோ, அரசு இழப்பீடு வழங்குவதுடன், மீண்டும் தொழிலைப் புனரமைத்துக்கொள்ள வங்கிக் கடன் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

துப்பாக்கிச் சூட்டில் மரணம் அடைந்த குமரி மாவட்ட மீனவர்களுக்கு வழங்கியதுபோல், கடந்த மாதம் இலங்கைக் கடற்படையின் துப்பாக்கிச் சூட்டில் பலியான, நாகை மீனவர்கள், கலியபெருமாள் மற்றும் ஆறுமுகம் ஆகியோரின் குடும்பத்திற்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

கால்நடை பராமரிப்புத் துறை, ஊழியர் பற்றாக்குறையினால் திணறுகிறது. எடுத்துக்காட்டாக, குமரி மாவட்டத்திலுள்ள 208 பணியிடங்களில், 99 பணியிடங்கள் காலியாக உள்ளன. தமிழகத்தில் கால்நடை ஆய்வாளர் பணியிடங்கள் மட்டும், சுமார் 1,800 காலியாக உள்ளன. இந்நிலையில், 2006-2007-ல் 172 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டதாகக் கொள்கை விளக்கக் குறிப்பு கூறுகிறது. இது போதுமானது அல்ல. கால்நடை ஆய்வாளர், கால்நடை பராமரிப்பு உதவியாளர் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பி, கண்ணீர் வடிக்கும் கால்நடைகளின் துயர் துடைக்க வேண்டும்.

நாட்டிலேயே முதல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தை 1989-ல் தமிழ்நாட்டில் உருவாக்கி, மாண்புமிகு

முதல்வர் அவர்கள் சாதனை படைத்துள்ளார்கள். இப்பல்கலைக்கழகம் நுண்ணிய பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, அரிய பல கண்டுபிடிப்புகளை இத்துறைக்குத் தர வேண்டியுள்ளது. இத்துறையின் பதவி உயர்வில், பட்ட மேற்படிப்பு படித்தவர்களுக்கும் வாய்ப்பளித்தால், ஆற்றல்மிக்க பல புதிய விஞ்ஞானிகளை உருவாக்க முடியும். பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டதன் நோக்கமும் ஈடேறும்.

நடமாடும் கால்நடை மருந்தகங்களைப் போதிய எண்ணிக்கையில் உருவாக்கிடவும், குமரி மாவட்டத்தில் விளவங்கோடு, பத்மநாபபுரம், திருவட்டார், கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிகளின் மேம்பாட்டு நிதியுதவியுடன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்த, நடமாடும் கால்நடை மருத்துவமனைக்கான அறிவிப்பை இம்மானியத்தின்மூலமாக வெளியிட வேண்டுகிறேன்.

கால்நடை மருத்துவக் கிளை நிலையத் துப்புரவாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.60/- மட்டும்தான் வழங்கப்படுகிறது. இதை, குறைந்தபட்சம் ரூ.600/- ஆக உயர்த்தி வழங்க வேண்டும்.

காப்பு வனப் பகுதிகளில் ஆடு மேய்க்க, கட்டண விதி விலக்கு அளித்து அரசாணை உள்ளது. எனினும், சில இடங்களில் ஆடு மேய்க்க பிரச்சினைகள் உள்ளன. இது குறித்து, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடன் பேசி, நல்ல தீர்வு காணவேண்டும்.

*பிற்பகல் 12-25*

*2007 மார்ச் 7*, அறிவிப்பின்படி, Fat *3* சதவிகிதம், SNF *8* சதவிகிதம் உள்ள பாலுக்கு கொள்முதல் விலை ரூ.*1.50* அதிகரிக்கப்பட்டது. ஏற்கெனவே இருந்த விலை ரூ.*8.58*. இரண்டையும் சேர்த்தால் ரூ.*10.08* வருகிறது. ஆனால், விலை அட்டவணையில் ரூ.*9.65* எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டர் ஒன்றிற்கு *43* காசு குறைவாகத்தான் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. அதனைச் சரி செய்ய வேண்டும்.

பழைய விதிகளின்படி Fat *3* சதவிகிதமாகவும், SNF *8* சதவிகிதமாகவும் இருந்தால் ஒரு லிட்டர் பாலுக்கு ரூ.*8.58* கிடைத்து வந்தது. பாலின் தரம் குறையக் குறைய, விலையும் சிறிது சிறிதாக குறையும். எடுத்துக்காட்டாக, Fat *3* சதவிகிதமாகவும், SNF *7.7* சதவிகிதமாகவும் இருந்தால், ஒரு லிட்டர் பாலுக்கு ரூ.*6.24* கிடைத்து வந்தது. ஆனால், புதிய விலை அறிவிக்கப்பட்டபின், இதே தரம் கொண்ட பாலுக்கு வெறும் ரூ.*2.20* தான் கிடைக்கிறது. சில



மாவட்டங்களில், அதுவும் கிடைப்பது இல்லை. பாலின் தரத்தை மேம்படுத்துவதற்காக, இப்படி அபராத விலை போடுவதாகக் கூறப்படுகிறது. இந்த அபராத விலை பாலில் கலந்த நீரைப் போல ஒன்றியங்களுக்கு அதிக இலாபத்தையும், நீரில் கலந்த பாலைப் போல சங்கங்களுக்கு பெரும் இழப்பையும் ஏற்படுத்துகிறது. காரணம் தரமான பாலை, வேண்டுமென்றே, தரம் குறைந்த பால் என்று கூறி ஒன்றியம், சங்கங்களுக்கு விலை கொடுக்க மறுத்து வருகிறது.

வாரத்தில் இரண்டு நாட்களிலாவது, இந்த முறைகேடு நடக்கிறது. இதனால், ஒன்றியங்களுக்கு பால் கொடுக்கவே சங்கங்கள் பயப்படுகின்றன. பால், ஒன்றியத்தில் வந்து சேர்ந்துவிட்டால், அவர்கள் போட்டதே சட்டம் என்ற நிலைதான் இருக்கிறது. ஒன்றியம் தனது வாகனத்தைச் சங்கங்களுக்கு அனுப்பி தினமும் பால் எடுத்து வருகிறது. சங்கங்களிலிருந்து பாலைக் கொள்முதல் செய்யும்போது தரப் பரிசோதனையை நடத்த மாண்புமிகு அமைச்சர் ஆணையிட வேண்டும்.

குமரி மாவட்டம், விளவங்கோடு மற்றும் கல்குளம் தாலுகாக்களிலுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. காரணம், பக்கத்து கேரளா மாநிலத்தில் பாலின் கொள்முதல் விலை அதிகம். தனியார் நிறுவனங்கள் நமது சங்கங்கள் கொடுப்பதைவிடவும் அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்து, கேரளாவில் கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர். மேலும், அங்கே நல நிதி, பத்து வருடங்கள் பால் வழங்கிய உறுப்பினர்களுக்கு பென்ஷன், மானியத்துடன்கூடிய கறவை மாடு, மானிய விலையில் மாட்டுத் தீவனம், இலவச இன்ஷூரன்ஸ், இலவச செயற்கைமுறை கருவூட்டல், போனஸ் போன்ற பல சலுகைகள் கிடைக்கின்றன. இத்தகைய காரணங்களால் ஒரு காலத்தில் முன்னணியில் இருந்த கீழ்குளம், பள்ளியாடி, பாகோடு, கடையால், முழுக்கோடு, அருமனை, விரிவிளை போன்ற சங்கங்கள் செயலிழந்து உள்ளன. குமரி மாவட்டத்தின் இந்தப் பிரத்யேக சூழ்நிலையைச் சமாளிப்பதற்குரிய திட்டம் தீட்டப்படாமல் போனால் இந்த மாவட்டத்திலுள்ள பால் உற்பத்தியாளர் சங்கங்களைக் காப்பாற்றவே இயலாது என்பதைக் கவலையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் *8-7-1980*-க்குப் பின் பணியமர்த்தப்பட்ட பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்படவோ, உரிய ஊதிய உயர்வு வழங்கப்படவோ இல்லை.

மீனவர், மகளிர் மீனவர், உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களிலும் பணியாளர்களின் நிலை பரிதாபகாமாகவே உள்ளது. குறுமக்கூலி கூட கிடைக்காத பணியாளர்கள் பால் மற்றும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ளனர். இந்தப் பணியாளர்களின் வேதனைக் குரலை, அரசு கருணையுடன் பரிசீலிக்க வேண்டும். கால்நடை விவசாயிகளுக்கு, கால்நடைகள் வாங்க மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்க துறை முன்வர வேண்டும். குமரி மாவட்டத்தில் அதிக அளவில், செயற்கைமுறை சினையூட்டல் நடைபெற்று வருகிறது. எனவே, திங்கள் சந்தை கால்நடை மருந்தகத்தில், திரவ nitrogen plant மற்றும் உறைவிந்து நிலையம் அமைக்க வேண்டும். தேங்காய்பட்டணம் மீன்பிடித் துறைமுகம் அறிவிக்கப்பட்டு சுமார் 10 மாதங்களாகியும் நில ஆர்ஜிதப் பணிகூட இதுவரையிலும் முடியாதது கவலையளிக்கிறது. இப்பணியைத் துரிதப்படுத்துவதுடன், நீரோடி முதல் இரையும்மன்துறை வரை உள்ள கடலோரத்தில் தேவையான தூண்டில்வளைவுகள் அமைக்க வேண்டும்.

*பிற்பகல் 12-30*

வீடில்லாத அனைத்து மீனவக் குடும்பங்களுக்கும் வீட்டுவசதி ஏற்படுத்துவதுடன், அரசு கட்டிக்கொடுத்த பழைய வீடுகளைப் பழுதுபார்க்க நிதி உதவி செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்துவிடுகிறேன் சார், இதோ முடித்துவிடுகிறேன்.

கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் பணி வரன்முறை தொடர்பான ஆணைகள் எதுவும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் அமலாகாமலே உள்ளன.

5 முதல் 20 ஆண்டுகள் வரை தொகுப்பூதியம் பெற்றுவரும் ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

மீனவர் கூட்டுறவு மாநில ஃபெடரேஷன் தேர்தலுக்கு, உறுப்பினர்கள் அந்தந்த மாவட்டங்களில் வாக்களிக்க வகை செய்ய வேண்டும்.

சுப்பலூரில் பூட்டிக் கிடக்கும் கால்நடை தீவனத் தொழிற்சாலையைத் திறப்பதுடன், மானிய விலையில் கால்நடைத் தீவனம் வழங்க வேண்டும். வாய்ப்புக்கு மிக, மிக நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன்.



***திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் வளம், மீன்வளம், கால்நடைத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். பால் வளத்தைப் பெருக்க விவசாயிகளுக்கு உயர் ரகப் பசுக்களைப் பயன்படுத்த வலியுறுத்தப்படுகிறது. ஆனால், அப்பசுக்களுக்கு பசும் புல், கூவா புல் போன்ற உணவுகள் தேவை. ஆனால், அதைத் திட்டமிட்டு வளர்ப்பதற்கு நடவடிக்கை தேவை என்று கேட்டுக்கொள்கிறேன். தற்சமயம் கால்நடைகள் குறைந்து வருகின்றன; கால்நடைகளின் தேவை அதிகரித்து வருகிறது. எனவே, கால்நடைகளை உற்பத்தி செய்வது, பாதுகாப்பது, வளர்ப்பது, உடைமையாளர்களுக்கு இலாபம் கிடைப்பது என்ற அடிப்படையில் திட்டமிட வேண்டுகிறேன்.

பால் கொள்முதல் விலையை ரூ.10/-லிருந்து ரூ.12/- ஆக உயர்த்தியதற்கு விவசாயிகள் சார்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆவின் ஊழியர்களுக்கு அரை லிட்டர் பால் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை 1990-ல் ஏற்று சட்டப் பேரவையில் அறிவித்தது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அரசு. பால் வள ஊழியர்களின் குடும்பங்களுக்கு வயிற்றில் பால் வார்த்தது. இன்னும் அந்தக் குடும்பங்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை வாழ்த்திக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை நிறுத்தத்தால் 16 ஆண்டுகள் வீதியிலே நிறுத்தப்பட்டிருந்தனர். சேர்க்க மறுத்தனர் அதிகாரிகள். கலைஞர் அரசுதான் 1997-ல் மீண்டும் வேலைக்கு அனுப்பி, அழிக்க முடியாத சரித்திரத்தை உருவாக்கியது. இதை இந்த ஊழியர்களின் வாழ்நாளில் மட்டுமல்ல, அவர்களது சந்ததியினரும்கூட, மாண்புமிகு கலைஞர் அவர்களால் கிடைத்த புது வாழ்வை மறக்கமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களை A.I.T.U.C.-யின் தலைவர்கள் நேரில் சந்தித்து ஆவின் ஊழியர்களுக்கான தனி ஓய்வூதியக் கோரிக்கையைக் கொடுத்தார்கள். மாண்புமிகு முதல்வரின் வழிக்காட்டுதலின்பேரில், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சரும் தொழிற்சங்கங்களை அழைத்துப் பேசியிருக்கிறார்கள்.

அமைப்புசாராத் தொழிலாளர்கள் 5 ஆண்டுகள் வேலை பார்த்தாலே மாதம் ரூ.400/- ஓய்வூதியம் அரசே வழங்கும் என்று

கலைஞர் அரசு அறிவித்துள்ளது. ஆனால், 30, 10 ஆண்டுகள் வேலை பார்த்த ஆவின் ஊழியர்கள் மாதம்தோறும் பணம் செலுத்தியும்கூட ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாகவே பென்ஷன் பெறுகிறார்கள். அவர்களது சம்பளத்தில் கால் பகுதியாவது பென்ஷனாகப் பெறும் வகையில் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்கள். தமது மாதச் சம்பளத்திலிருந்து 12 சதவிகிதத் தொகையை விட்டுத் தரவும் அவர்கள் சம்மதித்துள்ளார்கள். இதையும் சாத்தியமில்லை என்று அதிகாரிகள் கை விரிக்கக்கூடும்.

சாத்தியமற்றது என்று கூறப்பட்டதையெல்லாம் சாத்தியமாக்கி, சாதனை படைத்த நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அரசு, மின்சார ஊழியர்களுக்கு பென்ஷன் திட்டம், போக்குவரத்து ஊழியர்களுக்கு பென்ஷன் திட்டம் கொண்டுவந்தது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அரசுதான். எனவே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட ஆவின் ஊழியர்களுக்கு தனி பென்ஷன் திட்டம் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பை இன்றே இந்தப் பேரவையில் வெளியிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். 7,000 ஊழியர்கள் இந்த அறிவிப்பை எதிர்நோக்கி இன்றையதினம் பேரவை நிகழ்ச்சியைக் கூர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

சென்ற பேரவைக் கூட்டத்தொடரில் ஊழியர் நலன் காக்கும் அறிவிப்புகளை மாண்புமிகு அமைச்சர் வெளியிட்டார்கள். அவற்றில் சில நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணமாக, வேலை நீக்கம் செய்யப்பட்ட 700 ஊழியர்களுக்கு மீண்டும் கலைஞர் அவர்களால் பணி வழங்கப்பட்டது. வழங்கப்பட வேண்டிய 5 சதம் தனி ஊதியம் வழங்கப்படும் என்று மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதில் 75 ஊழியர்களுக்கு மட்டும் ரூபாய் 1,80,000 மட்டும் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், மின்சார வாரியத்தில் பணிபுரிந்த ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்தார்கள். அதுபோல, ஆவினில் மாநிலம் முழுவதும் உள்ள சுமார் 500 Casual தொழிலாளர்கள் 10 ஆண்டுகளுக்கு மேல் பலர் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாநிலம் முழுவதும் ஒரே அளவு பஞ்சப்படி வழங்கவேண்டும்.



பாலின் கொள்முதல் விலை லிட்டர் ரூ.12/- என்று அரசு அறிவித்தும், கொழுப்புச் சத்தைக் கணக்கிட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.10/- தான் லிட்டருக்கு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் வருமானத்தைத் தரக்கூடிய வகையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் பால் சொசைட்டி தொடங்கப்பட வேண்டும். இவற்றில் தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஆவின் பால் விற்பனை நிலையம் இல்லாத இடங்களில் விற்பனை நிலையம் ஏற்படுத்த வேண்டும். திருத்துறைப்பூண்டி நகரம், முத்துப்பேட்டை போன்ற பகுதிகளில் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

மீனவர்களுக்குத் தனி நல வாரியம், துப்பாக்கிச்சூட்டில் பலியான மீனவக் குடும்பங்களுக்கு ரூ.5 இலட்சம் நிதியும், வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீன் உற்பத்தி பருவ காலத்தில் மத்திய, மாநில அரசுகளால் அறிவிக்கப்பட்டு, மீன் பிடிக்காமல் உள்ள ஏப்ரல் 15 முதல் மே 31 ஆம் தேதி வரையிலான 45 தினங்களுக்கு மீனவர்கள் ஜீவனத்தைக் கருத்தில்கொண்டு ரூ.1,500/-ம், இலவச அரிசியும் வழங்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

புயல் பருவ கால சேமிப்பு நிதித் திட்டத்தில் மீனவர்களிடம் மாதம் ரூ.125 வீதம் 8 மாதத்திற்கு ரூ.1,000/- பெற்று மத்திய, மாநில அரசுகள் ரூ.2,000/- மானியத்தோடு மீனவர்களுக்கு ரூ.3,000/- வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்ற கடன்கள் ரூ.7,000/- கோடியைத் தள்ளுபடி செய்தீர்கள். அதுபோல், மீனவர்கள், மீனவப் பெண்கள் மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுள்ள கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

வயது முதிர்ந்த, வாழ்க்கை நடத்த முடியாத மீனவர்களுக்கு நல வாரியத்தின்மூலம் ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமாய்

அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் காணாமல் போனால், 7 ஆண்டுகள் கழித்துதான் இறந்ததாக ஏற்றுக்கொள்ளும் நிலையில் 7 ஆண்டுகள் கழித்து இறந்துவிட்டார்கள் என்று இன்சூரன்ஸ் கேட்டு மனுச் செய்தாலும் கிடைக்காத நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்னுடைய திருத்துறைப்பூண்டி தொகுதியில் மீனவர்கள் அதிகமாக வாழும் முத்துப்பேட்டை பேரூராட்சி, செங்கங்காடு, ஜாம்பானோடை, ஆலங்காடு, தொண்டியக்காடு, தில்லைவிளாகம், கற்பகநாதர்குளம் போன்ற ஊராட்சிகளில் அதிகமாக மீனவர்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய தொழில் மீன் பிடிப்பதாகும். இவர்கள் பிடிக்கும் மீன்களை விற்பனை செய்ய, கரைக்குக் கொண்டுவர போதிய வசதியில்லாததால் அப்பகுதி மீனவர்களின் கோரிக்கையையேற்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில், கடந்த 14-6-2006 அன்று முத்துப்பேட்டை ஆய்வு மாளிகையில் மாண்புமிகு மத்திய கப்பல் மற்றும் தரை வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் மற்றும் மாவட்ட அதிகாரிகள், மீனவர்கள் கலந்துகொண்ட ஆய்வுக் கூட்டத்தில் ஜாம்பானோடை மற்றும் ஆசாத் நகரில் மீனவர்களின் நலன் கருதி இரண்டு சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என்றும், நிதியும் அறிவித்தும், இன்றுவரை பணிகள் நடைபெறவில்லை. மீனவர்களின் நலன் கருதி மீன்பிடி துறைமுகம் அமைத்துத் தர மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களையும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த ஆட்சியில் மீன் வளர்ப்பு என்ற ரீதியில் தேளிகெழுத்தி என்ற மீனை அறிமுகப்படுத்தினார்கள். அதை பண்ணைக் குட்டைகளில் வளர்க்க முடியாமல் கண்மாய், ஊரணிகளில் வளர்க்கும்போது அங்குள்ள பலவகை மீன்களை உண்டு எந்த வகை மீனும் இல்லாமல் செய்துவிட்டது. மேலும், தேளிகெழுத்திக்கு உணவாக ஆடு, மாடு, செத்த நாய் என்று உணவாகப் போட்டார்கள். இதற்கு விலையும் கிடைக்கவில்லை, பெருத்த நட்டமும் ஏற்பட்டது. எனவே, திட்டமிடும்போது நமக்கு உகந்த வகையில் திட்டமிட வேண்டும்.

தற்சமயம் நல்ல தண்ணீரில் உருவாகும் கொசுக்களால் சிக்-குன்-குன்யா காய்ச்சல் வருவதாகக் கூறுகிறார்கள். எனவே,



நல்ல தண்ணீரில் உருவாகும் கொசுக்களை ஒழிக்க வியாட்நாமில் கம்பூச்சியா என்ற மீனை வளர்த்து அழிக்கிறார்கள். அம்மீன், கொசு முட்டைகள், அதன் புழுக்களை உணவாகக் கொள்கிறது. எனவே, அம்மீன்களை வளர்க்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கிராமங்களில் கால்நடை மருத்துவமனைகளில், கால்நடை மருத்துவர்களைக் காட்டிலும், கால்நடை ஆய்வாளர்கள்தான் மருத்துவர்கள் போலச் செயல்படுகிறார்கள் என்பது உண்மை. ஆகையால், தமிழகம் முழுவதும் 2,000-க்கும் மேற்பட்ட கால்நடை ஆய்வாளர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தக் கால்நடைப் பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனை இல்லாத கிராமங்களுக்கு கால்நடை மருத்துவக் கிளை நிலையம் உருவாக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கால்நடை மருத்துவமனைகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு மாதம் 60 ரூபாய் வழங்கப்படுகிறது. இந்தத் தொகை மிகக் குறைவான தொகை, அதை உயர்த்தித் தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கிராமங்களில் உள்ள கிளை மருத்துவ நிலையங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு தற்போது ரூ.9,000 என்ற அளவில் மருந்துகள் வழங்கப்படுகின்றன. கூடுதலாக மருந்துகள் வழங்கப்பட வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பி.வி.எஸ்.சி. பட்டப் படிப்பில் ஆண்டுக்கு 10 கால்நடை ஆய்வாளர்களுக்கு 1981 ஆம் ஆண்டு முதல் இடம் ஒதுக்கப்பட்டு, 2 பேர் முழு ஊதியம் பெற்று படிக்கும் வாய்ப்பு இருந்தது. 2002 ஆம் ஆண்டு அண்ணா தி.மு.க. ஆட்சியில் ஒதுக்கீடு இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இந்த ஒதுக்கீட்டை மீண்டும் கொண்டு வர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் கொருக்கை கால்நடைப் பண்ணை உள்ளது. அந்தக் கால்நடைப் பண்ணை கிட்டத்தட்ட 700 ஏக்கர் நிலத்தில் உள்ளது. இப்போது சிறப்பாக அந்தப் பண்ணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, அந்தப் பண்ணையில். அரசு கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ். (குறுக்கீடு) திரு. கே. உலகநாதன், தொகுதிப் பிரச்சினை இருக்கட்டும். நாங்கள் என்ன தொகுதியை எடுத்துக்கொண்டா போகப் போகிறோம்? திரு. ஞானதாஸ், உங்களுக்கு ஒரே ஒரு வேண்டுகோள். நீங்கள் உள்ளூர் மாடு, உள்ளூர் பால், உள்ளூர் மீனைப்பற்றி மட்டும் பேசுங்கள். மேலை நாட்டுக்காரர் அதைச் சொன்னார், இதைச் சொன்னார் என்றெல்லாம் பேசக் கூடாது. நேராக point-க்கு வாருங்கள்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்களே வெளிநாடு சென்று, சட்டமன்றங்கள், நாடாளுமன்றங்கள் எப்படி நடைபெறுகின்றன என்று பார்த்துவிட்டு வந்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நம்மூரைப் பற்றிய கருத்துகளைச் சொல்லுங்கள்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** பிற நாடுகளிலும், பிற மாநிலங்களிலும், சம்பந்தப்பட்ட துறைகள் எவ்வாறு இயங்குகின்றன என்பதைப்பற்றி சட்டமன்றத்திற்கும், தமிழக மக்களுக்கும் தெரிவிப்பது ஒரு சட்டமன்ற உறுப்பினரின் கடமையென்று நான் கருதுகின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறைகளுக்கான மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், மக்கள் தலைவர், அண்ணன் வைகோ அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண் துறையில் வளர்ச்சி காணவேண்டுமென்றால், கால்நடைகளின் பங்கு மிக முக்கியமானது. 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள 4 சதவிகித வேளாண் வளர்ச்சியை எட்டவேண்டுமென்றால் Non-farming என்ற பண்ணைசாராத் தொழில்களான கால்நடை, மீன்வளம் மற்றும் பால்வளத் துறைகளில் சிறப்புக் கவனம் தேவை.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அருகிலுள்ள மத்திகிரியில் ஆசியாவிலேயே மிகப் பெரிய கால்நடைப் பண்ணை உள்ளது. திப்புசுல்தான் தனது படைகளுக்கு வேண்டிய குதிரைகளை உற்பத்தி செய்ய உருவாக்கப்பட்டு, மிகச் சிறப்பான சேவையைத் தந்த இப்பண்ணை தற்போது மிக மோசமான நிலையில் உள்ளதாக செய்திகள் வந்துள்ளன.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானதாஸ், உங்களுக்கு 5 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

**திரு. ஆர். ஞானதாஸ்:** வரலாற்றுப் பெருமைமிக்க இக்கால்நடைப் பண்ணையைப் பாதுகாத்து சிறந்த கால்நடைகளை உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது பாரம்பரியமிக்க பசுக்களான புங்கனூர்க்குட்டை, காங்கிரஜ், ரதி, காசிவால், தார்பார்க்கர், தாங்கி போன்ற இனங்களைக் காணவில்லை. காங்கேயம், உம்பளாச்சேரி, சிந்து போன்ற இனங்கள் மிகமிகக் குறைந்துவிட்டன. நோய் எதிர்ப்பு சக்திமிக்க, வெப்பத்தைத் தாங்கும் திறன் கொண்ட இப்பாரம்பரியமிக்க இனங்களைப் பெருக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சீமை இரகங்களுக்கு ஏதாவது நோய் ஏற்பட்டால் அவை மொத்தமாக அழியும் அபாயம் உள்ளது. இந்த பயத்தால்தான் அமெரிக்காகூட நமது ஓங்கோல் இனத்தை இறக்குமதி செய்துகொண்டது.

கால்நடைகளை நாம் கால்நடைச் செல்வம் என்று அழைப்பதுண்டு. ஆனால் அக்கால்நடைச் செல்வம் குறைந்துகொண்டே வருகின்றது. உலகிலேயே அதிகமான கால்நடைகள் இருந்த நம் நாட்டில், ஒரு கட்டத்தில் மாட்டுச் சாணத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு, 1994-ல் ஹாலந்து நாட்டிலிருந்து சாணம் இறக்குமதி செய்யப்பட்டது. இந்த நிலை திரும்பாமல் இருக்க, மத்திய, மாநில அரசுகள் சிறப்பான கால்நடை பராமரிப்புத் திட்டங்களை வகுக்கவேண்டும்.

தமிழக பால் உற்பத்தியாளர்கள் சிங்கப்பூர், மலேசியா மற்றும் அரபு நாடுகளில் அரும்பாடுபட்டு பால் பவுடர் ஏற்றுமதிக்கு அண்மையில்தான் மார்க்கெட்டைப் பிடித்தனர். ஆனால், பால் தட்டுப்பாட்டால் சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ள பால் பவுடர் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. எனவே, இந்தத் தட்டுப்பாட்டை நீக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். தீவனத் தட்டுப்பாடு காரணமாக கறவை அளவும் குறைந்து வருகின்றது. எனவே கால்நடைத் தீவன மேம்பாட்டு முறைகளிலும் அரசு கவனம் செலுத்தவேண்டும். தரிசு நிலங்களில் தரமான புல் வகைகளை உற்பத்தி செய்யவேண்டும்.

கோழி இனங்களை அழிக்கும் பறவைக் காய்ச்சலைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவேண்டும். இந்நோய், பறவைகள் மூலம் மனிதர்களுக்கும் தொற்றும் வாய்ப்புள்ளது.

மாவீரன் அலெக்ஸாண்டரின் மரணத்திற்கு Raven Virus என்ற காகம் மூலம் பரவிய காய்ச்சல்தான் காரணம் என்றும் கூறப்படுகின்றது.

மீன்வளத்தைப் பாதுகாக்கவேண்டும். மீன்வளம் சிறக்க வேண்டுமென்றால், மீனவர் நலனும் காக்கப்பட்டு, மீன்பிடித் தொழிலும் நன்கு ஊக்குவிக்கப்பட்டு, பாதுகாக்கப்படவேண்டும். நகர்ப்புற மக்கள் தொகை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. நகர்ப்புறத்தில் வேளாண் தொழில் இல்லாததால், உணவுப் பொருள் பற்றாக்குறை உள்ளது. நகர்ப்புற ஏழைகளின் வறுமையைப் போக்க Urban Agriculture (நகர்ப்புற வேளாண்மை) என்னும் முறை அதாவது நகர்ப்புறத்தில் கால்நடை, பால், மீன் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் முறையைப்பற்றி பரிசீலிக்கவேண்டும்.

ஐ.நா. சபையின் F.A.O. உலக உணவு மற்றும் வேளாண் அமைப்பு இந்த Urban Agriculture, நகர்ப்புற வேளாண்மையைப் பரிந்துரை செய்கிறது. இந்த நகர்ப்புற வேளாண்மைக்காக பாங்காக், மேட்ரிட் போன்ற பெருநகரங்களில் 60 சதவிகித நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. மொசாம்பிக் நாட்டில் பெய்ரா நகரில்தான் அதிகபட்சமாக 88 சதவிகித நிலமும், கனடா நாட்டின் தலைநகர் ஒட்டாவாவில் 5,000 ஹெக்டேர் நிலமும், நகர்ப்புற வேளாண்மைக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. அமெரிக்காவில் மின்னபோலிஸ், ஆஸ்டின், பாஸ்டன் நகரங்களில் நகர்ப்புற வேளாண்மைக்குச் சிறப்புச் சட்டங்களே உள்ளன. கொல்கத்தா நகரில், 3,900 ஹெக்டர் நிலம் மீன் வளர்ப்பிற்குப் பயன்படுகிறது. அதில் கிடைக்கும் 13,000 டன் மீன் 60,000 மக்களுக்கு வாழ்வாதாரமாக அமைந்துள்ளது. எனவே, இதைப்போல் தமிழக நகரங்களிலும் செயல்பட ஆய்வு மேற்கொள்ளலாம்.

பிற்பகல் 12-45

தொகுதி கோரிக்கை. சிவகாசி தொகுதியில் வெம்பக்கோட்டை ஒன்றியம் வெள்ளையாபுரம், செவல்பட்டி, அப்பையநாயக்கன்பட்டி பகுதிகளுக்கு கால்நடை மருத்துவ வசதிகளை ஏற்படுத்தித் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன். நாட்டில் அனைத்து சிமெண்ட் ஆலைகளும் நவீனமயமாக்கப்பட்டு உலர்பத முறைக்கு மாற்றப்பட்டுவிட்ட நிலையில், சிவகாசி தொகுதி ஆலங்குளத்தில் உள்ள அரசு சிமெண்ட் ஆலை மட்டும் இன்னும் பழைய ஈரப்பத முறையில் ஒரு சூளையில் மட்டும் இயங்கிக்கொண்டிருக்கிறது. இதனால் உரிய உற்பத்தி இலக்கை எட்ட முடியவில்லை. சிமெண்ட் உற்பத்திக்கு மூலப் பொருளான சுண்ணாம்புக்கல், ஆலையை ஒட்டிய 2,200 ஏக்கரில் 100 இலட்சம் டன் உள்ளது. இந்த ஆலையை விரைவில் நவீனப்படுத்தி இரண்டு



சூளைகளையும் இயக்கி உற்பத்தி செய்தால் குறைந்த செலவில் அதிக உற்பத்தியைச் செய்ய முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார், 5 நிமிடங்கள் முடிந்து விட்டன.

**திரு. ஆர். ஞானதாஸ்:** பல்லாயிரக்கணக்கான மக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பைப் பெறவும், தொழிலாளர் நலன் பாதுகாக்கவும், அப்பகுதி பொருளாதார முன்னேற்றமடையவும் ஏதுவாக அமையும். எனவே, ஆலையை நவீனப்படுத்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர் பிரச்சினைகள், மீன்பிடித் தொழில் சார்ந்த பணிகளில் உள்ள மீனவப் பெண்களை தொழிலாளர்களாக அங்கீகரிக்க வேண்டும். மீன் சந்தைகள் உள்ள பகுதியில் உள்ள மீனவப் பெண்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்து விடுங்கள்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மீனவப் பெண்களுக்கு கழிவறைகள், ஓய்வறைகள் வசதிகளை அமைத்துத் தர வேண்டும். சுனாமி காலங்களிலும் புயல் மற்றும் மழைக் காலங்களிலும் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ள கடலோரக் கிராமங்களைக் கண்டறிந்து கடல் அரிப்பு ஏற்படாதவாறு கருங்கற்களால் ஆன தூண்டில் வளைவு அமைத்துத் தர வேண்டும். எம்.எஸ். சுவாமிநாதன் குழுவின் அறிக்கையில் உள்ள அம்சங்களைப்பற்றி மீனவ மக்களின் கருத்தையும் கேட்கவேண்டும்.

பிச்சாவரம், முத்துப்பேட்டை, பழையாறு காட்டுப்பள்ளி போன்ற பகுதிகளில் உள்ள இயற்கை வளங்களை அழியாமல் அரசு பாதுகாக்க வேண்டும். மன்னார் வளைகுடா தீவுகளில் பாசி எடுக்கும் மீனவப் பெண்கள் மற்றும் சிறு தொழில் செய்யும் நாட்டுப் படகு மீனவர்கள் மீது வனத்துறையினர் அபராதம் விதிப்பதையும், துன்புறுத்துவதையும் தடுத்து நிறுத்த வேண்டும். தூத்துக்குடி, நெல்லை, குமரி மாவட்டங்களில் உள்ள 2,500. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி. (குறுக்கீடு) நீங்கள் தொகுதிக்குப் போவதாகச் சொல்லி மன்னார் வளைகுடாவிற்குப் போய்விட்டீர்கள். சிவகாசி அவ்வளவு தூரமா? உட்காருங்கள்.

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய நீரோட்டத்தின் தடைக்கற்களைத் தகர்த்தெறிந்து,

மடைமாற்றம் செய்கின்ற ஆற்றல் சொல்லுக்கும், செயலுக்கும், எழுத்துக்குமே உண்டு. இந்தியாவில், ஏன் உலகத்திலே, இந்த மூன்று ஆற்றல்களையும் பெற்றிருக்கின்ற ஒரே தலைவராக, நாவன்மையாலும், நல்ல காந்த எழுத்தாலும், உலகத் தமிழர்களின் இதயத்தை மட்டுமல்ல, இன்பத் தமிழகத்தையும் ஐந்தாம் முறையாக ஆட்சி செய்கின்ற முதல்வரில் முதல்வர், முத்தமிழறிஞர், பொன்விழா காணும் நாயகர், எங்கள் குடும்பத் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தந்தை பெரியாருக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் தளபதியாக இருந்தார். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் தளபதியாக இருந்தார்.

இன்று நமது தளபதி அவர்கள், முதல்வர் கலைஞர் அவர்களுக்கு தளபதியாய் இருந்து, ஓயாத உழைப்பால், உள்ளாட்சித் துறையை வல்லாட்சியாக உயர்த்தி நடக்கும் நல்லாட்சிக்கு நெம்புகோலாய், வருங்காலத் தமிழகத்தின் நம்புகோலாய், என்றும் எங்களை வழிநடத்தும் அன்புத் தளபதி அண்ணன் அவர்களுக்கும், எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, இந்தப் பால்வளத் துறை, கால்நடைத் துறை, மீன்வளத் துறைகளினுடைய மானியக் கோரிக்கைகளிலே எனது உரையைத் தொடங்குகின்றேன்.

எனது ராசிபுரம் தொகுதிக்கு, இந்த ஆண்டில் 119 கோடியே 17 இலட்சம் ரூபாய் ஒதுக்கி பல்வேறு திட்டப் பணிகளை தொடங்குவதற்கும், எங்கள் நாமக்கல் மாவட்ட கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு பல்வேறு திட்டப் பணிகளை நிறைவேற்ற 1.37 கோடி ரூபாய் வழங்கியும், பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவிலே வாரத்திற்கு மூன்று முட்டைகள் வழங்குவதன்மூலம் நாமக்கல் மாவட்டத்திலும், எனது தொகுதியிலும், நலிவுற்றிருந்த கோழிப்பண்ணை தொழிலை மேம்படச் செய்து பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பயனடையச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், எனது தொகுதியின் சார்பாகவும், மாவட்ட மக்களின் சார்பாகவும் நன்றி கலந்த வணக்கத்தை காணிக்கையாக்குகின்றேன்.

பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி, எனது தொகுதியின் கோரிக்கைகளாக 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டும் நிலையங்களும், மின்னணு பரிசோதனைக் கருவி 50-ம், அதேபோல அரசு மானிய விலையிலே எடைபோடும் கருவி 10-ம்,



நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் கால்நடை மருந்தகம் ஒன்றும், அமைத்துத்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைப் பாதுகாப்பு என்றவொரு நல்ல திட்டத்தை 18-1-2000இல், முதன்முதலாக தமிழகத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்திலே ஆரம்பித்து வைத்து சாதனை படைத்த ஒரே தலைவர் முதல்வர் கலைஞர்தான் என்று நான் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

**"இரைபோடும் மனிதருக்கே இரையாகும் வெள்ளாடே,**
**இதுதான் உலகமே, வீண் அனுதாபம் கண்டு**
**நீ ஒருநாளும் நம்பிடாதே"**

என்ற பாடலை அக்காலத்தில் கேட்டதுண்டு. ஆனால் இன்று வாயிருந்தும் பேச முடியாத, ஜீவன்களையும் வாழ வைத்துக் கொண்டிருக்கும் ஒரே தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதைப் பெருமையோடு எடுத்துக் கூறி, இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கி தமிழகத்திலுள்ள ஏழையெளிய மக்களின் பசியைப் போக்கினீர்கள். இப்போது பால் உற்பத்திக் கொள்முதல் விலையை ரூ.1-50 உயர்த்திக் கொடுத்ததன்மூலம் எண்ணற்ற அந்தக் கால்நடைகளின் பசியையும் போக்கியுள்ளீர்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

*பிற்பகல் 12-50*

இத்துறை சிறப்பாக வளர வேண்டுமென்பதற்காக பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு 2 கோடி ரூபாய் மானியமாகக் கொடுத்து, பெரிய அளவிலான குளிர்சாதனங்கள் வாங்குவதற்கும் அதேபோல துருப்பிடிக்காத எஃகு கலன்களை வாங்குவதற்கும் மானியமாக அளிக்கப்பட்டுள்ளது வரவேற்கக்கூடியது.

நேற்றையதினம்கூட மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்கள் சர்க்கரை இல்லா ஆவின் ஐஸ்கிரீமை அறிமுகப்படுத்தியும், 25 நபர்களுக்கு கருணை அடிப்படையிலே வேலைவாய்ப்பினை வழங்கியும் இத்துறை மேம்பட ஒரு அத்தியாயத்தைப் படைத்திருக்கிறார்கள்.

பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி தமிழகம் எங்கும் ஒரே சீரான விலை நிர்ணயிக்கப்பட்டும், கால்நடைத் தீவனங்களின் உற்பத்தி தடையின்றிச் செய்யப்பட்டும், கால்நடைப் பாதுகாப்பு முகாம்கள் அதிக அளவில் நடத்தப்பட்டும், கறவை மாடுகளுக்கு நோய்த் தடுப்பு

மருந்துகள் போடப்பட்டும், சங்கங்கள் நிதி உதவியின்மூலம் தானியங்கி பால் வழங்கு கருவிகள் வழங்கப்படுவதும், கொள்முதல் விலையில் 50 பைசா பிடித்தம் செய்யப்பட்டுள்ளதை தொழில்நுட்பக் கண்காணிப்புக் குழு மறுபரிசீலனை செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளதும் வரவேற்கத்தக்கது.

அனைத்துச் சங்கப் பணியாளர்களுக்கும் ஊக்கத் தொகையாக ரூ.825 வழங்கியிருப்பதும், நோயுற்ற பணியாளர்களுக்கு நீண்டகாலமாக வழங்கப்படாமல் இருந்த மருத்துவ மீட்சித் தொகையை வழங்கி இருப்பதும், பணியாளர்களின் நலனிலே அக்கறை உள்ள அரசாக இருப்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

நுகர்வோர் நலன் கருதி கட்டணம் இல்லாத தொலைபேசிமூலம் நிறை, குறைகளைக் களைய எந்த நேரத்திலும் ஆவின் அலுவலகத்தைத் தொடர்புகொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

2006-2007 ஆம் ஆண்டில் 352 புதிய பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஏற்படுத்தி, இவற்றில் 113 மகளிர் சங்கங்கள் அமைத்து இதுவரை 1,210 மகளிர் சங்கங்கள் சிறப்பாகச் செயல்பட்டு அவர்களுடைய வாழ்விலே ஒளியேற்றிக் கொண்டிருக்கிறது.

பால் உற்பத்தி சென்ற ஆட்சிக் காலத்தில் 2005-2006 ஆம் ஆண்டு 25 இலட்சம் லிட்டர் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால் இன்று நமது தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் 26.10 இலட்சமாக உயர்ந்து, இப்போது 1 இலட்சம் லிட்டர் கொள்முதல் உற்பத்தி அதிகமாகி இருப்பது இத்துறையின் வளர்ச்சியைக் காட்டுகிறது.

2006-2007 ஆம் ஆண்டில் கால்நடைக் காப்பீட்டின்மூலம் 53 ஆயிரத்து 114 மாடுகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. பல கால்நடை ஆய்வாளர்கள் பணியிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. அவற்றை உடனடியாக நிரப்பித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. சுடப்பட்ட மீனவர்களின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 இலட்சம் ரூபாய் நிவாரணமாகக் கொடுத்து, அதேபோல காணாமல்போன மீனவர்கள் கிடைக்கும்வரை அவர்கள் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றிற்கு 1,500 ரூபாய் உதவித் தொகையாக வழங்கி, மீனவர்களின் குடும்பங்களுக்கு ஒளியேற்றி வைத்திருக்கிற ஒரே தலைவர் தாயுள்ளம் கொண்ட முதல்வர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)



கடந்த சில மாதங்களாக மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் கடலிலே இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டும், காணாமல் போகும் நிலைமையும் இருந்தது. 12-3-2007 ஆம் நாளன்று தமிழக அமைச்சர்கள் முன்னிலையிலே ஒரு மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு, இலங்கைத் தூதரிடம் ஒரு மனு கொடுக்கப்பட்டது. இந்தியப் பிரதமரைச் சந்தித்து மத்திய தமிழக அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மைய அரசு இப்பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு தமிழக மீனவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று வலியுறுத்தினோம். நமது கழக அரசு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ராசிபுரம் நெய்யைப் பற்றி ஏதாவது பேசி முடியுங்கள்.

**திரு. கே.பி. இராமசுவாமி:** நமது கழக அரசு, மீனவர்களுக்கென்று ஒரு தனி வாரியம் அமைத்து, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் விவசாயிகளின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அனைத்து உதவிகளும் மீனவர்களுக்கும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) தொகுதிப் பிரச்சினையை எல்லாம் முதலிலே சொல்லிவிட்டேன். அவ்வளவுதான்.

மேலும், 1970-ல் அறிமுகம் செய்யப்பட்ட நவீன அறிவியல் தொழில்நுட்பங்கள் மற்றும் கலிபோர்னியா கூண்டு முறை கோழி வளர்ப்பு போன்ற இத்தொழிலில் புரட்சியை ஏற்படுத்தியவர், நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதைத் தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன். (குறுக்கீடு) அடுத்து, கூப்பிட்டுவிடுகிறேன். அடுத்து கூப்பிடுகிறேன். உங்களுக்கு 10 நிமிடங்கள். திரு. பலராமன், 10 நிமிடங்கள்.

**திரு. பி. பலராமன்:** 15 நிமிடங்கள் சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, முடியாது.

**திரு. பி. பலராமன்:**

"கன்றின் குரலும், கன்னித் தமிழும் சொல்லும் வார்த்தை அம்மா அம்மா,
கருணை தேடி ஏங்கும் உயிர்கள் உருகும் வார்த்தை அம்மா, அம்மா,
எந்த மனதில் பாசம் உண்டோ அந்த மனமே அம்மா அம்மா,"

அந்தப் பாசத்தையும், பரிவையும் பங்களிப்பையும் ஒருசேரப் பெற்ற எங்கள் அம்மா இருக்கும் திசை நோக்கி வணங்கி, இரண்டாவது முறையாகப் பேச வாய்ப்பளித்த அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, இன்று கால்நடை, மீன்வளம், பால் வளம் ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 2007-2008 பக்கம் 46-ல் பத்தி 113-ல் இந்த அரசு, மீனவர்களுக்கு மீனவர் நல வாரியம் ஒன்றை அமைத்து, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களும், விவசாயிகளும் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டத்தின்கீழ் பெறும் அனைத்து உதவிகளும் மீனவர்களுக்கும் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது. உண்மையிலேயே மீனவ மக்கள் நலனில் இந்த அரசுக்கு அக்கறை இருக்குமானால், விவசாயிகள் பெற்ற கடனை இந்த அரசு தள்ளுபடி செய்தது போன்று, மீனவர்கள் பெற்ற கடனையும் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யாமல், மீனவ மக்களை இந்த அரசு வஞ்சித்திருக்கிறது என்பது மட்டுமல்லாமல், இந்த ஆண்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்கு ஒரு தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கின்றார்கள். மீனவ மக்களுடைய கடன்கள் தள்ளுபடி விவகாரத்தை என்னுடைய பதிலுரையிலே தெரிவிக்கின்றேன். அனைத்துக் கடன்களும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன என்பதனையும் இந்த மாமன்றத்தில் பதிவு செய்துகொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது நீங்கள் அடுத்த பொருளுக்குச் செல்லுங்கள். கால்நடை பற்றிப் பேசுங்கள்.

**திரு. பி. பலராமன்:** ரூ. 19.50 கோடி மட்டுமே தள்ளுபடி செய்யப் பட்டிருக்கிறது. மீதமுள்ள கடன்களைத் தள்ளுபடி செய்யவில்லை என்பதை அவையின்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பழவேற்காடு பகுதிக்கு



நெட்டுக்குப்பம் முகத்துவாரத்திலிருந்து கூனங்குப்பம் முகத்துவாரம் வரையில் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மீனவ சமுதாய மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு பாலம் ஒன்று அமைக்க உத்தரவிடப்பட்டது. இன்றுவரை அதை நிறைவேற்றவில்லை.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா ஆட்சிக் காலத்தில், மீனவர் பெருபான்மையினர் வசிக்கும் பழவேற்காடு கிராமத்தில் லைட் ஹவுஸ் குப்பம், மீனவர் குப்பத்திற்கு இடையே இருக்கின்ற பக்கிங்காம் கால்வாய்மீது மேம்பாலம் 10 கோடி ரூபாயில் டெண்டர் விடப்பட்டு இதுவரையில் வேலை ஆரம்பிக்கவில்லை.

அதைப்போல, பெரிய மாங்கோடு, அண்ணாமலைச்சேரி போன்ற இடங்களில் புதியதாக மீன் இறங்கு தளங்கள் விரைவில் அமைக்கப்படும் என்று மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அறிவித்திருந்தார். ஆனால், இதுநாள்வரை அது என்ன ஆனது என்று தெரியவில்லை.

அதேபோன்று, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Coastal Action Network என்று சொல்வார்கள். தமிழக மீனவப் பெண்கள் தொழிலாளர்கள் கூட்டமைப்பு கோரியுள்ள நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழவேற்காடு பகுதி, ஒரு சுற்றுலாத் தலமாக இருப்பதால், அதற்குச் சிறப்பான பிரத்தியேகத் திட்டம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்துகின்றேன். மறைந்த பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் இதுவரையில் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது; இதுநாள் வரையில் எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தை இந்த மாமன்றத்தின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வு திட்டத்தின்கீழ் வலைகள் வாங்கும்போது மீனவர்கள் விரும்புகிற வலைகளை வழங்க வேண்டுமே தவிர, தன்னிச்சையாக அரசு வலைகள் வாங்கி வழங்குவது மீனவர்களுக்கு எந்தவிதப் பிரயோஜனமும் இல்லை. இந்த அரசு 44 கோடி ரூபாயில் ஒப்பந்தம் கோரியுள்ள நிலையில், உதாரணமாக, சென்னைக்கு அருகே உள்ள ராயபுரம் பகுதியில் Right Twist என்ற வலைகளும், அதேபோன்று கடலூர், கன்னியாகுமரி, நாகப்பட்டினம் பகுதிகளில் Gillnet left twist என்ற வலைகளையும் பயன்படுத்துகின்றனர்.

ஆனால், இதுமட்டுமின்றி மீனவர்கள் பயன்படுத்துகின்ற Mono filament, Multi-filament வெவ்வேறு மில்லி மீட்டர்களில், வெவ்வேறு வகையான வலைகளை மீனவர்கள் உபயோகிக்கும்போது, ஒரு குறிப்பிட்ட வகையான வலைகளை மீனவர்கள் உபயோகப்படுத்தக் கட்டாயப்படுத்துவது வலையை. . . (குறுக்கீடு) நான் பேசிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், பதிலுரையில்கூடச் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு இந்தக் கவலை வேண்டாம். மீன் பிடிப்பில் நிறைந்த அனுபவம் உள்ள அமைச்சரைத்தான் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, வலைகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த அளவு இருக்க வேண்டும், எந்தெந்த மாவட்டத்தில், என்னென்ன மீன்கள் கிடைக்கும் என்பதனை உணர்ந்து, அந்தந்த மாவட்ட மீன் வள அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து, அதன்படித்தான் அந்த வலைகள் வழங்கப்பட இருக்கின்றன என்பதனை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பலராமன், தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Order.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் அடிக்கடி தாக்கப்பட்டு சிறைபிடிக்கப்பட்டு வருகிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள், ஒரு நிமிடம். வலையைப் பற்றி அந்த அம்மா ஏதோ சொல்ல வருகிறார்கள். சொல்லுங்கள்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் எல்லாம் என்னிடம் சொன்னது என்னவென்றால், அரசு மத்தி மீன் பிடிக்கும் வலையைத்தான் வழங்கியிருக்கிறது. அதனால், பெரிய மீன்களைப் பிடிக்க முடியவில்லையென்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் என்ன சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு மீன் வகையாக, எந்தெந்த இடத்தில் என்னென்ன மீன் கிடைக்குமோ அதற்குத் தகுந்த மாதிரி கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் மத்தி மீன், கவலை மீன் பிடிப்பதற்குண்டான வலையைத்தான் கொடுத்திருக்கிறார்கள். அதனாலே மீனவர்களுக்கு அது பயன்படுவதில்லை. அதனாலே, அந்த மீனவர்களுக்கு, மீன் கிடைக்கிற வகையிலே அந்த வலையை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 1-00

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரியாமல் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், 110 கோடி ரூபாயில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ மக்களுக்கு வலை, கை விளக்குகள், உயிர் காக்கும் கவசங்கள் போன்றவற்றை வழங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்து, அதற்கு டெண்டர் விடப்பட்டு இன்னும் வழங்கப்படாத நிலையில் உள்ளன. விரைவில் வழங்க இருக்கின்றோம். ஆனால், அவர்கள் அரசு, மத்தி வலையை வழங்கி இருக்கிறது என்ற தவறான, தகவலை இந்த அவைக்குத் தருகிறார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவருடைய பதிலுரையில் கூறினால் போதும். அவரைப் பற்றி மற்றவர்கள்தான் சொல்ல வேண்டும், அவரே சொல்லத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டு சிறை பிடிக்கப்பட்டு வருவதால் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் அதனைத் தவிர்க்கும் பொருட்டு, தமிழகக் கடல் எல்லையில் அதாவது International boundary line ஒன்றை அமைத்தார்கள். நிரந்தர மிதவை விளக்குகள் தேவை என்று அமைத்தார்கள். மத்திய அரசாங்கத்திடம் அனுமதி கோரி இருந்தார். தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தியும் வந்தார்கள். ஆனால், இதுவரையில் அனுமதிக்கப்படவில்லை, ஆனால், மைய அரசில் அங்கம் வகிக்கும் இந்த அரசு இனிமேலாவது மத்திய அரசிடம் அனுமதி பெற்று, விரைவில் நிரந்தா மிதவை விளக்குகளை அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியில் பள்ளி, கல்லூரிகளில் மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்தை அரசே செலுத்தும் என்று அறிவித்து, அதை உடன் அமல்படுத்தினார்கள். ஆனால், நீங்கள் தொடர்ந்து வழங்குவதாகச்

சொன்னீர்கள். இன்னும் வழங்கப்படவில்லை. அதனால் குறிப்பாக மீனவ மாணவர்களின் கல்வி கேள்விக்குறியாக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் பகுதியில் 12 மீனவர்கள் காணாமல் போய் இருக்கின்றார்கள். இதுவரையில் நடவடிக்கை என்ன ஆயிற்று என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர் நல வாரியத்தில், மீனவர்களே உறுப்பினர்களாக இருப்பதுதான் நல்லது என்று நினைத்துக்கொண்டு, மீனவர்கள் இல்லாதவர்களும் நல வாரியத்தில் உறுப்பினர்களாக இருப்பதற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர், தேசிய கடல் மீனவர் சேமிப்புத் திட்டத்தில் மீனவர்கள், மீனவ மகளிர் இத்திட்டத்தில் சந்தாப் பணத்தை நேரடியாக மீன்வளத் துறை அலுவலர்களிடம் தருவதற்கும், தவிர மீனவர்கள் மீனவ மகளிர் இத்திட்டத்தில் வரைவோலை Demand Draft எடுத்துக் கொடுக்கும்போது அதையும் அனுமதிக்க வேண்டும். தவிர மீனவர்கள், மீனவ மகளிர், தேசிய மீனவர் சேமிப்புத் திட்டத்தில், ஆளும் கட்சியினரின் தலையீடு அதிகமாக உள்ளதால், மீனவர்கள் மத்தியில் இது கொந்தளிப்பாக இருக்கிறது. எனவே, மீன் வளத் துறை அலுவலர்கள் நேரடியாக அந்தச் சந்தாவை ஏற்கவேண்டும் என்று இதன்மூலமாக வலியுறுத்துகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில், காக்களூரில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று உருவாக்கி 50,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது 3 மாத காலமாக மூடப்பட்டுள்ளது. அந்த விவசாயிகள், தங்கள் பாலை காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள பாலுச்செட்டி சத்திரத்திற்கு 40 கி.மீ. தூரத்திற்குக் கொண்டு செல்வதால், விற்பனை செய்ய மிகவும் கஷ்டப்படுவதோடு மட்டுமல்லாமல், சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகிக் கொண்டிருப்பதால் மீண்டும் அந்தப் பால் நிலையத்தைத் திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் பால் எம்.ஆர்.பி. விலையில் விற்கப்படுவது இல்லை. மாண்புமிகு அம்மா



ஆட்சியில், தானியங்கி பால் நிலையங்கள்மூலம் 3.80 இலட்சம் லிட்டர் விற்பனை செய்யப்பட்டது. தற்போது 80,000 லிட்டர் மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. சென்னையில் 205 தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் உள்ளன. அதில் 50 பழுதடைந்துள்ளதால் அவற்றைச் சீர்செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மானியக் கோரிக்கையில் ஊழியர்கள் கமிட்டி ஒன்று அமைத்து பதவி உயர்வு அளிப்பதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். இதுவரையில் யாருக்காவது பதவி உயர்வு வழங்கப்பட்டதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பலராமன், 10 நிமிடங்கள். அடுத்த உறுப்பினர் பேச வேண்டும் (குறுக்கீடுகள்) திரு. பலராமன், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உங்கள் recommendation வேண்டாம், உரையை முடியுங்கள். உட்காருங்கள். நீங்கள் பேசுங்கள். உடனே முடியுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், உரையை முடியுங்கள்.

பிற்பகல் 1-05

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஒரு நாளைக்கு 10.7 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆட்சியில் 9 இலட்சம் லிட்டர் மட்டுமே பால் கொள்முதல் செய்யப்படுகிறது. வெளி மாநிலங்களில் ஒரு நாளைக்கு 20 கோடி ரூபாய்க்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது. இதற்கு நுழைவு வரி விதிக்க அரசிடம் ஏதேனும் உத்தேசம் உள்ளதா? வெண்ணெய், நெய், ஆவின் பால் விற்கப்படுவதில்லை. (மணியடிக்கப்பெற்றது) நன்றி சொல்லி விடுகிறேன் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மேகநாதன். 5 நிமிடங்கள். Only 5 minutes.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறு படைத்த தமிழக சட்டமன்றத்தில் இன்று மீன்வளம், பால் வளம், கால்நடை பராமரிப்பு ஆகிய துறைகளின்மீது நடைபெறுகின்ற மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மீன்வளம், வருவாய் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருவதில் மீன் பிடிப்புத் தொழிலானது வேளாண் தொழிலுக்கு அடுத்து முக்கியத் தொழிலாகக் கருதப்படுகிறது. சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய மீனவர்களின்

நிலையை உயர்த்துதல் மீன் வளர்ப்புத் துறையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. மேலும் குறிப்பாக மீனவர்களுக்கு அரசு இன்சூரன்ஸ் திட்டத்தின் அடிப்படையில் இன்சூரன்ஸ் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மழை, புயல், வெள்ளம் ஏற்படும் காலங்களில் வழங்கப்படும் உதவித் தொகையை அதிகப்படுத்துமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கடலுக்குச் செல்லும் மீனவர்கள் காணாமற் போனால் ஒரு வருடத்திற்குள் அவர்கள் வரவில்லையென்றால் அவர்களை இறந்ததாக அறிவித்து அக்குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மீனவர்களின் நலன் கருதி மீனவர்களுக்குத் தனி வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு அளிக்கப்படும் அதே சலுகைகளை உள்நாட்டு மீனவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்றும், குறிப்பாக, பரிசல் வழங்கவும், வலைகளை வாங்கவும் 100 சதவிகித அரசு சலுகைகள் உள்ளன. ஆனால் உள் நாட்டு மீனவர்களுக்கு அவ்வாறு இல்லாமல் 50 சதவிகித சலுகைகள்தான் உள்ளன. 50 சதவிகிதத் தொகையைச் செலுத்தி அரசு சலுகைகளைப் பயன்படுத்த முடியாமல் உள்நாட்டு மீனவர்கள் இருந்து வருகின்றார்கள். எனவே, அவர்களுக்கு 100 சதவிகித சலுகைகள் வழங்க அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பால் வளம் கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்கு பெரிதும் உதவுவது ஆகும். விவசாயிகள் உபதொழிலாக செய்து வரும் தொழில் பால் உற்பத்தியாகும். விவசாயிகளின் வறுமையைப் போக்க மிகவும் பயன்பட்டு வருவது பால் உற்பத்தி ஆகும். எருமையின் அருமை வறுமையில் தெரியும் என்பார்கள் பெரியவர்கள். வறுமையில் வாடும் குடும்பங்களை உயர்த்தி விட்டது பால் உற்பத்தித் தொழில் ஆகும். எனவே, பால் உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளுக்கு எளிய முறையில் வங்கிகள்மூலம் கடன் கிடைக்க அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாவட்டத்திற்கு மாவட்டம் பால் கொள்முதல் விலை வித்தியாசப்படுவதை மாற்றி, தமிழகம் முழுவதும் ஒரே சீரான கொள்முதல் விலையை நிர்ணயிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பணிக் காலத்தில் இறந்த ஆவின் பணியாளர்களின் குடும்பத்திலுள்ள வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி கிடைக்க அரசு ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கால்நடை, உழவர்களின் செல்வமாயும் செல்லமாயும் விளங்குவது ஆகும். கால்நடைகளைப் பராமரித்தால்தான் கிராமங்களும், கிராம



மக்களும் முன்னேறுவார்கள். நிலமற்ற விவசாயிகளுக்குக் கால்நடைகள் வாங்க வட்டியில்லாக் கடன் வழங்க அரசு முன்வர வேண்டும். கிராமங்களில் ஆங்காங்கே கால்நடை அபிவிருத்தி முகாம்கள் நடத்தப்பட வேண்டும். பசும்புல் வளர்ப்புத் திட்டத்தை அரசு அதிகப்படுத்த வேண்டும். விவசாயிகளின் நலன் கருதி கால்நடைகளுக்கு அரசே காப்பீட்டு வசதியைச் செய்து தர வேண்டும். கால்நடைகளைச் சரியான முறையில் பராமரிக்க புதியதாக கால்நடை பராமரிப்புப் பணியாளர்களைப் பணி நியமனம் செய்ய வேண்டும். நிறைய கால்நடை மருத்துவமனைகளில் உரிய மருத்துவர்கள் இல்லையென்பதால் கால்நடை மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். அனைத்து கால்நடை மருத்துவர்களுக்கும் செல்போன் வசதி செய்து கொடுக்க வேண்டும்.

எனது தொகுதியின் தேவைகளான நான் தேர்ந்தெடுக்கப்பட்ட காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதி பல சட்டமன்ற உறுப்பினர்களை உருவாக்கிய தொகுதி ஆகும். முழுக்க முழுக்க கிராமங்கள் சூழ்ந்த தொகுதி ஆகும். பழமைவாய்ந்த தொகுதி ஆகும். தொகுதி மறுசீரமைப்பு, பரிசீலனை என்ற அடிப்படையில் காவேரிப்பட்டினம் தொகுதியைக் கலைத்து விட்டு எங்கள் மாவட்டத்தில் வேறு இரண்டு புதிய தொகுதிகளை உருவாக்கியுள்ளதாகத் தேர்தல் ஆணையம் பத்திரிகையில் வெளியிட்டு உள்ளது. அது கண்டிக்கத்தக்கது ஆகும். சென்ற ஆண்டு இதனை அறிவித்தபின் தொகுதி மக்கள் பல போராட்டங்களையும் கடையடைப்புகளையும் செய்து உள்ளனர். எனவே, தொகுதி மக்களின் நலன் கருதி மீண்டும் காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியை நிலைத்துச் செயல்பட அரசு ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது சட்டமன்றத்திற்கு உட்பட்ட பையூர் கிராமத்தில் வேளாண்மை ஆராய்ச்சி மையம் இயங்கி வருகிறது. இங்கு பல்வேறு அரிய வகை வேளாண்மைக் கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதியில் அதிக அளவில் விவசாய மக்கள் இருப்பதால் பையூர் பயிர் வேளாண்மை ஆராய்ச்சி மையத்தை மாற்றி வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது காவேரிப்பட்டினம் சட்டமன்றத்திற்கு உட்பட்ட இராயக்கோட்டையில் உள்ள பேருந்து நிலையம் பாழடைந்து மிக மோசமான நிலையில் உள்ளது. எனவே, பழுதடைந்த பேருந்து

நிலையத்தை உடனே சீரமைக்க ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதிக்கு உட்பட்ட பாரூர் ஊராட்சி பெரிய ஏரியில் அரசால் மீன்கள் வளர்க்கப்பட்டு மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இதனைச் சுற்றியும் 15-க்கும் மேற்பட்ட அரசு ஏரிகளும் 10-க்கும் மேற்பட்ட தனியார் மீன் பண்ணைகளும் இருந்து வருகின்றன. இங்கு வளர்க்கப்படும் மீன்கள் வெளி மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்படுகின்றன. ஆகையால், பாரூர் கிராமத்தில் ஒரு மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணையை அமைக்க அரசு ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட சந்தாபுரம் கிராமத்திற்கும் பள்ளிப்பட்டி கிராமத்திற்கும் இடையே தென்பெண்ணை ஆறு ஓடுகிறது. இந்த ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்க வேண்டும். அந்தத் தரைப்பாலம் அமைப்பதன் மூலம் சுமார் 50-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயனடைவார்கள்.

*பிற்பகல் 1-10*

எனது தொகுதி மக்கள் காவேரிப்பட்டினத்திலிருந்து தமிழகத்தின் தலைநகரமான சென்னைக்கு வர ஓர் அரசு விரைவுப் பேருந்தை இயக்க ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன், உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. த.அ. மேகநாதன்:** எனது சட்டமன்றத் தொகுதியில் பாரூர் கிராமத்தில் அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்று இயங்கி வருகிறது. அங்கு பயிலும் மாணவர்கள், அதிகத் தொலைவிலிருந்து வந்து பயின்று செல்கிறார்கள். மாணவர்களின் படிப்பின் நலன் கருதி, அங்கு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி ஒன்று அமைக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நெடுங்கல், குடிமநல்லி, பண்ணந்துார், வானமங்கலம் ஆகிய கிராமங்களின் அருகிலே செல்லும் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணைகளை-Check dam- அரசு அமைத்து விவசாயத்திற்குத் தண்ணீர் எடுத்துச் செல்ல ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.



**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை, பால் வளம், மீன்வளத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்தத் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. அமரமூர்த்தி, 10 நிமிடங்கள்தான்.

**திரு. து. அமரமூர்த்தி:** காங்கேயம் காளைகள் உலகப் புகழ்பெற்ற காளைகள். அந்த இனம் இப்போது முற்றிலும் அழிந்து வருகின்ற நிலையிலே, காங்கேயம் காளைகளை உற்பத்தி செய்வதற்கு, இனப் பெருக்கம் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, இராஜபாளையம் நாய், கோம்பை நாய் இரண்டும் அருமையான நாய் இனங்கள். அந்த நாய்கள் இனம் இப்போது அழிந்து வருகின்றன. அவற்றிற்குப் பதிலாக இப்போது எல்லோரும் வெளிநாட்டு நாய்களைப் பெரிய அளவில் செலவு செய்து வளர்க்கிறார்கள். இப்போது எல்லோரும் நாய்களை வளர்க்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆகவே, வெளிநாட்டுப் பாரம்பரியம் உள்ள நாய்களைப் பெரும் செலவு செய்து வளர்க்கிறார்கள். ஆனால், இந்த இராஜபாளையம் நாய்கள் மற்றும் கோம்பை நாய்களை வளர்க்க அதிகச் செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, இந்தமாதிரி நாய்களை இனப் பெருக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)* கோம்பை நாய், இராஜபாளையம் நாய் இரண்டையும் நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன் இல்லையா? இவை தமிழ்நாட்டுப் பாரம்பரியம் உள்ள நாய்கள்.

அதற்கடுத்தாற்போல, இப்போது எல்லோருமே இறைச்சியை ரொம்ப விரும்பிச் சாப்பிடுகிறார்கள். மட்டன் விலை, சிக்கன் விலை எல்லாம் ரொம்ப அதிகமாக ஏறிக்கொண்டேயிருக்கிறது. காடுகள் நிறைய இருக்கின்றன. சின்னசேலத்தில் 1,500 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதேபோல, வேலூரிலேயும், இராணிப்பேட்டையிலேயும் காடுகள் நிறைய இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் சொல்கிறார்கள். அந்த இடங்களிலே எல்லாம் ஆடுகள், நல்ல தரமுள்ள ஆடுகளை வளர்த்து—அரசே எப்படி TASMAC நடத்துகிறதோ, அதேபோல குறைந்த விலையிலே அரசே ஏற்று—இறைச்சி கிலோ 50 ரூபாயிலே எல்லோருக்கும் கொடுக்கலாம். *(மேசையைத் தட்டும் ஒலி)* சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் விரும்புகிறார்கள். எனவே, இதை அவசியம் கருதி,

எல்லோருக்கும் குறைந்த விலையிலே மட்டன் கிடைப்பதற்கு, சுகாதாரமான முறையிலே ஆட்டுக் கறி கிடைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கால்நடைகளுக்கு anthrax—பறவைக் காய்ச்சல்— leptospirosis போன்ற வியாதிகள் பெருமளவில் இருக்கின்றன. ஆனால், எந்த இடத்தை எடுத்துக்கொண்டாலும் டாக்டர்கள் பற்றாக்குறை மிக அதிகமாக இருக்கிறது. உதாரணமாக என்னுடைய மாவட்டத்தில் 31 கால்நடை மருத்துவமனைகளும், 34 கால்நடைக் கிளை மருத்துவமனைகளும் உள்ளன. அவற்றில் 14 கால்நடை மருந்தகங்களில் கால்நடை மருத்துவர் பணியிடங்கள் காலியாக உள்ளன. 16 கால்நடை மருந்தகங்கள் உள்ளன. அந்த 16-லும் கால்நடை மருத்துவர் பணியிடங்கள் காலியாக உள்ளன. அதேபோல, கால்நடை ஆய்வாளர்களைப் பொறுத்தவரை 65 பணியிடங்களில் 52 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இவையெல்லாம் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகாலமாக அத்துணை மருத்துவமனைகளும் பூட்டியே கிடக்கின்றன. டாக்டர்கள் பணி நியமனம் இல்லாமல் கடந்த காலத்திலே அப்படியே விட்டுவிட்டார்கள். ஆகவே, அந்தக் கால்நடை மருந்தகங்கள் பூட்டியே கிடக்கின்றன. அந்தக் கட்டடங்கள் பாழாகிக் கிடக்கின்ற அளவிலே இருக்கின்றன.

அதேபோல, 1996-லே கலைஞர் அரசு sub-centres என்று ஒவ்வொரு கிராமங்களிலும் வைத்தார்கள். அந்த sub-centres என்ற visiting centres. அந்த visiting centres-க்கு டாக்டர்கள் போய் அந்தந்தக் கிராமங்களிலே இருக்கின்ற கால்நடைகளுக்கு நோய் வராமல் பார்த்துக்கொண்டார்கள். இப்போது அந்த visiting centres-களை close பண்ணிவிட்டார்கள். இதற்கெல்லாம் காரணம், மருத்துவர்கள் பற்றாக்குறைதான். அந்த மருத்துவர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். இல்லாவிட்டால் கால்நடை இனமே அழிந்துவிடும். ஆகவே, மருத்துவர்களை உடனே பணி நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்குட்பட்ட அரியலூர் ஒன்றியத்தில் பொய்யூர், சுண்டக்குடி, விளாங்குடி ஆகிய கிராமங்களில் கால்நடை மருத்துவமனைகள் உள்ளன. இவற்றில் 2 மருத்துவர்கள் மட்டுமே பணியில் உள்ளார்கள். அங்கே மேலும் ஒரு மருத்துவரை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர் தொகுதியில் உள்ள அரியலூர் ஒன்றியத்தில் காட்டுப்புரங்கியம் கிராமத்திலும், திருமானூர் ஒன்றியத்தில்



ஏலாக்குறிச்சி கிராமத்திலும், காமரசவல்லி, திருமல்பாடி, கீழகாட்டான்குறிச்சி ஆகியவற்றில் கிளை மருந்தகங்கள் இருக்கின்றன. ஆனால், அவை அனைத்திலும் அனைத்துப் பணியிடங்களும் காலியாகவே உள்ளன. இந்தப் பணியாளர்களை, மருத்துவமனைகளில் தேவையான மருத்துவர்கள் மற்றும் உதவியாளர்களை உடனே பணி நியமனம் செய்ய வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர் தொகுதி விவசாயிகள் அதிகம் வாழ்கின்ற தொகுதி. கால்நடைகளின் துயர் துடைக்க கோவிலூர், கோப்புடி, பொய்யாதநல்லூர், கடுகூர், வேங்கனூர், அயனாத்தூர் ஆகிய கிராமங்களில் புதிய கால்நடை மருந்தகங்களை இந்த நிதியாண்டில் தொடங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

அதேபோல மூன்று வருவாய்க் கோட்டங்கள் உள்ளன. அதில் பத்து ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் அரியலூரில் மட்டுமே ஒரே ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் உள்ளது. மாவட்டத் தலைநகரான பெரம்பலூரில் உதவி இயக்குநர் அலுவலகம் இல்லை. கால்நடைத் துறையின் பணிகளை ஆய்வு செய்து, பணிகள் சிறப்பாக நடைபெற்று, கால்நடை வளர்ப்பில் உள்ள அனைத்து சலுகைகளையும் உடனுக்குடன் பெற்றிட ஏதுவாக பெரம்பலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் உதவி இயக்குநர் அலுவலகத்தை புதியதாக உருவாக்கிடக் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைத் துறையிலுள்ள ஜீப்புகள் எல்லாமே மிகவும் பழையனவாக உள்ளன. துறைப் பணிகளைச் சிறப்பாகச் செய்யவும், களப் பணிகளை ஒரே நேரத்தில் ஆய்வு செய்திடவும், பழுது நீக்க செலவுகளைக் குறைத்திடவும், புதியதாக ஜீப்புகளை துறை அலுவலர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைத் துறையில் சில அலுவலகங்களில், உதாரணமாக கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவில் தொலைபேசி வசதி இல்லாமல் உள்ளது. கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு தொலைபேசி வசதி இல்லாத அனைத்து கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு அலுவலகங்களுக்கும் தொலைபேசி வசதி செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டத்தில் புதியதாக ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவை உருவாக்கிட வேண்டுகிறேன். Lab Technician

பதவிகள் இல்லாத புலனாய்வுப் பிரிவுகளில் Lab Technician பதவிகளை உருவாக்கி, உடன் பணி நியமனம் செய்திட வேண்டுகிறேன். அனைத்து நுண்கதிர்கள் இயக்கப் பிரிவுகளிலும் X-ray Technician பதவிகளை உருவாக்கி, பணி நியமனம் செய்திட வேண்டுகிறேன். மத்தியப்பிரதேசம், பஞ்சாப், அரியானா, மகாராஷ்டிரா, இராஜஸ்தான், இமாச்சலப்பிரதேசம் மற்றும் பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களில் பணியாற்றும் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு அடிப்படை ஊதியத்தில் 25 விழுக்காடு தனித் தொழில் செய்ய ஈட்டுப்படி வழங்கப்பட்டு வருகிறது. அரசு ஊழியர்களின் நலனில் தனிப்பட்ட அக்கறை கொண்டு அனைத்துச் சலுகைகளையும் மீண்டும் வழங்கி அரசு ஊழியர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருந்தகங்களில் பட்டதாரி, கால்நடை உதவி மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். ஒரு கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர் விடுப்பில் செல்லும்போது, அந்தக் கால்நடை மருந்தகத்தின் கால்நடை மருத்துவப் பணிகளை அடுத்த மருத்துவர், மருந்தக கால்நடை உதவி மருத்துவர் தனது கால்நடை மருத்துவப் பணிகளைப் பார்த்துவிட்டுத்தான், குறிப்பாக 11 மணியளவில் கால்நடை உதவியாளர் விடுப்பில் உள்ள மருந்தகத்தின் கால்நடைப் பணிகளைக் கவனிக்கிறார். இதனால் கால்நடைகளைக் கொண்டுசெல்லும் விவசாயிகள் பல நேரம் கால்நடை உதவி மருத்துவரின் வருகைக்காக காத்துக்கொண்டிருக்க வேண்டியுள்ளது. இக்குறையினைப் போக்க தமிழகத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரு reserve கால்நடை உதவி மருத்துவர் பதவியினை உருவாக்கிட வேண்டுகிறேன்.

தற்போது புதியதாக உருவாக்கப்படும் கால்நடை மருந்தகங்களில் ஓரே ஒரு கால்நடை பராமரிப்பு உதவியாளரே பணிபுரிந்து வருகிறார். கால்நடை உதவி பராமரிப்பு அலுவலர் விடுப்பில் செல்லும்போது அந்தக் கால்நடை மருந்தகத்தின் கால்நடை உதவி மருத்துவரே பூட்டைத் திறந்து அனைத்துப் பணிகளையும் செய்து, மீண்டும் கால்நடை மருந்தகத்தைப் பூட்டி வரவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. இந்நிலையைப் போக்கிட ஒரு கால்நடை மருந்தகத்திற்கு இரண்டு கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிகளை ஏற்படுத்தி, முன்பு இருந்ததைப் போலவே பணி நியமனம் செய்திட வேண்டுகிறேன்.

கால்நடை மருந்தகங்களில் தற்போது கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் பணியிடம் சுமார் 1,500 காலியாக உள்ளன. கால்நடை



மருந்தகம் திறப்பதன் மூலம் அனைத்துப் பணிகளையும் கால்நடை உதவி மருத்துவர்களே செய்ய வேண்டிய அவல நிலை உள்ளது. ஆகவே, கால்நடை பராமரிப்பு உதவியாளர்களை பணி நியமனம் செய்ய வேண்டுகிறோம்.

தற்போது கலப்பின கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாலும், நோய்வாய்ப்பட்ட கால்நடைகளை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல அதிக தூரம் உள்ளதாலும் கிராமத்திற்கென்று மருத்துவ வசதி அளிக்கும்பொருட்டு ஒவ்வோர் ஒன்றியத்திலும் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைத்துத் தருமாறு வேண்டுகின்றோம்.

தேசிய விவசாய கமிஷன் பரிந்துரையின்படி 2000 ஆம் ஆண்டிலே 5,000 கால்நடை யூனிட்டிற்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைத்திருக்க வேண்டும். ஆனால் 1994-ல் கால்நடை கணக்குப்படி 131.57 இலட்சம் கால்நடை யூனிட் உருவானதற்கேற்ப 2,688 கால்நடை மருந்தக்ங்கள் ஏற்படுத்தியிருக்க வேண்டும். தற்போது 1,324 கால்நடை மருந்தகங்களே இயங்கி வருகின்றன. கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் புதியதாக 1,364 கால்நடை மருந்தகங்கள் உருவாக்க வேண்டும். மேலும் கால்நடை மருத்துவம் பயின்ற பட்டதாரிகள் சுமார் 3,000 பேர் பணியில்லாமல் உள்ளனர். அவர்களைக் கொண்டு புதியதாக 1,364 க்ால்நடை மருந்தகங்களை உருவாக்கி கால்நடைகளின் வாழ்விலும், கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்விலும், விவசாயிகள் வாழ்விலும் வளமைப்படுத்திட வேண்டுகிறோம்.

அதேபோல என்னுடைய தொகுதி அரியலூரிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

அதேபோல, நீண்ட நாட்களாக வி.கே. கேட்டிலே புதியதாக ஒரு காவல் நிலையமும், சுண்டக்குடியிலே ஒரேயொரு காவல் நிலையமும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே, அதையும் வழங்கிட கேட்டுக்கொள்கிறேன்.

1996-லே சொன்னோம். பால் குளிரூட்டும் நிலையம், இப்பொழுது தேசிய ஆணையம் என்ன சொல்கிறது என்றால், குளிர்விப்பான்தான் கொடுப்போம், பால் குளிரூட்டும் நிலையம் இல்லை என்கிறார்கள். அந்தப் பால் குளிர்விப்பான்களால் யாருக்கும் பிரயோஜனம் இல்லை. 500 பேர், 1,000 பேருக்குத்தான் பிரயோஜனப்படும். ஆனால்

பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தால் கிட்டத்தட்ட 50 ஆயிரம், 60 ஆயிரம் விவசாயிகள் பலன் அடைவார்கள். ஆகவே, பால் குளிரூட்டும் நிலையம் உடனடியாக வேலூரில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேலூர் கூட்டுறவு பால் பண்ணையில் தற்காலிகப் பணியில் 102 பணியாளர்களை உடனடியாக நியமனம் செய்ய வேண்டுகிறேன். பால் கொள்முதல் விலையை 1-50 ரூபாய் உயர்த்திய தமிழக முதல்வருக்கு காங்கிரஸ் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். அதேபோல, இன்னும் கொஞ்சம் விலையைக் கூட்டிக் கொடுத்தால் நன்றாக இருக்கும். விவசாயிகள் எல்லாம் மிகுந்த சந்தோஷப்படுவார்கள்.

கால்நடை மருத்துவர்களுக்கு மத்திய அரசு வழங்கும் சம்பளத்திற்கு இணையான சம்பளம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் மத்திய அரசின் 5-வது ஊதியக் குழு, மத்திய கால்நடை உதவி மருத்துவர்களுக்கு ரூபாய் 8,000-275-13,500 என்ற ஊதிய விகிதம் மற்றும் கால்நடைகளின் இருப்பிடம் சென்று சிகிச்சைப் பணி அளிக்க வேண்டியிருப்பதால், Non-Practice Allowance என்று தனித் தொழில் செய்யா ஈட்டுப்படி அடிப்படை ஊதியத்தில் 25 சதவிகிதம் வழங்க வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டு, அதன்படி மத்திய அரசிலும், பஞ்சாப், பீகார், அரியானா, மகாராஷ்டிரா, பாண்டிச்சேரி, இமாச்சலப் பிரதேசம், இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் கால்நடை உதவி மருத்துவர்களுக்கும் ரூ.8,000-275-13,000 என்ற ஊதிய விகிதம் மற்றும் 25 சதவிகிதம் தனித் தொழில் செய்யா ஈட்டுப்படி வழங்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் 18-4-2000 ஆம் நாளன்று சட்டமன்றத்தில் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அமரமூர்த்தி, இன்னும் 3 மந்திரிகள் பதில் சொல்ல வேண்டும். 3 மந்திரிகள் பேச வேண்டும் இன்னும். (குறுக்கீடு) கோரிக்கைகளைப் பிறகு எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. து. அமரமூர்த்தி:** பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.



**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் சட்டப் பேரவைத் தொகுதியில், ஓடாச்சேரி என்ற கிராமத்தில் பிறந்து வளர்ந்து, ஒரு வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருந்த என்னை, தலைவர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கிற நேரத்தில், எனக்கும் ஓர் அமைச்சர் பதவி வழங்கி, பொறுப்போடு பணியாற்ற எனக்கு வாய்ப்பளித்த, மாண்புமிகு தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணாவிடம் எதையும் தாங்கும் இதயத்தைப் பெற்று, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் நெஞ்சிலே தைத்த முள்ளை அகற்றி, ஐந்தாவது முறையாக தமிழக முதல்வராக மட்டுமல்லாமல், 50 ஆண்டு காலம் தமிழக சட்டமன்றத்தின்மூலம் தமிழ்ச் சமுதாயத்தின் ஆதி திராவிடர், ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக பல்வேறு நிலைகளிலும் தொடர்ந்து குரல் கொடுத்து, உரிமைகளைப் பெற்றுத் தந்து, இன்று 27 சதவிகிதம் உயர் கல்வியில் இடஒதுக்கீடு பெற்றிடக் குரல் கொடுத்து, நடுவண் அரசின் கவனத்தை ஈர்த்து, இந்தியத் துணைக் கண்டத்திற்கே முன்னோடியாக, வழிகாட்டியாக விளங்கும் எங்களின் குடும்பத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் அய்யா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) தன்மானத்தின் தந்தை பெரியாரின் உணர்வு காக்கும் மைந்தன், இனமான ஏந்தல் அண்ணாவின் இதயம் நாடிய இளவல், இன மாந்தர்தம் இழிவு துடைத்திட முனைவருக்கோ தோழன், இலட்சியப் பணியில் கலைஞர் என் பெருமைக்குற்ற நண்பர் என்று தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை பெருமைப்படுத்திட்ட பெருந்தகை தந்தை பெரியார் அவர்களுக்கு சர். ஏ.டி. பன்னீர்செல்வம் கிடைத்ததைப்போல, நட்பால் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் உற்ற சகோதரராக விளங்கும் இனமானப் பேராசிரியர் அவர்களின் உற்ற சகோதரராக விளங்கும் இனமானப் பேராசிரியர் மாண்புமிகு நிதியமைச்சர் அய்யா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி)

*'மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை*
*என்நோற்றான் கொல்லெனும் சொல்'*

என்ற அய்யன் வள்ளுவன் குறளுக்கேற்ப, கழகம் காத்திட, கண் துஞ்சாது உழைக்கும் தளபதியாம், கழகத் தோழர்களைத் தம்பிகளாக ஏற்றுக்கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்களைப்போல, எங்களையும் தம்பிமார்களாக ஏற்று, அரசியல் பணியிலும், ஆட்சிப் பணியிலும் தொண்டாற்றிட பணித்திடும் ஆற்றல்மிக்க எங்கள் அண்ணன், ஆதி திராவிட மக்களின் தன்மானம் காத்திட, மயான வெட்டியான் என்ற சொல் அகற்றி, மயான உதவியாளர் என்ற பெயர் சூட்டிய

எங்கள் சுயமரியாதை மன்னன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் தளபதியார் அவர்களுக்கும் 'பொறுத்தார் அரசாள்வார், பொங்கினார் காடுகொள்வார்' என்ற பழமொழிக்கேற்ப, பொறுமையின் சிகரமாய், தலைவர் கலைஞர் அவர்களின் அன்புத் தம்பியாய், மக்கள் பணியாற்றும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அய்யா ஆற்காட்டார் அவர்களுக்கும், மலை சரிந்தாலும் நிலை குலையாத கொள்கை வீரர் தலைவர் கலைஞர் அவர்களின் போர்ப்படைத் தளபதி, மாண்புமிகு புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நல அமைச்சர் அய்யா ஆடுதுறையார் அவர்களுக்கும், மாவட்டச் செயலாளர்கள் அன்பிற்குரிய பூண்டி கலைச்செல்வன் அவர்களுக்கும், நண்பர் ஏ.கே.எஸ். விஜயன் அவர்களுக்கும், திருவாரூர் நகர் மன்றத்தினுடைய தலைவர் அய்யா தென்னன் அவர்களுக்கும், எங்கள் மண்ணின் மைந்தர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு 50 ஆண்டு காலம் சட்டப் பேரவையில் பணியாற்றிட அடித்தளம் அமைத்துத் தந்திட்ட குளித்தலை சட்டப் பேரவைத் தொகுதி மக்களுக்கும், எனக்கு வாக்களித்த திருவாரூர் சட்டப் பேரவைத் தொகுதி மக்களுக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-25*

இந்தப் பால் வளத் துறையைப் பொறுத்தவரையில், ஒன்று பாலை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள்; இரண்டு நுகர்வோர்; மூன்றாவதாக உற்பத்தி செய்யப்படுகிற பாலை பதப்படுத்தி நுகர்வோர்களுக்கு வழங்கி, அதோடுமட்டுமல்லாமல் பால் உற்பத்தியாளர்களுக்குச் சரியான விலை கொடுத்து அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு வளர்ச்சி ஏற்படுத்திக் கொடுப்பது இந்தத் துறையின் முக்கிய நோக்கம் ஆகும். இந்தத் துறை மாநில அளவில் இணையமாகவும், மாவட்ட அளவில் ஒன்றியமாகவும், கிராமப்புற அளவில் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமாகவும், மூன்றடுக்கு முறையில் பால் உற்பத்தியைப் பெருக்கி, தரமான பாலை நியாயமான விலைகளோடு நுகர்வோருக்கு வழங்குவதே தனது கொள்கையாகக் கொண்டுள்ளது. இத்துறை பால் உற்பத்தியாளர்கள், நுகர்வோர், பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்பட்ட பாலை நுகர்வோருக்கு வழங்குகின்ற முப்பரிமாண பணியைச் செய்து வருகிறது.

கிராமப்புறங்களில் பால் உற்பத்தித் தொழிலை முக்கியத் தொழிலாகச் செய்து வரும் பால் உற்பத்தியாளர்கள் மிகவும் சிரமப்பட்டுத்தான் இந்தப் பாலை உற்பத்தி செய்து வருகிறார்கள்



என்பதோடு, கிராமப் பகுதியிலே படிக்கின்ற மாணவ மாணவிகள்கூட பள்ளிக்குச் செல்லாத விடுமுறை நாட்களிலும் கால்நடைகளைப் பராமரிக்கின்ற பணிகளைச் செய்துதான் பால் உற்பத்தியைச் செய்து வருகிறார்கள்.

ஆவின் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கின்ற பால்—தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள்தான் இவர்களுடைய நிலையைக் கருதி, —Shakesphere சொல்வார் "The quality of mercy is not strained, it droppeth as a gentle rain from heaven" என்று சொல்லுவார். அதேபோல இரக்கம் என்பது தலைவர் அவர்களுக்குத் தானாகவே வந்ததா? அவர்களுடைய சூழ்நிலையைக் கருதி 7-3-2007-லே லிட்டர் ஒன்றுக்கு 1 ரூபாய் 50 காசுக்குப் பால் விலையை உயர்த்திக் கொடுத்தார்கள். பல்வேறு பால் உற்பத்தியாளர் சங்கங்களின் கோரிக்கையை ஏற்று, அவர்களுக்கு குறிப்பாக விளிம்புத் தொகையை லிட்டர் ஒன்றுக்கு 35 பைசாவிலிருந்து 50 பைசாவாக உயர்த்தி, 10 பைசா ஒன்றியத்தின் நிருவாகச் செலவிற்காகவும், 40 பைசா சங்க நிருவாகச் செலவிற்காகவும் ஒதுக்கி வழங்கப்படுகிறது. இத்துறையின்மூலமாக நாள்தோறும் 3 கோடி ரூபாய் அளவில் பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது.

கடந்த 2006-2007 ஆம் ஆண்டில் குறைந்தது 100 மகளிர் சங்கங்கள் அடங்கிய 300 புதிய சங்கங்கள் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில்தான் 352 புதிய சங்கங்கள் உருவாக்கப்பட்டன என்பதோடு, அதில் 113 மகளிருக்கான சங்கங்கள்—என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி மற்றும் பூமியின் வெப்ப உயர்வு ஆகிய காரணங்களால் உலக அளவில் பால் உற்பத்தி மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, குறிப்பாக அதிக அளவு பால் உற்பத்தி செய்யும் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் பால் உற்பத்தி இறங்கு முகமாக உள்ளது. இருப்பினும் முனைப்பான முயற்சிகளாலும், சிறப்பான சந்தை யுக்திகள்மூலமாக தமிழ்நாட்டில் பால் கொள்முதல் கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் 5 விழுக்காடு உயர்ந்துள்ளது என்று Food and Beverage News 2007 பிப்ரவரி 3 நாளிட்ட இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒன்றியத்திலிருந்து சங்கங்களுக்கும், சங்கங்களிலிருந்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுகிறது. அதைப்போல உற்பத்தியாகும் பாலைப் பெறுகின்ற நுகர்வோருக்குக் குறிப்பிட்ட நேரத்தில் தரப் பாதுகாப்புடன் பால் வழங்கப்படுகிறது. அதிகாலை நேரத்தில் குழந்தைகள், மகளிர் மற்றும் வயதானோர்

போன்ற அனைத்துத் தரப்பினருக்கும் அவசியத் தேவைகளை உணர்ந்து பால் தடையின்றிக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போதைய ஆவின் பால் விலை மற்ற மாநிலங்களை ஒப்பிடுகிற நேரத்தில், தமிழ்நாட்டில் உள்ள தனியார் பால் விற்பனை விலையைவிட லிட்டருக்கு 2 முதல் 3 ரூபாய் வரை குறைவாகத்தான் உள்ளது. எனவே, தனியாரிடம் பால் வாங்கி வந்த வாடிக்கையாளர்கள் தற்போது ஆவின் பாலை வாங்க பெரிதும் விரும்புகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட பாலின் அளவு சென்ற ஆண்டுடன் ஒப்பு நோக்குகையில் 11 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேசிய பால் வள வாரியம் வெளியிட்டுள்ள நவம்பர் 2006 இதழில் ஆவின் நிறுவனத்தின் வளர்ச்சியைப் பாராட்டியுள்ளது. இணையம் மற்றும் ஒன்றியத்தால் நுகர்வோருக்கு வழங்கப்படும் பால் மற்றும் பால் பொருட்களின் தரம் தொடர்ந்து நல்ல நிலையில் தக்க வைத்து இருப்பது ஆவின் வளர்ச்சிக்கு முக்கியமான காரணம் என்று தேசிய பால் வள வாரியத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** இணையம் மற்றும் ஒன்றியங்கள் நுகர்வோரின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி வருகிறது. சென்னையிலுள்ள நந்தனத்தில் 24 மணி நேர நுகர்வோர் சேவை மையம், கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 42 53 300 என்ற இலக்கத்தில் செயல்பட்டு வருகிறது.

சென்னையில் நேற்றைக்குக்கூட எங்களுடைய ஆவின் நிறுவனத்தின்மூலமாக சர்க்கரை இல்லாத ஐஸ்கிரீம் அறிமுகப்படுத்தப்பட்டது. மாண்பிற்குரிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பெருமனதோடு வந்து சிறப்பாக அந்த நிகழ்ச்சியை நடத்தித் தந்தார்கள்.

இணையம் மற்றும் ஒன்றியங்களில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்கள் குறைகளைக் களைந்திடும்வண்ணம் அவ்வப்போது தொழிற்சங்க நிருவாகிகளுடன் பேசி தொழிற்சங்க நிருவாகிகள், தொ.மு.ச.வைச் சேர்ந்த செல்வராஜ் போன்றவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பையன் போன்றவர்கள் எல்லாம்



தொழிலாளர்கள் குறித்த பல்வேறு பிரச்சினைகள் பற்றிய கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள்.

தொழிலாளர்களுக்கு 20 சதவீத போனஸ் வழங்கப்பட்டது. மேலும் சங்கப் பணியாளர்களுக்கு கடந்த 5 ஆண்டுகளாக வழங்கப்படாமலிருந்த பொங்கல் போனஸ் ரூ.825 இந்த ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

பணியிலிருக்கும்போது இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கடந்த 5 ஆண்டு காலமாக பணி நியமனத் தடைச் சட்டத்தை அந்த ஆட்சியாளர்கள் வைத்திருந்த காரணத்தால், இறந்துபோனவர்கள் குடும்பங்கள் வாழ்வதற்குக்கூட வக்கில்லாமல் இருந்தார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் இப்போது கருணை அடிப்படையில் பணிகள் வழங்கப்படுகின்றன. நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் தளபதியார் அவர்கள், அவர்களுடைய கரங்களாலே 25 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணையைக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களெல்லாம் முக மகிழ்ச்சியோடு சென்றார்கள். தளபதி அவர்களின் காலைத் தொட்டு வணங்கிவிட்டு, எங்களுக்கு வாழ்வு பிறந்திருக்கிறது என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிலைமையில் எங்களுடைய நிறுவனம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, பல்வேறு ஒன்றியங்களில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக தினக் கூலிப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வருகிற தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அனுமதி பெற்று, அதன்மீதான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**2007-2008 ஆம் ஆண்டின் பகுதி-II திட்டம்.**

1. 1,000 பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூபாய் 200 இலட்சம் மதிப்பீட்டில் 5,000 துருவுறா எஃகு கேன்கள் 50 சதவீத அரசு மானியத்துடன் வழங்கப்படும்.

2. 50 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் சேகரிக்கும் தட்டு, புனல், வடிகட்டி, அளவுப்பாத்திரம் மற்றும்

பரிசோதனைப் புட்டிகள் சங்கம் ஒன்றிற்கு ரூபாய் 6,000 மதிப்பீட்டில் கொள்முதல் செய்து ரூபாய் 3 இலட்சம், 100 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

3. 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 10 மொத்த பால் குளிர்விப்பான்கள் ரூபாய் 200 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும். இதில் 50 சதவீதம் தமிழக அரசு மானியமாகவும், 50 சதவீதம் பயன்பெறும் ஒன்றியங்கள் ஏற்கும்.

4. 10 பால் கூட்டுறவுச் சங்கங்களில் ரூபாய் 15 இலட்சம் செலவில் கணினியுடன் இணைந்த பால் சேகரிப்பு நிலையங்கள் 100 சதவீத மானியத்தில் நிறுவப்படும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ்—

5. பல்வேறு சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 5,000 உறுப்பினர்களுக்கு 200 புதிய பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் தொடங்கப்பட்டு, ரூபாய் 100 இலட்சம் மதிப்புள்ள சங்க உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படும்.

6. 19 மொத்த பால் குளிர்விப்பான்கள் ரூபாய் 309 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

7. 45 சுய உதவிக் குழுக்களுக்கு 45 இடங்களில் ரூபாய் 201.15 இலட்சம் செலவில் பால் விற்பனைக்கு உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

8. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு ரூபாய் 9 இலட்சம் செலவில் சிறப்புப் பயிற்சி வழங்கப்படும்.

**மாவட்ட அபிவிருத்தி மற்றும் சீர்திருத்தத் திட்டம்**
**(Rashtriya Sam Vikas Yojana)**

9. மாவட்ட அபிவிருத்தி மற்றும் சீர்திருத்தத் திட்டத்தில் பிற்படுத்தப்பட்ட பகுதி மானிய நிதியுதவியின்கீழ் சிவகங்கை மாவட்டத்தில் 119 சங்கங்களில் தூய்மையான பால் உற்பத்தியைச் செயல்படுத்த 2 மொத்த பால் குளிர்விப்பான்கள் ரூபாய் 100.36 இலட்சம் செலவில் 100 சதவீத மானியத்தில் நிறுவப்பட உள்ளது.

10. இந்தத் திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் புல் வளர்ப்பு, நடமாடும் கால்நடை பராமரிப்பு வசதி, பால் உற்பத்தியாளர்



பயிற்சி மற்றும் கால்நடை பாதுகாப்புத் திட்டத்திற்காக ரூபாய் 110.29 இலட்சம், 100 சதவீத மானியத்திலும், திண்டுக்கல் மாவட்டத்தில் பால் பதப்படுத்தி, நிலைப்படுத்தும் இயந்திரங்கள் வாங்குவதற்காக ரூபாய் 43.50 இலட்சம், 50 சதவீத மானியத்திலும் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், இந்த அறிவிப்புகளையெல்லாம், படித்ததாகச் சொல்லி, பதிந்துகொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** இந்த அறிவிப்புகள் அச்சிலேற்றப்பட்டு, புத்தகமாக வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த அறிவிப்புகளை * நான் இங்கே படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் அவற்றைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதே மாதிரி, ஏனைய அமைச்சர்கள் எல்லாம்கூட அறிவிப்புகளைப் பதிந்துகொள்ள வேண்டுமென்று சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே பல்வேறு கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். எங்களுடைய அறிவிப்புகளிலும், மானியக் கோரிக்கை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பிலும் இதற்கான பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும்கூட, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துகள் மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவற்றிற்கு ஆவன செய்யப்படும் என்பதைக் கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள். நீங்களும் உங்கள் அறிவிப்புகளையெல்லாம் படித்ததாகச் சொல்லி பதிவு செய்துகொள்ளலாம்.

---

* 355 முதல் 358 வரையிலான பக்கங்களில் இணைப்பு–IV–ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு செந்தமிழ் மலர் தொடுத்து, நம்மொழி செம்மொழி தமிழால் வணக்கம் தெரிவித்துக்கொள்கின்றேன். ஈரோட்டுத் தந்தை, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் தேரோட்டி, வஞ்சித்த தமிழருக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் தமிழ் உணர்வூட்டி, எந்நிலையிலும் தன்னிலை மாறாத தலைவனாக, தமிழ்த் தாய் அஞ்சுகத் தாயின் அருந்திராக, தங்களின் கண் பட்டவரெல்லாம் செழித்தார்; உங்களைக் கெட்ட நோக்கோடு தொட நினைத்தவரெல்லாம் தொலைந்தே போனார். தலைவா, உன் பண்பட்ட அரசியலில் தமிழகத்தின் கடந்த ஆட்சிக் காலத்தில் இருண்டிருந்த இருளைக் கிழித்து, உதயமாகியிருக்கின்ற உதய சூரியனின் ஆட்சியைக் கொண்டுவந்தீர்; நல்லோரின் துணையோடு தமிழகத்தில் நல்லாட்சி தரும் அரசியல் ஞானியாய், இந்தியத் திருநாடே வியக்கும் வண்ணம் ஐந்தாவது முறையாகத் தமிழகத்தின் வரலாற்றுச் சாதனை முதல்வராய் வீற்றிருக்கும் தலைவா, சாமானியர்களையும் இந்த மாண்புமிகு சபையிலே சட்டமன்ற உறுப்பினர்களாக்கி, அமைச்சர்களாக்கி அழகு பார்க்கும் எம் தலைவா, சட்டமன்றத்தில் 50 ஆண்டுகள் பணியாற்றி பொன்விழா காணும் தமிழகத்தின் கின்னஸ் பொன்னேடு தாங்கள். 1957-ல் குளித்தலை சட்டப் பேரவைத் தொகுதியில் உங்களை எதிர்த்துப் போட்டியிட்ட தர்மலிங்கம் அவர்கள் முதல், 2006-ல் சேப்பாக்கம் தொகுதியில் தாவூத் மியான்கான் வரை 11 முறை தாங்கள் வெற்றி பெற்று, எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு தோல்வியைக்கூட தாங்கள் பரிசாகத்தான் வழங்கியிருக்கின்றீர்கள். இன்னும் ஒரு கும்பல் தங்களிடம் போட்டியிட்டு தோல்வியைப் பரிசாகப் பெற 'ஜே ஜே' என காத்துக்கொண்டிருக்கின்றது. சட்டப் பேரவையில் (குறுக்கீடுகள்) சட்டப் பேரவையில் 50 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றி பொன்விழா காணும் தமிழகத்தின் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தைக் கருதி நாங்கள் அமைதியாக இருக்கிறோம். நாங்கள் கருத்துகள் சொல்வதற்கு நேரம் இல்லாத காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைச்சருடைய உரையை மட்டும் ஆற்றினால் நன்றாக இருக்கும். அவர் தேவையில்லாமல் எங்களை அரசியலில் இழுக்காமல் இருந்தால்,



அதுவே எங்களுக்கு நன்றாக இருக்கும். ஜே, ஜே என்பதெல்லாம், எங்களால் பேச முடியும். அருள்கூர்ந்து அமைச்சர் அவர்கள் என்ன கருத்துகளைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவற்றைச் சொல்ல வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் சார்பாக நான் கூற விழைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டப் பேரவையில் 50 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றி, பொன்விழாக் காணும் தமிழகத்தின் வரலாற்று முதல்வர், எங்கள் உயிர்த் தலைவர் ஐயா கலைஞர் அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேச்சில், எழுத்தில், இன உணர்வில் தமிழ்ப் பொழிவாளராகத் திகழும் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞரின் நிழலாய், அவர்தம் அன்பின் அடையாளமாய்த் திகழும் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும் வணக்கம். எதிரிகளுக்கு இடியொலியாய், இயக்கத்தவரின் இதய எதிரொலியாய், தோழமைக்குத் தோள் கொடுக்கும் நல்ல தோழனாய், 'கருத்த நின் கூந்தலுக்கு கவி வேண்டுமா, காலிட்ட சலங்கைக்கு ஒலி வேண்டுமா' என்பதுபோல, எத்துறையை எடுத்தாலும் மக்கள் பணியில் முத்திரை பதிக்கும் முதல்வனாய், தமிழகத்து அரசியல் வானில் வலம் வரும் எங்கள் வானத்து வெண்ணிலவு, வருங்கால தமிழ்ச் சமுதாயத்தைத் தலைமையேற்று வழி நடத்தும் ஆற்றலாளர், எனக்கு முகவரி தந்த முத்துவேலர், நல்லாட்சியின் உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு தளபதியார் அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) கமல மலர்ப் பாதங்கள் தொட்டு, என் வாழ்நாளில் நிறைவுநாள் உள்ளவரை என் நன்றியைக் காணிக்கையாக்கிக் கொண்டிருப்பேன்.

பிற்பகல் 1-40

தமிழகத்தின் கடற்கரைக் கிராமங்களில் ஒன்றான, காசி விஸ்வநாதர் கோயில் குப்பம் என்னும் குக்கிராமத்தில் பிறந்த என்னை, இந்த மாண்புமிகு பேரவைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிவைத்த அன்பை, பண்பை, பாசத்தை ஓத்திவாழும் திருவொற்றியூர் தொகுதி மக்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மீனவ சமுதாய மக்களின் மேம்பாட்டிற்காகவே, நல வாரியம் புதிதாக உருவாக்கி, மீனவ மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் பல சலுகைகளைத் தமிழகத்தின் வரலாற்று

முதல்வர் ஐயா கலைஞர் அவர்களுடைய அரசு மிகுந்த முனைப்போடு செயல்படுத்தி வருவதை மீனவ மக்கள் நன்கறிவர்.

. சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்களினால், கடல் தொழில் செய்யும் நேரத்தில் உயிரிழக்கவும், காணாமல் போகின்ற மீனவர்களின் குடும்பங்களைக் காப்பதிலும், தலைவர் கலைஞர் அரசு, மின்னல் வேகத்தில் நிவாரண உதவி வழங்கி வருவதை அனைவரும் அறிவர். காணாமல் போகின்ற மீனவர் குடும்பத்தைக் காக்க, மாதம் ரூ.1,500/- வீதம், தொழில் செய்யும்போது எதிர்பாராமல் உயிரிழக்க நேரிடும் குடும்பங்களுக்கு ரூ.1 இலட்சம் முதல், ரூ.5 இலட்சம் வரை நிவாரணமாக நம்முடைய தமிழக முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள் வழங்கியதையும், அவர்தம் குடும்பங்களுக்கு அரசு வேலைவாய்ப்புகள் வழங்கியும், பேருதவி புரிகின்ற நமது முதல்வர் அவர்களுக்கு நன்றியினை மீனவ சமுதாயத்தின் சார்பாகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் 20-1-2007 ஆம் நாளைய தமது சட்டப் பேரவை உரையில், விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தைப்போன்று, மீனவர்களுக்கும் புதிய திட்டங்களை உள்ளடக்கிய மீனவர் நல வாரியம் ஒன்றை அரசு நிறுவுவதற்காக அறிவிப்பு வெளியிட்டார்கள். மாண்புமிகு நிதியமைச்சர், 23-3-2007 ஆம் நாளைய நிதிநிலை அறிக்கை உரையிலும், நிலமற்ற விவசாயத் தொழிலாளர் மற்றும் உழவர்களுக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளும், மீனவர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக நலத் திட்டங்கள் வழங்கப்படும் எனத் தெரிவித்து, மீன் விற்பனை மற்றும் உலர் மீன்கள் விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபடும் மீனவப் பெண்களும் இத்திட்டத்தில் சேர்க்கப்படுவர் என்று அறிவித்துள்ளார்கள். இதற்காக அரசு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்து, அதற்கான மசோதா நடப்புக் கூட்டத்தொடரிலே தாக்கல் செய்யப்பட்டு, சட்டம் கொண்டுவரப்படும். இவ்வாரியம் நடப்பு ஆண்டிலே செயல்படத் தொடங்கி, மீனவர்/மீனவ மகளிர்களுக்கும் நலச் சலுகைகள் வழங்கப்படும்.

மீனவர்களின் துயர் துடைத்திடவும் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடவும், அரசாணை பல்வகை எண் 10, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள் 25-1-2007 மூலம், பிரதம மந்திரியின் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ.19.56 கோடியினைப் பெற்று, மீனவர்களின் கடனைத் தள்ளுபடி செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தள்ளுபடித் தொகை மூலதனக் கடன், அபராத வட்டி மற்றும் பங்கு மூலதனத்தில் 31-7-2005 அன்றைய



தேதிப்படி, தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்தின்மூலம், தமிழ்நாடு தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்திற்கு ஒருங்கிணைந்த கடல் மீன்வள அபிவிருத்தித் திட்டத்திற்கென பகுதி-1 மற்றும் பகுதி-2-க்கென வழங்கப்பட்டுள்ள தொகை வழி கணக்கிடப்பட்டு பயன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால், 147 மீனவக் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 5,635 மீனவர்கள் பயன்பெறுவர். மேலும், தமிழ்நாடு தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் தொடங்குவதற்கு முன்னர், தொடக்க மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் மீனவர்கள் பெற்ற கடன் நிலுவைத் தொகையான ரூ.9.07 கோடியினைத் தள்ளுபடி செய்ய மேற்கண்ட வழிமுறையில் இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும்.

மீனவர்களின் நலனில் அக்கறை கொண்டு, மீனவர்களின் மீன்பிடித்தல் தொழில் தவிர, ஏனைய கடல்சார் தொழில், கல்வி மற்றும் வேலைவாய்ப்பினை ஊக்குவிக்கும்பொருட்டு, தகுதிவாய்ந்த மீனவ இளைஞர்களுக்குக் கடல்சார் துறைகளிலே மேற்படிப்புக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சிறப்புப் பயிற்சி அளித்திட நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு திட்டமிட்டுள்ளது. கடல்சார் கல்வி, மீனவர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கப்பல்களில் கலநாயகன், பொறியாளர் போன்ற சிறப்புப் பணிகளுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் என்பதனால், கடல்சார் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் சிறப்புப் பயிற்சியளிக்க அரசு தீர்மானித்துள்ளது. அதனடிப்படையில், 100 மீனவ இளைஞர்களுக்கு, ஆண்டுக்குத் தலா ரூ.50 ஆயிரம் என்ற அளவில், ரூ.50 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் கடல்சார் கல்வி பட்டயம், பட்டம் மற்றும் இதர துறை பொறியாளர்களுக்கு குறுகிய கால கடல்சார் பொறியாளர் சிறப்புப் பயிற்சி, உள்நாட்டு நீர்ப் போக்குவரத்தில் வேலைவாய்ப்பு போன்றவற்றை உருவாக்குவதன்மூலம் கடல் மீனவ மற்றும் உள் நாட்டு மீனவ இளைஞர்களின் வாழ்க்கைத்தரம் மேம்பாடு அடையும்.

பிற்பகல் 1-45

நம்முடைய சிறப்புக்குரிய சென்னை மீன்பிடித் துறைமுகத்தினை நவீனப்படுத்தவும், கூடுதல் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், பேரிடர் நிவாரண நிதியிலிருந்து அரசாணை எண் 640, வருவாய்த் துறை, நாள் 25-9-2006 முதல் தமிழ்நாடு அரசு ரூ.19.57 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த நிதியிலிருந்து சென்னை மீன்பிடித் துறைமுகம் படகு நிறுத்தும் தளத்தைப் புனரமைப்புச் செய்தல், கீழலைத் தடுப்புச்

சுவரை விரிவுபடுத்துதல், படகு நிறுத்தும் தளத்தை விரிவுபடுத்துதல், படகு உராய்வுத் தடுப்பான் அமைத்தல் போன்றவற்றை நிறைவு செய்யும்.

தமிழ்நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ மக்களின் நலனுக்காக, ஜப்பான் நிதியுதவியுடன் இந்தியாவில் வறுமையினைக் குறைக்கும் திட்டத்திற்காக மானியமாக வழங்கும் திட்டத்தினை ஆசிய வளர்ச்சி வங்கி அங்கீகரித்துள்ளது. இந்த நிதியானது ரூ.16.704 கோடி அளவில் 4 ஆண்டுகளில் செயல்படுத்தக்கூடிய வாழ்வாதாரங்களை மீண்டும் செயல்படுத்துதல் மற்றும் மாற்றியமைத்தல் ஆகிய திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தினை, கடலோரக் கிராமங்களாக இருக்கக்கூடிய 591 மீனவ கிராமங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து மாதிரி கிராம மீன் பதப்படுத்தும் வளாகம்; வாழ்வாதாரங்களுக்கு மாற்றுத் திட்டங்கள்; சுற்றுச்சூழலுக்கு நட்பான முறையில் மீன்குஞ்சுகள் உற்பத்தி; திட்ட மேலாண்மைக் கண்காணிப்பு மற்றும் தணிக்கை ஆகியவற்றிற்காக ரூ.16.704 கோடி. இத்திட்டங்களில் மாதிரி கிராம மீன் பதப்படுத்தும் வளாகத் திட்டத்தினை ஜப்பான் மானிய நிதியுதவியுடன் செயல்படுத்திடவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒரு மீனவ கிராம அபிவிருத்திக்கு இத்திட்டத்தைச் செயல்படுத்திடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நீங்கள் அந்த அறிவிப்புகளை அவையில் படித்ததாகச் சொல்லி இங்கே பதிவு செய்துகொள்ளலாம் என்று சொல்லிவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, மற்றுமுள்ள புதிய அறிவிப்புகளை* காலத்தின் அருமை கருதி இந்த அவையிலே நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல கோரிக்கைகளை வெட்டுத் தீர்மானங்களாகக் கொடுத்திருக்கின்றார்கள். மானியக் கோரிக்கையின்மீது பேசிய உறுப்பினர்களும் நல்ல பல கருத்துகளை வழங்கியிருக்கின்றார்கள். அவர்களுக்கான நல்ல திட்டங்களெல்லாம் இந்தப் புதிய அறிவிப்பிலே இருக்கின்றன என்பதனை இந்த வேளையிலே தெரிவித்து, மீன்வளத் துறை மானியக் கோரிக்கையின்மீது சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் பல கோரிக்கைகளை வைத்தார்கள்.

* 359 முதல் 366 வரையிலான பக்கங்களில் இணைப்பு-V ஆக அச்சிடப்பட்டுள்ளது.



முடிந்தவரை அவர்களின் கோரிக்கைகளுக்கு நான் பதிலளித்துள்ளேன். இங்கே 194 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் படித்து, முடிந்தவரை இம்மாமன்றத்தில் பதில் சொல்லியுள்ளேன். மற்ற உறுப்பினர்களின் கருத்துகளையும் என் மனதில் நினைவில் வைத்துக்கொண்டு, 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்கின்ற அடிப்படையில் ஆட்சி நடத்துகின்ற நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) மீனவ மக்களின் அனைத்துக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என்பதனை இந்த மாமன்றத்திலே தெரிவித்து, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையில் அரசு கோரியுள்ள தொகையை வழங்க அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பொன்விழா நாயகரே; அலை முழங்கும் கடலே; தமிழகத்தை ஆளும் பொறுப்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும், தமிழர்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் தத்துவத்தின் தலைவரே; விலை மதிப்பில்லா வைரமே; விவேகத்தின் விளை நிலமே; தமிழர்களை கரையேற்றம் செய்கின்ற கப்பலே; தமிழ்ச் சமுதாயம் புதுவடிவம் பெற்று மறுமலர்ச்சி காண்பதற்கு அயராது உழைத்து வரும் சமூக நீதிக் காவலரே; தமிழகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், சிறுபான்மையினரின் பாதுகாவலரே, மகளிர் வாழ்வில் ஏற்றம் கண்டவரே, தமிழக முதல்வரே, உமக்கு என் பணிவான வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1-50*

சங்கடங்களைச் சந்திக்காதவன் சரித்திரம் படைத்தவனாக வளர்வதில்லை. மிசா காலத்தில் ஆரம்பித்து சங்கடங்களைச் சந்தித்து சரித்திரம் படைத்துள்ள எங்களின் தளபதியார்-பெயரிலே கம்பீரம், செயலிலே தீரம், உள்ளாட்சித் துறையின் மகுடம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு அவ்வப்போது நல் ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் நல்கிவரும் மாண்புமிகு நிதி அமைச்சர்,

இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள நான், இரண்டாம் முறையாக மானியக் கோரிக்கை எண் 6, கால்நடை பராமரிப்பு சார்பான என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.

**இத்துறை**யானது கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ்நாடு **கால்நடை** அபிவிருத்தி முகமை, தமிழ்நாடு கால்நடை மருத்துவ **அறிவியல்** பல்கலைக்கழகம் ஆகிய மூன்று பிரிவுகளைக் **கொண்ட**தாகும். இப்பிரிவுகள் ஒன்றுக்கொன்று இணைந்து கால்நடை **உற்பத்தி** பெருக்கம் மற்றும் சிகிச்சைப் பணிகளை சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகின்றன.

கிராமப்புறங்களில் உள்ள பெரும்பாலான நிலமற்ற சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சுயவேலைவாய்ப்பு அளிப்பதுடன் துணை வருவாயை அளிப்பதிலும், மாநிலப் பொருளாதாரத்திற்கும் கால்நடைகளின் பங்கு இன்றியமையாதது. மொத்த மாநில உள்நாட்டுப் பிரிவுக்கு 3 சதவிகிதத்தையும், வேளாண்மை மற்றும் சார்புத் தொழில்களுக்கு 28 சதவிகிதத்தையும், கால்நடைப் பிரிவு பங்காக அளித்துள்ளது. தமிழ்நாடு, இந்தியாவின் பால் உற்பத்தியில் 5 சதவிகிதத்தையும், முட்டை உற்பத்தியில் 14 சதவிகிதத்தையும் பங்களிப்பாகக் கொண்டு இந்திய அளவில் பால் உற்பத்தியில் 8-வது இடத்திலும், முட்டை உற்பத்தியில் 2-வது இடத்திலும் உள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தம் 249.41 இலட்சம் கால்நடைகள் மற்றும் 865.91 இலட்சம் கோழிகள் உள்ளதாகக் கணக்கெடுப்பு கூறுகிறது. கால்நடைகள் பற்றிய தற்போதைய சரியான புள்ளிவிவரம் அறிய மத்திய அரசு உதவியுடன் 18-வது கால்நடை கணக்கெடுப்பு இவ்வாண்டு நடத்தப்பட உள்ளது. இதில் வயது வாரியாக, இன வாரியாக மற்றும் பிரிவு வாரியாக விவரங்கள் சேகரிக்கப்படும். இப்புள்ளிவிவரங்கள் எதிர்கால ஆராய்ச்சிக்கும், எதிர்காலத் திட்டங்களுக்கும் பெரும் உதவியாக இருக்கும்.

வரும் கல்வி ஆண்டு முதல் சத்துணவுத் திட்டத்தில் வாரத்தில் மூன்று முட்டையும், குழந்தைகள் மையத்தில் வாரம் ஒரு முட்டையும் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளதன்மூலம் கோழி வளர்ப்புத் தொழில் மேலும் ஊக்குவிக்கப்பட்டுள்ளது.



*2006-2007*-ல் கால்நடை பராமரிப்புத் துறை நிர்வாகத்தை மேம்படுத்திட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவந்துள்ளது. கிட்டத்தட்ட தட்டச்சர்கள், இளநிலை உதவியாளர்கள், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் உள்ளிட்ட 172 நபர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அதில் 62 நபர்கள் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வரசு பதவியேற்ற பின்பு, உதவி இயக்குநர், துணை இயக்குநர், இணை இயக்குநர், ஆராய்ச்சி அலுவலர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள், அமைச்சுப் பணியாளர்கள் அனைவருக்கும் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. அதுபோல, துறை அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்திட நாட்டின் பல்வேறு நிலையங்களில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

கால்நடை பண்ணைகள் மற்றும் துறையின் பல்வேறு நிலைகளில் தினக் கூலிப் பணியாளர்களாகப் பத்தாண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்த 68 பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு காலமுறை ஊதியத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளார்கள்.

கால்நடை பாதுகாப்புத் திட்டம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் 18-1-2000 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டம் தொடங்கப்பட்டபோது சிறந்த கால்நடைகளுக்கான பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. ஆனால், கடந்த ஆட்சியில் அது கைவிடப்பட்டது. இப்பொழுது விவசாயிகளை ஊக்கப்படுத்துவதற்காக சிறந்த கன்றுக்கு, முகாம் ஒன்றுக்கு 400 ரூபாய் வீதம் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

நோய்த் தடுப்பு மற்றும் கடுங்கண்காணிப்பை வலுப்படுத்துவதற்காக கரூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம் மற்றும் விருதுநகரில் நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டு தற்சமயம் செயல்பட்டு வருகின்றன.

கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியினால் நீலநாக்கு நோய் தடுப்பூசி கண்டறியப்பட்டு முதற்கட்டமாக 8,000 டோஸ்கள் தயாரிக்கப்பட்டு கள சோதனைக்காக திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் போடப்பட்டுள்ளன. சோதனை முடிவுக்குப்பின் இத்தடுப்பூசி முழு வீச்சில் தயாரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஆடு வளர்ப்புத் தொழிலுக்குப் பேருதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டம் மாநிலத்தில் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து 63 உப வடிநிலங்களில் கால்நடை உற்பத்தித் திறனை அதிகரிக்க 6 ஆண்டு கால அளவில் செயல்படுத்தப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலம் மாட்டினம் மற்றும் எருமையினங்களின் எண்ணிக்கை மற்றும் பால் உற்பத்தியைப் பெருக்கி ,தனி நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 250 கிராம் பால் கிடைக்கச் செய்யும் பிரதானக் குறிக்கோளோடு செயல்பட்டு வருகிறது. அனைத்து இனப் பெருக்க வயதிலுள்ள பசு மற்றும் எருமைகளை இனப் பெருக்கத் திட்டத்தின்கீழ் கொண்டு வருதல், செயற்கை முறை கருவூட்டல் செய்யப்படும் பசு மற்றும் எருமைகளின் எண்ணிக்கையை முறையே 7 சதவிகிதம் மற்றும் 9 சதவிகிதம் என்ற அளவில் உயர்த்துவது இம்முகமையின் குறிகோள்களாகும்.

*பிற்பகல் 1-55*

கால்நடை காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 2006-2007 ஆம் ஆண்டு 90,072 கால்நடைகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், மாண்புமிகு முதலமைச்சர், முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களால் 1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம், இந்தியாவிலேயே மட்டுமல்ல, ஆசியாவிலேயே கால்நடை மருத்துவத்திற்கான முதல் பல்கலைக்கழகமாகும். இப்பல்கலைக்கழகம், பல்வேறு ஆராய்ச்சியின்மூலம், மீன் வளர்ச்சி, கால்நடை பற்றிய ஆராய்ச்சிகளின்மூலம் புதிய கண்டுபிடிப்புகளை விரிவாக்கக் கல்விமூலம் விவசாயிகளுக்குப் பரப்புதல், சிறந்த கால்நடை மருத்துவர்களை உருவாக்குதல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தில் உள்ள காலிப் பணியிடங்களில், பின்னடைவுப் பணியிடங்களையும் நிரப்ப இவ்வரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இப்பல்கலைக்கழகத்தின்மூலம் கிட்டத்தட்ட 1,266 உள்ளிருப்பு மற்றும் வெளிப்புறப் பயிற்சிகள்வாயிலாகப் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 38,758 ஆகும். கால்நடை பண்ணையாளர்களுக்கென 537 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.



மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளுக்கு மட்டும் ஒருசில கருத்துகளைக் கூறி நான் முடிக்கலாம் என்று எண்ணுகிறேன். அ.தி.மு.க. உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள், மருத்துவக் கட்டடங்கள் 317 கட்டினோம் என்று கூறினார்கள். வெறும் கட்டடங்கள் மட்டும் கட்டினால், மருத்துவ சேவை விவசாயிகளுக்குக் கிடைக்காது. பணி நியமனத் தடைச் சட்டம் இருந்ததன்மூலம், எந்தவொரு மருத்துவமனையிலும் அலுவலர்கள் இல்லாத ஒரு நிலையிருந்தது. இப்பொழுது 250 மருத்துவர்கள் பணியமர்த்தப்பட உள்ளார்கள். அதிலும், டிசம்பர் மாதமே order வந்துவிட்டது என்று சொன்னீர்கள். உண்மையிலேயே இப்பொழுதுதான், எங்களுக்கு அந்த பட்டியல், T.N.P.S.C. மூலம் தரப்பட்டுள்ளது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல, முர்ரா, தோடா போன்ற எருமையினங்களைப் பாதுகாக்கவும், இராஜபாளையம், கோம்பை போன்ற நாயினங்களைப் பாதுகாக்கவும், காங்கேயம், உம்பளாச்சேரி போன்ற மரபின மாட்டினங்களைப் பாதுகாக்கவும் இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல, உறைவிந்து உற்பத்தியைப் பொறுத்தவரைக்கும், எங்குமே கிடைக்கவில்லை என்று சொன்னீர்கள். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு, உறைவிந்துக் குச்சிகள் நம்முடைய துறையிலே அதிக அளவிலே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல, பல உறுப்பினர்கள் கறவை மாட்டுக் கடன்கள் பற்றிக் கூறினார்கள். கறவை மாட்டுக் கடன்களைப் பொறுத்தவரைக்கும், இந்தத் துறையின்மூலம் வழங்கப்படவில்லை. உள்ளாட்சித் துறையின்மூலம் சுய உதவிக் குழுக்களுக்கும், அதுபோல, கூட்டுறவுத் துறையின்மூலமும் கறவை மாட்டுக் கடன்கள் வழங்கப்படுகின்றன. அதுபோல, ஜமுனாபாரி ஆடு வளர்ப்பை மேம்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதையும் இந்த அரசு கவனத்தில் கொள்ளும் என்று கூறிக்கொள்கிறேன். அதுபோல, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் கோழி நோய் ஆய்வுக்கூடக் கட்டடம் கட்டப்படவில்லை என்று உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள் கூறினார்கள். மேற்படி கட்டடம் கட்ட, பொதுப் பணித் துறைக்கு முதற்கட்டமாக 19 இலட்சம் ரூபாய் இத்துறையிலிருந்து நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 5-2-2007 அன்று ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல, பணியாளர் இல்லாத குறையையெல்லாம் பல உறுப்பினர்கள் கூறினார்கள். புதிய அறிவிப்பில் உள்ள இரண்டு கருத்துகளை மட்டும் கூற விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளை ஏற்று, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், தலைவர் கலைஞர் அவர்கள், 40 கால்நடை மருந்தகங்களைப் புதிதாகத் தொடங்கிட அனுமதியளித்துள்ளார்கள் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, 1997-ல் நம்முடைய முதல்வர் அவர்களால் 2,166 பார்வை மையங்கள் திறக்கப்பட்டன. அவை 2005 ஆம் ஆண்டு மூடப்பட்டன. அவற்றில் 55 பார்வை மையங்கள் மட்டும், உட்கட்டமைப்பு வசதியுடன் உள்ள பார்வை மையங்கள் இந்த ஆண்டு செயல்படத் தொடங்கும் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல், 425 கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சி, இந்த ஆண்டு தொடங்கப்படவுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல, வேலூரில் உள்ள முகுந்தராயபுரம் ஆட்டுப்பண்ணை, 2005 ஆம் ஆண்டு கடந்த ஆட்சியாளர்களால் மூடப்பட்டது. அது மீண்டும் செயல்படத் தொடங்கும் என்பதைக் கூறிக்கொண்டு, இங்கே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள புதிய அறிவிப்புகள்* புத்தகத்தில் உள்ளவற்றை நான் படித்ததாகக் கருதி அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

"இருக்கும் வரை தமிழுக்கு உழைப்போம்;
என் தலைவர் கலைஞரெனும் இறுமாப்பில் திளைப்போம்
துன்பமினி எதுவரினும் துணிந்து அதை ஏற்போம்;
என்றுமினி தமிழர்களின் ஏற்றத்திற்கு உழைப்போம்"

என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் அரிய கருத்துகளை எடுத்து வைத்துள்ளீர்கள். உங்களுடைய மேலான கருத்துகளையும், நல்லாலோசனைகளையும் கவனத்தில் கொண்டு, இத்துறை மென்மேலும் சிறப்பான முறையில் செயல்பட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமைகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

* 367 முதல் 371 வரையிலான பக்கங்களில் இணைப்பு-VI-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 6- கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.219,12,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,25,18,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பிற்பகல் 2-00

## (ஆ) கோரிக்கை எண் 7 – மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7— மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.96,04,54,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.14,85,56,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## (இ) கோரிக்கை எண் 8 – பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8-பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.18,54,84,000/-, மூலதனக் கணக்கில் ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.28,73,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

# 8. அறிவிப்பு

## 14-5-2007 அன்று பேரவைக் கூட்டம் நடைபெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவிற்கிணங்க, 14-5-2007 அன்று பேரவைக் கூட்டம் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-4-2007) சனிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

55. (i) கோயம்பேடு அங்காடிக் குழுவிற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர்-செயலரை தலைவராகவும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தலைமை நிர்வாக அலுவலரை துணைத் தலைவராகவும் நியமித்தும்; (ii) அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள மூன்று மொத்த விற்பனை வணிகர்களை கோயம்பேடு அங்காடிக் குழுவிற்கு உறுப்பினர்களாக நியமித்தும்; (iii) வணிக சங்கங்களின் உறுப்பினர்களில் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள மூன்று உறுப்பினர்களைக் கோயம்பேடு அங்காடிக் குழுவிற்கு உறுப்பினர்களாக நியமித்தும்; (iv) அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள இரண்டு சென்னை மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்களைக் கோயம்பேடு அங்காடிக் குழுவிற்கு அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாக நியமித்தும் மற்றும் (v) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதுநிலை உடைமை அலுவலர் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின்

[2007 ஏப்ரல் 27

மேற்பார்வைப் பொறியாளர், வட்டம் 1 கட்டுமானப் பிரிவு ஆகியோரை கோயம்பேடு அங்காடி வளாகத்தின் கோயம்பேடு அங்காடிக் குழுவிற்கு அலுவல் உறுப்பினர்களாக நியமித்தது குறித்தும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [UD-III (1)] துறையின் 12-4-2007 ஆம் நாளிட்ட 136 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு குறித்துரைக்கப்பட்ட வணிகப்பொருட்கள் சந்தைகள் (அமைவிடத்தை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1996) 67 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

56. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணிகள் நடைமுறை நூல், தொகுதி-1] திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்) துறையின் 4-10-2006 ஆம் நாளிட்ட 183 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

57. 2005-2006 ஆம் ஆண்டிற்கான நாகப்பட்டினம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

58. 2005-2006 ஆம் ஆண்டிற்கான கோயம்புத்தூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

59. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தேனி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

60. 2005-2006 ஆம் ஆண்டிற்கான மதுரை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

61. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்



2007 ஏப்ரல் 27]

(தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

62. 2005-2006 ஆம் ஆண்டிற்கான திருவண்ணாமலை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

63. 2005-2006 ஆம் ஆண்டிற்கான கடலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

64. 2005-2006 ஆம் ஆண்டிற்கான பெரம்பலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

147. மானியக் கோரிக்கை எண் 6-கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

148. கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

149. மானியக் கோரிக்கை எண் 7-மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

150. மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

151. மானியக் கோரிக்கை எண் 8-பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

[2007 ஏப்ரல் 27

152. காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007-2008. (தமிழ்)

153. மனுக்கள் குழுவின் ஏழாவது அறிக்கை. (2006-2007)

154. மனுக்கள் குழுவின் எட்டாவது அறிக்கை. (2006-2007)

155. மனுக்கள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (2006-2007)

156. மனுக்கள் குழுவின் பத்தாவது அறிக்கை. (2006-2007)

157. மனுக்கள் குழுவின் பதினோறாவது அறிக்கை. (2006-2007)

158. மனுக்கள் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை. (2006-2007)



2007 ஏப்ரல் 27]

## இணைப்பு-I

*(118 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 6-கால்நடை பராமரிப்புத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

### முன்னுரை

கால்நடை பராமரிப்பு, வேளாண்மை மற்றும் சார்புத் தொழில்கள் பண்டைக் காலம் தொட்டே பெரும்பாலரன கிராமப்புற மக்களுக்கு முக்கிய வாழ்க்கை ஆதாரமாக விளங்கி வந்துள்ளன. கிராமப்புறங்களில் உள்ள பெரும்பாலான நிலமற்ற, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பு குறிப்பாக, சுய வேலைவாய்ப்பு அளிப்பதுடன், மதிப்புமிக்க துணை வருவாயை அளிக்கின்றன. பெரும்பாலான ஏழை மக்களுக்கு, கால்நடைகள் அதிக பொருளாதார நிலைத் தன்மையை அளிக்கின்றன. கால்நடைகள் சிறிய இருப்புகளில் பண தாங்கிருப்பாகவும், பெரிய இருப்புகளில் முதலீடு கையிருப்பாகவும் உள்ளன. கால்நடைகள், தரமான புரதச்சத்தினை பால், முட்டை, இறைச்சி மற்றும் ஊட்டமிக்க பொருட்கள் ஆகிய வடிவில் மக்களுக்கு அளிக்கின்றன. கால்நடைகள் வேளாண்மைக்கு இழுவைத் திறனையும், இயற்கை உரத்தையும் அளிப்பதுடன், பல்வேறு தொழில்களுக்கு தோல், இரத்தம், எலும்பு, கால் குளம்பு, கொம்பு போன்ற மூலப் பொருட்களை அளித்து வருகின்றன.

2006-2007-ல், மாநிலத்தின் மதிக்கத்தக்க மொத்த விளைவில் கால்நடைகள் ரூ.965.43 கோடியை அளித்துள்ளது. மொத்த மாநில உள்நாட்டுப் பிரிவுக்கு 3 சதவிகிதத்தையும், வேளாண்மை மற்றும் சார்புத் தொழில்களுக்கு 28 சதவிகிதத்தையும் கால்நடை பிரிவு பங்காக அளித்துள்ளது. இக்குறிப்பிட்ட வளர்ச்சிக்கு பால் பண்ணை மற்றும் கோழிப் பிரிவுகள் முக்கியப் பங்கு வகித்தன. 2005-2006-ல், மாநிலத்தின் பால் மற்றும் முட்டை உற்பத்தி முறையே 54.74 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், 6,223 மில்லியனாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதைப்போன்று நபருக்கு ஒரு நாளைக்கு கிடைக்கும் பாலின் அளவு 234 கிராமாகவும், ஓர் ஆண்டுக்கு கிடைக்கும் முட்டைகளின் எண்ணிக்கை 97 ஆகவும் உள்ளது. இம்மாநிலம், நாட்டின் பால் உற்பத்தியில் 5 சதவீதத்தையும், முட்டை உற்பத்தியில் 14 சதவீதத்தையும் பங்களிப்பாகக்கொண்டு பால் உற்பத்தியில் 8-வது இடத்திலும், முட்டை உற்பத்தியில் 2-வது இடத்திலும் உள்ளது.

கால்நடை பராமரிப்பு மேலும் வளர்ச்சி அடைவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது. நிரந்தர வேலைவாய்ப்பினைத் தங்களின் இருப்பிடங்களிலேயே அளித்து, கிராமப்புற மக்கள் நகர்ப்புறங்களுக்கு குடிபெயர்வதைத் தடுப்பதில் கால்நடைப் பிரிவு முக்கியப் பங்காற்ற உதவுவதால், இதன் உள்ளாற்றலை வெளிப்படுத்த வேண்டும். கால்நடை வளர்ப்புக்கு ஆற்றல் மற்றும் ஆதாரங்கள் குறைவாகத் தேவைப்படுவதாலும், உள்ளீடுகள் உள்ளூரிலேயே கிடைப்பதாலும், விற்பனை செய்வது எளிது என்பதாலும், இதை கிராமப்புற மக்கள் எளிதில் கடைபிடிக்க முடியும். ஆகையால், பொருளில்லா ஏழைகளை, வருவாய் மற்றும் பொருள் உள்ள நபர்களாக மாற்றி, வறுமை ஒழிப்புக்குப் பெரும் பங்காற்ற கால்நடை வளர்ப்பு உதவும். இதனால் உணவு பாதுகாப்பு, மனித பாதுகாப்பு, பெண்கள் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு அதிகாரம் வழங்க உதவுவதுடன், கிராமியப் பொருளாதாரத்தைத் தூண்டிவிடவும், புத்துயிரூட்டவும், மாநிலத்தில் முழுமையான சமூகப் பொருளாதார மாற்றம் ஏற்படுத்திட குறிப்பிடத்தக்க வகையில் அமையும்.

## பொது நிர்வாகம்

கால்நடை பராமரிப்புத் துறையானது கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையர் மற்றும் இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. ஆணையகத்தில், 3 கூடுதல் இயக்குநர்கள் மற்றும் ஓர் இணை இயக்குநர் ஆகியோர் வெவ்வேறு துறைப் பணிகளில் ஆணையர் அவர்களுக்கு உதவி புரிந்து வருகின்றனர். மாநிலம் 24 மண்டலங்களாகவும், 65 நிர்வாகக் கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தத்தமது ஆளுகையின்கீழ் உள்ள பகுதிகளில் துறை நடவடிக்கைகளுக்கு முழுப் பொறுப்பு ஆவார்கள்.

கூடுதல் இயக்குநரின் தகுதியில் உள்ள ஓர் இயக்குநரின் தலைமையின்கீழ் இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், கால்நடை மற்றும் கோழியினங்களுக்கு பலவகை தடுப்பு மருந்துகள் மற்றும் நோய் கண்டறியும் சாதனங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. நோய் பற்றி ஆய்வு செய்யவும், அதனை உறுதிப்படுத்துவதுடன் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகிறது. இத்தொடர்பு ஆய்வுக் கூடம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நோய் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைப் பணிகளில்





ஈடுபட்டுள்ள உதவி இயக்குநர் தலைமையில் இயங்கிவரும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளின் பணியை ஒருங்கிணைத்து வருகிறது.

இத்துறை 8 கால்நடைப் பண்ணைகள், 3 ஆட்டுப் பண்ணைகள், 20 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்திப் பிரிவுகள் மற்றும் 2 கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்களை நிர்வகித்து வருகிறது.

2006-2007-ல், துறை நிர்வாகத்தை மேம்படுத்திட கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

- 30 இளநிலை உதவியாளர்கள், 41 தட்டச்சர்கள், 4 பதிவுறை எழுத்தர்கள், 93 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள், 1 அலுவலக உதவியாளர் மற்றும் 3 அடிப்படைப் பணியாளர்கள் ஆக மொத்தம் 172 பணியாளர்கள் புதியதாக பணியமர்த்தப்பட்டனர். இதில் 62 நபர்கள் கருணை அடிப்படையில் நியமிக்கப்பட்டனர். 33 நபர்கள் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் பணியிழந்தவர்கள் ஆவர்.
- 80 கால்நடை உதவி மருத்துவர்கள் உதவி இயக்குநர்களாக, 2 உதவி ஆராய்ச்சி அலுவலர்கள் ஆராய்ச்சி அலுவலர்களாக, 8 உதவி இயக்குநர்கள் துணை இயக்குநர்களாக, 24 துணை இயக்குநர்கள் இணை இயக்குநர்களாக, 3 இணை இயக்குநர்கள் கூடுதல் இயக்குநர்களாக, ஆக மொத்தம் 117 தொழில்நுட்ப அலுவலர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. மேலும் 201 சார்புத் தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் 120 அமைச்சுப் பணியாளர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது.
- 349 துறை அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்திட, நாட்டின் பல்வேறு நிலையங்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.
- இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மண்டல இணை இயக்குநர்களுக்கு ரூ.6.62 இலட்சம் செலவில் இலகு ரக வாகனங்கள் புதிதாக வழங்கப்பட்டுள்ளன.
- துறையிலுள்ள 130 அலுவலர்களுக்கு செல்பேசி ரூ.5.40 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

## தீவனம் மற்றும் பசுந்தீவனம்

கால்நடைகளின் உற்பத்தித் திறனை முழுமையாக வெளிப்படுத்திட சமச்சீரான தீவனம் அளிப்பது அவசியமாகும். மாநிலத்தில் பசுந்தீவன

உற்பத்தி இன்றும் வேளாண்மை உற்பத்திக்குத் துணையானதாகவே கருதப்படுகிறது. ஊட்டச்சத்து குறைவாக உள்ள அறுவடைக் கழிவுகளான சோளம் மற்றும் வைக்கோல் கால்நடைகளுக்கு பெரும்பான்மை உணவாக அமைந்துள்ளன. சிறந்த இனப்பெருக்கம் மற்றும் மேலாண்மையின் பயன்கள், கால்நடைகளுக்கு சரிவிகித தீவனம் வழங்காமையால் பாதிக்கப்படும். சமச்சீரான தீவனம் மட்டுமே, பால் உற்பத்தியை 30 சதவீதம் அதிகரிக்கச் செய்யும்.

| | உலர் தீவனம் (இலட்சம் மெட்ரிக் டன்) | பசுந்தீவனம் (இலட்சம் மெட்ரிக் டன்) |
|---|---|---|
| தேவை | 166.80 | 500.52 |
| கிடைக்கும் அளவு | 193.00 | 290.00 |
| பற்றாக்குறை அளவு | சாதாரண பருவ காலத்தில் போதுமானதாக உள்ளது | 210.52 |
| பற்றாக்குறை சதவீதம் | இல்லை | 42.06 |

பசுந்தீவனம் குறிப்பிட்ட பருவ காலங்களில் குறிப்பிட்ட இடங்களில் மிகக் குறைந்த அளவில் மட்டுமே கிடைக்கிறது. தற்போது உள்ள மேய்ச்சல் நிலங்களில் அதிக அளவில் கால்நடைகள் மேய்ச்சலுக்கு விடப்படுவதால், அவற்றின் தரம் மற்றும் வளம் குன்றியுள்ளன. இத்துடன் பெருகிவரும் நகரமயமாக்கலில் மேய்ச்சல் நிலங்கள் குறைந்து கொண்டே வருகின்றன. மேலும் இருக்கும் நிலங்களில், தற்போது தானியம், எண்ணெய் மற்றும் பருப்புவகை பயிர்கள் சாகுபடி செய்யும் பரப்பளவு அதிகரிப்பாலும், வேளாண்மைக் கழிவுகள் பல்வேறு பயன்பாட்டுக்கு பயன்படுத்தப்படுவதாலும், தீவனத் தேவை மற்றும் கிடைக்கும் அளவிற்கான இடைவெளி அதிகரித்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் மேய்ச்சல் நிலங்கள் 1.24 இலட்சம் ஹெக்டேரிலிருந்து 1.13 இலட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. இது 8.66 சதவீதம் குறைவாகும். இதனால் மாநிலத்தின் பசுந்தீவனம் கிடைக்கும் அளவு பாதிக்கப்பட்டுள்ளது.





பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க, கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

- மேய்ச்சல் நிலங்களை எந்தவித வேற்றுமையுமின்றி வேறு வகையான நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதால் அவை தரங்குறைந்து போவதுடன், ஒன்றுமில்லாமற் போவதைத் தவிர்க்கும் பொருட்டு, மேய்ச்சல் நிலத்தை வேறு எந்த வகையான பயன்பாட்டிற்கும் மாற்றக்கூடாது என்றும், அவ்வாறு மாற்ற வேண்டுமெனில், அதே மாவட்டத்தில் மாற்றப்படும் மேய்ச்சல் நிலத்திற்குச் சமமான பரப்பளவுள்ள வேறு நிலத்தை மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்த ஒதுக்கப்பட்டாலன்றி மாற்றக்கூடாது என்ற நிபந்தனையை அரசு விதித்துள்ளது.
- தீவன விதைகள் அடங்கிய 20,015 சிறு பைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.
- செட்டிநாடு, மாவட்ட கால்நடைப் பண்ணையில் 50 ஏக்கர் நிலம் ரூ.19.45 இலட்சம் செலவில் முல்லை மேய்ச்சல் நிலமாகக் கொண்டுவரப்படுகிறது. இத்துடன், ஓசூர் மற்றும் செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணைகளில், பசுந்தீவனத்தை சேமித்து வைக்க தலா 5 சைலோ உரக்குழிகள் ரூ.20.55 இலட்சம் செலவில் அமைக்கப்படுகின்றன.
- மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.75.88 இலட்சம் செலவில் 1,474 ஏக்கர் நிலம் பசுந்தீவன உற்பத்திக்குக் கொண்டுவரப் படுகிறது.
- கடலோர மாவட்டங்களில் தீவன பாதுகாப்பை அதிகரிக்க, உலக வங்கி நிதியுதவியுடன்கூடிய அவசர சுனாமி மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ், 2 தீவன வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேற்கண்ட நடவடிக்கைகளினால், மாநிலத்தில் 2006-2007-ல் உலர் தீவனம் மற்றும் பசுந்தீவனம் கிடைக்கும் அளவு முறையே 16.90 இலட்சம் மெட்ரிக் டன் மற்றும் 26.50 இலட்சம் மெட்ரிக் டன் அதிகரித்துள்ளது.

உலக வங்கி உதவியுடன்கூடிய நீர்வள நிலவள திட்டத்தின்கீழ், 2007-2008-ல் பசுந்தீவன சாகுபடியில் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு பசுந்தீவன உள்ளீடுகளான கோ-3 கரணைகள், தீவன மக்காச்சோளம், ஸ்டைலோ மற்றும் கொழுக்கட்டை விதைகள் வழங்கி 300 ஹெக்டேர் தனியார் நிலம் பசுந்தீவன உற்பத்திக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 27

## கால்நடைகள் மற்றும் கோழிகளின் எண்ணிக்கை

மாநிலத்திலுள்ள மொத்த கால்நடைகளின் எண்ணிக்கை 249.41 இலட்சமாகும். இது நாட்டிலுள்ள மொத்த கால்நடைகளில் 5.07 சதவீதமாகும். நாட்டிலுள்ள மொத்த கால்நடைகளில், மாநிலத்தில் 4.94 சதவீதம் பசுவினம், 1.69 சதவீதம் எருமையினம், 9.10 சதவீதம் செம்மறியாடுகள் மற்றும் 6.58 சதவீதம் வெள்ளாடுகள் உள்ளன. 17-வது கால்நடை மற்றும் கோழியின கணக்கெடுப்பின்படி, மாநிலத்தில் கால்நடைகள் மற்றும் கோழிகளின் இன வாரியான எண்ணிக்கை, மொத்த கால்நடைகள் மற்றும் கோழியினங்களின் எண்ணிக்கையில் விழுக்காடு மற்றும் அடர்த்தி விவரம் கீழ்வருமாறு:

| இனம் | எண்ணிக்கை (இலட்சத்தில்) | மொத்த கால்நடைகளின் சதவீதம் | அடர்த்தி (ஒரு சதுர கி.மீ-க்கு) |
|---|---|---|---|
| பசுவினம் | 91.41 | 36.65 | 70 |
| எருமையினம் | 16.58 | 6.65 | 13 |
| செம்மறியாடுகள் | 55.93 | 22.42 | 43 |
| வெள்ளாடுகள் | 81.77 | 32.79 | 63 |
| பன்றிகள் | 3.21 | 1.29 | 2 |
| கழுதைகள், குதிரைகள், மட்டக் குதிரைகள் மற்றும் ஒட்டகங்கள் | 0.51 | 0.20 | - |
| மொத்த கால்நடைகள் | 249.41 | 100.00 | 191 |
| நாய்கள் | 27.17 | - | 21 |
| கோழியினம் | 865.91 | - | 666 |



2007 ஏப்ரல் 27]

### பிரிவுவாரியாக கால்நடை வளர்ப்போர்




மொத்த கால்நடைகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர் மற்றும் இதர பிரிவினர் முறையே 65.54 இலட்சம், 8.92 இலட்சம் மற்றும் 174.95 இலட்சம் கால்நடைகளைக் கொண்டுள்ளனர். இதேபோன்று தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர் மற்றும் இதர பிரிவினர் முறையே 345.40 இலட்சம், 7.23 இலட்சம் மற்றும் 513.28 இலட்சம் கோழிகளைக் கொண்டுள்ளனர்.

### பிரிவுவாரியாக கோழிகள் வளர்ப்போர்




கால்நடைகள் குறைந்த ஆண்டுகளே உயிர் வாழ்வதைக் கருத்தில் கொண்டு, கால்நடை கணக்கெடுப்பு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படுகிறது. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, 18-வது கால்நடை கணக்கெடுப்புப் பணி 15-10-2007-ஐ பார்வை நாளாகக்கொண்டு மேற்கொள்ளப்படும்.

[2007 ஏப்ரல் 27

## கால்நடைப் பண்ணைகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான அறிவியல் பூர்வமான இனப்பெருக்கம்மூலம் குறிப்பிட்ட இன கால்நடைகளை உற்பத்தி செய்யும் பொருட்டு கால்நடைப் பண்ணைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணைகள் செயல் விளக்கப் பண்ணைகளாகவும், தரமான கால்நடைகளை விவசாயிகளுக்கு வழங்குகின்ற ஆதாரமாகவும், பயிற்சி நிலையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தில் 11 கால்நடைப் பண்ணைகள் உள்ளன. அவற்றில் 3 ஆட்டுப்பண்ணைகளாகும். இத்துடன், கோழி இனப்பெருக்கம் மேற்கொள்ள தனியாக ஒரு பண்ணை உள்ளது. கால்நடைப் பண்ணைகள் அமைந்துள்ள இடங்கள் பின்வருமாறு:

| வ. எண் | பண்ணையின் பெயர் | இருப்பிடம் |
|---|---|---|
| 1 | அயலின கால்நடைப் பெருக்கப்பண்ணை | ஈச்சங்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை | ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 3 | மாவட்ட கால்நடைப் பண்ணை | அபிசேகப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் |
| 4 | மாவட்ட கால்நடைப் பண்ணை | உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் |
| 5 | மாவட்ட கால்நடைப் பண்ணை | புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம் |
| 6 | மாவட்ட கால்நடைப் பண்ணை | ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம் |
| 7 | மாவட்ட கால்நடைப் பண்ணை | செட்டிநாடு, சிவகங்கை மாவட்டம் |
| 8 | கால்நடைப் பண்ணை | கொருக்கை, திருவாரூர் மாவட்டம் |
| 9 | ஆட்டுப்பண்ணை | சின்னசேலம், விழுப்புரம் மாவட்டம் |
| 10 | ஆட்டுப்பண்ணை | முகுந்தராயபுரம், வேலூர் மாவட்டம் |
| 11 | ஆட்டுப்பண்ணை | சாத்தூர், விருதுநகர் மாவட்டம் |
| 12 | கோழிப்பண்ணை | காட்டுப்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம் |

பசு மற்றும் எருமையின அபிவிருத்திக்காக, அயலின கால்நடைப் பெருக்குப்பண்ணை, ஈச்சங்கோட்டை மற்றும் மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் முழுவதும் மற்றும் மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒசூரில் ஒரு பகுதியும் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைக்கு மாற்றப்பட்டுள்ளன.



2007 ஏப்ரல் 27]

## பசுவின மற்றும் எருமையின அபிவிருத்தி

17-வது கால்நடை கணக்கெடுப்பின்படி, இனவிருத்திக்கு உகந்த பசுக்கள் மற்றும் பெண் எருமைகள், முறையே 41.17 இலட்சம் மற்றும் 9.01 இலட்சமாகும். மொத்த இனவிருத்திக்கு உகந்த பசுக்களில் விழுப்புரம், சேலம், வேலூர், திருநெல்வேலி, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 35 சதவீதமும், மொத்த இனவிருத்திக்கு உகந்த பெண் எருமைகளில் ஈரோடு, நாமக்கல், சேலம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 44 சதவீதமும் காணப்படுகின்றன.

1994, 1997 மற்றும் 2004 கால்நடை கணக்கெடுப்பின்படி, இனவாரியாக இனவிருத்திக்கு உகந்த பெண் பசுவினம் மற்றும் எருமையினம் பின்வருமாறு:

| வ. எண் | இனம் | இனவிருத்திக்கு உகந்த பெண் மாட்டின எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 15–வது கால்நடை கணக்கெடுப்பு 1994 (இலட்சத்தில்) | 16–வது கால்நடை கணக்கெடுப்பு 1997 (இலட்சத்தில்) | 17–வது கால்நடை கணக்கெடுப்பு 2004 (இலட்சத்தில்) |
| 1 | **பசுவினம்** | | | |
| | அயலினம் | 0.17 | 0.16 | 0.23 |
| | கலப்பினம் | 8.05 | 9.91 | 25.66 |
| | உள்நாட்டு தூய்மை மரபுடையவை | 5.25 | 5.05 | 1.80 |
| | நாட்டினம் | 20.08 | 20.17 | 13.48 |
| | ***மொத்தம்*** | 33.55 | 35.29 | 41.17 |
| 2 | **எருமையினம்** | | | |
| | முர்ரா | 0.28 | 0.24 | 0.62 |
| | தரம் உயர்த்தப்பட்டவை | 2.32 | 2.75 | 2.27 |
| | நாட்டினம் | 11.93 | 10.90 | 6.12 |
| | ***மொத்தம்*** | 14.53 | 13.89 | 9.01 |
| 3 | **மாட்டினம்** | 48.08 | 49.18 | 50.18 |

[2007 ஏப்ரல் 27

கடந்த 10 ஆண்டுகளில், இனவிருத்திக்கு உகந்த பெண் கலப்பினப் பசுக்கள் கணிசமாக அதிகரித்துள்ளன. இதனால் பால் உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில், சராசரி நாள் ஒன்றுக்கு பால் உற்பத்தி கலப்பினப் பசுவினத்தில் 5.551 கிலோவிலிருந்து 6.272 கிலோவாகவும், எருமையினத்தில் 3.583 கிலோவிலிருந்து 4.161 கிலோவாகவும் அதிகரித்துள்ளது. இதே' கால கட்டத்தில் மாநிலத்தில் ஆண்டு பால் உற்பத்தி 39.76 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 54.74 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், தனி நபருக்கு ஒரு நாளைக்கு கிடைக்கும் பாலின் அளவு 182 கிராமிலிருந்து 234 கிராமாகவும் அதிகரித்துள்ளது.

நம் மாநிலத்தில் பசுவினம் மற்றும் எருமையினப் பெருக்கத்திற்கு கீழ்க்காணும் கொள்கை பின்பற்றப்படுகிறது:-

- ஜெர்சி மற்றும் ப்ரிசியன் போன்ற அயலின பொலிகாளைகளின் விந்தினைக்கொண்டு இனப்பெருக்கத்திற்குத் தகுதியுள்ள நாட்டினப் பசுக்களில் கலப்பினப் பெருக்கம் செய்தல்;
- முர்ரா இனப் பொலிகாளைகளின் விந்தினைக்கொண்டு நாட்டின எருமைகளை இனப்பெருக்கம் செய்தல்;
- கலப்பினப் பசுக்களை, கலப்பினப் பொலிகாளைகளின் விந்தினைக்கொண்டு இனப்பெருக்கம் செய்தல்;
- காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி ஆகிய உள்நாட்டு தூய்மை மரபுடைய இனங்களை, அவை வளர்க்கப்படும் பகுதிகளில் தேர்ந்தெடுத்த முறையில் இனப்பெருக்கம் செய்தல்.

மேற்காணும் இனப்பெருக்கக் கொள்கை 1982-ல் வடிவமைக்கப்பட்டதால், தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளைக் கருத்தில்கொண்டு, பசுவினம் மற்றும் எருமையினப் பெருக்கத்திற்கு புதிய கொள்கை வரையறுக்கப்படுகிறது.

## செயற்கை முறைக் கருவூட்டல்

செயற்கை முறைக் கருவூட்டல் மாட்டினங்களில் குறுகிய காலத்தில் சிறப்புமிக்க உயர்தர மரபு ஆதாரங்களை உருவாக்குகிறது. இதனைக் கருத்திற்கொண்டு, பசு மற்றும் எருமைகளின் பால் உற்பத்தித் திறனை மேம்படுத்திட, விவசாயிகள் அதிக இலாபம் ஈட்டிட மற்றும் மாநில பால் உற்பத்தியை அதிகரிக்க, உயரிய பால் உற்பத்தி மரபுகளையுடைய விந்தைக்கொண்டு மாநிலத்தில் செயல்படும் 3,218 செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களில் செயற்கை முறைக் கருவூட்டல் மேற்கொள்ளப்படுகிறது.



2007 ஏப்ரல் 27]

இத்துடன் செயற்கை முறைக் கருவூட்டல் மற்றும் சினைப்பிடிப்பு சதவிகிதத்தினை அதிகரிக்கவும், இனப்பெருக்க வசதிகளை விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே அளிக்கவும், இத்துறை தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை உதவியுடன் நிரந்தர செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களை, நிரந்தர மற்றும் நடமாடும் செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களாக மாற்றிட ஈடுபட்டுள்ளது. இச்சேவையைத் திறம்படச் செயல்படுத்த முடியாத இடங்களில், மேலும் வலுப்படுத்திட, பொது-தனியார் பங்களிப்பு ஊக்குவிக்கப்படும். இதற்காக உலக வங்கி உதவியுடன் கூடிய நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ், வேலையில்லா கால்நடை மருத்துவப் பட்டதாரிகளின் சேவைகளைக் கொண்டு, உப வடிநிலங்களில் கால்நடை மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும். 2006-2007-ல், 33.59 இலட்சம் செயற்கை முறைக் கருவூட்டல்கள் நிறைவேற்றப்பட்டன.

## உறைவிந்து உற்பத்தி

செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், மாநிலத்தில் 3 உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்படுகின்றன. உறைவிந்து நிலையங்களில் தரமான விந்தினை உற்பத்தி செய்திட, மத்திய அரசின் குறைந்தபட்ச தரக்கட்டுப்பாட்டு வழிகாட்டுதல்கள் கடுமையாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இம்மூன்று நிலையங்களும் சர்வதேசத் தரக்கட்டுப்பாட்டுக்கு இணையாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் மொத்தம் 116 இனவிருத்தி பொலிகாளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2006-2007-ல் 19.58 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள், இந்நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்டன. மேற்கண்ட உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## திரவ நைட்ரஜன் உற்பத்தி மற்றும் விநியோகம்

உறைவிந்துக் குச்சிகளை உறைய வைக்கவும், அவற்றை சேமித்து வைக்கவும், திரவ நைட்ரஜன் அத்தியாவசியமாகும். ஈச்சங்கோட்டை, திருநெல்வேலி, ஓசூர், உதகமண்டலம், சைதாப்பேட்டை மற்றும்

83-136—85

திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களில் உள்ள திரவ நைட்ரஜன் ஆலைகள் மூலம் திரவ நைட்ரஜன் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்துக் குச்சிகளைச் சேமித்து வைக்கவும், அவற்றை பல்வேறு கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களுக்கு செயற்கை முறைக் கருவூட்டல் பணியை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கவும், வேலூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், கடலூர், சிவகங்கை, சென்னை, திண்டுக்கல் மற்றும் சேலம் ஆகிய 12 இடங்களில் தலா ஓர் உறைவிந்து வங்கி செயல்பட்டு வருகின்றது. 2006-2007-ல் மேற்கூறிய ஆலைகளின் வாயிலாக 2.30 இலட்சம் லிட்டர் திரவ நைட்ரஜன் உற்பத்தி செய்யப்பட்டது. மீதி தேவையைத் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலமாக வாங்கி பூர்த்தி செய்யப்பட்டது.

## உள்நாட்டினங்களைப் பாதுகாத்தல்

தமிழ்நாட்டில் காங்கேயம், உம்பளாச்சேரி, பர்கூர், புலிக்குளம் மற்றும் ஆலம்பாடி போன்ற பசுவினம் மற்றும் தோடா எருமையின உள்நாட்டினங்கள் காணப்படுகின்றன.

மேற்கூறிய நாட்டினங்களின் வலிமை பின்வருமாறு:

- கடுமையான தட்ப வெப்ப நிலையில் உயிர்வாழ்வது.
- மிக குறைந்த தீவனத்தை உட்கொண்டு மிகுதியாக உற்பத்தித் திறனை அளிக்கவல்லது.
- அதிக உஷ்ண மண்டல அழுத்தத்தை தாங்கிகொள்வது.
- தரம் குறைந்த தீவனத்தை உட்கொண்டு, அதிக அளவில் உற்பத்திப் பொருட்களாக மாற்றும் திறன் கொண்டது.

இத்துறை தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையுடன் ஒருங்கிணைந்து, மேற்கண்ட உள்நாட்டினங்களை மேலும் அவற்றின் தரம் குறையாமல் பாதுகாத்து மேம்படுத்திட ஈடுபட்டுள்ளது. இத்துறை பண்ணைகளில் 238 காங்கேயம் மற்றும் 299 உம்பளாச்சேரி மாடுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2006-2007-ல், உள்நாட்டின விந்தினைக் கொண்டு 1.18 இலட்சம் செயற்கை முறைக் கருவூட்டல்கள் நிறைவேற்றப்பட்டன. 2007-2008-ல், உள்நாட்டின விந்தினைக்கொண்டு ஒரு இலட்சம் செயற்கை முறைக் கருவூட்டல்கள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.



## ஆடுகள் அபிவிருத்தி

கிராமப்புறங்களில் ஆடு வளர்ப்பு பாரம்பரிய பொருளாதார தொழிலாகும். இது சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்களுக்கு வருமானம் ஈட்டிட முதன்மைத் தொழிலாக உள்ளது. மேலும் இப்பிரிவினரின் பொருளாதார மற்றும் சத்துணவிற்கு முக்கியப் பங்காற்றி வருகிறது. ஆட்டிறைச்சி அதிகவிலை இருந்தாலும் அதன் தேவை அதிகரித்து கொண்டே வருவதைக் கருத்தில்கொண்டு, பெரும்பாலான கிராமவாசிகளுக்கு ஆடு வளர்ப்பு அதிக லாபம் ஈட்டித்தரும் தொழிலாக உள்ளது. இத்துடன் மனிதன் உண்பதற்கு இறைச்சி, தோல் தொழிற்சாலைக்கு தோல் அளிப்பதுடன், வயல்களுக்கு உரமிடுவதற்காக ஆடுகளை கிடையடைப்பதன் மூலமும் வருவாய் கிடைக்கிறது.

கடந்த இரண்டு கால்நடை கணக்கெடுப்பு காலங்களில், செம்மறியாடு மற்றும் வெள்ளாடு எண்ணிக்கை முறையே 6.35 சதவீதம் மற்றும் 27.45 சதவீதம் அதிகரித்துள்ளது. மொத்த செம்மறியாடு எண்ணிக்கையில் ஈரோடு, திருநெல்வேலி, சேலம், விருதுநகர், வேலூர் மற்றும் தருமபுரி மாவட்டங்கள் 40 சதவீதத்தினைக் கொண்டுள்ளது. இதேபோல், மொத்த வெள்ளாடு எண்ணிக்கையில் ஈரோடு, சேலம், விழுப்புரம், நாகப்பட்டினம், திருநெல்வேலி, நாமக்கல், திருவாரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் 43 சதவீதத்தினை கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் கீழக்கரிசல், இராமநாதபுரம் வெள்ளை, வேம்பூர், மேச்சேரி, சென்னை சிகப்பு, திருச்சி கருப்பு, குறும்பாடு மற்றும் நீலகிரி இன செம்மறியாடுகளும், கன்னி ஆடு, கொடியாடு, மோலையாடு மற்றும் சேலம் கருப்பு இன வெள்ளாடுகளும் காணப்படுகின்றன.

இறப்பு மற்றும் நோய் பாதிப்புகளினால் விவசாயிகளுக்கு ஏற்படும் பொருளாதார இழப்பினை தடுத்திட, அனைத்து கால்நடை நிலையங்கள், கால்நடைப் பாதுகாப்பு திட்ட முகாம்கள் மற்றும் அஸ்காட் திட்டத்தின்கீழ், காலமுறைப்படி குடற்புழு நீக்கம், தடுப்பூசி மற்றும் சிகிச்சைப் பணி மேற்கொள்ளப்படுகிறது. 2006-2007-ல், 160.95 இலட்சம் குடற்புழு நீக்கம், 130.52 இலட்சம் தடுப்பூசிகள் மற்றும் 68.29 இலட்சம் சிகிச்சைப் பணி ஆடுகளுக்கு மேற்கொள்ளப்பட்டது. இத்துடன் இத்துறைப் பண்ணைகளில் கீழ்க்கண்ட ஆட்டினங்கள் பராமரிக்கப்படுகின்றன:

[2007 ஏப்ரல் 27

| வ. எண் | பண்ணைகள் | இனம் |
|---|---|---|
| 1 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் | மாண்டியா, கோரிடேல் கலப்பினம், கொடிவள்ளி, ஜமுனாபாரி |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு | கீழக்கரிசல், ஜமுனாபாரி |
| 3 | மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை | இராமநாதபுரம் வெள்ளை, ஜமுனாபாரி, தெல்லிசேரி |
| 4 | ஆட்டுப்பண்ணை, சாத்தூர் | வேம்பூர், கீழக்கரிசல், கன்னி ஆடு, கொடிவள்ளி, ஜமுனாபாரி |
| 5 | ஆட்டுப்பண்ணை, சின்னசேலம் | மேச்சேரி, சென்னை சிகப்பு, ஜமுனாபாரி |

இந்தப் பண்ணைகளில் வளர்க்கும் ஆடுகள் ஈன்ற குட்டிகள் உள்ளூர் விவசாயிகளுக்கு ஆடுகளின் தரத்தை அதிகரிக்கும் பொருட்டு விற்பனை செய்யப்படுகின்றன. ஆடுகளின் நடப்பு மற்றும் எதிர்காலத் தேவைகளைக் கருத்தில்கொண்டு, புதிய ஆட்டினப்பெருக்க கொள்கை வரையறுக்கப்படுகிறது.

## இதர கால்நடை அபிவிருத்தி

**பன்றி அபிவிருத்தி:** நலிவுற்ற சமுதாயப் பிரிவினருக்கு சுய வேலை வாய்ப்பு, மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து மற்றும் கூடுதல் வருவாய் அளிக்க பன்றி வளர்ப்பு சிறந்தது.

இத்துறைப் பண்ணைகளில் பராமரிக்கப்படும் பன்றி இனங்களின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பண்ணைகள் | இனம் |
|---|---|---|
| 1 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி | பெரிய வெள்ளை யார்க்ஷயர், லாண்டரேஸ், லாண்டரேஸ் கலப்பினம் |
| 3 | மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| 4 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| 5 | மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| 6 | ஆட்டுப்பண்ணை, சின்னசேலம் | லாண்டரேஸ் கலப்பினம் |



2007 ஏப்ரல் 27]

31-03-2007 முடிய மேற்கண்ட பிரிவுகளில் 98 ஆண், 136 பெண் மற்றும் 225 குட்டிகள் உள்ளன. 2006-2007-ல், 1,697 பன்றிகள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டன. 2007-2008-ல், அதிக பன்றிகள் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**குதிரை வளர்ப்பு:** குதிரைகளின் இனப் பெருக்கத்தை புனருட்டவும், அவற்றைப் பாதுகாக்கவும், குதிரை வளர்ப்புப் பிரிவு ஒன்று ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் இயங்கி வருகிறது. இப்பிரிவில் கத்தியவார் மற்றும் தாரோ இன குதிரைகள் பராமரிக்கப்படுகின்றன. தாரோ இன மற்றும் கத்தியவார் ஆண் குதிரைகள் இயற்கைமுறை கருவூட்டலுக்கு அனுமதிக்கப்படுகின்றன. 31-03-2007 முடிய இப்பிரிவில் 6 ஆண் குதிரைகள், 6 பெண் குதிரைகள் மற்றும் 8 குட்டிகள் உள்ளன.

**நாய் வளர்ப்பு:** தமிழ்நாட்டில் தலைசிறந்த நாய் இனங்களான இராஜபாளையம், கோம்பை, சிப்பிப்பாறை மற்றும் கன்னி ஆகியவை உள்ளன. இந்த உள்ளூர் இன நாய்களைப் பாதுகாத்து வளர்ப்பதற்காக சென்னை சைதாப்பேட்டையில் நாய் வளர்ப்புப் பிரிவு ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. மற்ற இனத்தைச் சேர்ந்த நாய்களுக்கும் நல்ல தேவை இருந்ததால் லாப்ரடார் மற்றும் டாபர்மேன் இனங்கள், இப்பிரிவில் சேர்க்கப்பட்டன. இந்நாய் குட்டிகள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. நாட்டின நாய் இனங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவற்றை நாய்ப்பிரியர்கள் வளர்க்க ஊக்குவிக்கும் நோக்குடன், இத்துறை நாய் கண்காட்சிகளில் கலந்து கொள்கிறது. 31-03-2007 முடிய இப்பிரிவில் 9 ஆண், 12 பெண் மற்றும் 8 குட்டிகள் உள்ளன. 2006-2007-ல் இப்பிரிவின் கட்டடங்களை பழுதுநீக்கம் செய்ய ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

## கோழியின அபிவிருத்தி

மாநிலத்தில் மொத்த கோழிகளின் எண்ணிக்கை 865.91 இலட்சம் ஆகும். இது நாட்டில் உள்ள மொத்த கோழிகளில் 18 சதவீதம் ஆகும். மொத்த கோழியின எண்ணிக்கையில், உள்ளூர் மற்றும் மேம்படுத்தப்பட்ட கோழிகள் முறையே 54 சதவீதம் மற்றும் 46 சதவீதத்தினை கொண்டுள்ளது. வெறும் புழக்கடை கோழி வளர்ப்பாக மட்டும் இருந்த கோழி வளர்ப்பு தற்போது சுறுசுறுப்பான, உயிர்த்துடிப்புள்ள, நன்கு செயல்படக்கூடிய தொழிலாக 1960-ல் ஆழ்கூழ்முறை அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து தொழில்முறை மாற்றம் ஏற்பட்டு முன்னேற்றம் அடைந்துள்ளது. 1970-ல் அறிமுகம்

செய்யப்பட்ட நவீன அறிவியல் தொழில்நுட்பங்கள் மற்றும் கலிபோர்னியா கூண்டுமுறை கோழி வளர்ப்பு போன்றவை இத்தொழிலில் புரட்சியை ஏற்படுத்தியது.

**கோழியின எண்ணிக்கை**




மாநிலத்தில் கோழி வளர்ப்பு முக்கியத் தொழிலாகையால், முட்டைத் தொழில் வளர்ச்சி கணிசமாக அதிகரித்துள்ளது. இது கோழி விரிவாக்க நிலையங்களை ஏற்படுத்தியதன் மூலமாக அடைய முடிந்தது. இவை செயல் விளக்கப் பண்ணைகளாகவும், விரிவாக்க நிலையங்களாகவும் செயல்பட்டு, கோழிப் பண்ணைத் தொழிலை நடத்துவதற்கு விவசாயிகளுக்கு பயிற்சி நிலையங்களாகவும் விளங்கின. மேலும் கோழி அலகுகள் தோற்றுவிக்க அரசின் உதவி மற்றும் கோழிக் கழிச்சல் நோயிலிருந்து காத்திட மேற்கொள்ளப்பட்ட பரவலான தடுப்பூசி போடுதல் ஆகியவை கோழி வளர்ப்பிற்கு பெரும் பங்காற்றி, இது ஒரு தொழிலாக மேன்மையடையச் செய்தது. இதனால் இதுவரை குடிசைத் தொழிலாக இருந்த கோழி வளர்ப்பு, தற்போது நாமக்கல், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டங்களில் பல இடங்களில் பெரிய அளவிலான தொழிலாக வளர்ச்சி அடைந்துள்ளது. நாமக்கல் பகுதி, மாநிலத்தில் முட்டைக்கூடை மையமாக உருவெடுத்து, மொத்த முட்டை உற்பத்தியில் 65 சதவீதம் கொண்டுள்ளது. தற்சமயம் மாநிலத்தில் 5,123 இறைச்சிக் கோழிப் பண்ணைகள், 1,148 முட்டைக் கோழிப் பண்ணைகள் மற்றும் 41 கோழி குஞ்சு பொரிப்பகங்கள் உள்ளன. மாநிலத்தின் மொத்த முட்டை உற்பத்திக்கு உள்நாட்டினம் மற்றும் மேம்படுத்தப்பட்ட கோழிகளின் பங்களிப்பு முறையே 6 சதவீதம் மற்றும் 94 சதவீதம் ஆகும். சத்துணவுத் திட்டத்தில், வாரத்திற்கு மூன்று முட்டைகள்



அறிமுகப்படுத்தியதால் கோழிப் பண்ணைத் தொழில் மேலும் வலுப்பெறும்.

கோழிகளின் அதிக இறப்பினை ஏற்படுத்தும் நோய்களில் முக்கியமானது கோழிக்கழிச்சல் நோயாகும். கோழிகளை இந்நோயிலிருந்து பாதுகாப்பதற்கு இத்துறை அனைத்து கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களில் வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளிலும் மற்றும் கால்நடைப் பாதுகாப்பு திட்ட முகாம்களிலும் தடுப்பூசி போடப்படுகின்றன. மேலும் இந்நோயிலிருந்து கோழிகளைக் காக்கும் பொருட்டு இத்துறையால் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் மாநில அளவிலான கோழிக் கழிச்சல் தடுப்பூசிப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2006-2007-ல், 248.75 இலட்சம் கோழிகளுக்கு கோழிக்கழிச்சல் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

**மாநில கோழிப் பண்ணைகளுக்கு உதவி:** குறைந்த தொழில்நுட்ப புழக்கடை கோழி வளர்ப்பினை ஊக்குவிக்க, குறு விவசாயிகள், நிலமற்ற தொழிலாளர்கள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினருக்குக் கூடுதல் தொழில்களை உருவாக்கவும், வேலைவாய்ப்பும், துணை வருவாயை ஈட்டவும், இதன்மூலம் அவர்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும்; இத்துறை "மாநில கோழிப் பண்ணைகளுக்கு உதவி" என்ற மத்திய மாநில பங்களிப்புத் திட்டத்தினை செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின்கீழ், காட்டுப்பாக்கம் கோழிப்பண்ணை மற்றும் ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணைகளில், மொத்தம் 3,500 வனராஜா/கிரிராஜா கோழிகளின் பெற்றோர் இருப்பு சேர்க்கப்பட்டுள்ளது. இத்துடன், இப்பண்ணைகளின் குஞ்சு பொரிப்பகத்திற்கு தேவையான உபகரணங்களான செட்டர், குஞ்சு பொரிப்பகம், தானியங்கி தடுப்பூசிக் கருவி, அடைக்காப்பகம் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. இதுமட்டுமில்லாமல், 960 விவசாயிகளுக்கு கோழி வளர்ப்பில் ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**வான்கோழி வளர்ப்பு:** தமிழ்நாட்டில் 0.51 இலட்சம் வான்கோழிகள் உள்ளன. இதில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் முறையே 10.45 சதவீதம் மற்றும் 0.57 சதவீதத்தில் வான்கோழிகளைக் கொண்டுள்ளனர். வான்கோழி வளர்ப்பினை பிரபலப்படுத்தவும், புழக்கடை வான்கோழி வளர்ப்பு ஓர் இலாபகரமான தொழில் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், வான்கோழிப் பிரிவுகள் காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணை மற்றும் மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர் மற்றும் ஒரத்தநாட்டில் பராமரிக்கப்படுகின்றன. 31-03-2007 முடிய இப்பிரிவுகளில் மொத்தம் 167 வான்கோழிகள் உள்ளன.

## பறவைக் காய்ச்சல்

நவீன உலகில் விலங்கிலிருந்து மனிதனுக்கு பரவும், மனித இனத்தை அச்சுறுத்தும் நோய்களில் பறவைக் காய்ச்சல் முக்கியமானதாகும். இந்நோய் நம் மாநிலத்தில் கண்டறியப்படாவிட்டாலும், மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களில் பறவைக் காய்ச்சல் நோய் கிளர்ச்சி தென்பட்டவுடன், கீழ்க்கண்ட தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:—

- ✓ தமிழகத்தில், தலைமைச் செயலாளர் தலைமையின்கீழ், மாநில அளவிலான ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- ✓ நோய்க்கிளர்ச்சி ஏற்பட்டால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அவர்களின் பங்கு குறித்து, அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள், பொது சுகாதாரத் துறை, வனம் மற்றும் சுற்றுச்சூழல், உள் துறை, பொதுப் பணி போன்ற துறைகளுக்கு தங்கள் பங்கு பற்றி தக்கவாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- ✓ நோய்க்கிளர்ச்சி ஏற்பட்டால் பயன்படுத்திட, 2,500 தனி மனித பாதுகாப்பு கவசங்கள் மற்றும் இதர நோய் கண்டறியும் சாதனங்கள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன.
- ✓ மாவட்டங்களில் 200 துரித செயல்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- ✓ பறவைக் காய்ச்சல் தொடர்பான நடவடிக்கைத் திட்டம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில், அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ✓ கால்நடை பராமரிப்புத் துறையில் உள்ள அனைத்து கால்நடை மருத்துவர்களுக்கும் பறவைக் காய்ச்சல் நோய் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- ✓ வாரந்தோறும் வர்த்தக கோழிப்பண்ணைகள், குஞ்சு பொரிப்பகங்கள் மற்றும் புழக்கடை கோழிகளில் பறவைக் காய்ச்சல் நோய் அறிகுறிகள் ஏதேனும் தென்படுகின்றனவா என்று கண்காணிக்கப்படுகின்றன.





- ✓ இத்துடன் பறவை சரணாலயங்கள் வனத் துறையுடன் ஒருங்கிணைந்து கண்காணிக்கப்படுகின்றன.
- ✓ கோழிப் பண்ணைகள், குஞ்சு பொரிப்பகங்கள், புழக்கடை கோழிகள் மற்றும் சரணாலயங்களை உள்ளடக்கி மாதந்தோறும் 800 ஊனீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பெங்களூர் தெற்கு மண்டல நோய்கள் கண்டறியும் ஆய்வுக் கூடத்திற்கு, பறவைக் காய்ச்சல் நோய் கண்டறிய அனுப்பப்படுகிறது.
- ✓ பறவைகளை அழிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக அரசு ரூ.50.00 இலட்சம் ஒதுக்கியுள்ளது.
- ✓ நிவாரண நடவடிக்கையாக, மத்திய அரசின் ஒதுக்கீடான 1,21,500 மெட்ரிக் டன் மக்காச் சோளம் மாநிலத்தின் கோழிப் பண்ணையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டது:—

கோழிப் பண்ணைகளுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்குடன் அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை அங்கீகரித்துள்ளது.

- ➔ ஷெட்யூல் வங்கி, கூட்டுறவு வங்கி மற்றும் மண்டல கிராமப்புற வங்கிக்குச் செலுத்த வேண்டிய தவணை முறைக் கடன், அசல் மற்றும் வட்டி மற்றும் மூலதனத்தினை திருப்பிச் செலுத்த ஓராண்டு காலம் அவகாசம் அளித்துள்ளது.
- ➔ மூலதனத்தினை தவணை முறைக் கடனாக மாற்றுதல். முதலாண்டு திரும்பச் செலுத்த வேண்டிய தொகை நிவாரண காலம் முடிந்த பிறகு திரும்பச் செலுத்தினால் போதுமானது.
- ➔ கோழிப் பண்ணை கடன் தொகையைத் திரும்பச் செலுத்த வேண்டிய கால அவகாசம் கூடுதலாக இரண்டு ஆண்டுகள் நீட்டிப்பு செய்து, மாற்று கால அட்டவணை நிர்ணயிக்கப்படும்.
- ➔ கடனைத் திரும்பச் செலுத்த சக்தி இருந்தும் செலுத்தாதவர்களைத் தவிர, ஏனைய அனைத்து கடன் வாங்கியவர்களை ரிசர்வ் வங்கி கடன் செலுத்தாதவர்கள் பட்டியலில் சேர்க்காது.

## சிறப்புத் திட்டங்கள்

பெருகிவரும் மக்கள் தொகை, அதிகரித்துவரும் நகரமயமாக்கல், குறைந்து வரும் சாகுபடி நிலங்கள், நிலையற்ற பருவநிலை, குறைந்து

வரும் நீர் ஆதாரங்கள் மற்றும் உறுதியற்ற வேளாண் வருவாய் ஆகியவை விவசாயிகள் தங்கள் வாழ்க்கையை நடத்திட ஏதாவதொரு கால்நடை வளர்ப்பிற்கு மாறச் செய்துவிட்டன. எனவே இப்பிரிவினரின் பிழைப்பு ஆதாரமாகவும், வாழ்க்கை நடத்தவும் மற்றும் வேலைவாய்ப்பை அளித்திடவும், இத்துறை பல்வேறு பயனாளிகளை முன்னிருத்த திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

## 1. கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்

கால்நடை பாதுகாப்பு திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் 18-1-2000 அன்று தொடங்கப்பட்ட முன்னோடித் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் கால்நடை மருத்துவ வசதி குறைவாக உள்ள குக்கிராமங்களில் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு முழுமையான கால்நடை மருத்துவ வசதி (தடுப்பு மற்றும் குணப்படுத்துவது) அளிக்கும் நோக்குடன் சிறப்பு முகாம்கள் அங்கேயே நடத்தப்படுகின்றன.

இச்சிறப்பு முகாம்கள் 385 ஊராட்சி ஒன்றியங்களிலும், மாதத்திற்கு ஒரு முகாம் வீதம் நடத்தப்படுகின்றன. 2005-2006-ல், ஒரு முகாமிற்கு ரூ.3,700/- செலவிடப்பட்டது. 2006-2007-ல், ஒரு முகாமிற்கு ரூ.1,300/- ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.5,000/- செலவிடப்படுகிறது. முகாம் நடத்துவதற்கு முன்தினம், முகாம் நடைபெற இருக்கும் கிராமத்திலும் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களிலும் முகாம் நடைபெறுவது குறித்து விரிவான பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. அப்போது முகாமில் நடைபெறவுள்ள செயல்பாடுகள் குறித்து துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வகை முகாம்களில் உடல்நலம் பேணுதல், நோய்த் தடுப்பு, குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், சினை பரிசோதனை மற்றும் மலட்டு நீக்க சிகிச்சை போன்ற பணிகள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன. முகாம் நடத்துவதற்கு ஊராட்சி ஒன்றியம் மற்றும் அருகில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் சார்பு பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக உதவிகள் தேவைப்படும் நேரங்களில் கோரப்படுகின்றன.

கால்நடைகளுக்கு ஏற்படும் பலவிதமான நோய்கள் பற்றிய விளக்கங்கள், நோய்த் தடுப்பு முறைகள் மற்றும் தீவன உற்பத்தி முறைகள்



போன்றவை செயல் விளக்கத்துடன் கண்காட்சி நடத்தப்பட்டு கிராம மக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்கப்படுகிறது. 2006-2007-ல் பரிசுப்பொருட்கள் வழங்குதல் சிறிய மாற்றத்துடன் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது, சிறந்த கால்நடைகளுக்குப் பரிசு வழங்குவதற்குப் பதிலாக சிறந்த கன்றுகளுக்கு, முகாமுக்கு ரூ.400/- வீதம் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

2006-2007-ல், 2,695 முகாம்கள் நடத்தப்பட்டு, 37.44 இலட்சம் கால்நடைகள் பயனடைந்தன. இந்த முகாம்களினால் பயன்பெறும் பயனாளிகள் முகாம் நடத்தப்படும் கிராமங்கள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கால்நடை வளர்ப்போர் ஆவர். அனைத்து சேவைகளும் விவசாயிகளின் இருப்பிடத்திலேயே இலவசமாகக் கிடைப்பதால், இத்திட்டம் விவசாயிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

## 2. தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்.

உலக வங்கி உதவியுடன் கூடிய தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் மாநிலத்தில் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து 2007 முதல் 2013 வரை 6 ஆண்டு கால அளவில் செயல்படுத்தப்பட உள்ளது. வேளாண்மை மற்றும் சார்புத் தொழில்களில் ஒவ்வோர் அலகு நீரின் பயன்பாட்டை மேம்படுத்தி, இறுதியில் பண்ணை வருவாயை அதிகரிப்பதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். உலக வங்கி, திட்டக்காலத்தில் 63 உப வடிநிலங்களில் கால்நடை பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள, ரூ.3,938 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் நோக்கங்கள் பின்வருமாறு:—

- உப வடிநிலங்களில் உள்ள கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பது.
- விவசாயிகளின் இருப்பிடங்களில் அல்லது மிக அருகில் கால்நடை மருத்துவ சேவை மற்றும் இனப்பெருக்க உதவியை அளிப்பது.
- முழுமையான கால்நடை பாதுகாப்பினை (நோய்த் தடுப்பு மற்றும் குணப்படுத்துதல்) உறுதிப்படுத்துவது.
- மாட்டினங்களின் சினைப் பிடிப்பு மற்றும் கன்று பிறப்பு சதவீதத்தினை அதிகரிப்பது.

- பசுந்தீவன தேவை மற்றும் கிடைக்கும் அளவிற்கான இடைவெளியைக் குறைப்பது.
- சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகள்/தொழில் நுட்பம் பற்றிய விவசாயிகளின் அறிவாற்றலை மேம்படுத்துவது.

உப வடிநிலங்களில், துறை மேற்கொள்ள உள்ள செயல்பாடுகள் பின்வருமாறு:—

- வேலையில்லா கால்நடை மருத்துவப் பட்டதாரிகளின் சேவைகளைப் பயன்படுத்தி, சேவையில்லா பகுதிகளில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு கால்நடை மருத்துவ சேவை மற்றும் இனப்பெருக்க உதவி, உப வடிநில கால்நடை மருத்துவ பிரிவுகள் ஏற்படுத்தி வழங்குதல்.
- கால்நடை நிலையங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தி, தரமான கால்நடை மருத்துவ சேவை மற்றும் நோய் ஆய்வை வழங்குதல்.
- கூடுதல் பகுதிகளை பசுந்தீவன சாகுபடிக்குக் கொண்டு வந்து, பசுந்தீவனம் கிடைப்பதை அதிகரித்தல்.
- மலட்டு நீக்கம் மற்றும் முழுமையான கால்நடை மருத்துவ சேவை முகாம்கள் மற்றும் தாதுக் கலவை வழங்குவதின் வாயிலாக முழுமையான கால்நடை மருத்துவ சேவையை உறுதிப்படுத்துவது மற்றும் சினைப் பிடிப்பு சதவீதத்தினை அதிகரித்தல்.
- பல்வேறு தகவல், படிப்பு மற்றும் தகவல் தொடர்பு பிரச்சாரங்கள் மற்றும் பயிற்சிகள் வாயிலாக விவசாயிகளுக்கு சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகள்/தொழில் நுட்பம் பற்றிய அறிவாற்றலை மேம்படுத்துதல்.
- பல்வேறு ஆற்றல் வளர்ப்புப் பயிற்சிகள்மூலம் கால்நடை மருத்துவ மற்றும் சார்புப் பணியாளர்களின் அறிவு மற்றும் திறனை இன்றைய நிலைக்கேற்ப மாற்றுதல்.

2007-2008-ல் இத்திட்டம், வராகநதி, மேல்வெள்ளார், தெற்கு வெள்ளார், பாலாறு (பரம்பிக்குளம் ஆழியார் திட்டம்), ஆழியார் (பரம்பிக்குளம் ஆழியார் திட்டம்), பாம்பார், அர்ஜுனா நதி, மணிமுத்தாறு மற்றும் கோட்டைக்கரையார் ஆகிய 9 உப வடிநிலங்களில் முதல் கட்டமாக செயல்படுத்தப்பட உள்ளது.



2007-2008-ல், கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன:—

- விவசாயிகளின் வீடுகளிலோ அல்லது மிக அருகிலோ இனப்பெருக்க உதவி மற்றும் கால்நடை மருத்துவ சேவைகள், வேலையில்லா கால்நடை மருத்துவப் பட்டதாரிகளின் சேவைகளைப் பயன்படுத்தி 30 உப வடிநில கால்நடை மருத்துவப் பிரிவுகளை ஏற்படுத்தி வழங்கப்படும்.
- 12 பெரிய அளவிலான உறைவிந்துக் குடுவைகள் வழங்கி, மொத்தமாக திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்து சேமிப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.
- தீவன உள்ளீடுகளான கோ-3 கரணைகள், கொழுக்கட்டை மற்றும் ஸ்டைலோ விதைகள் வழங்கி, சுமார் 300 ஹெக்டேர் நிலம் பசுந்தீவன சாகுபடிக்குக் கொண்டுவரப்படும்.
- 600 மலட்டு நீக்கம் மற்றும் முழுமையான மருத்துவ சேவை முகாம்கள் நடத்தப்படும்.
- 5,000 பயனாளிகளுக்கு தாதுக் கலவை வழங்கப்படும்.
- துண்டுப் பிரசுரங்கள் விநியோகம், விளம்பரப் பலகைகள் நிறுவுதல் மற்றும் சுவர் விளம்பரம் மூலமாக தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல். இத்துடன் 200 இரவு நேரக் கூட்டங்கள் நடத்தப்படும்.
- இலாபகரமான கால்நடை வளர்ப்பு பற்றி 20,000 விவசாயிகளுக்கு பயிற்சியளித்து, அவர்களின் அறிவு மற்றும் ஆற்றல் மேம்படுத்தப்படும்.

## 3. கால்நடை நோய்களை கட்டுப்படுத்துவதற்காக மாநிலங்களுக்கு உதவி திட்டம் (அஸ்காட்)

பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கால்நடைகளைத் தாக்கும் நோய்களைக் கட்டுப்படுத்த, மத்திய அரசு உதவியுடன் "கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு மாநிலங்களுக்கு உதவி" என்ற திட்டம் 75 சதவீதம் மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இதில், பயிற்சி/கருத்தரங்குகள் மட்டும் 100 சதவீத உதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன.

**2006–2007–ல் கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்றப்பட்டன:**

- ☑ திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 20.61 இலட்சம் கால்நடைகளுக்கு தொண்டை அடைப்பான் நோய் தடுப்பூசிகள் போடப்பட்டன.
- ☑ காஞ்சிபுரம், விழுப்புரம், சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 20.14 இலட்சம் கால்நடைகளுக்கு சப்பை நோய் தடுப்பூசிகள் போடப்பட்டன.
- ☑ கடலூர், கோயம்புத்தூர், திண்டுக்கல், திருவண்ணாமலை, தேனி, திருநெல்வேலி மற்றும் வேலூர் மாவட்டங்களில் 40.52 இலட்சம் கால்நடைகளுக்கு அடைப்பான் நோய் தடுப்பூசிகள் போடப்பட்டன.
- ☑ மாநிலத்தில் 55.19 இலட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிகள் போடப்பட்டன.
- ☑ மாநிலத்தில் 125.88 இலட்சம் ஆடுகளுக்கு ஆட்டுக்கொல்லி நோய் தடுப்பூசிகள் போடப்பட்டன.
- ☑ இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள கோழி தடுப்பூசி ஆய்வுக் கூடத்தை நல்ல தயாரிப்பு வழிமுறைகள் தரத்திற்கு மேம்படுத்திட, ரூ.45.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- ☑ 60 கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் 60 கால்நடை ஆய்வாளர்களுக்கு பல்வேறு நோய் கண்டறியும் வழிமுறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.
- ☑ பறவைக் காய்ச்சல் நோய்க்கு எதிராக துரித செயல்பாட்டுக் குழுக்களுக்கு தேவையான பொருட்கள் மற்றும் பயிற்சிக்கு ரூ.28.00 இலட்சம் வழங்கப்பட்டது.
- ☑ இத்துடன் பல்வேறு நோய்கள் மற்றும் தடுப்பு முறைகள் குறித்த துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சிறு புத்தகங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

## 4. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் விருதுநகர் ஆகிய





மாவட்டங்களில் உள்ள 135 நீர்பிடிப்புப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், அபிசேகப்பட்டி, மாவட்ட கால்நடைப் பண்ணையில் விவசாய பயிற்சி நிலையம் கட்டப்பட்டுள்ளது. இத்துடன் திட்டப் பகுதியிலுள்ள கால்நடை வளர்ப்போருக்கு மருத்துவச் சேவை அளிக்க, கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூரிலும், தேனி மாவட்டம், உத்தமபாளையத்திலும் நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகளும், திண்டுக்கல்லில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவும் செயல்பட்டு வருகின்றன.

2006-2007-ல், மேற்கூறிய 8 மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் உள்ள 135 நீர்பிடிப்புப் பகுதிகளில், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திட ரூ.95.50 இலட்சம் வழங்கப்பட்டது. இதில் 810 பயனாளிகளுக்கு கோழி வளர்ப்பில் பயிற்சி அளித்து 10 பெட்டைக் கோழிகள் மற்றும் ஒரு சேவல் கொண்ட ஒரு கிரிராஜா கோழி அலகு 50 சதவீத மானியத்துடன் ரூ.5.18 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது. மேலும், 270 பயனாளிகளுக்கு கறவை மாடு பராமரிப்பில் பயிற்சி அளித்து ஒரு கலப்பின கிடேரிக் கன்று 50 சதவீத மானியத்துடன் ரூ.14.44 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது. இத்துடன் ரூ.75.88 இலட்சத்தில் ஸ்டைலோ, ஸென்கிரஸ் மற்றும் சுபாபுல் விதைகளை விதைத்து 1,474 ஏக்கர் மேய்ச்சல் நிலம் மேம்படுத்தப்பட உள்ளது.

## 5. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மலைப்பகுதியில் வாழும் மக்களுக்கு கால்நடை நலப் பணிகள் அளிக்கும் வகையில் ஒரு உறைவிந்து உற்பத்தி நிலையம் மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலத்திலும், இரண்டு நடமாடும் கால்நடை மருந்தகங்கள், ஒன்று கோத்தகிரியிலும், மற்றொன்று கூடலூரிலும், ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு உதகமண்டலத்திலும் செயல்பட்டு வருகிறது. 2006-2007-ல், 87,500 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிப் பணி மேற்கொண்டு, திட்டப் பகுதியை நோயில்லா மண்டலமாக மாற்றிட ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. கோமாரி நோய் தடுப்புத் திட்டம்

இந்த மத்திய உதவித் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு வழிகாட்டுதலின்படி, திட்டப் பகுதியில் கோமாரி நோய் தாக்கக்கூடிய

[2007 ஏப்ரல் 27

கால்நடைகளுக்கு முறையாக தடுப்பூசி மேற்கொள்ளப்படுகிறது. 2005-2006 வரை, கோமாரி நோய் தடுப்பூசிப் பணி 5 கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. 2006-2007-ல் 6-வது கட்டமாக, திட்டப் பகுதியில் ஒரு இலட்சம் கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது.

## 7. ஒருங்கிணைந்த மாதிரி வரைவுத் திட்டம்

ஒருங்கிணைந்த மாதிரி வரைவுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் 1977-1978 ஆம் ஆண்டு முதல் கால்நடை உற்பத்திப் பொருட்களான பால், முட்டை, இறைச்சி ஆகியவை பற்றி நம்பகமான புள்ளி விவரங்களை உரிய நேரத்தில் கிடைக்கச் செய்கிறது. மேலும் இது கால்நடை மேலாண்மை முறைகளை ஆண்டுதோறும் மற்றும் பருவம் வாரியாக தொடர்ந்தாற்போல் விவரங்களைப் பெற்று ஆய்வு செய்து வருகிறது. இது இத்துறையினால் தொடங்கப்பெற்று செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு கால்நடை மேம்பாடு பற்றிய செயல்பாடுகளின் தாக்கத்தைக் கணக்கிடவும், கண்காணிக்கவும் உதவுகின்றது. இந்த ஆய்வு அளிக்கும் அடிப்படைப் புள்ளி விவரங்கள் எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்கான திட்டங்களுக்கு உதவுகின்றது.

2006-2007-ல் குளிர்காலம் நீங்கலாக முதல் இரண்டு பருவ காலங்களில் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் மதிப்பீடு பின்வருமாறு:—

| இனம் | கோடைக் காலம் | மழைக் காலம் | மொத்தம் |
|---|---|---|---|
| பால் (இலட்சம் மெட்ரிக் டன்களில்) | 17.99 | 19.24 | 37.23 |
| முட்டை (மில்லியன் எண்களில்) | 29.42 | 26.91 | 56.33 |
| இறைச்சி (மில்லியன் கிலோவில்) | 19.70 | 20.21 | 39.91 |

இத்துடன் கீழ்க்கண்ட முன்னோடி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:—

I. பதிவு செய்யப்படாத இறைச்சிக் கூடங்களின் இறைச்சி உற்பத்தி மதிப்பீடு சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் ரூ.2.96 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2007 ஏப்ரல் 27]

II. இயற்கை மரணங்களினால் இறக்கும் பல்வேறு கால்நடைகளின் இறப்பு சதவீதத்தை மதிப்பிட ரூ.3.14 இலட்சம் செலவில் 5 மாவட்டங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

III. இறைச்சி உபபொருட்களான தலை, கொழுப்பு, இரத்தம், ஆகியவைகளின் சதவீத ஆய்வு ரூ.2.36 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## கூட்டுறவுச் சங்கங்கள்

ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் 1964 முதல் இத்துறையில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் செயல்முறை பதிவாளராக கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையர் மற்றும் இயக்குநர் உள்ளார். நலிவுற்ற பிரிவினரை சங்கத்தின் உறுப்பினர்களாக்கி அவர்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதே சங்கங்களின் நோக்கமாகும். 31-03-2007-ல் உள்ளபடி, இத்துறையில் மொத்தம் 445 சங்கங்கள் உள்ளன. இதில் 81 சங்கங்கள் செயல்படுபவை; 374 சங்கங்கள் செயல்படாதவை.

## கால்நடை மருத்துவப் பணிகள்

சிறப்பான மருத்துவ பாதுகாப்பு, மருத்துவ சேவை மற்றும் பொருளாதார மேன்மைக்கு ஏற்ற ஆரோக்கியமான உற்பத்தி சுழற்சி போன்றவை சிறந்த கால்நடை உற்பத்தி முன்னேற்றம் அடைவதற்கு திறவுகோலாக அமையும். இவற்றை வழங்குவதில் கால்நடை பராமரிப்புத் துறை பெரும் பங்காற்றுகிறது. 1959-1960-ல் ஆரம்ப காலத்திலிருந்த 120 கால்நடை நிலையங்கள் விரிவாக்கம் செய்யப்பட்டு, 2006-2007-ல் 1,334 என்ற அளவில் கீழ்க்கண்டவாறு உயர்ந்துள்ளது:—

**கால்நடை நிலையங்கள்**

| | | |
|---|---|---|
| பன்முக மருத்துவமனைகள் | : | 6 |
| பிரதம கால்நடை மருத்துவமனைகள் | : | 22 |
| கால்நடை மருத்துவமனைகள் | : | 139 |
| கால்நடை மருந்தகங்கள் | : | 1,167 |
| நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகள் | : | 55 |

[2007 ஏப்ரல் 27

இந்நிலையங்கள் அளித்துவரும் சேவைகள் பின்வருமாறு:—

- ➪ செயற்கைமுறை கருவூட்டல்
- ➪ சினை பரிசோதனை
- ➪ சிகிச்சைப் பணி
- ➪ தடுப்பூசிப் பணி
- ➪ குடற்புழு நீக்கம்
- ➪ ஆண்மை நீக்கம்
- ➪ விரிவாக்கப் பணிகள் மற்றும்
- ➪ பல்வேறு திட்டங்களை செயல்படுத்துதல்.

மேற்கூறிய நிலையங்களில் பன்முக மருத்துவமனைகள் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன. இவை உள்நோயாளி வசதி, ஊனியல் மருத்துவ சிகிச்சை, மருத்துவம், எக்ஸ் கதிர் வசதி போன்ற சிறப்பான மருத்துவ வசதிகளையும் அளித்து வருகின்றன. உள்நோயாளி வசதிகள் பிரதம மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருத்துவமனைகளில் உள்ளன. நாமக்கல் மற்றும் தஞ்சாவூர் தவிர மாவட்டத் தலைமையிடங்களில் செயல்படும் அனைத்து கால்நடை நிலையங்களிலும் எக்ஸ் கதிர் வசதி உள்ளது. மேலும், சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை பன்முக மருத்துவமனைகளில் நுண்ணொலி (ultrasound scan) வசதி ஏற்படுத்தப்பட உள்ளது. இது மட்டுமல்லாமல், மாநிலத்தில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு முதலுதவி மற்றும் இனப்பெருக்க உதவியாக செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் சினை பரிசோதனை அளித்திட 1,829 கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மாநிலத்தில் பெரும்பாலான விவசாயிகள் பயன்பெறும் வகையில், அரசு 2006-2007-ல் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:—

- ✓ 11 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 30 கிளை நிலையங்கள் தேவையான இடங்களில் புதியதாக தொடங்கப்பட்டன.
- ✓ செல்லப் பிராணிகளுக்கு வசூலிக்கப்பட்டு வந்த ரூ.5/- நுழைவுக் கட்டணம், ரூ.5/- முதல்தின சிகிச்சைக் கட்டணம் மற்றும் ரூ.3/- அடுத்தடுத்த தினங்களுக்கான கட்டணங்கள் இரத்து செய்யப்பட்டன.



2007 ஏப்ரல் 27]

- ✓ தென் சென்னை செல்லப் பிராணிகள் வளர்ப்போரின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றிட, செல்லப் பிராணிகள் மருந்தகம் சென்னை அடையாறில் தொடங்கப்பட்டது.
- ✓ அத்தியாவசிய உபகரணங்களான ஆண்மை நீக்கக் கருவி, நுண்ணோக்கி, ஊனியல் மருத்துவ சிகிச்சை பெட்டி, இதர சாதனங்கள் 55 நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகளில் ரூ.15.38 இலட்சத்தில் மாற்றப்பட்டு வருகிறது. இத்துடன் 6 நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகளுக்கு வாகனங்கள் ரூ.25.38 இலட்சத்தில் மாற்றப்பட்டுள்ளன.
- ✓ 200 கிளை நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்கள் ரூ.19.82 இலட்சம் செலவில் மாற்றப்பட்டு வருகிறது.

**தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) உதவியுடன் கால்நடை நிலையங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

மாநிலத்தில் பல கால்நடை நிலையங்கள் போதிய உள் கட்டமைப்பு வசதிகள் இல்லாமல் செயல்பட்டு வந்தன. இதனால் பொதுமக்களுக்கு தரமான கால்நடை மருத்துவ சேவையை அளிப்பதில் சிரமம் ஏற்பட்டது. மேம்படுத்தப்பட்ட உள்ளிருப்புகளினால் சிறப்பான கால்நடை சேவையை கிராமப்புறங்களில் அளித்து, கால்நடை நோய் நிகழ்வுகளைக் குறைத்து, ஒட்டு மொத்த உற்பத்தியை அதிகரித்து, குறிப்பிடும்படியான கிராம வளர்ச்சி ஏற்படுவதற்கு ஏதுவாகும். எனவே கிராமப்புற வளர்ச்சியை முடிவான இலக்காகக் கொண்டு, வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதி உதவியுடன், துறையின் உள்ளிருப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன.

☞ **பத்தாவது ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதி:**

கீழ்க்கண்ட பணிகளுக்காக தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் பத்தாவது ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.5,978.92 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது:—

- ➥ 89 கால்நடை மருந்தகங்கள், 13 கால்நடை மருத்துவமனைகள், 9 விந்து வங்கிகள், 23 கள கண்காணிப்புக் குழுக்கள், 10 நோய் கண்டறியும் பிரிவுகள், 97 சிகிச்சைக் கூடங்கள், 152 உள்நோயாளிப் பிரிவுகள் மற்றும் 19 நுண்கதிர் (X-ray) பிரிவுகள் கட்ட ரூ.4,380.38 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 27

- 1,327 கால்நடை நிலையங்கள் மற்றும் 18 நோய் கண்டறியும் நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்க ரூ.1,374.54 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- 95 கால்நடை நிலையங்கள் மற்றும் 17 நோய் கண்டறியும் நிலையங்களுக்குத் தேவையான அறையணிகள் வாங்க ரூ.224.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றுள் தற்போது 163 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. ஏனைய கட்டடப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. மேலும், இவற்றுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் அறையணிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் 2007-2008-ல் முடிக்கப்படும்.

- **பதினோராவது ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதி:** தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் பதினோராவது ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதியின்கீழ் ஓசூர், உதகமண்டலம், ஈச்சங்கோட்டை ஆகிய கால்நடைப் பண்ணைகளில் பொலிகாளை கொட்டகைகள் கட்டுவதற்காகவும், ஓசூர் மற்றும் உதகமண்டலம் கால்நடைப் பண்ணைகளில் தரக்கட்டுப்பாடு ஆய்வுக்கூடங்கள் கட்டுவதற்காகவும், ரூ.234.20 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- **பதின்மூன்றாவது ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதி:** தடுப்பூசி கொண்டு செல்லும்போது அதன் குளிர்தன்மையை மேம்படுத்திட, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலைய தடுப்பூசி ஆய்வுக் கூடங்கள் மற்றும் தரக்கட்டுப்பாடு பிரிவை நல்ல தயாரிப்பு முறைகள் தரத்திற்கு மேம்படுத்திட மற்றும் ஏனைய கால்நடை நிலையங்களைக் கட்ட, துறை விரிவான கருத்துருவை வகுத்து வருகிறது.

## அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டம்

உலக வங்கி உதவியுடன்கூடிய அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டம் ரூ.866.702 இலட்சம் செலவில் மாநிலத்தின் 13 கடலோர மாவட்டங்களில் கீழ்க்கண்ட நோக்கங்களுடன் செயல்படுத்தப் படுகிறது:—

- கடலோரப் பகுதிகளில் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி கால்நடை மருத்துவ சேவைத் தரத்தினை அதிகரித்தல்.



2007 ஏப்ரல் 27]

- கடலோரப் பகுதி சமூகத்தினரிடையே கால்நடை வளர்ப்பில் நல்ல வழிமுறைகள் பற்றி பயிற்சி அளித்து அவர்களுக்கு மாற்று வேலை மற்றும் வருவாய் ஈட்டிட வழிவகுத்தல்.
- தீவன வங்கிகளை ஏற்படுத்தி, தீவனப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.

இதில், திட்டப் பகுதியில் 3 கால்நடை மருத்துவமனைகள், 9 கால்நடை மருந்தகங்கள், 13 மாவட்ட கால்நடை விரிவாக்க நிலையங்கள், 2 தீவன வங்கிகள், 12 சமூகம் சார்ந்த கால்நடை பணியாளர் நிலையங்கள் மற்றும் 70 கிளை நிலையங்கள் கட்டப்படும். மேலும், 4 பழுதடைந்த கட்டடங்கள் சீரமைக்கப்படும். ஆக மொத்தம் 113 கட்டடங்கள் கட்டப்படும். இவற்றில் தற்போது 101 இடங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இந்நிலையங்கள் முழுமையாக செயல்படத் தேவையான அனைத்து உபகரணங்கள் மற்றும் அறையணிகள் வழங்கப்படும். இத்துடன் மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்திட கால்நடை வளர்ப்பில் ஆர்வமுள்ள 82 இளைஞர்களுக்கு முதலுதவி, குடற்புழு நீக்கம், தடுப்பூசி மற்றும் இனப்பெருக்க உதவி பற்றிய பயிற்சியும், 10,000 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு பற்றிய பயிற்சியும் அளித்திட பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம்

மாநிலத்தின் தடுப்பூசித் தேவையை பூர்த்தி செய்வதில் இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம் முதுகெலும்பாக செயல்பட்டு வருகிறது. கால்நடைகள் மற்றும் கோழியினங்களைக் காக்க தடுப்பூசி மற்றும் உயிர்காக்கும் மருந்துகள் இந்நிலையத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையத்தில் தற்போது 5 வகையான நுண்ணுயிர் தடுப்பு மருந்துகள், 5 வகையான நச்சுயிர் தடுப்பு மருந்துகள், 7 வகையான நோய் ஆய்வுக் கலவைகள், 9 வகையான மருந்துகள் மற்றும் ஒரு கரைப்பான் தயாரிக்கப்படுகிறது. இத்துடன், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக உதவியுடன் கோமாரி நோய்க்கான அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம் கோமாரி நோய்க் கிளர்ச்சியை ஆய்வு செய்வதற்காகவும், நச்சுயிரியை வகைப்படுத்துவதற்காகவும் செயல்படுகிறது.

[2007 ஏப்ரல் 27

2006-2007-ல் தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு மற்றும் 2007-2008-ல் உத்தேசமாகத் தயாரிக்கப்பட இருக்கும் பொருட்களின் மதிப்பு பின்வருமாறு:—

| இனங்கள் | 2006–2007 (ரூ.இலட்சத்தில்) | 2007–2008 (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| நுண்ணுயிர் தடுப்பு மருந்துகள் | 299.09 | 325.00 |
| நச்சுயிர் தடுப்பு மருந்துகள் | 97.70 | 175.00 |
| நோய் ஆய்வுக் கலவைகள் | 0.53 | 1.00 |
| மருந்துகள் | 2.94 | 10.00 |
| கரைப்பான் | 3.45 | 4.50 |
| மொத்தம் | 403.71 | 515.50 |

தடுப்பூசி உற்பத்தியில் சர்வதேசத் தரத்தினை எய்திட, தடுப்பூசி உற்பத்தி செய்யும் ஆய்வுக் கூடங்கள், நல்ல தயாரிப்பு வழிமுறைகள் தரத்திற்கு மேம்படுத்தப்பட வேண்டும். இதன் முதற்கட்டமாக கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு மாநிலங்களுக்கு உதவி (அஸ்காட்) திட்டத்தின் கீழ், கோழி தடுப்பூசி உற்பத்தி ஆய்வுக்கூடம் நல்ல தயாரிப்பு வழிமுறைகள் (GMP) தரத்திற்கு மேம்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையத்தின் மற்ற தடுப்பூசி தயாரிக்கும் ஆய்வுக் கூடங்கள் மற்றும் தரக்கட்டுப்பாடு பிரிவு நபார்டு உதவியுடன் நல்ல தயாரிப்பு வழிமுறைகள் தரத்திற்கு மேம்படுத்தப்பட உள்ளது.

நிலையத்தின் கோழி தடுப்பூசி ஆய்வுக் கூடத்திற்கு நீராவி பதன் மாற்றி, முட்டை அடைப்பெட்டி மற்றும் தானியங்கி கண்ணாடி பொருட்களை கழுவும் இயந்திரம் ஆகிய இன்றியமையாத உபகரணங்கள் ரூ. 38.00 இலட்சத்தில் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. நீலநாக்கு நோயிலிருந்து ஆடுகளைக் காத்திட, முதன்முறையாக சோதனை அடிப்படையில் 8,000 டோஸ் நீலநாக்கு நோய் தடுப்பூசி தயாரிக்கப்பட்டு திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்துடன் "பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை நோய்களை தடுப்பூசி மூலம் கட்டுப்படுத்துதல்" பற்றிய பயிற்சி 60 கால்நடை ஆய்வாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## நோய் கண்டறியும் பணிகள்

நலமான கால்நடைகள் அதிக இலாபம் ஈட்டித்தரும். கால்நடை பராமரிப்பின் நான்கு தூண்களான இனப் பெருக்கம், தீவனம் வழங்குதல், மேலாண்மை மற்றும் நோய் கட்டுப்படுத்துதலில், நோய் கட்டுப்படுத்துதலே மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில், கால்நடைகளின் உற்பத்தித் திறனை வெகுவாக பாதிப்பது இதுதான். மேலும், கால்நடைகள் நோய்க்கு இரையாவதால், மேம்படுத்தப்பட்ட இனங்கள் மற்றும் நல்ல தீவனம் வழங்குதல் போன்ற பயன்கள் வெகுவாக பாதிக்கப்படுகிறது. இவை அதிக அளவில் இறப்பினை உண்டாக்குவதுடன், கால்நடைகளின் உற்பத்தி மற்றும் வேலைத் திறனை வெகுவாக பாதிக்கின்றது. பொதுவாக விவசாயிகள், நோய் வாராமல் தடுப்பதிலும் தடுப்பூசி போட்டு அவற்றைக் கட்டுப்படுத்துவதிலும் ஆர்வம் காட்டாமல், நோய் கண்டபின் சிகிச்சை மூலம் நோயைக் குணப்படுத்துவதிலேயே ஆர்வம் காட்டுவதால், இத்துறை நோய் வராது தடுப்பதிலும், அவற்றை அறவே ஒழிக்கும் பணிகளிலும் பெரும் பங்காற்றி வருகின்றது. நோய்களை முறையாகக் கட்டுப்படுத்துவதிலும் படிப்படியாக நோய்களைக் குறைப்பதிலும், இறுதியாக அவற்றை அறவே ஒழிக்கும் பணிகளிலும் பெரும் பங்கேற்றுள்ளது.



2007 ஏப்ரல் 27]

**கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள்:** நோய்க் கிளர்ச்சிகள் பற்றி முன்னெச்சரிக்கை சமிக்ஞைகளை அளிக்க ஒரு நோய் கடுங்கண்காணிப்பு முறை அவசியமாகும். அதே வேளையில் நோய்த் தொற்று, அறிவியல் முறையாக நோய்கள் பற்றிய பகிர்வு மற்றும் உடல் நலக் கேட்டிற்கான பிரச்சினைகள் எவற்றில் உண்டாகின்றன என்பதை உறுதி செய்திட உதவுகிறது. இதன் பொருட்டு மாநிலத்தில் கீழ்கண்ட 19 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் செயல்படுகின்றன:—

| வ. எண் | கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு | உள்ளடங்கிய மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 2 | கடலூர் | கடலூர் |
| 3 | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 4 | ஈரோடு | ஈரோடு |
| 5 | காஞ்சிபுரம் | சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் |
| 6 | கரூர் | கரூர் |
| 7 | கிருஷ்ணகிரி | தருமபுரி, கிருஷ்ணகிரி |
| 8 | மதுரை | மதுரை, தேனி |
| 9 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம், திருவாரூர் |
| 10 | சேலம் | சேலம், நாமக்கல் |

[2007 ஏப்ரல் 27

| வ. எண் | கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு | உள்ளடங்கிய மாவட்டங்கள் |
|---|---|---|
| 11 | சிவகங்கை | சிவகங்கை, இராமநாதபுரம் |
| 12 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், புதுக்கோட்டை |
| 13 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 14 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் |
| 15 | திருநெல்வேலி | திருநெல்வேலி, கன்னியாகுமரி |
| 16 | உதகமண்டலம் | உதகமண்டலம் |
| 17 | வேலூர் | வேலூர், திருவண்ணாமலை |
| 18 | விழுப்புரம் | விழுப்புரம் |
| 19 | விருதுநகர் | விருதுநகர் |

கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளின் முக்கியப் பணிகள் பின்வருமாறு:

- நோய் ஆய்வில் களப்பணி அலுவலர்களுக்கு உதவுதல்.
- நோய்க் கிளர்ச்சிகளைக் கண்காணித்தல் மற்றும் நோய் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்த களப்பணியாளர்களுக்கு உதவுதல்.
- அப்பகுதியில் உள்ள கால்நடைகள் உடல் நலம் பற்றி கண்காணித்தல்.
- தடுப்பூசித் திட்டங்களில் ஊநீர் கண்காணித்தல்.
- பறவைக் காய்ச்சல் நோய் கடுங்கண்காணிப்பு.

நோய்த் தடுப்பு மற்றும் கடுங்கண்காணிப்பை வலுப்படுத்துவதற்காக 2006-2007-ல், கரூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம் மற்றும் விருதுநகர் ஆகிய 4 இடங்களில் ரூ.60.88 இலட்சம் செலவில் புதிய கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும், அனைத்து கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணி, நபார்டு ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதி உதவியுடன் வலுப்படுத்தப்பட்டு வருகின்றது. 2006-2007-ல் இக்கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் நோய்களைக் கண்டறிய 88 நோய்க் கிளர்ச்சிகளில் உடனிருந்து 2.64 இலட்சம் மாதிரிகளை பரிசோதனை செய்துள்ளன.



2007 ஏப்ரல் 27]

**கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்கள்:** கோழிகள் அதிகமாக வளர்க்கப்படும் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு 2 கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள், ஒன்று நாமக்கல் மாவட்டத்தில் ஆண்டகளூர்கேட்டிலும் மற்றொன்று ஈரோட்டிலும் செயல்பட்டு வருகின்றன. இவை, பிரேதப் பரிசோதனை செய்வது, மலம், இரத்தம் மற்றும் இதர மாதிரிகளைப் பரிசோதனை செய்து நோய்களைத் துல்லியமாகக் கண்டறிவதில் ஈடுபட்டுள்ளன. இத்துடன் நோய்த் தடுப்பு, நோய் கண்டறிவது மற்றும் பல்வேறு தொற்று நோய்கள் மற்றும் ஒட்டுண்ணி நோய்களைக் கட்டுப்படுத்துவது பற்றி விவசாயிகள் அறிய தொழில்நுட்ப உதவிகளை அளித்து வருகின்றன. 2006-2007-ல், 1,317 கோழிப் பண்ணைகளும், 1,116 கிராமங்களும் பார்வையிடப்பட்டு, 7,294 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டன. இவ்விரண்டு கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்களின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணி, நபார்டு ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதி உதவியுடன் வலுப்படுத்தப்பட்டு வருகின்றது.

**மத்திய தொடர்பு ஆய்வுக் கூடம்:** தலைமை ஆய்வகமான மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம், கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் மற்றும் கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்களின் பணிகளை ஒருங்கிணைக்கவும், களப் பணியாளர்களுக்கு நோய் ஆய்வு தொடர்பான பணிகளில் உதவுவதிலும் ஈடுபட்டு வருகிறது. இந்த ஆய்வுக்கூடம், ஆட்டுக்கொல்லி நோய்க்கான "எலிசா" சோதனையையும், பண்ணைகளில் உள்ள கால்நடைகளில் பல்வேறு நோய்களைக் கண்டறியவும், கால்நடை ஏற்றுமதிப் பொருட்களை பரிசோதிக்கவும் மற்றும் நலச் சான்று வழங்குவதிலும் ஈடுபட்டுள்ளது. இந்த ஆய்வுக்கூடம் பறவைக் காய்ச்சல் நோய்பற்றி கோழிப் பண்ணையாளர்களுக்கு விழிப்புணர்ச்சி மற்றும் அவசர காலத்தில் கள கால்நடை மருத்துவர்கள் (துரித செயல்பாட்டுக் குழுக்கள்) செயலாக்கம் குறித்து பயிற்சி அளிப்பதில் முக்கியப் பங்காற்றி வருகின்றது. 2006-2007-ல், 3,182 மாதிரிகள் பல்வேறு நோய்களுக்காகப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. இத்துடன் கால்நடைப் பண்ணைகளில் 1,047 கால்நடைகளுக்கு காசநோய், கருச்சிதைவு மற்றும் இதர நோய்கள் கண்டறிய சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதுமட்டுமல்லாமல் பறவைக் காய்ச்சல் நோய் உள்ளதா என்று கண்டறிய, 5,698 ஊநீர் மாதிரிகள் பெங்களூரில் உள்ள தெற்கு மண்டல நோய் ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

[2007 ஏப்ரல் 27

**நோய் அறவே ஒழித்தல்**

கால்நடை நோய்களை தடுப்பது மற்றும் அறவே ஒழிப்பது இலாபகரமான கால்நடை உற்பத்திக்கு மட்டுமின்றி நமது கால்நடைகள் மற்றும் கால்நடை பொருட்கள் உலகச் சந்தையில் ஏற்றுக்கொள்ளவும் அத்தியாவசியமாகும். தொற்று நோய்களால் பன்னாட்டு ஏற்றுமதிச் சந்தையை நமது நாடு முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள இயலவில்லை. ஏனெனில் இந்திய கால்நடைகள் மற்றும் கால்நடைப் பொருட்கள் ஏற்றுமதியைப் பெருக்க "Office International Epizootics" என்ற பன்னாட்டு நிறுவனம் நிர்ணயித்துள்ள தரக் கட்டுப்பாட்டினை உறுதி செய்யும் போதுதான் அவை உலகச் சந்தையில் நுழைந்து போட்டியிட இயலும்.பல்வேறு நோய்களைக் கட்டுப்படுத்துவதில் இத்துறை குறிப்பிடத்தக்க சாதனையை எய்தியுள்ளது.

மாடுகள் மற்றும் ஆடுகளில் மிகப் பெரிய அளவில் இறப்பை ஏற்படுத்தி வந்த வெக்கை நோயை அடியோடு ஒழித்தது, அடையாளம் கண்டுகொள்ளத்தக்க மிக முக்கியமானதாகவும், பெரும் திருப்பு முனையாகவும் அமைந்தது. தேசிய வெக்கைநோய் ஒழிப்புத் திட்டத்தினை செயல்படுத்தியதன் விளைவாகவே இச்சாதனையை அடைய முடிந்தது. 2004 ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து நமது மாநிலம் வெக்கை நோய் இல்லா மாநிலமாக அறிவிக்கப்பட்டது. இந்த நோயைத் திறமையுடன் கட்டுப்படுத்த இத்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் முக்கிய மைல் கல்லாக அமைந்துள்ளன. 1998-1999 ஆம் ஆண்டு முதல் பிணி சார்ந்த கடுங்கண்காணிப்பு மற்றும் ஊநீரில் கடுங்கண்காணிப்பு சோதனைகளை மேற்கொள்வதன்மூலம் வெக்கை நோய்க்கிருமி ஏதேனும் மறைந்துள்ளதா என்றும், வெக்கை நோய் எதிர்ப்புத் திறன் வாய்ந்த நோய் எதிர்ப்பான்கள் காணப்படுகின்றனவா என்பது போன்ற சோதனைகளையும் மேற்கொண்டு வருகிறது. 2006-2007-ல் 51,614 கிராமங்கள் மற்றும் 31,268 கால்நடை வழித்தடங்களில் வெக்கை நோய் கிருமி ஏதேனும் மறைந்துள்ளதா என்று பரிசோதிக்கப்பட்டது. இதுவரை நோய் அறிகுறிகள் ஏதும் தென்படவில்லை.

பலதரப்பட்ட நோய்த் தடுப்பு, கண்டறிதல் மற்றும் கட்டுப்படுத்துதல் நடவடிக்கைகளினால் பல நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. 2004-2005-ல் 436 ஆக இருந்த கால்நடை நோய்க் கிளர்ச்சிகள், 2005-2006-ல் 151 ஆகக் குறைந்துள்ளது. இது 2006-2007-ல் 109 ஆகக் குறைந்துள்ளது. இதனால் கால்நடைகளில் நோய் இறப்பு குறைந்துள்ளதுடன், உற்பத்தித் திறன் அதிகரித்து, விவசாயிகள் அதிக இலாபம் அடைந்திட உறுதி செய்யப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 27]

**கால்நடை பொது சுகாதாரம்**

நவீன உலகில், விலங்கிலிருந்து மனிதனுக்குப் பரவும் நோய்கள் முக்கிய பொது சுகாதாரப் பிரச்சினைகளாக உருவாகியுள்ளன. பெரும்பாலான மக்கள் கிராமப்புறங்களில் வசிப்பதாலும், அவர்களின் விவசாயம் செய்யும்முறை கால்நடைகளையே நம்பி இருப்பதாலும், விலங்கிலிருந்து மனிதனுக்குப் பரவும் நோய்களைக் கண்காணித்து, தடுத்து, கட்டுப்படுத்தி, முடிந்தால் அறவே ஒழித்தலுக்கு கால்நடை நலச் சேவைகளின் பங்களிப்பு முக்கியமானது. இதுசம்பந்தமாக நடைபெறும் சில பணிகள் பின்வருமாறு:

**(அ) வெறிநாய்க்கடி நோய் தடுப்புத் திட்டம்**

விலங்கிலிருந்து மனிதனுக்குப் பரவும் நோய்களில், பண்டைக் காலம் தொட்டே மனித இனத்தைத் தாக்கும் முக்கியமான நோய் வெறிநாய்க்கடி நோயாகும். கால்நடைகளில் இந்நோய் பரப்புவதில் நாய்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. வெறிநாய்க்கடி நோய்க்கு தடுப்பூசி மற்றும் செல்லப் பிராணிகள் சுகாதாரம் இந்நோயைக் கட்டுப்படுத்த முக்கியமானதாகும். இக்குறிக்கோளுடன், வெறிநாய்க்கடி நோய்த் தடுப்புப் பிரிவு மதுரை மற்றும் திருநெல்வேலியில் இயங்கி வருகின்றன.

**இப்பிரிவுகளின் முக்கியப் பணிகள்:**

- முறையான மற்றும் காலமுறைப்படி வீடுவீடாகச் சென்று வளர்ப்பு நாய்களுக்கு உரிய கட்டணத்துடன் வெறிநாய்க்கடி தடுப்பூசி போடுதல்;
- நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் நாய்களுக்கு இலவசமாகத் தடுப்பூசி போடுதல்; மற்றும்
- பொதுமக்களிடையே இந்நோய் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் விளக்கக் குறிப்புகள் விநியோகித்தல் மற்றும் நாய்க் கண்காட்சி நடத்துதல்மூலமாக தகுந்த விளம்பரம் மற்றும் பிரச்சாரம் செய்தல்.

2006-2007-ல், இந்நிலையங்களில் 6,965 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

[2007 ஏப்ரல் 27

## (ஆ) தடுப்பூசி போடுதல் மற்றும் குடற்புழு நீக்கம்

மாநிலமெங்கும் இத்துறை கால்நடை மற்றும் கோழிகளுக்கு முறையாகத் தடுப்பூசி போடுதல் மற்றும் குடற்புழு நீக்கம் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றது. இதனால் அடைப்பான், கன்று வீச்சு மற்றும் நாடாப்புழு, ஸ்டராங்கைலாசிஸ் (Strongylosis), ஆம்பிஸ்டோமியாசிஸ் (Ampistomiasis), போன்ற அபாயகரமான நோய்கள் மேலும் பரவாமல் தடுக்கப்படுகிறது. முறையான குடற்புழு நீக்கம் கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் செய்வதன் பலனாக மனிதனுக்குப் பரவாமல் தடுக்கப்படுகிறது.

## (இ) இறைச்சி ஆய்வு

மாநிலமெங்கும் உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் 109 பதிவு செய்யப்பட்ட இறைச்சிக் கூடங்களில் முறையான இறைச்சி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் இறைச்சியை உண்ணும் பொதுமக்கள் நாடாப்புழு மற்றும் தசைப்பகுதிக்குள் வளரும் ஒட்டுண்ணிகள் போன்ற நோய்களிலிருந்து காக்கப்படுகிறார்கள்.

## விரிவாக்கப் பணிகள்

விரிவாக்கப் பணியும், பிரச்சாரப் பணியும் அடிப்படை மற்றும் தற்கால கால்நடை பராமரிப்பு முறைகள் மற்றும் நோய் கண்டறிதலை அறிந்துகொள்ள முக்கியக் கருவியாக உள்ளது. இதனால், விவசாயிகள் தினம் தினம் எதிர்கொள்ளும் பல்வேறு களப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய நோய்களைக் கட்டுப்படுத்தவும் வழி வகுக்கும். மேலும், இத்துறையின் திட்டங்களும், செயல்முறைகளும் பற்றி பொது மக்கள் வெளிப்படையாகத் தெரிந்து கொள்ளவும் உதவும்.

"காண்பதே கற்றல்" என்ற கொள்கையின்படி, பல்வேறு கால்நடை பராமரிப்பு முறைகள் மற்றும் நோய் கண்டறிதல் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைக்க இத்துறை, கிடைக்கும் எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொண்டு வருகிறது. இத்துறை, உள்ளூர் விழாக்கள், பொருட்காட்சிகள் மற்றும் இதர நிகழ்ச்சிகளில் கண்காட்சிகளை நடத்தி கால்நடை பராமரிப்பின் தற்கால நவீன தொழில்நுட்பங்களையும் கால்நடை பொதுச் சுகாதாரம் குறித்த அணுகுமுறையையும் பொதுமக்களுக்கு எடுத்துரைத்து வருகின்றது.



2007 ஏப்ரல் 27]

2006-2007-ல் இத்துறை கலந்துகொண்ட சில கண்காட்சிகள் பின்வருமாறு:

- கோடைவிழா: கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி மற்றும் கடலூர்
- அகில இந்திய மாம்பழ விழா, கிருஷ்ணகிரி
- கார்த்திகை தீப விழா, திருவண்ணாமலை
- 33-வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி, சென்னை

இத்துடன் கால்நடை பராமரிப்புத் துறை ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 7.30 மணி முதல் 8.00 மணி வரை அகில இந்திய வானொலியில் 720 கிலோ ஹெர்ட்ஸ் அலைவரிசையில் "வீடும் வயலும்" நிகழ்ச்சியில் சிறந்த கால்நடை மேலாண்மை முறைகள், கால்நடைகளைத் தாக்கும் நோய்கள் மற்றும் அதனைக் கட்டுப்படுத்துதல், பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்கள் பற்றிய விவரங்களை ஒலிபரப்பி வருகின்றது.

## பிராணி நலத் திட்டங்கள்

கால்நடைகள் கொடூரமான முறையில் நடத்தப்படுவதைத் தடுக்கவும், அவற்றை மனிதாபிமான முறையில் நடத்தவும் தமிழக அரசு இந்திய பிராணிகள் நல வாரியத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

இது குறித்து எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள்:

- தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் பிராணிகள் வதை தடுப்பு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை தலைமையின்கீழ் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியாளரின் தலைமையின் கீழ் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டும்போதும், போக்குவரத்தின்போதும் கொடூரமான முறையில் நடத்தப்படுவதைத் தடுக்க, தமிழ்நாடு கால்நடை இறைச்சி வெட்டுவோர் சங்கத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 27

- 'கால்நடைகளுக்காக மக்கள்' அமைப்பின் (People for Animals) சேவைகளைப் பயன்படுத்தி கால்நடைகளை மனிதாபிமான முறையில் நடத்துவதற்கு செய்யவேண்டியவை/ செய்யக்கூடாதவை பற்றி விளக்கும் விவரப் பலகை, கால்நடைச் சந்தைகள் மற்றும் முக்கிய இடங்களில் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- 20 கால்நடைச் சந்தைகளில் கால்நடை முதலுதவி நிலையங்கள் கட்டப்பட்டன.

### தெரு நாய்களின் பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்தும் திட்டம்

நகராட்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் தெரு நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த மத்திய அரசு கால்நடை பிறப்பு தடுப்பு (நாய்கள்) விதிகளை ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

- தெரு நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துதல்.
- வெறிநாய்க்கடி நோயால் ஏற்படும் நிகழ்வுகளைக் குறைத்தல்.
- ஆரோக்கியமான தெரு நாய்கள் கொல்லப்படுவதைத் தடுத்தல்.

இத்திட்டத்தின்கீழ் தெரு நாய்கள் மனிதாபிமான முறையில் பிடிக்கப்பட்டு, கருத்தடை செய்யப்பட்டு, வெறிநாய்க்கடி தடுப்பூசி போடப்பட்டு அவை பிடித்து வரப்பட்ட பகுதிகளிலேயே மறுபடியும் விடப்படுகின்றன. நகராட்சி நிர்வாகத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் இந்திய கால்நடை நல வாரியம் ஆகியவை ஒருங்கிணைந்து, 5 மாநகராட்சிகள் மற்றும் 50 நகராட்சிகளை உள்ளடக்கி 2.03 இலட்சம் நாய்களில், தெருநாய்களின் பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்தும் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### 11-வது ஐந்தாண்டுத் திட்டம்

### (2007-2008 முதல் 2011-2012 வரை)

11-வது ஐந்தாண்டுத் திட்டம் துறையிலுள்ள வலிமை மற்றும் வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டும், குறைபாடுகளை நீக்கியும், அச்சுறுத்தல்களை எதிர்கொண்டும், கீழ்க்கண்ட நோக்கங்களுடன் வரையறுக்கப்பட்டுள்ளது:



2007 ஏப்ரல் 27]

- மாட்டினங்களில் செயற்கை முறை கருவூட்டல் பணியை அதிகரிப்பது மற்றும் வெள்ளாடுகளில் செயற்கை முறை கருவூட்டலை அறிமுகப்படுத்தி, இனப்பெருக்க சேவைகளை மேம்படுத்துதல்.
- பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் கால்நடை மருத்துவ சேவை மற்றும் இனப்பெருக்க உதவியை விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே அளித்தல்.
- மேய்ச்சல் நிலங்களை புத்துயிரூட்டியும், தனியார் நிலங்களில் கூடுதல் நிலத்தில் பசுந்தீவனம் சாகுபடி செய்து, பசுந்தீவனம் கிடைப்பதை அதிகரித்தல்.
- நோய் கண்டறிதல், கண்காணித்தல் மற்றும் கடுங்-கண்காணித்தல் நடவடிக்கைகளை வலுப்படுத்துதல்.
- தடுப்பூசி மருந்துகளை எடுத்துச் செல்லும்போது அவற்றின் குளிர்த் தன்மையை மேம்படுத்தி மற்றும் கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தின் அனைத்து தடுப்பூசி தயாரிப்பு ஆய்வுக் கூடங்களை நல்ல தயாரிப்பு வழிமுறைகள் தரத்திற்கு உயர்த்தி, கால்நடை தடுப்பு மருந்துகளின் தரம் மற்றும் ஆயுட்காலத்தை அதிகரித்தல்.
- கால்நடைப் பொருட்களை கெட்டுப் போகாமல் பாதுகாக்க, பொது - தனியார் பங்களிப்போடு குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்.
- விவசாயிகள் மற்றும் துறை அலுவலர்களின் ஆற்றலை பல்வேறு பயிற்சிகள் வாயிலாக மேம்படுத்துதல்.
- மேலாண்மைத் தகவல் அமைப்பு மற்றும் விரிவாக்கப் பணிகளை வலுப்படுத்துதல்.

### 2006-2007 திட்ட செயல்பாடுகள் முன்னேற்றம்

- நான்கு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், கரூர் மற்றும் விருதுநகரில் தோற்றுவிக்கப்பட்டு இயங்கி வருகிறது. இப்பிரிவுகளுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்பிரிவுகளுக்குத் தேவையான உபகரணங்கள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின்மூலம் உபகரணங்கள் வாங்க நிதி வழங்கப்பட்டு, அவர்களால் உபகரணங்கள்

வழங்கப்பட்டு வருகின்றன. 2 மாதங்களில் பணிகள் முடிவடையும். இப்பிரிவுகளுக்காக நபார்டு உதவியுடன் தனிக் கட்டடங்கள் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- 6 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகளுக்கு வாகனங்கள் புதியதாக வழங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன. 55 பிரிவுகளுக்கும் தேவையான உபகரணங்கள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின்மூலம் வாங்க நிதி வழங்கப்பட்டு, அவர்களால் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2 மாதங்களில் பணிகள் முடிவடையும்.
- மண்டல இணை இயக்குநர், இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலிக்கு இலகு ரக வாகனம் வழங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன.
- மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் வட்டத் தலைமையிடங்களில் உள்ள கால்நடை நிலையங்களுக்கு தகவல் தொடர்பு வசதி ஏற்படுத்தும் வகையில், 130 செல்பேசி வாங்கப்பட்டு மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் தொலைபேசி வசதி இல்லாத இதர வட்டத் தலைமையிடங்களில் உள்ள கால்நடை நிலையங்களுக்கு வழங்கப்பட்டு தற்போது உபயோகத்தில் உள்ளன.
- இராணிப்பேட்டை, நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள கோழி தடுப்பு மருந்து ஆய்வுக் கூடத்திற்குத் தேவையான இன்றியமையாத உபகரணங்கள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின்மூலம் வாங்க நிதி வழங்கப்பட்டு, அவர்களால் வழங்கல் ஆணை வழங்கப்பட்டு, 3 மாதங்களில் பணிகள் முடிவடையும்.
- ஓசூர் மற்றும் செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் ஒருங்கிணைந்த தீவன அபிவிருத்தி செய்ய தலா 5 உரக்குழிகள் கட்டுவது மற்றும் செட்டிநாடு பண்ணையில் 50 ஏக்கர் நிலம் முல்லை மேய்ச்சல் நிலமாக மாற்றுவது ஆகிய பணிகளில், உரக்குழிகள் கட்டும் பணி பொதுப் பணித் துறையினரால் செயல்படுத்தப்பட்டு 3 மாதங்களில் பணிகள் முடிவடையும். செட்டிநாடு பண்ணையில் 50 ஏக்கர் நிலத்தை முல்லை மேய்ச்சல் நிலமாக மாற்றிட ஒரு டிராக்டர் வழங்கப்பட்டு, இதர பணிகள் நடைபெற்று வருகின்றன. மூன்று மாதங்களில் பணிகள் முடிவடையும்.





- தொலைதூரம் மற்றும் மலைப் பகுதிகளில் செயல்படும் 200 கால்நடை கிளை நிலையங்களுக்கு உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் மாற்றி வழங்கி வலுப்படுத்துவதற்காக, உபகரணங்கள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின்மூலம் வாங்க நிதி வழங்கப்பட்டு, உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2 மாதங்களில் பணிகள் முடிவடையும்.
- புதியதாக 10 கால்நடை மருந்தகங்கள் தொடங்கப்பட்டு, தேவையான மருந்துகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின்மூலம் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2 மாதங்களில் பணிகள் முடிவடையும்.
- புதியதாக 30 கால்நடை கிளை நிலையங்கள் தொடங்கப்பட்டு, தேவையான மருந்துகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின்மூலம் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2 மாதங்களில் பணிகள் முடிவடையும்.
- கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் குக்கிராம கால்நடைகளுக்கு கால்நடை மருத்துவ சேவை அளிப்பதற்காக, 2006-2007இல் மார்ச் முடிய, 2,695 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 37.44 இலட்சம் கால்நடைகள் பயனடைந்துள்ளன.
- சென்னை அடையாறில் பி.எஸ். குமாரசாமி ராஜா சாலையில் செல்லப் பிராணிகள் சிகிச்சை நிலையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக 250 கால்நடை உதவி மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஒரு மாத காலத்தில் பணியமர்த்தப்படுவர்.
- 438 துறை அலுவலர்களுக்கு பல்வேறு நிலைகளில் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. 172 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

## 2007–2008 ஆம் ஆண்டுக்கான பகுதி–2இன் புதிய திட்டங்கள்

ஒரத்தநாடு மற்றும் அபிசேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் ரூ.60.00 இலட்சம் செலவில் கூடுதலாக 100 ஏக்கர் நிலம் பசுந்தீவன சாகுபடிக்குக் கொண்டு வந்து பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 27

## தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை

தேசிய மாட்டின மற்றும் எருமையின இனவிருத்தித் திட்டம், மாட்டினம் மற்றும் எருமையின மேம்பாட்டிற்காகவும் அவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காகவும் மத்திய அரசால் தொடங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை, தன்னாட்சி கொண்ட மாநிலச் செயல்பாட்டு நிறுவனமாக நிறுவப்பட்டு, மாட்டின மற்றும் எருமையின இனப்பெருக்கப் பணிகளை ஒருங்கிணைத்து செய்து வருகிறது. தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை, மாட்டினம் மற்றும் எருமையின மேம்பாட்டுப் பணிகளை 9-01-2003 முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகிறது.

### குறிக்கோள்

- ❖ மாட்டினம் மற்றும் எருமையினங்களின் எண்ணிக்கை மற்றும் பால் உற்பத்தியைப் பெருக்கி தனி நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 250 கிராம் பால் கிடைக்கச் செய்வதே இம்முகமையின் பிரதான குறிக்கோளாகும்.
- ❖ செயற்கை முறை கருவூட்டல் வசதி மற்றும் பொலிகாளைமூலம் அனைத்து இனப்பெருக்க வயதிலுள்ள பசு மற்றும் எருமைகளை இனப்பெருக்கத் திட்டத்தின்கீழ் கொண்டு வருதல்.
- ❖ செயற்கை முறை கருவூட்டல் செய்யப்படும் பசு மற்றும் எருமைகளின் எண்ணிக்கையை முறையே 7 சதவிகிதம் மற்றும் 9 சதவிகிதம் என்ற விகிதத்தில் உயர்த்துவது.

### திட்ட உள்ளடக்கம்

1. விந்து உற்பத்தி நிலையங்கள், விந்து வங்கிகள் மற்றும் பயிற்சி நிலையங்களில் சிறந்த தர கட்டுப்பாட்டுடன் இயங்குவதற்கு
   - உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது
   - பொலிகாளைகள் மற்றும் விந்துவின் தரத்தினை நிர்ணயம் செய்தல்
2. விந்து உற்பத்திக்கு உயர்ந்த மரபியல் தன்மை கொண்ட தரமான காளைகளை அறிமுகப்படுத்துவது
   - தேர்வு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் மாடு வளர்ப்போர் சங்கங்களில் உள்ள சிறந்த மாடுகளின் பால் உற்பத்தித் திறனை பதிவு செய்தல்



2007 ஏப்ரல் 27]

   - வம்சாவழி சோதனை திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்துதல்
   - கருமாற்ற திட்டத்தினைச் செயல்படுத்துதல்
3. வீடுகளுக்குச் சென்று கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணியை மேற்கொள்வதற்கு ஊக்குவித்தல்
   - செயற்கை முறை கருவூட்டல் பணி செய்ய பயிற்சி அளித்தல்
   - தேவையான உறைவிந்து மற்றும் செயற்கை முறை கருவூட்டல் உபகரணங்களைக் கொள்முதல் செய்து வழங்குதல்
   - உறைவிந்து மற்றும் திரவ நைட்ரஜன் தங்குதடையின்றி நியாயமான விலையில் வழங்குதல்
4. தற்பொழுது இயங்கிவரும் நிலையான செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களை நிலையான மற்றும் நடமாடும் நிலையங்களாக மாற்றியமைத்தல்
   (அ) தூக்கிச் செல்வதற்கு எளிதான சிறிய உறைவிந்து குடுவைகளை வழங்குதல்.
   (ஆ) தரமான மரபியல் தன்மை கொண்ட உறைவிந்து குழல்களை வழங்குதல்.
   (இ) வீடுகளுக்குச் சென்று கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் மேற்கொள்ளும் பணியை அங்கீகரித்தல்.
5. இனப்பெருக்கப் பணி தொடர்பான செயல்பாட்டினைக் கூர்ந்து கண்காணிப்பதற்கு கணினிமயமாக்கல்.
6. நிறுவன மறு சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு செயற்கை முறை கருவூட்டல் பணிகளை நிறைவேற்றுதல்.
7. திரவ நைட்ரஜன் சேமிப்பு மற்றும் விநியோக முறையைச் சீர்படுத்துதல்.
8. திரவ நைட்ரஜன் அதிக அளவில் சேமிப்பதற்கும் அதிக அளவில் எடுத்துச் செல்வதற்கும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
9. இந்திய பாரம்பரிய கால்நடை இனங்களை அழிவிலிருந்து பாதுகாத்தல்.

10. மேற்குறிப்பிட்டவை தவிர இதர கருவூட்டல் பணியைச் சார்ந்த செயல்பாடுகள்.

இவ்வாண்டு இம்முகமையின் பணிகளை செயல்படுத்த மத்திய அரசு ரூ.497.50 இலட்சத்திற்கு இசைவளித்துள்ளது.

## திட்டப் பணிகள் (2006-2007)

1. உறைவிந்து உற்பத்தி நிலையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

அ. தமிழகத்தில் உள்ள 4 விந்து உற்பத்தி நிலையங்களுக்கும் இந்திய அரசின் "உறைவிந்து உற்பத்திக்குத் தேவையான குறைந்தபட்ச தர செயல்முறை"களின் அடிப்படையின்படி மிக முக்கிய நவீன உபகரணங்களாகிய நிரல் ஏற்ப உறைவிந்து உறைய வைக்கும் கருவி, ஒருங்கிணைந்த தானியங்கி விந்து குழல் நிரப்பி அடைத்து அச்சிடும் கருவிகள், டிஜிட்டல் போட்டோ மீட்டர்கள், பேஸ் காண்ட்ராஸ்ட் நுண்ணோக்கிகள், டிபரன்ஷியல் இன்டர்பியரன்ஸ் காண்ட்ராஸ்ட் நுண்ணோக்கிகள், உறைவிந்து குழல் மீது அச்சிடும் இங்க்ஜெட் பிரிண்டர்கள், ஆட்டோகிளேவ்கள், ஹாட் ஏர் ஓவன்கள் மற்றும் பிற கருவிகள் வாங்கி வழங்க 2006-2007 ஆம் ஆண்டு ரூ.600.10 இலட்சம் செலவிடப்பட்டது. உயரின கால்நடை பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை மற்றும் மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகை ஆகிய உறைவிந்து உற்பத்தி நிலையங்களுக்கு சர்வதேச தரச் சான்றிதழ் பெறும்பொருட்டு (ISO Certificate) இந்திய தரச் சான்று நிறுவனத்திடம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆ. 74 தரம்வாய்ந்த ஜெர்ஸி, கலப்பின ஜெர்ஸி, ஹோல்ஸ்டீன் ப்ரீசியன், கலப்பின ஹோல்ஸ்டீன் ப்ரீசியன் மற்றும் முர்ரா இனத்தைச் சேர்ந்த தரமான பொலிகாளைகள்/பொலிகாளைக் கன்றுகள் கொள்முதல் செய்யப்பட்டது.



| வ. எண் | காளைகள்/ பொலிகாளைகள் கொள்முதல் விவரம் பண்ணை வாரியாக | இனம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | உயரின கால்நடை பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை | கலப்பின ஜெர்சி | 26 |
| | | முர்ரா எருமை | 33 |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகை | ஹோல்ஸ்டீன் ப்ரீசியன் | 5 |
| | | ஜெர்சி | 4 |
| | | கலப்பின ஹோல்ஸ்டீன் ப்ரீசியன் | 5 |
| | | கலப்பின ஜெர்சி | 1 |
| | மொத்தம் | | 74 |

இ. கால்நடை பராமரிப்புத் துறையின் ஈச்சங்கோட்டை, உயரின கால்நடை பெருக்குப் பண்ணை, உதகை மாவட்ட கால்நடைப் பண்ணை மற்றும் ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையின் ஒரு பகுதி தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைக்கு மாடு மற்றும் எருமையின இனவிருத்தி மேம்பாட்டுப் பணிக்காகவும் அதன்மூலம் மாநிலத்தின் பால் உற்பத்தியைப் பெருக்கவும் மாற்றப்பட்டுள்ளது.

கால்நடை அபிவிருத்தி முகமை மேற்கொண்ட பணிகளால் மாநிலத்தில் உறைவிந்து உற்பத்தி கீழ்க்கண்டவாறு அதிகரித்துள்ளது:

(இலட்சங்களில்)

| ஆண்டு | மாவட்ட கால்நடை பண்ணை, ஓசூர் மாவட்ட கால்நடை பண்ணை, உதகை மற்றும் உயரின கால்நடை பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை | ஜெர்சி மையக்கரு மற்றும் பொலிகாளைப் பண்ணை, உதகை | மொத்தம் |
|---|---|---|---|
| 2005-06 | 18.15 | 15.33 | 33.48 |
| 2006-07 | 19.58 | 17.32 | 36.90 |

[2007 ஏப்ரல் 27

**2. புதிய நடமாடும் செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களை ஏற்படுத்தி மாநிலத்தில் செயற்கை முறை கருவூட்டல் பணி அமைப்பைப் பலப்படுத்துதல்**

(அ) 11 சுயமாகப் பணியாற்றும் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளைக் (Self employed veterinary graduates) கொண்டு வீட்டிற்கே சென்று கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணி செய்யும் வகையில் புதிய செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 138 சுயமாகப் பணியாற்றும் கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் விவசாயிகளின் வீடுகளுக்குச் சென்று செயற்கை முறை கருவூட்டல் பணி செய்து வருகின்றனர்.

(ஆ) 127 படித்த கிராமப்புற இளைஞர்களுக்கு வீடுகளுக்கே சென்று செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ள கருவூட்டல் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்நாள்வரை 498 இளைஞர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

(இ) 43 ஓய்வுபெற்ற கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை ஆய்வாளர்களுக்கு வீடுகளுக்குச் சென்று கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணிகளை மேற்கொள்ள இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை மொத்தம் 61 ஓய்வு பெற்ற கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை ஆய்வாளர்கள் விவசாயிகளின் வீடுகளுக்குச் சென்று செயற்கை முறை கருவூட்டல் பணி செய்து வருகின்றனர்.

(ஈ) செயற்கை முறை கருவூட்டல் பணி கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் தனியார் கருவூட்டல் பணியாளர்கள்மூலம் மாநிலத்தில் கருவூட்டல் பணி 2005-2006-ல் 45.82 இலட்சத்திலிருந்து 2006-2007-ல் 46.37 இலட்சமாக அதிகரித்துள்ளது. இதன்மூலம் நமது நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் கருவூட்டல் பணியில் தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்வதை தக்க வைக்கப்படுகிறது.

**3. நிலையான கால்நடை செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களை நடமாடும் செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களாக மாற்றுதல்**

(அ) கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்த 500 நிலையான கால்நடை செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள், நிலையான மற்றும் நடமாடும் செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 771 நிலையான மற்றும் நடமாடும் செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.



2007 ஏப்ரல் 27]

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தைச் சார்ந்த 227 நிலையான கால்நடை செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள் நடமாடும் செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 1,886 நடமாடும் செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**4. திரவ நைட்ரஜன் விநியோகத்தை சீர்படுத்தி பலப்படுத்துதல்**

(அ) அனைத்து உறைவிந்து விநியோக நிலையங்களுக்கும் மொத்தம் 300 திரவ நைட்ரஜன் குடுவைகள் மற்றும் 25 உறைவிந்து குழல் சேமிப்பு குடுவைகளும் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) அனைத்து செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களிலும் திரவ நைட்ரஜன் விநியோகம் மற்றும் இருப்பு சீராகவும், தங்குதடையின்றி வழங்கவும் ஏதுவாக 3,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட திரவ நைட்ரஜன் சேமிப்புக் கலன்கள் தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், திருச்சி, சேலம், வேலூர், தருமபுரி, மதுரை, திருநெல்வேலி, திருவண்ணாமலை, ஈரோடு மற்றும் சென்னை ஆகிய 10 இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

**5. வழங்கப்பட்ட பயிற்சிகள்**

(அ) தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையால், கால்நடை இனவிருத்திப் பணியை மேம்படுத்தவும் கால்நடை மேம்பாட்டிற்காகவும், 2006-2007 ஆம் ஆண்டு 200 கால்நடை மருத்துவர்களுக்கு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலும் மற்றும் 100 கால்நடை சார்பணியாளர்களுக்கு உயரின கால்நடை பெருக்குப்பண்ணை, ஈச்சங்கோட்டை மற்றும் தேசிய பால்வள வாரியத்தின் தென்மண்டல செயல்விளக்க மற்றும் பயிற்சி நிலையம்மூலமாகவும் பயிற்சி அளிக்க வழிவகை செய்யப்பட்டது.

[2007 ஏப்ரல் 27

(ஆ) 33 கள கால்நடை மருத்துவர்களுக்கு உயர் தொழில்நுட்பப் பயிற்சி கேரளா கால்நடை மேம்பாட்டு வாரியம்மூலம் வழங்கப்பட்டது.

(இ) விந்து உற்பத்தி நிலையங்களில் பணிபுரியும் 4 பணியாளர்களுக்கு உறைவிந்து உற்பத்திப் பயிற்சி குஜராத் சபர்மதி ஆசிரமத்திலுள்ள உறைவிந்து உற்பத்தி நிலையத்தில் அளிக்கப்பட்டது.

(ஈ) 20 கால்நடை மருத்துவர்களுக்கும், 29 விரிவாக்க அலுவலர்களுக்கும் மத்திய அரசு உறைவிந்து உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையத்தில் கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறனைப் பதிவு செய்தல் திட்டம் செயல்படுத்த பயிற்சி அளிக்கப்பட்டது.

## 6. வம்சாவழி சோதனைத் திட்டம்

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின்மூலம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை நிதி உதவியுடன் ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு 8 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் இணைக்கப்பட்டுள்ள 160 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின்மூலம் வம்சாவழி சோதனைத் திட்டம் 15 வருவாய் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மூன்றாவது அணி சோதனை முடிக்கப்பட்டு முடிவுகள் எதிர்பார்க்கப் படுகின்றன. 4 மற்றும் 5-வது அணியிலுள்ள காளைகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

## 7. சிறந்த கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறனை பதிவு செய்தல் திட்டம்

13 வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கிய 7 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் இணைக்கப்பட்டுள்ள 300-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 1,600 சிறந்த கலப்பின ஜெர்சி பசுக்கள் காசநோய், ஜோனீஸ் நோய் மற்றும் கருச்சிதைவு நோய்களுக்கான ஆய்வு செய்து பின் தேர்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட ஜெர்சி கலப்பின பசுக்கள் திறன் உறுதி செய்யப்பட்ட பொலிகாளைகளிலிருந்து பெறப்பட்ட உறைவிந்து கொண்டு கருவூட்டல் செய்து அதன்மூலம் பிறந்த பொலிகாளை கன்றுகள் உறைவிந்து உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும்.



2007 ஏப்ரல் 27]

## 8. கருமாற்றத் திட்டம்

இத்திட்டம் உயர்தர காளைகளை உற்பத்தி செய்ய தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் வழியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 99 மாற்றம் செய்யக்கூடிய கலப்பின ஜெர்சி கருக்கள் சேகரிக்கப்பட்டு, அவற்றில் 21 எண்ணிக்கை கருமாற்றம் செய்யப்பட்டுள்ளன. அதில் 5 எண்ணிக்கை சினை உறுதி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள கருக்கள் பிற்கால உபயோகத்திற்காக திரவ நைட்ரஜனில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இந்த கருக்களை ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்குப் பண்ணை மற்றும் உதகை மற்றும் ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையிலுள்ள பசுக்களில் கருமாற்றம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## 9. பாரம்பரிய இனங்களை அழிவிலிருந்து பாதுகாத்தல்

காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி காளைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்து குழல்கள், இவ்வினங்கள் பராமரிக்கப்படும் இடங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு 2006-2007ஆம் ஆண்டில் காங்கேயம் இனத்தில் 1.16 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல்களும் உம்பளாச்சேரி இனத்தில் 0.02 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 10. பிரச்சாரம் மற்றும் விளம்பரம்

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை நிதியுதவியுடன் சென்னை, பிரசார்பாரதி வானொலிமூலமாக வாரந்தோறும் 30 நிமிட நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சி "கால்நடை செல்வம்" என்ற பெயரில் வாரந்தோறும் சனிக்கிழமை இரவு 7-30 மணிக்கு ஒலிபரப்பாகிறது. இந்நிகழ்ச்சியில் தொழில்நுட்ப வல்லுநர்களின் உரை, கால்நடை பராமரிப்பு பற்றிய கலந்துரையாடல், தொழில்நுட்ப வல்லுநர் மற்றும் கால்நடை பண்ணையாளர்களுடன் நேர்முக நிகழ்ச்சிகள், ஆண்டு முழுவதும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

விரிவாக்கப் பணிக்காக ஏற்படுத்தப்படும் அனைத்துக் கண்காட்சிகளிலும் கால்நடை வளர்ப்பு தொடர்பான செய்திகள் மற்றும் செயல்முறைகள் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்படுகின்றன.

## 11. ஆன்ட்ராலஜிக்கல் ஆய்வுக்கூடம் (Andrological Lab)

உற்பத்தி செய்து விநியோகிக்கப்படும் உறைவிந்து குழல்களின் தரத்தை உறுதிசெய்ய சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் ஆன்ட்ராலஜிக்கல் ஆய்வுக்கூடம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை நிதியுதவியுடன் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### கால்நடைக் காப்பீட்டுத் திட்டம்

இந்தியா முழுவதும் 100 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் கால்நடை காப்பீட்டுத் திட்டத்தை இம்மாநிலத்தில் செயல்படுத்த, தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை செயல்பாட்டு நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டு கால்நடை காப்பீடுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் இவ்வாண்டு அதிக பால் கறவைத் திறன் கொண்ட 1 இலட்சம் கறவை மாடுகள் சேலம், கோவை, நாமக்கல், ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய 5 மாவட்டங்களில் காப்பீடு செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பசு மற்றும் எருமைகளை காப்பீடு செய்யத் தேவையான தொகையில் 50 சதவிகிதம் அரசு மானியமாகவும், 50 சதவிகிதம் கால்நடை வளர்ப்போர்களிடமிருந்தும் பெற்று செயல்படுத்தப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.6.88 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலமாக 90,072 கால்நடைகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.

### 2006-2007 திட்ட செயல்பாடுகள் முன்னேற்றம்

- சேலம், கோயம்புத்தூர், வேலூர், நாமக்கல் மற்றும் ஈரோடு ஆகிய 5 மாவட்டங்களில் கால்நடை காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு 90,072 உயர்ரக கறவை பசு மற்றும் எருமைகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.
- தேசிய பசு மற்றும் எருமை இனப்பெருக்கத் திட்டத்தின்கீழ் 498 வேலையற்ற இளைஞர்களுக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டு, 150 நபர்களுக்கு 40 லிட்டர் திரவ நைட்ரஜன் மற்றும் 100 உறைவிந்துக் குச்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ளோர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



- இனப்பெருக்கக் கோளாறுகள் உள்ள கால்நடைகளை அடையாளம் காண மற்றும் நீக்க "சிறப்பு மலட்டு நீக்க முகாம்கள்" 385 ஊராட்சி ஒன்றியங்களில் 750 சிறப்பு மலட்டு நீக்க முகாம்கள் நடத்தப்பட்டு 83,703 விவசாயிகளுக்குச் சொந்தமான 1,08,896 பசு மற்றும் எருமைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

### 2007-2008 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

1. தேசிய கருத்தரங்கு நடத்துதல்.
2. உறைவிந்து உற்பத்தி நிலையங்களைப் பலப்படுத்துதல்.
3. மாநிலத்தில் செயற்கைக் கருவூட்டல் பணி அமைப்பைப் பலப்படுத்துதல்.
4. புதிய தனியார் கருவூட்டல் நிலையங்கள் உருவாக்குதல்.
5. நிலையான கருவூட்டல் நிலையங்களை நிலையான மற்றும் நடமாடும் கருவூட்டல் நிலையங்களாக மாற்றுதல்.
6. திரவ நைட்ரஜன் விநியோகத்தைச் சீராக்கல் மற்றும் பலப்படுத்துதல்.
7. கால்நடை சார் பணியாளர்கள் மற்றும் செயற்கைமுறை கருவூட்டல் பணியாளர்களுக்கான பயிற்சித் திட்டங்கள்.
8. வம்சாவழி சோதனைத் திட்டம்.
9. கால்நடைகளின் உற்பத்தித் திறனைப் பதிவு செய்யும் திட்டம்.
10. பாரம்பரிய மாட்டினம் மற்றும் எருமையினத்தை அழிவிலிருந்து பாதுகாக்கும் திட்டம். பர்கூர், ஆலம்பாடி மற்றும் புலிக்குளம் இனங்களை அழிவிலிருந்து பாதுகாக்கும் திட்டத்தை துவக்கி ஐந்தாண்டு காலத்தில் செயல்படுத்துதல்.
11. பிரச்சாரம் மற்றும் விளம்பரம்.
12. தகவல் தொடர்பு மேலாண்மை.

### வருங்காலத் திட்டங்கள்

இனப்பெருக்கத்திற்கு உகந்த பசு மற்றும் எருமை இனங்களில் தற்பொழுது நடைபெறும் செயற்கை முறை கருவூட்டல் எண்ணிக்கையை முறையே 7 சதவிகிதமாகவும் மற்றும் 9 சதவிகிதமாகவும்

[2007 ஏப்ரல் 27

உயர்த்துவதும், மற்றும் தற்சமயம் சினை பிடிக்கும் விகிதத்தை ஆண்டிற்கு மேலும் 1 சதவிகிதம் உயர்த்துவதற்காக இதில் அங்கம் வகிக்கும் கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் பங்கேற்புடன் கீழ்க்கண்டவாறு திட்டமிட்டுள்ளது:

| வருடம் | இனப் பெருக்கத்திற்கு உகந்த பசு மற்றும் எருமை களின் இலக்கு சதவிகிதம் | | செயற்கை முறை கருவூட்டல் பணியின்கீழ் கொண்டு வரப்பட வேண்டிய கால்நடைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | | செயற்கை முறை கருவூட்டல்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய எண்ணிக்கை (இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|
| | பசு | எருமை | பசு | எருமை | பசு | எருமை |
| 2007-2008 | 47.00 | 30.00 | 19.35 | 2.68 | 48.30 | 6.38 |

## 11-வது ஐந்தாண்டுத் திட்டம்

## (2007-2008 முதல் 2011-2012 வரை)

11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது:—

- எருமைக் கன்று வளர்ப்புத் திட்டம்
- எருமைகளில் திட்டமிட்ட இனப்பெருக்கம்
- இனப்பெருக்க வயதிலுள்ள பசு மற்றும் எருமைகளுக்கு அடையாள வில்லை மற்றும் கையேடு வழங்குதல்



2007 ஏப்ரல் 27]

# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

## முன்னுரை

வேளாண் நாடாகிய இந்தியாவில், கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி பொருளாதாரச் சுதந்திரம் பெற உதவுவதில் கால்நடை வளர்ப்பு முக்கியப் பங்காற்றி வருகின்றது. ஒட்டுமொத்த இந்திய வேளாண் வருவாயில், கால்நடை சார்ந்த தொழில்கள் மட்டுமே சீரான வளர்ச்சி பெற்று, வளர்ந்து, தற்சமயம் 26 சதவிகிதத்தை எட்டியுள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 20-9-1989 இல் உருவாக்கப்பட்டது. இது இந்தியாவிலேயே கால்நடை மருத்துவத்திற்கான முதல் பல்கலைக்கழகம் என்ற பெருமையைப் பெறுகிறது. இதனை ஆரம்பித்த பெருமை தற்போதைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையேச் சாரும். இப்பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட நோக்கங்களுடன் செயல்பட்டு வருகிறது:-

- இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டம் பெறுவோருக்கு கால்நடை மருத்துவம், விலங்கின மற்றும் மீன்வள அறிவியலில் சிறந்த கல்வியை அளித்தல்
- கால்நடை மற்றும் மீன்வள உற்பத்தி, ஆகியவற்றின் பாதுகாப்பு மற்றும் அவற்றிலிருந்து பெறப்படும் பொருட்கள் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் மற்றும்
- தொழில் நுட்பக் கல்வியை, கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்த மருத்துவர்கள் மற்றும் கிராமப்புற பண்ணையாளர்களுக்கு விரிவாக்கக் கல்விமூலம் பரப்புதல்

கடந்த வருடங்களில், இப்பல்கலைக்கழகம் கால்நடை, கோழியின மற்றும் மீன்வள மேம்பாட்டில் கிராமப்புற பண்ணையாளர்களின் பங்களிப்போடு குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை கால்நடை உற்பத்தி, இலாப நோக்கு மற்றும் ஸ்திரத்தன்மை, உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் குறைந்த அளவில் வளத்தைப் பயன்படுத்தி அதிக அளவில் பயனீட்டும் பொருட்டு நிகழ்த்தியுள்ளது. அவையாவன: இன மேம்பாடு, அயல்நாட்டு கலப்பின மேம்பாடு, உற்பத்தி முறை ஆய்வு, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உற்பத்தி அளவினை அதிகரித்தல், தொடர்ந்து நடைபெற்று வரும் ஆராய்ச்சிகளின் பயனாக கால்நடை, கோழி, இறால் மற்றும் மீன்

[2007 ஏப்ரல் 27

இனத்திற்கான தடுப்பு மருந்து மற்றும் நுண்ணுயிரிகளால் அவற்றிற்கு ஏற்படும் நோய்களைக் கண்டறியும் நோயறி சாதனங்களை முறைப்படுத்துதலிலும் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. வளர்ந்து வரும் நிறுவனங்களுக்கு மனித வளம் என்பது ஒரு முக்கிய அம்சமாகும். அறிவியலறிஞர்களின் தனித்திறமையை முன்னேற்ற உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகத்தின் திறமையை மேம்படுத்தவும் காலத்திற்கேற்ற வகையில் கல்வித் திட்டம் மற்றும் ஆராய்ச்சிக் கருவினை மாற்றவும் குறுகிய காலத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டு ஆராய்ச்சியாளர்களின் பணிகளும் அவ்வப்போது கண்காணிக்கப்படுகின்றன.

**கல்வி**

இப்பல்கலைக்கழகத்தில் *2006-2007* ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவர் சேர்க்கைப் பட்டியல் பின்வருமாறு:

| பாடப்பிரிவு | சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் | மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி | மொத்தம் |
|---|---|---|---|---|
| பி.வி.எஸ்சி. | 139 | 66 | – | 205 |
| பி.எஃப்.எஸ்சி. | – | – | 28 | 28 |
| எம்.வி.எஸ்சி. | 65 | 35 | – | 100 |
| எம்.எஃப்.எஸ்சி. | – | – | 17 | 17 |
| பி.எச்டி (கால்நடை) | 18 | 5 | – | 23 |
| பி.எச்டி (மீன்வளம்) | – | – | 1 | 1 |
| பி.டெக். (உணவு பதனிடுதல்) | 19 | – | – | 19 |
| வர்த்தக மேலாண்மையில் முதுகலை பட்டயப் படிப்பு | – | – | – | – |
| உயிர்த் தகவல் நுட்பவியலில் முதுகலைப் பட்டயப் படிப்பு | 3 | – | – | 3 |
| செல்லப் பிராணிகள் பராமரிப்பில் முதுகலைப் பட்டயப் படிப்பு | 1 | – | – | 1 |
| கால்நடை மருத்துவ நோயறி ஆய்வக முறையில் முதுகலைப் பட்டயப் படிப்பு | – | – | – | – |
| உயிர்த்தொழில் நுட்பவியலில் எம்.ஃபில் படிப்பு | 4 | – | – | 4 |
| மொத்தம் | 249 | 106 | 46 | 401 |



2007 ஏப்ரல் 27]

தமிழக அரசு, இந்திய அரசு, இந்திய வேளாண் அறிவியல் கழகம் மற்றும் இதர முகமைகள் உதவியுடன் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு உதவித் தொகைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**உள்ளுரைப் பயிற்சி உதவித் தொகை**

*2006-2007*-ல் இவ்வரசால் பி.வி.எஸ்சி. மாணவர்களின் உள்ளுரைப் பயிற்சி உதவித் தொகை ரூ.*1,150* லிருந்து ரூ.*1,650* ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 27

## அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பாடத் திட்டங்கள்

- ❖ உணவு பதனிடும் தொழில்நுட்பவியலில் இளங்கலைப் பட்டப் படிப்பு (பி.டெக்.) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக்கல்விக்கான கால அளவு நான்கு ஆண்டுகள் மற்றும் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை 20 ஆகும்.
- ❖ பி.வி.எஸ்சி. பட்டதாரிகளுக்கான செல்லப் பிராணிகள் பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவ நோயறி ஆய்வக முறைகள் பற்றிய இரண்டு முதுகலை பட்டயப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாட வகுப்பிற்குமான கால அளவு ஓராண்டு மற்றும் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை 6 ஆகும்.

## ஆராய்ச்சி

ரூ.330.53 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ள திட்டங்களை இப்பல்கலைக்கழகத்தில் செயல்படுத்த புதுதில்லியிலுள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது:

- பல்கலைக்கழகத்தின் தலைமை வளாகத்தில் கால்நடைப் பண்ணையாளர் விடுதி கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு ரூ.150 இலட்சம்.
- உழவர் பயிற்சி மையங்களில் தொழில்நுட்ப வசதியை மேம்படுத்தி விரிவாக்கக் கல்வி இயக்குநரகத்தை மேம்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு ரூ.3.05 இலட்சம்.
- மாநில வேளாண் பல்கலைக்கழகங்களை மேம்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு ரூ.88 இலட்சம்.
- நாமக்கல் உழவர் பயிற்சி மையத்தில் நிர்வாகக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு ரூ.45.13 இலட்சம்.
- நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அலுவலர் குடியிருப்புகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு ரூ.44.35 இலட்சம்.

கால்நடைப் பொருட்களைப் பயன்படுத்துதலால் ஏற்படும் நச்சுப்படிமங்களை ஆய்ந்தறியவும், மருந்துப் படிமங்களின் அளவினை அறியவும் தேசிய அளவிலான வசதியினை ஏற்படுத்தி மத்திய கால்நடை



2007 ஏப்ரல் 27]

தீவன மற்றும் எஞ்சிய உணவு ஆய்வுக்கூடத்தின் தரத்தினை மேம்படுத்த ரூ.310.30 இலட்சத்திற்கு புதுதில்லியில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அனுமதி அளித்துள்ளது.

2006-2007-க்கான பகுதி-2 திட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு புதிய திட்டங்கள் இப்பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

1. நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் கோழியின நோய் ஆய்வகம் கட்டுவதற்கான கட்டுமானப் பணிக்கான நிதி ஒதுக்கீடு ரூ.48.00 இலட்சம்.
2. திருநெல்வேலியில் ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் நிறுவுவதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.39.73 இலட்சம்.

2006-2007 இல், சென்னை மாநகராட்சியுடன் இணைந்து. ஆர்.டி.பி.சி.ஆர். தொழில்நுட்பம்மூலமாக சிக்-குன்-குனியா நோயை மனிதர்களில் கண்டறியும் பணி சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் அமைந்துள்ள உயிர்தொழில்நுட்பவியல் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பல்கலைக்கழகத் திட்டத்தின்கீழ் வளாக வசதியை வலுப்படுத்தவும், உயர் கல்வி அளிக்கவும், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கவும், ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல் மற்றும் கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்தளித்தல் போன்றவற்றை மேற்கொள்ள 90 திட்டங்கள் ரூ.2,244.92 இலட்சங்கள் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகத்தில் 81 புரவலர் ஆராய்ச்சித் திட்டங்கள் ரூ.1,975.73 இலட்ச மதிப்பீட்டில் செயல்பட்டு வருகின்றன.

## கால்நடை அறிவியலில் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சி சாதனைகள்

### கால்நடை உற்பத்தி

- **மைய ஆய்வகம்:** மரபணுக் கூறுகளில் ஆராய்ச்சி செய்வதற்காக 6 மாட்டினங்கள், 3 வெள்ளாடு மற்றும் செம்மறியாட்டினங் களிலிருந்து டி.என்.ஏ. பிரித்தெடுக்கப்பட்டு விலங்கின மரபியல் மற்றும் இனவிருத்தித் துறையில் வைக்கப்பட்டுள்ளது. மாடு மற்றும் செம்மறி ஆட்டினங்களில் அனைத்து மைக்ரோசாட்டிலைட் பகுதிகளில் வேறுபட்ட மரபணுக்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

[2007 ஏப்ரல் 27

- **தோடா எருமையினத்தில் கருமாற்றுத் தொழில்நுட்பம்:** இத்திட்டத்தின் நோக்கப்படி முரட்டு குணம் கொண்ட இரண்டாம் தர காட்டு விலங்குகளான தோடா இன எருமைக் காளைகள் பண்ணைச் சூழலில் மிதத் தீவிர வளர்ப்பு முறையில் வளர்க்கப்பட்டன. எருமை இனத்திற்கான கருமாற்றுத் தொழில்நுட்ப முறை முறைப்படுத்தப்பட்டது. இருபத்தி ஆறு இளம் சினைக் கருக்கள் பெறப்பட்டு அதிஉறைபதன முறைப்படி வருங்காலத்தில் பயன்படுத்தும் பொருட்டு பதனப்படுத்தப்பட்டுள்ளது.

- **மாதவரத்தில் கருமாற்றுத் தொழில்நுட்பத்திற்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்:** மாதவரத்தில் கருமாற்றுத் தொழில்நுட்பத்திற்கான உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. கரு ஏற்பி கறவைகளில் நேரிடையாக கருமாற்றுத் தொழில்நுட்பம் செய்யும் தொழில்நுட்ப முறை செயல்படுத்தப்பட்டு அதில் வெற்றியும் கண்டுள்ளது. மொத்தம் 146 இளம் சினைக் கருக்கள் பெறப்பட்டு, அவற்றில் 99 கருக்கள் கருமாற்றம் செய்யப்படும் தரத்தினை பெற்றுள்ளன. தோராயமாக ஒவ்வொரு முறை கருக்கள் பெறப்படும் பொழுது, 11.2 கருக்களில் 7.6 கருக்கள் கருமாற்றத் தொழில்நுட்பத்திற்கு உகந்தவையாக உள்ளது. நேரிடைக் கருமாற்றம் செய்வதற்கென கருமாற்றம் செய்யப்படும் தரத்தினைக் கொண்ட 91 கருக்கள் அதி உறைபதனஞ் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. இருபத்தி ஒன்று கரு ஏற்பி கறவைகளில் கருமாற்றம் செய்யப்பட்டுள்ளன. ஆறு கறவைகள் கருவுற்றிருப்பது அறியப்பட்டு, கருவுறு சதவிகிதம் 29 என அறியப்பட்டுள்ளது.

- **தமிழ்நாடு மலைவாழ் மக்களின் கால்நடை வளர்ப்பு பற்றிய பொருளாதார ஆய்வு:** ஒரு மலைவாழ் குடும்பத்தில் கால்நடை வளர்ப்பின்மூலம் ஈட்டப்படும் ஓராண்டு வருவாய் ரூ.44,241.50 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றுள் விவசாயத்தின்மூலம் பெறப்படும் வருவாய் அதிக அளவிலும் (49.75 சதவிகிதம்), அதனைத் தொடர்ந்து கால்நடை வளர்ப்பு (25.37 சதவிகிதம்) மற்றும் பண்ணையமற்ற நடவடிக்கைகள்மூலம் ஈட்டப்படும் வருவாய் (24.89 சதவிகிதம்) எனவும் அறியப்பட்டுள்ளது. ஈட்டப்பட்டுள்ள வருவாயை ஆய்ந்தறிந்ததில் இதர இரு வழிகளில் ஈட்டப்படும் வருவாயைக் காட்டிலும் கால்நடை வளர்ப்பின்மூலம் ஈட்டப்படும் வருவாயே சீரானதாக இருப்பது தெரிய வந்துள்ளது.



2007 ஏப்ரல் 27]

- **காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் நெருப்புக் கோழிப் பிரிவு:** நெருப்புக் கோழிகள் வளர்ப்பு தமிழகத்தின் தட்ப வெட்ப சூழலுக்கு உகந்தவையா என ஆராய்ந்தறிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் 24 நெருப்புக் கோழிகள் (9 ஆணினம் மற்றும் 15 பெண்ணினம்) தற்போதுள்ள தமிழகத்தின் தட்ப வெட்பச் சூழலுக்கு உகந்தவையாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. தீவனம் அளித்தல் முறையில் மாற்றம் செய்து ஆய்வு மேற்கொண்டதில், இவ்வினங்களிடையே இனச்சேர்க்கையில் நல்ல முன்னேற்றம் கண்டறியப்பட்டது. நெருப்புக் கோழிகளின் குஞ்சுகளைப் பொரிப்பதற்கென அமெரிக்காவிலுள்ள ஃபுளோரிடாவிலிருந்து புதிய குஞ்சு பொரிப்பான் இயந்திரம் பெறப்பட்டு காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. இப்புதிய இயந்திரத்தைப் பயன்படுத்தி 58 குஞ்சுகள் பொரிக்கப்பட்டுள்ளன.

- **வேளாண் காடு மாதிரிகளை உருவாக்குதல்:** தருமபுரியிலுள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படும் 'தருமபுரி மாவட்டத்தில் வெள்ளாடு வளர்ப்புடன் கூடிய தரிசு நில பண்ணை முறை பற்றிய ஓர் பொருளியல் ஆய்வு' எனும் திட்டத்தின்கீழ் பண்ணையாளர்களுக்கான செய்முறை விளக்கப் பயிற்சிக்கென 2.0 ஏக்கர் நிலம் சமன் செய்யப்பட்டு கீழ்க்கண்ட வேளாண் காடு மாதிரிகள் உருவாக்கப்பட்டுள்ளன:

1. கிளைரிசிடியா + செஸ்பானியா ஹமதா சில்வி மேய்ச்சல் முறை
2. மா + செஸ்பானியா ஹமதா ஹார்ட்டிசில்வி மேய்ச்சல் முறை
3. சி. சிலியாரிஸ் + செஸ்பானியா ஹமதா மேய்ச்சல் முறை
4. சொர்கம் செஸ்பானியா ஹமதா மேய்ச்சல் முறை
5. கிளைரிசிடியா சில்வி மேய்ச்சல் முறை

மேற்கூறப்பட்டுள்ள வேளாண் காடு மாதிரிகள் முறையாக தண்ணீர், உரம் மற்றும் களைகள் எடுக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படும் வேளாண்காடுகளுக்கான அனைத்திந்திய கூட்டு ஆராய்ச்சித்

திட்டத்தின்கீழ் ஹார்ட்டிசில்வி மேய்ச்சல் முறை, செஸ்பானியா செஸ்பன் அக்ரிசில்வி மேய்ச்சல் முறை மற்றும் சில்வி மேய்ச்சல் முறை என்ற மூன்று வேளாண் காடு மாதிரிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

## கால்நடை நலம்

- **கறிக்கோழிகளில் ஸ்பார்ஃப்ளாக்ஸசின் மருந்தினால் ஏற்படும் இயக்கத் தாக்கியல்:** இந்த ஆய்வின்படி, கோழிகளில் வாய்வழியாக ஒரு கிலோ உடல் எடைக்கு 20 மில்லிகிராம் ஸ்பார்ஃப்ளாக்ஸசின் மருந்தளவு 24 மணி நேரத்திற்கு ஒரு முறை செலுத்தலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது.
- **நாமக்கல், சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள செம்மறி மற்றும் வெள்ளாடுகளில் ஏற்படும் வெக்கை நோயின் (பி.பி.ஆர்) பரவலைக் கண்டறிதல்:** இந்த ஆய்வின் போது, பி.பி.ஆர். நோயின் தாக்கம் நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களைவிட சேலம் மாவட்டத்தில் சற்று அதிக அளவில் இருப்பது வி.என்.டி. மற்றும் சி-எலைஸா சோதனைகள்மூலம் கண்டறியப்பட்டது. நோய் பகுப்பறிதலில் சி-எலைஸா சோதனை, வி.என்.டி. யைக் காட்டிலும் மிகவும் துரிதமாகவும் மற்றும் எளிதாகவும் இருப்பதால் இச்சோதனையே (சி-எலைசா) பெரிதளவில் பி.பி.ஆர். நோய்ப்பரவலை கண்டறிய மிகவும் சரியான சோதனை என இந்த ஆய்வின் நிறைவில் கண்டறியப்பட்டது.
- **ஆட்டுக்கொள்ளை (பி.பி.ஆர்.) நோயைக் கண்டறிதல் முறையினை உருவாக்குதல்:** இவ்வாராய்ச்சி, கொள்ளை நோயைக் கண்டறியும் முறைகளை உருவாக்கும் திட்டத்தை உள்ளடக்கியது. பெங்களூர் இந்திய அறிவியல் நிலையத்திலிருந்து துண்டிக்கப்பட்ட பி.பி.ஆர். நியூக்ளியோ புரதம் தாங்கிய ரீக்காம்பினன்ட் பிரதி பெறப்பட்டு ஆண்டிஜன்/நோய் புரதம், எதிர்புரதம் கண்டறிய மற்றும் அளவிடுதற்கு பயன்படுத்தப்பட்டது. கள சோதனைக்கு பி.பி.ஆர். நோய் எதிர்புரதத்தை துல்லியமாகக் கண்டறிய லேட்டரல் ஃபுளோ முறை தொழில்நுட்பம் உகந்தவை என அறியப்பட்டுள்ளது. ஆய்வகத்தில் பி.பி.ஆர். நோய் எதிர்புரதத்தை துல்லியமாகக் கண்டறிய எலைசா சோதனை முறை தொழில்நுட்பம் உகந்தவை என அறியப்பட்டுள்ளது.
- **கோழிகளில் அப்ளோடாக்ஸின் நச்சுமூலம் தூண்டப்பட்ட கல்லீரல் பாதிப்பில் மஞ்சளின் ஆண்டி ஆக்சிடண்ட் திறன்:** மஞ்சளின்





ஆண்டி ஆக்சிடண்ட் தன்மை 1,000 பி.பி.எம்-இல் நிறைவாக காணப்பட்டது. அப்ளாடாக்ஸின் மற்றும் மஞ்சளூட்டிய கோழிகளில் உடல் எடை மற்றும் தீவனமாற்றுத் திறன் குறையவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

- **மாடுகளில் நுரையீரலைத் தாக்கும் நோய்களும் காச நோயும்:** இறைச்சிக் கூடத்திலிருந்து 112 நுரையீரல் மாதிரிகள் மற்றும் 9 மாதிரிகள் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்ட மாடுகளிலிருந்தும் பெறப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. 8 மாடுகளுக்கு காச நோய்த் தாக்கப்பட்டிருப்பது அறியப்பட்டுள்ளது. காச நோய் பாதித்த மாடுகளின் நுரையீரல் மார்புக் கூட்டு உறை, உதரவிதானம், நுரையீரல் மற்றும் நிணநீர் முடிச்சுகளில் காச நோய்க் கழலைகள் காணப்பட்டன. இந்த ஆய்வில் காச நோய் கண்ட மாடுகளில் தீவிரத் தாக்குதல் கண்டறியப்பட்டுள்ளது.
- **மாடுகளில் ஏற்படும் வளர்சிதை மாற்ற நோய்களைப் பற்றிய பொருளாதார மதிப்பீடு:** மொத்தம் தகவல் சேகரிக்கப்பட்ட 211 மாடு மற்றும் எருமை இனங்களில் வளர்சிதை மாற்ற நோய்களைப் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வளர்சிதை மாற்ற நோய்கள் மிகப்பெரும் அளவில் பண்ணையாளர்களுக்கு நட்டத்தை ஏற்படுத்துவதாலும், இந்நோய்கள் பெரும்பாலும் மாடு மற்றும் எருமை இனங்கள் மிக உயர்ந்த உற்பத்தித் திறனில் இருக்கும்போது ஏற்படுவதினாலும், இந்நோய்கள் வராமல் தடுப்பது மட்டுமே விளையவிருக்கும் இழப்பினைத் தடுக்க ஒரே வழியாகும். பால் காய்ச்சல் மற்றும் சர்க்கரை குறைபாட்டினால் ஏற்படும் பால்குறைவு மூலமான பொருளாதார இழப்பு ஆண்டொன்றிற்கு முறையே ரூ.393 மற்றும் ரூ.404 எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

## சிகிச்சையியல்

மருத்துவமனைகளுக்குக் கொண்டு வரப்படும் பிணியுற்ற கால்நடைகளிலிருந்து பெறப்பட்ட நோய் மாதிரிகள் மாணவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் நோய் அறிவியலில் நல்ல அறிவைப் பெற வாய்ப்பை நல்கும். இப்பல்கலைக்கழகத்தின் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மாதவரத்திலுள்ள பல்கலைக்கழகப் புறநகர் கால்நடை மருத்துவனை மற்றும் நாமக்கல் கால்டை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருத்துவமனை

[2007 ஏப்ரல் 27

ஆகியவற்றில் மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. செல்லப்பிராணிகளான நாய்கள், பூனைகள், பெரிய விலங்குகளான மாடு, எருமை, குதிரை மற்றும் சிறிய விலங்குகளான செம்மறியாடு, வெள்ளாடு, வன விலங்குகள் மற்றும் பறவைகளுக்கும் பல்வேறு நோய்களுக்குத் தேவையான சிகிச்சைகள் கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டன:—

| இனம் | சென்னை | | மாதவரம் | நாமக்கல் |
|---|---|---|---|---|
| | புறநோய்ப் பிரிவு | நடமாடும் பிரிவு | | |
| குதிரை | 1600 | 41 | 5 | – |
| மாடு மற்றும் எருமையினம் | 14319 | 410 | 2317 | 5432 |
| செம்மறியாடு மற்றும் வெள்ளாடு | 1769 | 299 | 869 | 2152 |
| நாய்கள் | 40620 | 3306 | 9083 | 3590 |
| பூனைகள் | 888 | 221 | 48 | – |
| கோழியினம் | 1647 | – | 816 | – |
| மற்றவை | 491 | 56 | 265 | 231 |
| மொத்தம் | 61334 | 4333 | 13403 | 11405 |

### அக நோய்ப் பிரிவு வசதிகள்

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் அக நோய்ப் பிரிவில் பெரிய மற்றும் சிறிய பிராணிகளுக்கென தனித் தனியாகத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. 118 பெரிய பிராணிகள், 192 சிறு பிராணிகள் பல்வேறு சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டன. வெறி நோயுற்ற நாய்களைக் கண்காணிக்க, தனியாகக் கண்காணிப்பு அறைகள் கட்டப்பட்டுள்ளன.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 802 பெரிய மற்றும் சிறிய பிராணிகள் அக நோய்ப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டன. நாய்களுக்கெனத் தனியான வெறி நோய் கண்காணிப்புப் பிரிவு ஒன்றும் இயங்கி வருகிறது.



2007 ஏப்ரல் 27]

## கால்நடை அறிவியலில் விரிவாக்கப் பணிகள்

### வேளாண் அறிவியல் மையங்கள்

புதுதில்லி இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் மூன்று வேளாண் அறிவியல் மையங்கள் முறையே காட்டுப்பாக்கம், குன்றக்குடி மற்றும் நாமக்கல்லில் செயல்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளர்ப்புகளில் 1,266 உள்ளிருப்பு மற்றும் வெளிப்புறப் பயிற்சிகள் நடத்தப்பட்டன. இப்பயிற்சித் திட்டத்தின் வாயிலாக 38,758 நபர்கள் பயனடைந்தனர். மேலும், கால்நடைப் பண்ணையாளர்களுக்கென 537 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.

### கிராமப்புறங்களில் தகவல் தொழில்நுட்ப முதன்மை

இப்பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககம் ஒன்பது தகவல் தொடர்பு மையங்களை உருவாக்கியுள்ளது. இந்த மையங்களில் கணினி, அச்சு இயந்திரம், இணையதளம், தொலைபேசி இணைப்பு தானாகவே கற்றுக் கொள்ளும் விதம் கொண்ட கால்நடை மற்றும் மீன் பராமரிப்பில் குறுந்தகடுகள், மின் அஞ்சல், ஆடியோ மற்றும் வீடியோ சாதனங்கள் மற்றும் நூலகம் போன்ற வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. அந்த ஒன்பது மையங்களுள் கனடா நாட்டின் சர்வதேச மேம்பாட்டு ஆராய்ச்சி மையத்தின் கூட்டு முயற்சியுடன் மூன்று மையங்கள் குழுமணி (திருச்சிராப்பள்ளி), புதுத்தாமரைப்பட்டி (மதுரை) மற்றும் சித்தேரி (வேலூர்) ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையங்கள் திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் வேலூரில் இயங்கி வரும் கால்நடைப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், இதர ஆறு மையங்கள் ஐ.நா. சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் நிதியுதவியுடன் தொடங்கப்பட்ட திட்டத்தில், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் .உதவியுடன் சென்னை மாவட்டத்தில் அமைந்தகரை மற்றும் பள்ளிக்கரணையிலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் இரயில் நகர் மற்றும் காஞ்சிபுரத்திலும், கடலூர் மாவட்டத்தில் வரக்கால்பட்டு மற்றும் காந்தரக்கோட்டையிலும் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

கிராம மக்களுக்குத் தேவைப்படும் மாவட்டங்களைப் பற்றிய தகவல்கள், கால்நடை மேலாண்மை, வீட்டுக் குறிப்புகள், மீன்வளம், மருத்துவ வசதிகள், வங்கி வசதிகள் மற்றும் அன்றாடச் செய்திகள்

ஆகிய தகவல்கள் இம்மையங்களில் பொது மக்களுக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. கிராம மக்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினர் ஆகியோருக்கு கணினியில் தகவல் பெறும் தொழில்நுட்ப அறிவு புகட்டப்பட்டு பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## தொலைதொடர்புக் கல்வி

இப்பல்கலைக்கழகத்தின் நடப்பிலுள்ள தொலைதொடர்புக் கல்வி வகுப்பு செயல்பாடுகளை கண்காணித்து மதிப்பிடுவதற்கென தொலைக் கல்விப் பிரிவு செயல்பட்டு வருகின்றது. 2006-2007 இல் கால்நடை மற்றும் கோழிப் பண்ணை மேலாளர் எனும் புதுப் பாடத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் தொலைக்கல்வித் திட்டம் வாயிலாக வெள்ளாடு வளர்ப்பு (3 மாதங்கள்), கறவை மாடு வளர்ப்பு (6 மாதங்கள்), கால்நடை மற்றும் கோழிப் பண்ணை மேலாளர் (6 மாதங்கள்) போன்ற பாடத்திட்டங்களை தமிழிலும், கால்நடை நலம் பற்றிய ஓராண்டுப் பாடத்திட்டத்தினை ஆங்கிலத்திலும் இப்பல்கலைக்கழகம் கால்நடைப் பண்ணையாளர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கென அளித்து வருகின்றது.

## இதர வெளிப்புறச் செயல்முறைகள்

பயிற்சித் திட்டங்கள் மக்கள் முகாம், பண்ணைகளைப் பார்வையிடுதல், கண்காட்சிகள், பண்ணை வானொலி செய்தித் திட்டங்கள், நேர்ப்களை ஆராய்ந்தறிதல், ஆலோசனை வழங்குதல் போன்ற பல விரிவாக்கப் பணிகளை இப்பல்கலைக்கழகம் நடத்தியது. இதனால் பயனடைந்தோர் எண்ணிக்கை 63,867 ஆகும். மாதிரிகளைப் பரிசோதனை செய்தல், தடுப்பூசி செலுத்துதல், மலட்டுத்தன்மை அறிதல் போன்ற கால்நடை நலன் காக்கும் பணிகள் வாயிலாக 1,57,686 பிராணிகள் பயன்பெற்றன.

## மீன்வள அறிவியலில் முக்கிய ஆராய்ச்சி சாதனைகள்

- **தொடர்நீர்த் தொட்டிகளில் மூன்றாம் தலைமுறை இறால் வளர்க்கும் தொழில்நுட்பம்:** குஞ்சு இறால்கள் தொடர்நீர்த் தொட்டியில் ஆராய்ச்சி செய்யப்பட்டு, இத்தொழில்நுட்பம் 80 சதவிகித இறால்கள் உயிர் பிழைப்புத் திறனோடு வெற்றிகரமாக



செயல்படுத்தப்பட முடியும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. அதிக எண்ணிக்கையில் வளர்த்தும் நீரின் தரம் குறையாது தொடர் நீர்த் தொட்டியில் காப்பதும், உயிர்தொழில்நுட்பத் துறைமூலம் தொடர்ந்து நுண்ணுயிர் பாசி காளான் சேர்க்கப்படுதல் மற்றும் ஈஸ்ட்மூலம் புளிக்க வைத்தலும் முக்கியமானவைகள். இத்தொழில்நுட்பம் பொருளாதார வளம் பெறக்கூடியது, தொழில்நுட்பத்தில் சாத்தியமானது மற்றும் சுகாதாரக் கேடில்லாதது என இந்த ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

- **மீன்களின் வளர்ச்சி மற்றும் நோய் எதிர்ப்புத் திறனில் இயற்கைப் பொருட்களின் பங்கு:** பூண்டு கலந்த இயற்கைப் பொருட்கள் உணவு. வரியிறால் மற்றும் திலேப்பியா மீன்களின் வளர்ச்சி மற்றும் நோய் எதிர்ப்புத் திறனை அதிகப்படுத்தும் என்பதை இந்த ஆய்வு தெளிவு படுத்தியுள்ளது.

- **பொன் மீனின் (கரசியல் அவ்ரட்டஸ்) உடல் வளர்ச்சி மற்றும் வண்ணமாக்குதலில் தாவர சேர்க்கைப் பொருட்களின் பங்கு:** இந்த ஆய்வில் பொன் மீனின் உடல் வளர்ச்சி மற்றும் வண்ணமாக்குதலில் மூன்று தாவர சேர்க்கைப் பொருட்கள் (மல்லி இலை, புதினா இலை மற்றும் அரைக் கீரை) ஏற்படுத்தும் விளைவுகள் பற்றி அறியும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு இன முதிர்ச்சி நிலை மற்றும் குஞ்சு நிலை பொன் மீனில் 60 நாட்களுக்கு நடைபெற்றது. அரைக் கீரையை சேர்க்கைப் பொருளாகக் கொண்ட உணவை உண்ட இனமுதிர்ச்சி அடைந்த மற்றும் குஞ்சு பொன் மீன்களில் ஒரு விழுக்காடு அரைக் கீரையை உண்ட மீன்கள் அதிகமான வளர்ச்சியை அடைந்தது. ஆய்வு உணவு மற்றும் கட்டுப்பாடு உணவை உட்கொண்ட பொன் மீன்களின் நிறமேன்மை விகிதம் அதிகமாக இருந்தது. மல்லி இலை உணவு குஞ்சு மீன்களுக்கு அதிகமாக நிறமேன்மையைக் கொடுத்தது. அதற்கடுத்தபடியாக புதினா நிறமேன்மையை அதிகப்படுத்துவதில் முக்கிய இடம் வகிப்பது தெரியவந்துள்ளது.

- **குளிர் உறைவிந்துகளின்மூலம் மீன் குஞ்சு உற்பத்தி பெருக்கம்:** குளிர் உறைவிந்துகளின்மூலம் இந்திய பெருங்கெண்டை மீன்களின் குஞ்சு உற்பத்தியைப் பெருக்குவதற்கென குளிர்பதனப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. திரவ நைட்ரஜனில் (-196°செ.) குளிர்பதனம் செய்யப்படுகிறது.

- **கைட்டோசானின் பாக்டீரியா எதிர்ப்புத் திறனும் மீன்பதனத்தில் அவற்றின் பயன்பாடுகளும்:** இந்த ஆய்வின்மூலம் சோடியம், மெக்னீசியம், கால்சியம் குளோரைடு உப்புக்கள் நுண்கிருமிகளை கைட்டோசானின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பு அளிப்பது கண்டறியப்பட்டது.

- **வளர்ப்பு இறால்களின் பாக்டீரியா நோய்க்கிருமிகளை அணுத்திரளாய்வின்மூலம் வகைப்படுத்துதல்:** தமிழ்நாடு மற்றும் அதனுடைய அண்டை கடலோர மாநிலங்களான ஆந்திரப்பிரதேசம், கேரளா ஆகியவற்றிலுள்ள இறால் பண்ணைகளிலிருந்து பெறப்பட்ட பண்ணை நீர், குளத்துமண், இறால் குஞ்சுகள், வளர்ந்த இறால்கள், பொரிப்பகங்களின் நீர் மாதிரிகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## தொழில்நுட்ப வெளியீடு

- இப்பல்கலைக்கழக அறிவியல் நிபுணர்களால் 19 கால்நடை பொருட்கள் / வகை / தடுப்பூசிகள் மற்றும் 8 மீன் பொருட்கள் கண்டறியப்பட்டு 14-09-2006 அன்று காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்ட உழவர்களுக்கான பயிற்சி மற்றும் பணியரங்கில் வெளியிடப்பட்டன. அவற்றுள் சில: தானுவாஸ்- ரூசிடெக், நாமக்கல் காடை - 1, வீரியம் குறைக்கப்பட்ட கோழிக் காலரா தடுப்பூசி, ஹெச்.எஸ்.பி. ஆகார் ஜெல் இம்யூனோ டிப்யூசன் சோதனைப் பெட்டி. பி.பி.ஆர். நோய்க்கான தடுப்பூசி.

- இப்பல்கலைக்கழகம் மற்றும் ஈகா டூல்ஸ் அண்ட் இன்ஸ்ட்ரூமென்ட்ஸ், சென்னை எனும் நிறுவனத்துடன் ஒப்பந்த அடிப்படையில், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஊட்டச்சத்தியல் துறையினரால் உருவாக்கப்பட்ட தானுவாஸ்- ரூசிடெக் எனும் சாதனம் மற்றும் தொழில்நுட்பம், வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்யும் பொருட்டு தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- இப்பல்கலைக்கழகம் மற்றும் பயோவெட் (பி) லிமிடெட், பெங்களூர் எனும் நிறுவனத்துடன் ஒப்பந்த அடிப்படையில், கால்நடை நல இயக்குநரகத்தால் மேம்படுத்தப்பட்ட தானுவாஸ்- வீரியம் குறைக்கப்பட்ட கோழிக் காலரா தடுப்பூசி மற்றும் தானுவாஸ்- வீரியம் குறைக்கப்பட்ட இராணிக்கெட் தடுப்பூசி தொழில்நுட்பங்கள், வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்யும் பொருட்டு தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.



இப்பல்கலைக்கழகத்தால் கண்டுபிடிக்கப்பட்ட ஏழு பொருட்களுக்கு அறிவுசார் சொத்துரிமை பெறும் பொருட்டு, அரசின் அறிவுசார் சொத்துரிமை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 2006–2007 திட்டச் செயல்பாடுகள் முன்னேற்றம்

- உணவு பதனிடும் தொழில்நுட்பவியலில் இளங்கலைப் பட்டப்படிப்பு (பி.டெக்.) வகுப்பிற்கென 19 மாணவர்கள் சேர்க்கப்பட்டு கல்வி பயில்கிறார்கள்.

- பி.வி.எஸ்சி. பட்டதாரிகளுக்கான செல்லப்பிராணிகள் பராமரிப்பு பற்றிய முதுகலை பட்டயப் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- பி.வி.எஸ்சி. பட்டதாரிகளுக்கான கால்நடை மருத்துவ நோயறி ஆய்வக முறைகள் பற்றிய முதுகலை பட்டயப் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- பி.வி.எஸ்சி. மாணவர்களின் உள்ளுறைப் பயிற்சி உதவித் தொகை ரூ.1,150/-லிருந்து ரூ.1,650/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

- நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் கோழியின நோய் ஆய்வகம் கட்டுவதற்கான கட்டுமானப் பணி மேற்கொள்ள பொதுப் பணித் துறையிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

- திருநெல்வேலியில் ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் நிறுவுவதற்கான திட்டத்தில் வளாக வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு ரூ.5.00 இலட்சத்தில் வெள்ளாடு மற்றும் செம்மறியாடுகளுக்கென கொட்டகை கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் 93 வேம்பூர் இன செம்மறி ஆடுகளும், 96 ஜமுனாபாரி இன வெள்ளாடுகளும் ரூ.4,99,700 செலவில் வாங்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. ரூ.1,56,750 மதிப்புள்ள உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன. தீவனப் பயிர் சாகுபடி செய்யும் பொருட்டு 2 ஏக்கர் நிலம் உழுது தீவன சாகுபடிக்கு தயார் நிலையிலும், 7 ஏக்கர் நிலத்தில் புதர்கள் நீக்கப்பட்டு நிலம் சமன்பாடு செய்யப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 27

## 2007–2008 ஆம் ஆண்டுக்கான கொள்கைகள்

- வனவிலங்கு நோய் மேலாண்மையில் முதுகலைப் பட்டயப் படிப்பினைத் தொடங்குதல்.
- உணவு அறிவியல் பாடங்களுக்கான புதிய தொழில்நுட்பப் பிரிவைத் தொடங்குதல்.
- மீன்வள உயிர் தொழில்நுட்பவியல் பிரிவினைத் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியில் தொடங்குதல்.
- நாட்டினங்களை பாதுகாத்தல்.
- தடுப்பூசிகள், நோயறி சாதனங்கள், உயிர்வளிகள், தடுப்புத் திறனூக்கிகள்.
  - மரபியல் சார்ந்த நோய்க் காரணி புரதம் மற்றும் நோய் நுண்ம எதிரிகளைக் கொண்டு நவீன தடுப்பூசிகளை மேம்படுத்துதல்.
  - கிருமி பாதிப்பு நோய்களுக்கான துல்லியமான அணுத்திரள் சார்ந்த நோயறி முறைகளை மேம்படுத்துதல்.
  - நோய் எதிர் திறனை உருவாக்கும் பொருட்டு நோய் எதிர் திறனூக்கிகளை உருவாக்குதல்.
- உயிர்த் தகவலகம்
  - அணுத்திரள் சார்ந்த விளக்க மாதிரி வடிவங்கள் மற்றும் புரத அமைப்பு முன்னறிவிப்பு பற்றிய மென்பொருள் தயாரித்து அளிப்பதன் வாயிலாக உயிர்த்தகவலகத்தை மேம்படுத்துதல்.
  - மரபணு மற்றும் புரத அமைப்பு ஆய்வு போன்றவற்றில் நவீன வசதிகளை ஏற்படுத்துதல்.
  - பரிசோதனை ஆய்வகம் அமைத்தல்.



2007 ஏப்ரல் 27]

## 2007–2008 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

இப்பல்கலைக்கழகம் கீழ்க் குறிப்பிட்டுள்ள இரண்டு புதிய திட்டங்களை 2007-2008 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் செயல்படுத்த உள்ளது.

1. தஞ்சை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் மரபு சார் மூலிகை மருத்துவ முறைகளுக்கான ஆய்வு மற்றும் பயிற்சிக் கூடம் அமைத்தல் (ரூ.18.00 இலட்சம்).
2. கோலிபார்ம் நுண்கிருமியால் ஏற்படும் மடிவீக்க நோய்க்கு தடுப்பூசி தயாரித்தல் (ரூ.17.01 இலட்சம்).

## 11–வது ஐந்தாண்டுத் திட்டம்
## (2007–2008 முதல் 2011–2012 வரை)

**கால்நடை**

- திருநெல்வேலியில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்குதல்.
- கால்நடை உற்பத்தித் தொழில்நுட்ப பூங்கா நிறுவுதல்.
- காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் கால்நடைப் பண்ணையாளர்களின் பங்கேற்போடு கூடிய எருமைக் காளைப் பண்ணை மற்றும் காளைக் கன்றுகள் வளர்க்கும் பண்ணை அமைத்தல்.
- மேச்சேரி ஆட்டின ஆராய்ச்சி நிலையம், பொத்தனேரியில் மேச்சேரி ஆட்டில் களத்திற்குகந்த மரபியல் குணாதிசயங்களை மேம்படுத்துதல்.
- நாட்டின மாடுகள், வெள்ளாடு மற்றும் செம்மறியாடுகளின் மரபணுக்களைப் பாதுகாத்தல்.
- நந்தனம் கோழியின ஆராய்ச்சி நிலையத்தில் பறவையினங்களுக்கான மரபணு பாதுகாப்பு ஆய்வகம் அமைத்தல்.
- கால்நடை அறிவியல் இளங்கலைப் படிப்பினை காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் விரிவு செய்து பயிற்றுவித்தல்.

**மீன்வளம்**

- இறால் நோய்த் தடுப்பூசி மேம்படுத்துதல்.
- தொலைகடல் மீன்பிடிப்பியல் பகுதிகளில் புதிய மீன் பிடிப்பகங்களைக் கண்டறிதல்.
- மன்னார் வளைகுடா பகுதியில் கடற்கரை மாசுபடுதலைக் கண்காணித்துக் கட்டுப்படுத்துதல்.
- மீன் / இறால் வளர்ப்பிற்கான உயிர்த் தீவனம்.
- கடல்வாழ் அலங்கார மீன் உற்பத்தி மற்றும் வளர்ப்பு.
- மீன் வளர்ப்பியலில் உயராய்வு மையம் அமைத்தல்.
- தஞ்சாவூரில் புதிய மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்குதல்.





## இணைப்பு-II

( 118 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 7—மீன்வளத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

**முன்னுரை**

வருவாய் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் மீன்பிடிப்புத் தொழிலானது வேளாண்மைக்கு அடுத்த முக்கியத் தொழிலாகக் கருதப்படுகிறது. பொதுமக்களுக்குப் புரதச் சத்துள்ள உணவை அளிப்பதுடன், பல துணைத் தொழில்களின் வளர்ச்சிக்கு மீன்பிடிப்பு தூண்டுகோலாகவும் அமைந்துள்ளது.

நமது நாடு, 8,118 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைக் கொண்டது. 2.02 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட தனி உரிமைப் பொருளாதார மண்டலத்தில் மிகுந்த மீன்வள ஆதாரங்களைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு கிழக்குக் கடற்கரையில் 13 கடலோர மாவட்டங்களையும், 591 மீனவக் கிராமங்களையும், 1,076 கிலோ மீட்டர் நீள கடற்கரையையும் கொண்ட மாநிலமாகும். தேசிய அளவில் மீன் உற்பத்தியில் நான்காவது நிலையில் உள்ள ஒரு முக்கியக் கடலோர மாநிலமாகும். தமிழகம் 0.19 மில்லியன் சதுர கிலோ மீட்டர் தனி உரிமைப் பொருளாதார மண்டலமும், 41,412 சதுர கிலோ மீட்டர் கடற்படு நிலத்தொடரும் கொண்டுள்ளது.

மாநிலத்தின் ஒட்டுமொத்த மீன்பிடிப்பில் கடல் மீன்பிடிப்பின் பங்கு அதிகமாக உள்ளது. தமிழ்நாடு கடற்கரை, நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது.

(1) வடக்கே பழவேற்காடு முதல் தெற்கே கோடிமுனை வரை 357.2 கிலோ மீட்டர் நீளமுள்ள அலைகள் மிகுந்த சோழமண்டலக் கடற்கரை

(2) கோடிமுனை முதல் தனுஷ்கோடி வரை 293.9 கிலோ மீட்டர் நீளமுள்ள பாக் ஜலசந்தி.

(3) தனுஷ்கோடி முதல் கன்னியாகுமரி வரையிலான பல்வகைக் கடல் உயிரினங்கள் மிகுதியாக உள்ள 364.9 கிலோ மீட்டர் நீளமுள்ள மன்னார் வளைகுடா.

(4) கன்னியாகுமரி முதல் நீரோடி மீனவ கிராமம் வரை 60 கிலோ மீட்டர் நீளமுள்ள, அரபிக் கடலை ஒட்டிய மேற்குக் கடற்கரை.

இந்தப் பரந்த மீன்வள ஆதாரங்கள் இன்னமும் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. கடல் மீன்வளத்தைப் பொறுத்தமட்டில், அண்மைக்கடல் மீன்வளம் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டது. தூரக்கடல் மற்றும் ஆழ்கடல் மீன்வள ஆதாரங்கள் இன்னமும் உகந்த அளவில் பயன்படுத்தப்படவில்லை.

சமூக-பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள மீனவர்களின் நிலையினை உயர்த்திட, தூரக்கடல் மீன்வள ஆதாரத்தைப் பயன்படுத்தி, மீன் உற்பத்தியைப் பெருக்கிடும் கொள்கைகளை உருவாக்குவது மீன்வளத் துறையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். மீன்வளத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும், மீன்வள ஆதாரங்களை மேம்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் மாநிலத்தில் உள்ள மீனவர்களின் சமூக-பொருளாதார நிலையினைச் சீராக்குதல் என தொலைநோக்குப் பார்வையோடு வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

## மீன்வளத் துறையின்—நோக்கங்கள்

முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு :-

(1) கடல் பகுதிகளில் பயன்படுத்தப்படாத மீன்வள ஆதாரங்களைப் பயன்படுத்தவும், அண்மைக்கடல் பகுதியில் அதிக அளவு மீன்பிடிப்பைக் குறைக்கவும் ஊக்குவித்தல்.

(2) மீன் வளங்களைப் பாதுகாத்தல் நடவடிக்கைகள், மீன் இருப்பை அதிகரித்தல், செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல் போன்றவற்றின்மூலம் அண்மைக்கடல் பகுதிகளில் நீர்வாழ் உயிரின உற்பத்தி ஆதாரங்களைப் பெருக்குதல்.

(3) நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த, நீர்வாழ் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.





(4) மீன்களைக் கரை இறக்குவதற்காகவும் விற்பனைக்காகவும் உட்கட்டமைப்பு வசதிகளை, இடர்கள் பற்றிய ஆய்வு மற்றும் தரக்கட்டுப்பாடு மதிப்பீட்டளவு (H.A.C.C.P.) மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பின் வரையறையின்படி வலுப்படுத்துதல்.

(5) மீனவ மக்களுக்கான நலத் திட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதன்மூலம் அவர்களுடைய சமூக-பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.

(6) நடைமுறையில் உள்ள மீன்வளச் சட்டங்களை மீனவர்களின் தேவைக்கேற்ப மாற்றியமைத்தல்.

(7) வண்ண மீன் வளர்ப்பு மற்றும் சூரை மீன் உட்பட ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவித்தல்.

## நிர்வாக அமைப்பு

மீன்வளத் துறையின் துறைத் தலைவராக உள்ள மீன் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசின் நிறுவனமான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் செயற்பதிவாளராகவும் செயல்பட்டு வருகிறார். மீன்வளத் துறை ஆறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, 3 மீன்வளத் துறை மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் 3 மீன்வளத் துறை மண்டலத் துணை இயக்குநர்களின் தலைமையில், மீன்வளத் துறை உதவி இயக்குநர்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தலின்கீழ் பல்வேறு மீன்வள மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் மீனவர் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டுகளில் பணி நியமனங்களுக்குத் தடை இருந்த காரணத்தால் பணியிடங்கள் நிரப்பப்படாத நிலையில் துறையின் நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டது. 2006-2007 ஆம் ஆண்டில் பணி நியமனத்திற்கான தடைகள் அரசால் விலக்கிக் கொள்ளப்பட்டு, கீழ்க்காணும் பணியிடங்களை நிரப்பிக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது:

[2007 ஏப்ரல் 27

| வ. எண் | பதவியின் பெயர் | நிரப்பப்பட உள்ள பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மீன்வளத் துறை இணை இயக்குநர் | 1 |
| 2. | மீன்வளத் துறை துணை இயக்குநர் | 5 |
| 3. | மீன்வளத் துறை உதவி இயக்குநர் | 13 |
| 4. | நேர்முக உதவியாளர் | 5 |
| 5. | மீன்வளத் துறை ஆய்வாளர் | 52 |
| 6. | ஆராய்ச்சி உதவியாளர் | 9 |
| 7. | மீன்வளத் துறை சார் ஆய்வாளர் | 43 |
| 8. | கடல் முதல்வர் | 8 |
| 9. | இளநிலை உதவியாளர் | 22 |
| 10. | தட்டச்சர் | 24 |
| 11. | சுருக்கெழுத்துத் தட்டச்சர் | 5 |
| 12. | ஊர்தி ஓட்டுநர் | 15 |
| 13. | அலுவலக உதவியாளர் | 5 |

மேற்காணும் விவரப்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட பணியிடங்களை விரைவில் நிரப்புவதற்கு மீன்வளத் துறை இயக்குநரகத்தால் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**11-ஆவது ஐந்தாண்டுத் திட்ட நோக்கில் மீன்வள மேம்பாடு**

11-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ்க்கண்ட மீன்வளத் திட்டங்களைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது:

- ➢ மீனவர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதோடு கூடிய மீன்வள ஆதாரம் மற்றும் மீன்வள அபிவிருத்திக்கான மாற்று வாழ்வாதாரத் திட்டம்.
- ➢ மத்திய அரசின் ஏற்றுமதி ஆய்வுக் குழுவின் வழிகாட்டுதல்களின்படி இடர்கள் பற்றிய ஆய்வு மற்றும் தரக்கட்டுப்பாடு மதிப்பீட்டளவு வரையறைகளுக்கு உட்பட்டு, உலக வர்த்தக நிறுவனத்தின்கீழ் வாய்ப்புகளைப் பெறும் வண்ணம் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்கள் ஆகியவற்றை நவீனப்படுத்துதல்.



2007 ஏப்ரல் 27]

- ➢ உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வர்த்தக சந்தைத் தரத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் மீன் உற்பத்தியாளர்களை வலுப்படுத்துதல்.
- ➢ ஒருங்கிணைந்த விற்பனை உட்கட்டமைப்பு வசதிகளை ஊக்குவித்தல்; உள்நாட்டில் மீன் விற்பனையைக் குளிர்ப்பதன வசதிகளுடன் நவீனப்படுத்துதல்.
- ➢ மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல், அதிகரித்தல் மற்றும் வரம்பு மீறிய மீன்பிடிப்பு முறைகளைக் குறைத்தல்.
- ➢ மீன்வள ஆதாரங்களைப் பாதுகாப்பதற்கும் மாற்று முயற்சிகளை மேற்கொள்வதற்கும் மீன்வளக் கொள்கைகளைத் திருத்தி அமைக்க வழிவகை செய்தல்.
- ➢ மீனவர்களின் செயல்திறனை உயர்த்துதல் மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி அளித்தல்மூலமாக மாற்று வாழ்வாதாரத் திட்டங்களை ஊக்குவித்தல்.
- ➢ இயற்கைச் சீற்றங்களை எதிர்கொள்ளவும் மற்றும் தணிக்கவும், பாதிக்கப்படும் இடங்களைக் கண்டறிந்து அதற்கேற்ப அனைத்து விவரங்கள் அடங்கிய திட்டத்தினைத் தயாரித்தல்.
- ➢ மீன்வளச் சுற்றுலாவினை மேம்படுத்த வண்ண மீன் காட்சியகம் மற்றும் கடல் அருங்காட்சியகம் அமைத்தல்.

**மீன்வளத் துறையின் நூற்றாண்டு விழா கொண்டாடுதல்**

1907 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மீன்வளத் துறை 2007 ஆம் ஆண்டில் தமது நூற்றாண்டினை நிறைவு செய்கிறது. இத்துறையின் நூற்றாண்டைக் கொண்டாட தமிழக அரசு ரூ. 25 இலட்சம் ஒப்பளித்துள்ளது. மாநிலம் தழுவிய கொண்டாட்டங்களில் கருத்தரங்கங்கள், வண்ண மீன் கண்காட்சிகள், உணவு விழாக்கள், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வினா-விடை மற்றும் ஓவியப் போட்டிகள், இலவச மருத்துவ முகாம்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திடச் செயல்வடிவம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**1. சுனாமி மறுவாழ்வு மற்றும் மறு கட்டமைப்புத் திட்டம்**

26-12-2004 அன்று கடற்கரையைத் தாக்கிய சுனாமி ஆழிப்பேரலை தமிழகத்தில் மீன்பிடி உடைமைகளைக் கீழ்க்கண்டவாறு அழித்துச் சேதப்படுத்தியது.

[2007 ஏப்ரல் 27

| | |
|---|---|
| (1) அனைத்து வகையான கட்டுமரங்கள் | 35,530 |
| (2) அனைத்து வகையான வள்ளங்கள் | 11,118 |
| (3) மீன்பிடி விசைப் படகுகள் | 4,430 |
| (4) வலைகள் | 2,200.07 மெட்ரிக் டன் |

சேதமடைந்த மீன்பிடி கலன்கள் மற்றும் தளவாடங்களுக்காக அரசு பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குப் பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கி ஒப்பளிப்பு வழங்கியது. சேதங்களை மதிப்பீடு செய்திடவும், நிவாரண உதவிகள் வழங்கிடவும் அரசு விரிவான வழிமுறைகளை வெளியிட்டது. இவ்வழிமுறைகளின்படி சேதத்தினை மதிப்பீடு செய்திடத் துணை ஆட்சியர் தலைமையிலான வருவாய் மற்றும் மீன்வளத் துறை அலுவலர்கள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டன. மதிப்பீடு செய்யப்பட்ட இனங்களில் 10 சதவிகிதம் மாவட்ட வருவாய் அலுவலரால் மிகை சரிபார்ப்பு செய்யப்பட்டது. மீன்பிடி கலன்கள் மற்றும் தளவாடங்கள் சேதமடைந்ததால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இதுநாள்வரை கீழ்க்கண்டவாறு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

**26-12-2004 அன்று ஆழிப்பேரலையால் சேதமடைந்த மீன்பிடி உபகரணங்களின் மதிப்பீடு மற்றும் 31-3-2007 முடிய வழங்கப்பட்ட நிவாரணம்**

| வ. எண் | சேதமடைந்த மீன்பிடி உபகரணங்களின் வகைப்பாடு | மதிப்பீட்டு விவரம் | | | நிவாரணம் வழங்கப்பட்ட மீன்பிடி உபகரணங்களின் விவரம் | | | மொத்தம் வழங்கப் பட்ட தொகை (ரூபாய் கோடியில்) | உருவாக் கப்பட்ட சொத்து (எண்ணிக் கையில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பகுதி | முழுமை | கூடுதல் | பகுதி | முழுமை | கூடுதல் | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | அனைத்து வகையான கட்டுமரங்கள் | 4147 | 31383 | 35530 | 13697 | 16576 | 30373 | 54.102 | 19771 |
| 2 | அனைத்து வகையான வள்ளங்கள் | 2978 | 8140 | 11118 | 3896 | 732 | 4628 | 8.982 | 4092 |
| 3 | விசைப் படகுகள் | 1775 | 2655 | 4430 | 2353 | 374 | 2727 | 49.460 | 2150 |
| | மொத்தம் | 8900 | 42178 | 51078 | 19946 | 17682 | 37728 | 112.544 | .. |
| 4 | வலைகள் (M.T.) | 2200.07 | .. | .. | .. | .. | 39316 | 37.279 | 39316 |
| 5 | இயந்திரங்கள் | 1560 | .. | .. | 3030 | .. | 3030 | 1.515 | 3030 |
| | நிகர மொத்தம் | .. | .. | .. | .. | .. | .. | 151.338 | .. |



2007 ஏப்ரல் 27]

## 1.1. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குக் கூடுதல் நிவாரணம் வழங்குதல்

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் தொடர்பாக 24-6-2006 அன்று நடந்த ஆய்வுக் கூட்டத்தின்போது, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட 42,000 மீனவர்களுக்குக் கூடுதல் நிவாரணம் வழங்கப்படுமென்று அறிவித்தார்கள். இதற்காக ராஜீவ் காந்தி புனரமைப்புத் திட்டத்தின்கீழ் அரசு ரூ. 110.36 கோடி அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின்படி வலைகள், உயிர் காக்கும் கவச ஆடைகள், குளிர் உறை வைப்புப் பெட்டிகள், மறு மின்னூட்டுக் கைவிளக்குகள் மற்றும் கனரக மிதி வண்டிகள் ஆகியவை வழங்கப்படும். இவ்வாறு உயிர்காக்கும் கவச ஆடைகள், மறு மின்னூட்டுக் கைவிளக்குகள் மற்றும் கனரக மிதி வண்டிகள் ஆகியவற்றை வாங்குவதற்கான ஒப்பந்தங்களை இறுதியாக்கம் செய்து, அவற்றை வழங்கிட நிறுவனங்களுக்கு ஆணை அளிக்கப்பட்டுள்ளது. வலை (மால்) மற்றும் குளிர் உறை வைப்புப் பெட்டிகளை வாங்கிடத் தேவையான ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் அனைத்துப் பொருட்களும் மீனவர்களுக்கு 2007 செப்டம்பர் திங்களுக்குள் வழங்கப்படும்.

## 1.2. பிரதமரின் தேசிய பொது நிவாரண நிதியுதவியின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### (அ) மீனவ கிராமங்களுக்கு விளையாட்டுச் சாதனங்கள் வழங்குதல்

தமிழகத்தில் உள்ள 13 கடலோர மாவட்டங்களைச் சார்ந்த 591 மீனவ கிராமங்களுக்குப் பிரதமரின் தேசிய நிவாரண நிதியுதவியின்கீழ் ரூ. 59.10 இலட்சம் அனுமதிக்கப்பட்டு விளையாட்டு உபகரணங்கள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிரிக்கெட், கைப்பந்து, கால்பந்து, கபடி, கேரம், சதுரங்கம் ஆகிய விளையாட்டுக்கான உபகரணங்கள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும். இந்த விளையாட்டு உபகரணங்கள் அனைத்தும் 2007 ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் 591 கடற்கரை மீனவ கிராமங்களுக்கும் வழங்கப்படும்.

### (ஆ) தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம்மூலம் மீனவர்கள் பெற்ற கடனைத் தள்ளுபடி செய்தல்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் பகுதி 1 மற்றும்

[2007 ஏப்ரல் 27

பகுதி 2 ஆகியவற்றின்கீழ் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடம் கடன் உதவி பெற்று மீனவக் கூட்டுறவு சங்கங்கள்மூலம் மீனவர்களுக்குக் கடன் உதவி வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் பெற்றுள்ள கடன்கள் அசல், வட்டி, அபராத வட்டி மற்றும் பங்கு மூலதனம் 31-7-2005 அன்றைய நிலுவை ரூ.19.56 கோடியென கணக்கிடப்பட்டுள்ளது. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் துயரினைப் போக்கிட பாரதப் பிரதமரின் தேசிய நிவாரணத் திட்டத்தின்கீழ் தமிழக அரசு ரூ.19.56 கோடி கடனை தள்ளுபடி செய்து 25-1-2007 ஆம் நாளிட்ட கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை அரசாணை (நிலை) எண் 10-இல் ஆணை வழங்கியுள்ளது. இக்கடன் தள்ளுபடிமூலம் 5,635 மீனவர்கள் பயன் அடைவார்கள்.

## (இ) முதலுதவிப் பெட்டி வழங்கும் திட்டம்

47,000 கடலோர மீனவர்களுக்கு தலா ரூ.2,000/- விலையில் முதலுதவிப் பெட்டிகள் வாங்கி வழங்கிட ரூ.9.40 கோடி நிதியை பாரதப் பிரதமரின் தேசிய நிவாரணத் திட்டத்தின்கீழ் தமிழக அரசு அனுமதித்துள்ளது. இந்த முதலுதவிப் பெட்டிகள் 2007 ஜூன் திங்களுக்குள் வழங்கப்படும்.

## 1.3. சென்னை மீன்பிடி துறைமுகம்

சென்னை மீன்பிடி துறைமுகத்தை நவீனமயமாக்கிட, படகு கட்டும் இடங்களைப் புனரமைத்தல், அலை தடுப்புச் சுவர் விரிவாக்கம் செய்தல், கூடுதல் படகுகள் கட்டும் இடங்களை அமைத்தல் மற்றும் படகு நிறுத்துமிடங்களை அமைத்தல் ஆகியவற்றிற்காகக் கூடுதல் நிதியாக ரூ.19.569 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை 2008-2009 நிதியாண்டிற்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 1.4. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளத்தினைப் புதுப்பிக்கும் திட்டம்

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி மற்றும் கடலூர் மாவட்டங்களைச் சேர்ந்த மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்களைச் சீரமைத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.4.53 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்ட பணிகள் விவரம் பின்வருமாறு:



2007 ஏப்ரல் 27]

### (i) கன்னியாகுமரி மாவட்டம்–சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம்

இந்தத் துறைமுகத்தில் ரூ.120 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாருதல், தண்ணீர் வசதி ஏற்படுத்துதல், புதிதாக ஏலக்கூடம், வலை பின்னும் கூடம் மற்றும் ஓய்வு அறை, ஜெனரேட்டர் அறை ஆகிய வசதிகளை ஏற்படுத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2007, ஜூன் திங்களுக்குள் முடிவு பெறும்.

### (ii) கன்னியாகுமரி மாவட்டம் கோவளத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்குதல்

கோவளத்தில் மீன் பதப்படுத்தும் முறைகளை மேம்படுத்திட ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகளான மீன் உலர்களம் மற்றும் குளிர்பதன அறை ஆகியவை நிறுவப்பட உள்ளன. கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. கட்டுமானப் பணிகள் முடிந்தவுடன், குளிர்பதன நிலையத்திற்குத் தேவையான குளிரூட்டு இயந்திரங்கள் வாங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். குளிர்பதன வசதிகள் 2007, ஜூன் திங்களில் செயல்படுத்தப்படும்.

### (iii) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆரோக்கியபுரத்தில் படகு நிறுத்தும் வசதிகள் அமைத்தல்

இப்பணிகள் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இக்கட்டுமானப் பணிகள் 2007, ஜூன் திங்களில் முடிக்கப்படும்.

### (iv) கன்னியாகுமரி மாவட்டத்தில் இணையம்–புத்தன்துறையில் மீன் இறங்கு தளம் அமைத்தல்

ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மீன் இறங்கு தளத்தில் குறுக்குச் சுவர் (Diapharm Wall) மற்றும் தடுப்பு அரண் (Groyne) அமைக்க இடத்தின் தன்மை மற்றும் அதன் உறுதிப்பாடு குறித்து அறிய, மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

முன் ஆய்வுப் பணிகளான மண் பரிசோதனை, ஆழ்துளைப் பரிசோதனை போன்ற ஆய்வுகளைத் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வுப் பணி நிறைவு பெற்றவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு 2007, செப்டம்பர் திங்களில் முடிக்கப்படும்.

உட்கட்டமைப்பு வசதிகளான மீன் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், கழிப்பிடக் கட்டடம், அணுகுசாலை, மேல்நிலைத் தொட்டி, குளிர்பதன அறை மற்றும் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ஆகியவை நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2007, ஜூன் திங்களுக்குள் முடிக்கப்படும்.

### (v) கடலூர் மாவட்டத்தில் உள்ள பரங்கிப்பேட்டையில் மீன்வளப் பயிற்சி மற்றும் தகவல் நிலையம் அமைத்தல்

ரூ.92.50 இலட்சம் மதிப்பீட்டில் தங்கும் விடுதியுடன் கூடிய மீன்வளப் பயிற்சி நிலையம் அமைய உள்ளது. கட்டுமானப் பணிகள் ரூ.63 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்கான பரிசோதனைக் கூடம் மற்றும் தொழில் நுட்பத்திற்குத் தேவையான பொருள்கள் ரூ.29.50 இலட்சம் மதிப்பீட்டில் மீன்வளத் துறையால் கொள்முதல் செய்யப்படவுள்ளது. இதற்காக நடைபெற்று வரும் பணிகள் 2007, ஜூன் திங்களில் முடிக்கப்படும்.

### 1.5. தேசிய பேரிடர் நிவாரண நிதியின்கீழ் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீன்பிடி துறைமுகம்/மீன் இறங்கு தளத்தினைச் சீரமைக்கும் பணி மேற்கொள்ளுதல்

ஆழிப்பேரலையால் சேதமடைந்த சென்னை, கடலூர், பழையாறு, தூத்துக்குடி, சின்னமுட்டம் ஆகிய 5 மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் முடசலோடை, நாகப்பட்டினம், ஆற்காட்டுத்துறை, கோட்டைப்பட்டினம், தொண்டி, புன்னக்காயல், மல்லிப்பட்டினம் ஆகிய 7 மீன் இறங்கு தளங்களைச் சீரமைத்திட ரூ.11.49 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் சென்னை மற்றும் பழையாறு தவிர மற்ற இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பழையாறு மற்றும் சென்னை மீன்பிடி துறைமுகப் பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

### 1.6. சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் 10 மீன் இறங்கு தளங்கள் அமைத்தல்

சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் மத்திய திட்டக் குழு 10 மீன் இறங்கு தளங்கள் அமைத்திட மொத்தம் ரூ.50 கோடி திட்ட மதிப்பீட்டில் (தலா ரூ.5 கோடி) நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தூத்துக்குடி மாவட்டம் திரேசபுரம், பெரியதாழை, இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை, திருநெல்வேலி மாவட்டம் உவரி, விழுப்புரம் மாவட்டம்



எக்கியார்குப்பம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் அண்ணாமலைச்சேரி, எண்ணூர் முகத்துவாரகுப்பம் மற்றும் பெரிய மாங்கோடு, கடலூர் மாவட்டம் சாமியார்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டம் கடலூர் பெரியகுப்பம் ஆகிய 10 இடங்களில் மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்படவுள்ளன. இது தொடர்பாக உரிய ஆய்வுகள் மற்றும் திட்ட ஆய்வறிக்கை தயாரித்திட ஆலோசனை நிறுவனம் (Consultancy) தேர்வு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பணிகள் முடிக்கப்பெற்றதும், 18 மாதங்களில் மீன் இறங்கு தளங்கள் அமைக்கும் பணி முடிக்கப்படும்.

### 1.7. உலக வங்கி உதவியுடன் அவசர கால சுனாமி மறுசீரமைப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் ரூ.80.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(1) சின்னமுட்டம், பழையாறு, மல்லிப்பட்டினம், நாகப்பட்டினம் ஆகிய நான்கு மீன்பிடி துறைமுகங்களை ஐரோப்பிய கூட்டமைப்பின் ஏற்றுமதித் தரத்திற்கு மேம்படுத்துதல்.

(2) பழவேற்காடு, பரங்கிப்பேட்டை—அன்னன்கோயில், திருமுல்லைவாசல் மற்றும் புன்னக்காயல் ஆகிய இடங்களில் ஆற்று முகத்துவாரங்களை நிரந்தரமாகத் திறந்து வைக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(3) நாகூர் மற்றும் அன்னன்கோயில் ஆகிய இடங்களில் புதிய மீன் இறங்கு தளங்களை அமைத்தல்.

(4) கடலில் மீன் பிடிக்கும்போது மீனவர்களின் பாதுகாப்பிற்காக கம்பியில்லாத் தொலைத் தொடர்பு சாதன வசதிகளை மீன்பிடி படகுகளில் ஏற்படுத்துதல்.

(5) இறால் பண்ணை மற்றும் பொரிப்பகங்களுக்கு நிதியுதவி அளித்தல்.

நான்கு மீன்பிடி துறைமுகங்களை நவீனப்படுத்திடவும், இரண்டு இடங்களில் மீன் இறங்கு தளம் அமைத்திடவும், நான்கு ஆற்றுமுகத்துவாரங்களை நிரந்தரமாகத் திறந்திடவும் ஆய்வுகள் மேற்கொண்டு, திட்ட அறிக்கை தயாரித்திட ஆலோசனை நிறுவனங்களை (Consultant Services) நியமிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வுப் பணிகள் முடிவுற்றதும் 18 மாதங்களில் கட்டுமானப் பணிகள் முடிக்கப்படும்.

[2007 ஏப்ரல் 27

ஆழிப்பேரலையால் சேதமடைந்த இறால் பண்ணை மற்றும் பொரிப்பக நிறுவன உரிமையாளர்களுக்கு ரூ.10 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழகக் கடலோரம் முழுமைக்கும், சுனாமி மறுவாழ்வுத் திட்டமாகவும் வருங்காலத் துயர் தணிக்கும் முயற்சியாகவும், உலக வங்கி நிதியுதவியுடன் இயந்திரப் படகுகள் மற்றும் பாரம்பரிய மீன்பிடி கலன்களில் கம்பியில்லாத் தொலைத் தொடர்பு வசதி அமைக்கப்படும். இயற்கைப் பேரிடர்கள் மற்றும் நடுக்கடலில் ஏற்படும் விபத்துக் காலங்களில், மீனவர்களுக்கு இத்தொலைத் தொடர்பு சாதனங்கள் மிகப் பெரும் உதவியாக இருக்கும். மேலும், இவை கடலில் குறிப்பிட்ட பகுதியில் மீன்கள் அதிகமாக கிடைக்கும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் உதவியாக இருக்கும்.

கம்பியில்லாத் தொலைத் தொடர்பு சாதனங்களை 13 கடலோர மாவட்டங்களில் நிறுவிட எல்காட் நிறுவனத்தின் ஆலோசனையுடன் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

**1.8. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் கூடிய சுனாமி அவசர கால உதவித் திட்டம்**

**(அ) பழுது மற்றும் புனரமைப்புப் பணிகள்**

கடலூர் மீன்பிடித் துறைமுகம், முடசலோடை, சேதுபாவாசத்திரம், கோட்டைப்பட்டினம், ஜெகதாப்பட்டினம் மற்றும் புன்னக்காயல் ஆகிய மீன் இறங்கு தளங்களில் பழுது மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு ஆசிய வளர்ச்சி வங்கி ரூ.74.30 இலட்சம் ஒப்பளித்துள்ளது. புன்னக்காயல், முடசலோடை மற்றும் ஜெகதாப்பட்டினம் ஆகிய மீன் இறங்கு தளங்களின் பணிகள் முடிவு பெற்றுள்ளன. எஞ்சிய 3 இடங்களில் நடைபெற்று வரும் பணிகள் 2007, ஜூன் திங்களில் முடிக்கப்படும்.

**(ஆ) கடலூர், சென்னை நேப்பியர் பாலம் மற்றும் அடையாறு முகத்துவாரத்தில் மீன்பிடி துறைமுகங்கள் அமைக்க ஒருங்கிணைந்த வடிவமைப்பு தயாரிக்க சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்தல்**

இயற்கைப் பேரிடர் அவசர கால உதவித் திட்டத்தின்கீழ் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் கடலூர் மீன்பிடி



2007 ஏப்ரல் 27]

துறைமுகம், சென்னை நேப்பியர் பாலம் மற்றும் அடையாறு முகத்துவாரத்தில் ஒருங்கிணைந்த வடிவமைப்பு வசதிகளை ஏற்படுத்த சாத்தியக் கூறுகளைக் கண்டறிய ஆலோசகர்களை நியமனம் செய்து பணி மேற்கொள்ள அரசு ரூ.25 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஆலோசகர் நியமனம் தொடர்பாகப் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆய்வு செய்யப்பட்டு, மதிப்பீட்டறிக்கை தயாரிக்கப்படுகிறது. ஆசிய வளர்ச்சி வங்கியின் ஏற்பளிப்பு பெறப்பட்டவுடன், ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படும்.

**(இ) மீன்பிடி துறைமுகம் / மீன்பிடி இறங்கு தளங்களில் தூர் வாருதல்**

ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் கூடிய சுனாமி அவசரகால உதவித் திட்டத்தின்கீழ் சின்னமுட்டம், பழையாறு மற்றும் மல்லிப்பட்டினம் ஆகிய மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் முடசலோடை, சேதுபாவாசத்திரம், கோட்டைப்பட்டினம், ஜெகதாப்பட்டினம் மற்றும் புன்னக்காயல் ஆகிய மீன் இறங்கு தளங்களில் ரூ.7.26 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி ஆழப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு சென்னை அண்ணா பல்கலைக்கழகம்மூலம் முதல்கட்டச் சுற்றுச்சூழல் சோதனை (I.E.E.) மற்றும் சுற்றுச்சூழல்மேலாண்மைத் திட்ட (E.M.P.) ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வுப் பணி முடிக்கப்பெற்றவுடன், ஆசிய வளர்ச்சி வங்கியின் அனுமதி பெற்று தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும்.

**2. உட்கட்டமைப்பு வசதிகள்**

**2.1 சேதுசமுத்திர கால்வாய்த் திட்டம்–கடலோர மீனவர்களின் மேம்பாட்டுத் திட்டம்–மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளம் அமைத்தல்**

சேதுசமுத்திர கால்வாய்த் திட்டத்தின்கீழ் மீனவர்களின் நேரடிப் பயன்பாட்டிற்காக முத்துப்பேட்டை, சேதுபாவாசத்திரம், தொண்டி, இராமேஸ்வரம் மற்றும் மூக்கையூர் ஆகிய பகுதிகளில் மீன்பிடி துறைமுகம்/மீன் இறங்கு தளம் அமைக்க ரூ.60 கோடி நிதி ஒதுக்கீடு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான ஆய்வுகள் மேற்கொண்டு, திட்ட அறிக்கை தயாரித்திட ஆலோசகரைத் (Consultant) தேர்ந்தெடுக்க சேதுசமுத்திர கப்பல் கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டவுடன், திட்ட அறிக்கை அடிப்படையில் திட்டம் நிறைவேற்றப்படும்.

## 2.2.இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகம்

சேதுசமுத்திர கப்பல் கால்வாய்த் திட்டத்தில் இராமேஸ்வரத்தில் சுமார் ரூ.100 கோடி மதிப்பீட்டில் மீன்பிடி விசைப்படகுகள், சரக்குக் கப்பல்கள் மற்றும் சேது சமுத்திரக் கழகத்திற்குச் சொந்தமான கப்பல்கள் நிறுத்திடவும், பழுதுகள் மேற்கொள்ளவும் ஒரு பல்நோக்குத் துறைமுகம் (Multipurpose Port) அமைத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஆய்வுகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்திட ஆலோசகரைத் தேர்ந்தெடுக்க சேதுசமுத்திரக் கழகம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியுள்ளது.

## 2.3.மத்திய பங்களிப்புத் திட்டத்தின்கீழ் 10 இடங்களில் மீன் இறங்கு தளங்கள் அமைத்தல்

மத்திய பங்களிப்புத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 10 இடங்களில் ரூ. 1,312.88 இலட்சம் மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மீன் இறங்கு தளங்கள் அமைக்க மத்திய அரசின் வேளாண் அமைச்சகத்திலுள்ள கால்நடை பராமரிப்பு, பால்வளத் துறை மற்றும் மீன்வளத் துறை நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

இதனில், எட்டு இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய இரண்டு இடங்களில் வீரபாண்டியபட்டினம் தவிர ஒரு இடத்தில் மே 2007-ல் பணி முடிக்கப்படும்.

## 2.4.தமிழ்நாட்டில் மத்திய பங்களிப்புத் திட்டத்தின்மூலம் மீன்பிடி துறைமுகங்கள் அமைத்தல்

### (i) தேங்காய்ப்பட்டினம் மீன்பிடி துறைமுகம்

ரூ. 30.55 கோடி மதிப்பீட்டில் மீன்பிடி துறைமுகம் ஒன்றினை அமைத்திட தமிழக அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம், இத்திட்டத்திற்குச் சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று வழங்கியுள்ளது.

இத்திட்டத்திற்குத் தேவைப்படும் தனியாருக்குச் சொந்தமான நிலங்களைக் கையகப்படுத்தும் பொருட்டு, ரூ.72.75 இலட்சம் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியருக்கு இழப்பீட்டுத் தொகைக்காக வழங்கப்பட்டுள்ளது. சில தனியார் நில உரிமையாளர்கள் இத்திட்டத்திற்கு நிலங்களைத் தனிப்பட்ட பேச்சுவார்த்தை



அடிப்படையில் வழங்கிட இணங்காததால், அந்நிலங்களை நிலம் கையகப்படுத்தும் சட்டம், 1894, பிரிவு 17(2)கீழ் உடனடியாகக் கையகப்படுத்திட அரசு ஆணை வழங்கியுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி முடிக்கப்பெற்றதும் மத்திய அரசின் வேளாண் அமைச்சகம் இத்திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கும். மத்திய அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

### (ii) குளச்சல் மீன்பிடி துறைமுகம்

மத்திய பங்களிப்புத் திட்டத்தின்கீழ் ரூ.23.50 கோடி மதிப்பீட்டில் குளச்சலில் மீன்பிடி துறைமுகம் அமைத்திட தமிழக அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

மாநில கடலோரப் பாதுகாப்பு மேலாண்மைக் குழு இத்திட்டத்திற்குச் சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று வழங்கியுள்ளது. இதன்பொருட்டு மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்திடமிருந்து சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் நிலங்களை குத்தகை அடிப்படையில் மாற்றம் செய்திட தமிழ்நாடு கடல்சார் வாரியம் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது.

மத்திய அரசின் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு பெற்று, கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

### (iii) பூம்புகார் மீன்பிடி துறைமுகம்

பெங்களூருவில் உள்ள மத்திய மீன்வளக் கடலோரப் பொறியியல் மையத்தின் (CICEF) ஆலோசனையுடன் ரூ.40 கோடி திட்ட மதிப்பீட்டில் மீன்பிடி துறைமுகம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. சென்னையில் உள்ள தேசிய கடல் சார் தொழில்நுட்ப நிலையம் (NIOT), இத்திட்டத்திற்கான வரைவு மாதிரி ஆய்வு, சுற்றுச்சூழல் விளைவு மதிப்பீடு (EIA)/சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்ட (E.M.P.) மாதிரி ஆய்வு அறிக்கை ஆகியவற்றைச் சமர்ப்பித்துள்ளது. இவ்வறிக்கையின் அடிப்படையில் இத்திட்டத்திற்குச் சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்றினை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2007 ஏப்ரல் 27

**2.5. கன்னியாகுமரி மாவட்டத்தில் "பூட்" திட்டத்தின்கீழ் முட்டம் மற்றும் இராஜாக்கமங்கலம்துறையில் மீன்பிடி துறைமுகங்கள் அமைத்தல் (கட்டுமானம், சொந்தமாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் முறை)**

கன்னியாகுமரி மாவட்டத்தில் முட்டம் மற்றும் இராஜாக்கமங்கலம்துறையில் BOOT அடிப்படையில் மீன்பிடி துறைமுகம் அமைத்திட தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்த இரு இடங்களிலும் மீன்பிடி துறைமுகம் கட்டி, இயக்கிட உரிய நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்க ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான மாதிரி கோரிக்கை வரைவு (RFP) அறிக்கை மற்றும் சலுகை ஒப்பந்தக் குறிப்புகள் ஆகியவை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**2.6 'ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் இதர தொடர்புடைய செயல்பாடுகளுக்கு மாநிலங்களுக்கு நிதி உதவி திட்டத்தின்' (ASIDE)கீழ் நிதியுதவி பெற்று மீன்பிடி துறைமுகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

தமிழ்நாடு தொழில் துறை மேம்பாட்டுக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் 'ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் இதர தொடர்புடைய செயல்பாடுகளுக்கு மாநிலங்களுக்கு நிதி உதவி திட்டக்குழு' (ASIDE.) கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள ரூ. 1,242 இலட்சம் ஒப்பளித்துள்ளது.

(அ) ரூ. 638 இலட்சத்தில் சென்னை மீன்பிடி துறைமுகத்தை மேம்படுத்துதல்

(ஆ) ரூ. 504 இலட்சத்தில் தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தை மேம்படுத்துதல்

(இ) ரூ. 100 இலட்சத்தில் நான்கு மாவட்டங்களில் குளிர்தொடர் வசதிகள் அமைத்தல்

சென்னை மீன்பிடி துறைமுகத்தைப் பொறுத்தமட்டில் ஒப்பளிக்கப்பட்ட 12 பணிகளில், 4 பணிகள் முடிக்கப்பட்டு எஞ்சிய பணிகளின் கட்டுமானங்கள் பல்வேறு நிலையில் உள்ளன.

தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தைப் பொறுத்தமட்டில் முதற்கட்டத் தூர்வாரும் பணி தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத்தின்மூலம் முடிக்கப்பட்டு, இரண்டாம் கட்டத் தூர்வாரும் பணி நடைபெற்று



2007 ஏப்ரல் 27]

வருகிறது. கட்டுமானப் பணிகளில் ஒப்பளிக்கப்பட்ட 11 பணிகளில் 4 பணிகள் முடிக்கப்பட்டு எஞ்சிய 7 பணிகள் 2007ஆம் ஆண்டு ஜூன் திங்களில் முடிக்கப் பெறும்.

தூத்துக்குடி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் தலா ரூ. 25 இலட்சம் செலவில் குளிர்தொடர் வசதிகள் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் மூலம் அமைத்திடும் பொருட்டு, ரூ. 90 இலட்சம் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் விடுவித்துள்ளது. மேலும், இவ்வகையான குளிர்தொடர் வசதிகள் சென்னை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் அமைத்திடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3. புதிய திட்டங்கள் 2007–2008**

**3.1 தமிழ்நாடு மீனவர் நல வாரியம்**

மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் 20-1-2007 அன்று சட்டப் பேரவையில் அவர்களது உரையில் விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தைப் போன்று, மீனவர்களுக்கும் மீனவர் நல வாரியம் ஒன்றை அரசு நிறுவுவதற்கான அறிவிப்பினை வெளியிட்டார்கள். மாண்புமிகு நிதி அமைச்சரின் 23-3-2007 அன்றைய நிதிநிலை அறிக்கை உரையிலும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர் மற்றும் உழவர்களுக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளும் மீனவர்களுக்கும் (சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக நலத் திட்டங்கள்) வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மீன் விற்பனை மற்றும் உலர் மீன்கள் விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபடும் மீனவப் பெண்களும் சேர்க்கப்படுவர். இதற்காக அரசு ரூ. 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும் வகையில் இதற்கான தனிச் சட்டம் இச்சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

**3.2. அண்மைக் கடல் பகுதிகளில் இரண்டு செயற்கை உறைவிடங்கள் நிறுவுதல்**

சுனாமி பேரழிவிற்குப் பிறகு, அதிகரித்துள்ள மீன்பிடி கலன்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன்பிடி திறன் ஆகியவற்றால் கடல்வாழ் உயிரினங்கள் பெருமளவில் பிடிக்கப்படுவதால் அண்மைக் கடலில் மீன்வளம் பெரிதும் பாதிக்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. கடலில் மீன்வள இருப்பு விரைவாகக் குறைந்து வருவதன் காரணமாக பாரம்பரிய மீனவர்களின் வருவாய் பாதிக்கப்பட்டுள்ளது. மீன்வள

[2007 ஏப்ரல் 27

இருப்பினை மேம்படுத்தும் பொருட்டு அண்மைக்கடல் பகுதிகளில் இரண்டு செயற்கை உறைவிடங்களை உருவாக்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

செயற்கை உறைவிடம் என்பது கடலில் உயிரினங்களுக்கு உறைவிடம் உருவாக்கி, அதன்மூலம் இயற்கைச் சூழலில் உற்பத்தியினைப் பெருக்கிட உதவுகிறது.

செயற்கை உறைவிடங்கள் அனைத்தும் திடமான பொருட்களால் செயற்கையாகக் கடல்வாழ் உயிரினங்களின் வாழ்விடத்திற்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த வகை உறைவிடங்கள்,

- கடல் உயிரினங்கள் மற்றும் மீன்களுக்கு மறைவிடம்/ வாழ்விடமாகிறது.
- உணவிற்கும், இனப்பெருக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் ஏற்ற இடமாகவுள்ளது.
- இழு வலையிலிருந்து பாதுகாக்கிறது.

ஏற்கெனவே கடலோரங்களில் 14 செயற்கை உறைவிடங்கள் நிறுவப்பட்டுள்ளன (காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒன்று, கடலூர் மாவட்டத்தில் ஒன்று, இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில், மாவட்டத்திற்கு தலா 2 வீதம் 8 மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் 4 செயற்கை உறைவிடங்கள்).

கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் மேலும் இரண்டு உறைவிடங்கள் தகுந்த இடங்களில் நிறுவப்படவுள்ளன.

### 3.3 மீன்வளத் துறை நூலகத்தை மேம்படுத்துதல்

மீன்வளத் துறை நூலகத்தில் விலை மதிப்புள்ள மீன்வளம் சம்பந்தப்பட்ட 3,000 புத்தகங்கள், 109 பிரசுரங்கள், 32 ஆங்கில சஞ்சிகைகள், 10 தமிழ் சஞ்சிகைகள் மற்றும் 29 துறைவாரியான வெளியீடுகள் உள்ளன.

Freshwater Limnology, Current Science, Freshwater Forum, Memories of the Queensland Museum, Zoo Systema, Zoological Studies போன்ற முக்கிய அறிவியல் புத்தகங்கள் மற்றும் Sea Food Export Journal, MPEDA Newsletter, CMFRI, CIFRI, CIBA Newsletters, Infofish, Fishing Chimes போன்ற பிரபலமான ஆங்கில வெளியீடுகள் பெறப்பட்டு இந்நூலகத்தில் பல ஆண்டுகளாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.



2007 ஏப்ரல் 27]

இவை மட்டுமன்றி, உணவு மற்றும் விவசாய நிறுவனம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், வங்காள விரிகுடா திட்டம் மற்றும் N.A.C.A. வெளியீடுகள் இந்நூலகத்தில் தொடர்ந்து பெறப்படுகின்றன.

இந்நூலகத்திற்கு ஆண்டுதோறும், சுமார் ஆயிரம் மாணவர்கள், பண்ணையாளர்கள், விஞ்ஞானிகள், ஆராய்ச்சி மாணவர்கள் ஆகியோர் தமிழகத்திலிருந்து மட்டுமின்றி இந்தியாவின் இதர மாநிலங்களிலிருந்தும் வருகைதந்து பயன்பெற்று வருகின்றனர். இந்நூலகம், பெரும்பாலும் மீன்வளம் சம்பந்தப்பட்ட அனைத்து மத்திய மீன்வள நிலையங்களுக்கும் தகவல் ஆதார நிலையமாக விளங்கி வருகிறது.

2007-2008 ஆம் ஆண்டு இந்நூலகத்தின் மேம்பாட்டிற்காக ரூ. 8 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.4 மீன்பிடி உபகரணங்களை மானியத்துடன் உள்நாட்டு மீனவர்களுக்கு அளித்தல்

தமிழ்நாட்டில் 53 நீர்த்தேக்கங்கள் மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவற்றில் மீன்துறையின் மூலம் தரமான மீன்குஞ்சுகளை இருப்பு செய்து, உரிமச்சீட்டுகள் வழங்கி அல்லது உள்ளூர் மீனவர்களைப் பணியில் அமர்த்தி, பங்கு முறை மீன்பிடிப்பு நடத்தப்படுகிறது. குறிப்பிட்ட சில நீர்த்தேக்கங்களில், மீனவர் கூட்டுறவு சங்க அங்கத்தினர்களை ஈடுபடுத்தி, பங்கு முறை மீன்பிடிப்பில் கிடைக்கும் மீன், பங்குமீனவர்களுக்கும் / துறைக்கும், நிர்ணயம் செய்யப்படும் விகிதத்தில் பிரிக்கப்படுகிறது. மீனவர்களுடைய மீன்பிடி திறனை மேம்படுத்திட மீன்பிடி கண்ணாடி நாரிழை பரிசல்கள் மற்றும் மீன்பிடி வலைகள் வாங்கிட மானியம் அளிப்பது அவசியமாகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2 அல்லது 3 பங்குமீனவர்கள் உள்ள ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு கண்ணாடி நாரிழைபரிசலும், 10 கிலோ மீன்பிடி நைலான் வலையும் வழங்கப்படும். இதன்படி ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 200 குழுக்களுக்கு 200 பரிசலும், 2,000 கிலோ மீன்பிடி வலை (மால்) 50% மானியத்தில் அளிக்கப்படும்.

### 3.5 ஆழியார் மீன்பண்ணையில் உள்ள மீன்குஞ்சு வளர்ப்புக் குளங்களில் சிறப்புப் பழுது பார்த்தல் மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்துதல்

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஆழியார் நீர்த்தேக்கம் 642 ஹெக்டேர் பரப்புடையது. இந்த நீர்த்தேக்கமும், இதனுடன் அமைந்துள்ள மீன்பண்ணையும் துறையால் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்

கழகத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. ஆழியார் மீன்பண்ணையில் நுண்மீன்குஞ்சு உற்பத்தி, பண்ணையில் மீன்குஞ்சுகள் வளர்த்தல் மற்றும் சினை மீன்கள் பராமரித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆழியார் மீன் பண்ணையின் மொத்தப் பரப்பான 20,175 சதுர மீட்டரில், பழுதடைந்துள்ள 1,680 சதுர மீட்டர் பரப்பினை ரூ. 18.80 இலட்சத்தில் பழுது நிவர்த்திக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பண்ணையிலுள்ள பழுதுகளை நிவர்த்திக்கும் நிலையில், ஆண்டுக்கு 8.40 இலட்சம் விரலிகளை கூடுதலாக உற்பத்தி செய்ய இயலும்.

### 3.6 மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகளை மேம்படுத்துதல்

மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டில் தற்சமயம் 8 மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகளும், 27 மீன்குஞ்சு வளர்ப்பிடங்களும் உள்ளன. இம்மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகளின் மூலம் 3,025 இலட்சம் நுண் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்ய இயலும். ஆனால் மீன்குஞ்சுகளை வளர்த்தெடுப்பதற்கென நிறுவப்பட்ட 16 ஹெக்டேர் பரப்பளவில், 8.5 ஹெக்டேர் பரப்பளவு பழுதுபட்டுள்ளது. மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணையின் உட்கட்டமைப்பு வசதி என்பது கட்டட அமைப்புகள், தண்ணீர் எடுத்துச் செல்லும் அமைப்புகள், குஞ்சு உற்பத்திக் குளங்கள், மீன்குஞ்சு வளர்ப்பிடங்கள், சினை மீன்கள் மற்றும் தண்ணீரை வெளியேற்றும் அனைத்து அமைப்புகளும் உள்ளடக்கியதாகும். பழுதுபட்டுள்ள மீன்குஞ்சு வளர்ப்பிடங்களைப் பழுது நீக்கும் நிலையில், சுமார் 375 இலட்சம் மீன்குஞ்சுகள் கூடுதலாக உற்பத்தி செய்ய இயலும். 2007-2008ஆம் ஆண்டில் 3,000 சதுர மீட்டர் பரப்பளவிற்கான மீன்குஞ்சு வளர்ப்புக் குளங்களை ரூ. 30 இலட்சத்தில் பழுது நீக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.7 கொசுக்களைக் கட்டுப்படுத்தி ஒழிப்பதற்கு கொசுப்புழுக்களை உண்ணும் மீன் இன இருப்பை அதிகப்படுத்துதல்

ஆழம் குறைந்த, செடிகொடிகள் மண்டியுள்ள நீர்நிலைகள், ஆலயக்குளங்கள், சமுதாயக் குளங்கள் மற்றும் நீர்தேங்கியுள்ள சிறிய குட்டைகள் ஆகியவை கொசுக்கள் பெரிய அளவில் உற்பத்தியாக ஏற்ற இடங்களாகும். இவற்றைக் கட்டுப்படுத்தி இனப்பெருக்கம் செய்வதைத் தடுக்க D.D.T. போன்ற பல்வேறு வகை பூச்சிக்கொல்லி இரசாயனப் பொருட்கள் இருந்தாலும், அவை மனித இனத்திற்கு பெரிய தீங்கு விளைவிக்கும் தன்மை கொண்டவையாகும். எனவே, எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படுத்தாத, உயிரியல் முறை கொசுத் தடுப்பு மிக முக்கியமானதாகும்.





கொசுப் புழுக்களைப் பெரிதும் விரும்பி உண்பதன் மூலம் கொசுக்களின் இனப்பெருக்கத்தைத் தடுக்கக்கூடிய பலவகை மீன்கள் உள்ளன. கொசுக்கள் அவற்றின் முட்டைகளை தேங்கியுள்ள தண்ணீரில் இடுவது வழக்கம். இவ்வாறான தண்ணீரில் கொசுக்களின் புழுக்களை விரும்பி உண்ணக்கூடிய, விலை மலிவான மீன் வகைகளை இருப்பு செய்து வளர்ப்பதன்மூலம், கொசுக்கள் பெருமளவில் இனப்பெருக்கம் செய்வதைத் தடுக்க இயலும். இவ்வாறு வளர்க்கத்தக்க மீன்கள் கம்பூசியா அபினிஸ் (Gambussia affinis), லெபிஸ்டஸ் ரெட்டிகுலேடஸ் (Labistes reticulatus) ஆகியவையாகும்.

இவ்வகை மீன்களை இயற்கை நீர்நிலைகளில் இருந்து சேகரம் செய்து, நாற்றங்கால்களில் இட்டு வளர்க்க வேண்டும். கொசுக்களைக் கட்டுப்படுத்த, இவ்வகை மீன்களைக் கொசுக்கள் உள்ள நீர்நிலைகளில் இருப்பு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. சேத்துப்பட்டு, அசூர், குளித்தலை மற்றும் மேட்டூர் அணை ஆகிய இடங்களில் ஏற்கெனவே உள்ள துறை நாற்றங்கால்களில் 'கம்பூசியா' மீன்கள் இருப்பு செய்யப்பட்டு தேவைப்படும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 4. கடல் மீன்வளம்

### 4.1. மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தலும், நிர்வகித்தலும்

மீன்பிடி கலன்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டதால், அண்மைக்கடல் பகுதிகளில் உள்ள மீன்வள ஆதாரங்களில் அதிக அளவு மீன்பிடிக்கப்படுவதாக மீன்வளப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்குவதன் காரணமாக அண்மைக்கடல் பகுதிகளில் மீன்பிடிப்பு அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெரும் மீன்பிடி கலன்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகுகள் வெவ்வேறு கண்ணி அளவு கொண்ட பல்வேறு மீன்பிடிப்பு வலைகளைப் பயன்படுத்தி இறால் மற்றும் மீன்களைப் பிடிப்பதனால், சிறுரக மீன்களையும், பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் இல்லாத மீன்களையும் சேர்த்துப் பிடித்து வருகிறார்கள். இது உணவுச் சுற்றினைப் பாதிப்பதுடன், வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த மீன்களின் இருப்பினையும் குறைவுபட வைத்து, சுற்றுச்சூழலுக்குப் பேரிடர் ஏற்படுத்துகிறது.

இதன் காரணமாக மீன்வளத்தினைப் பாதுகாக்கும் பொருட்டு 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும்

சட்டத்தின்படி அறிவிக்கை செய்து கீழ்க்கண்ட நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது:

- ❖ ஒவ்வோர் ஆண்டும், கிழக்கு மற்றும் மேற்குக் கடற்பகுதிகளில் மீன்பிடி விசைப்படகுகளுக்கு 45 நாட்களுக்கு மீன்பிடிப்பு செய்வதற்குத் தடை விதித்துள்ளது.
- ❖ எல்லா வகையான கலன்களிலும் சுருக்குமடி, இரட்டை மடி வலைகளைப் பயன்படுத்தத் தடை விதித்துள்ளது.
- ❖ செவுள் வலைகளின் கண்ணி அளவினை (குறைந்தது 25 மி.மீ.) கட்டுப்படுத்தியுள்ளது. இறால் வலைகள் குறைந்தது 37 மி.மீ. வால்பகுதியிலும், மீன் இழுவலைகள் குறைந்தது 75 மி.மீ. பக்கப் பகுதிகளிலும், 40 மி.மீ. வால் பகுதியிலும் உள்ளவையாக இருக்கவேண்டும் எனக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய ஒழுங்குமுறைகள் இருந்தாலும், சிறுரக மீன்கள் (கசார்) பிடித்தலை உப மீன்பிடிப்பாகக் கொண்டு வரும் பழக்கம் தொடர்ந்து வருகிறது. இதன் காரணமாக மேற்சொன்ன விதிமுறைகளை நன்கு கடைப்பிடித்து மீன்வளத்தினைப் பாதுகாப்பதன் அவசியத்தை மீனவர்களுக்கு எடுத்துரைக்கும் வண்ணம், சமுதாயம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தி மீன்வளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 4.2 சூரை மீன்வள ஆதாரங்கள் மற்றும் மீன்பிடிப்பு

இந்தியாவில் இலட்சத்தீவு, அந்தமான், மன்னார் வளைகுடா மற்றும் முக்கியமான மீன்பிடிப்புப் பகுதிகளில் சூரை மீன் வளத்திற்கான மிகுதியான ஆதாரங்கள் உள்ளன. சூரை மீன்பிடிப்பு சுற்றுச் சூழலுக்கு உகந்த குறைந்த சக்தியைப் பயன்படுத்தி கடலின் மேல் மட்ட மட்டத்திலும் ஊக்குவிக்கப்படுகிறது. மீன்பிடிப்பிற்கு உகந்ததாக இருப்பதால் இந்த மீன்பிடிப்பு அனைத்து மட்டத்திலும் ஊக்குவிக்கப்படுகிறது.

சூரை மீன் இந்திய தனிஉரிமைப் பொருளாதார மண்டலத்திலுள்ள சுமார் 9 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பு வாய்ந்த ஆதாரமாக இருப்பினும் இதனைப் பயன்படுத்திடத் தேவையான தொடர்முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. மஞ்சள் துடுப்பு சூரை, ஸ்கிப் ஜாக், பெருங்கண் சூரை மற்றும் கடலோர வகை சூரை மீன்கள், "சாஸ்மி" தரத்திற்கு இருப்பின் ஏற்றுமதிக்கு ஏற்றவையாகும்.

எனவே, மீனவர்கள் மத்தியில் சூரை மீன்பிடிப்பு பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தவும், மீன்பிடி கலன்களை சூரை



மீன்பிடிப்பதற்கு ஏற்ற கலன்களாக மாற்ற நிதியுதவியும் கடல்பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுமம் மற்றும் இந்திய மீன்வள அளவை மையம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து மீனவர்களுக்கு மீன்பிடி கலன்களில் செய்முறைப் பயிற்சி மற்றும் பதனிடும் பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 4.3. அண்மைக் கடல் மீன்வளத்தினை அதிகரிக்கும் திட்டம்

### (அ) கடலில் இறால் குஞ்சுகள் இருப்பு செய்தல்

அண்மைக் கடல் பகுதிகளில் அதிக அளவு மீன்பிடிப்பு நடத்தப்படுவதாலும், தொழிற்சாலை, நகர மற்றும் வேளாண்மை மாசுகளினால் கடல் மீன்வள ஆதாரங்கள் பாதிக்கப்படுவதினாலும், மண் சரிவு, அணை கட்டுதல், மண் படிதல், சதுப்பு நிலக் காடுகள் அழித்தல் போன்றவைகளாலும் மீன்வளம் குறைவுபடுகிறது.

அதிக அளவில் மீன்பிடிப்பதால் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், குறைந்துவரும் மீனினத்தைப் பெருக்குவதற்காகவும், வணிக முக்கியத்துவம் வாய்ந்த இறால் குஞ்சுகளை கடலில் இருப்பு செய்திடும் திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், மற்றும் தூத்துக்குடி ஆகிய கடலோர மாவட்டங்களில் உள்ள 12 இடங்களில், 15 முதல் 20 நாள்வரை வளர்ச்சியடைந்த இளம் இறால் குஞ்சுகளை வளர்த்து இருப்பு செய்வதற்காக அரசு ரூ. 128.40 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. இதில் ரூ. 96.40 இலட்சம் மதிப்புள்ள இறால் குஞ்சுகள் இருப்பு செய்வதற்காக இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 41 மில்லியன் இறால் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு கடலில் இருப்பு செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய 12 மில்லியன் இறால் குஞ்சுகள் விரைவில் கடலில் இருப்பு செய்யப்படவுள்ளன.

### (ஆ) செயற்கை உறைவிடம்

செயற்கை உறைவிடம் என்பது கடலுக்குள் கடல்வாழ் உயிரினங்கள் தங்கி இனவிருத்தி செய்வதற்காக அமைக்கப்படும் உறைவிடமாகும். இது கடல்வாழ் உயிரினப் பெருக்கத்திற்கு மிகவும் உதவுகிறது. இத்தகைய உறைவிடங்களில் மீன்கள் உணவிற்காகவும், தங்குவதற்காகவும், இனப்பெருக்கத்திற்காகவும் அதிகம் வந்து சேரும். இதன் காரணமாக மீன் உற்பத்தி அதிகரிக்கும்.

கலவா, கொடுவா மற்றும் பல்வேறு வகையான மீன்கள் வசிப்பதற்கு பல்வேறு வகையான மாதிரிகள் வடிவமைக்கப்பட்டு அண்மைக் கடற்பகுதிகளில் வைக்கப்படவுள்ளன.

கடலோரப் பகுதியில் 11 இடங்களில் செயற்கை உறைவிடங்களை அமைத்திட, அரசு இதுவரை ரூ.160 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

இது தொடர்பான கலந்தாய்வுப் பணி, இடம் தேர்வு மற்றும் பாதிப்புகளை ஆராய, மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2,200 செயற்கை உறைவிட அமைப்புகள் செய்து முடிக்கப்பட்டு 11 இடங்களில் நிறுவப்பட்டு வருகின்றன.

## 5. கடல் உயிரின வளர்ப்பு

### 5.1 பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு சிறப்புத் திட்டங்கள் (SGSY)

ஊரக வளர்ச்சித் துறை மூலம் பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புச் சிறப்புத் திட்டத்தின்கீழ் மீன்வளத் துறை பின்வரும் இரண்டு திட்டங்களை ரூ.28.16 கோடி மதிப்பீட்டில், கடல் மீனவர்களின் வாழ்க்கைக்கான மாற்று வருவாய்த் திட்டமாகச் செயல்படுத்திட மைய அரசு அனுமதி அளித்துள்ளது:

(i) தமிழ்நாட்டில் சுனாமி இயற்கைப் பேரிடர் காரணமாகப் பாதிக்கப்பட்ட மீனவர்களது திறனை உயர்த்திடவும், வாழ்வாதாரத்திற்கெனவும், நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் அவற்றின் மதிப்பூட்டிய உணவுப்பொருள் தயாரிப்பு ஆகியவைகளில் திறமை வளர்க்கும் பொருட்டும் தீவிரப் பயிற்சியளித்தல்.

(ii) தமிழக மீனவர்களுக்கு வாழ்வாதாரத்திற்கென வலைக்கூண்டுகளில் மீன்கள் வளர்ப்பு (Cage culture) மற்றும் அவற்றின் மதிப்பூட்டிய உணவுப்பொருள் தயாரிப்பு குறித்துத் தீவிர பயிற்சியளித்தல்.

இத்திட்டங்கள் 3 ஆண்டு காலத்திற்குள், தமிழ்நாட்டில் 12 கடலோர மாவட்டங்களில் இரண்டு நிலைகளாகச் செயல்படுத்தப்படும். கடற்பாசி வளர்த்தல், மட்டி / ஆளி வளர்த்தல், வலைக்கூண்டுகளில் கடல்மீன் வளர்த்தல், சிங்கிஇறால் மற்றும் நண்டு கொழுக்கவைத்தல் மற்றும் பிடிக்கப்படும் மீன்களை மதிப்பூட்டச் செய்தல், சூரிய ஒளி கொண்டு மீன்களைக் காயவைத்தல் (Solar drying), வலை பழுதுபார்த்தல்,



இயந்திரங்களில் பழுதுகள் நிவர்த்தி செய்தல், வண்ண மீன்வளர்ப்பு, மீனவர்களுக்குக் கடற்பாசி / சிப்பி வளர்ப்பு போன்ற கடல் உயிரினங்களை வளர்த்திடத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான மீன்குஞ்சுகள் பொரிப்பகம் மற்றும் சூரிய ஒளி மூலம் காயவைக்கும் கட்டமைப்புச் சாதனங்கள் ஆகியவற்றில் திறமையை வளர்த்தல் முதலியன இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். இத்திட்டத்தின்கீழ் 42,000 மீனவர்களின் தொழில்நுட்பத் திறமையை மேம்படுத்தி கூடுதல் பொருளாதார மேம்பாடு அடையச் செய்வது நோக்கமாகும். இதனால் ஏற்றுமதி வருவாய் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உற்பத்தி அதிகரிக்கும்.

### 5.2 கடற்பாசி வளர்த்தல்

அகர், காரஜீனன், ஆல்ஜினேட், மனிடால் மற்றும் ஐயோடின் போன்ற பொருட்கள் தயாரிக்கக் கடற்பாசி முக்கிய ஆதாரமாகும். கடற்பாசியிலிருந்து பல்வேறு மருத்துவ குணங்கள் கொண்ட பொருட்கள் மற்றும் உயிர் ஊக்கிப் பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் கடற்பாசி ஆதாரங்கள் அதிகம் உள்ளன. கடற்கரை ஓரங்களில் கடற்பாசி வளர்த்தல் செயல்முறை விளக்கத்தின் அடிப்படையில் வருவாய் அளிக்கும் ஒரு தொழிலாக அடையாளம் காணப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களை ஈடுபடுத்திக் கடற்பாசி வளர்க்கும் தொழில் சில இடங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. அண்மைக்கடல் பகுதிகளில் அதிக அளவில் மீன்பிடிப்பு அழுத்தத்தினைத் தவிர்க்கக் கடற்பாசி வளர்த்தல் ஒரு மாற்றுத் தொழிலாக விளங்குகிறது. கடற்பாசி வளர்ப்பின் மூலம் ஒரு மீனவ குடும்பம் ஒரு நாளைக்கு ரூ.200 முதல் ரூ.250 வரை வருவாய் ஈட்ட இயலும். பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புச் சிறப்புத் திட்டத்தின்கீழ், 6000 மீனவர்களுக்குப் பயிற்சியும், 3,000 மீனவர்களுக்குப் பொருளாதார நடவடிக்கை மேற்கொள்ள நிதி உதவியும் மூன்று ஆண்டு காலத்திற்குள் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.14.50 இலட்சம் செலவினத்தில் 2,000 மீனவர்களுக்குக் கடற்பாசி வளர்த்தலில் பயிற்சி அளிக்கவும், ரூ.357 இலட்சம் மானியம் அளித்துப் பொருளாதார நடவடிக்கையைத் தொடங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.3 கடலில் மிதவைக்கூட்டின் மூலம் மீன்வளர்ப்பு மேற்கொள்ளுதல்

நீண்ட கடலோரப் பகுதியைக் கொண்டுள்ள தமிழகத்தில் அதிக அளவில் கடல்வாழ் உயிரின வளர்ப்பு மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது. அண்மைக்கடலில் ஏற்பட்டுள்ள அதிகப்படியான மீன்பிடிப்புத் தன்மையைக் குறைத்திடும் நோக்கத்தில் பல்வேறு சுய உதவிக் குழுக்களை

ஈடுபடுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு சிறப்புத் திட்டத்தின்மூலம் சுய உதவிக் குழுவில் அங்கத்தினர்களாக உள்ள சுமார் 16,700 மீனவ மக்களுக்கு கடல்பாசி வளர்ப்பு, சிங்கி இறால்/நண்டு கொழுக்கவைத்தல், மட்டி/ஆளிப்பண்ணை அமைத்தல், வண்ண மீன்வளர்ப்பு மற்றும் கூண்டுகளில் மீன்வளர்ப்பு போன்ற கடல்வாழ் உயிரின வளர்ப்புகளில் மூன்று வருட காலத்தில் தீவிரப் பயிற்சி அளித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட வளர்ப்புப் பணிகளை கடல் மீனவர்கள் மேற்கொள்ளும் விதமாகக் கடலோரப் பகுதிகளில் மிதவைக் கூட்டில் மீன்வளர்ப்பு செய்யும் திட்டம் மீன்வளத் துறையால் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்மூலம் வளர்த்தெடுக்கக் கலவா மீன் மற்றும் கொடுவா மீன் போன்ற இனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவ்வகை மீன்கள் ஏற்றுமதி வாணிபத்தில் மிக முக்கியமானவைகளாகும். எனினும், இவ்வினங்களின் மீன் குஞ்சுகள் குறிப்பிட்ட அளவில் மட்டுமே கிடைப்பதால், மிதவைக்கூட்டின் மூலம் வளர்த்தெடுப்பதில் பெரும் சிரமம் ஏற்படுகிறது. தற்போது கலவா மீன்களின் மீன்குஞ்சுகள், இயற்கை வளத்தில் இருந்தே கிடைக்கப் பெறுகிறது. மிதவைக் கூட்டில் மீன்வளர்ப்பு மேற்கொள்ள, மிகக் குறைந்த பௌதிக இரசாயன மாற்றங்கள் கொண்டுள்ளதும், பெரிய அலைகளற்ற, அமைதியான கடலோர வளைகுடா மற்றும் அமைதியான நீர்ப்பரப்பு முக்கியத் தேவையாகும். இம்மாதிரியான அமைப்புள்ள இடங்கள் குறைவாக இருப்பதால் அதிக பரப்பளவில் மிதவைக்கூடுகள் நிறுவ வேண்டிய காரணத்தால், பாரம்பரிய மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்லுவதற்குத் தடையாகவும் உள்ளது.

மேற்கண்ட இடர்ப்பாடுகளைக் களையும் நோக்கத்தில் குறிப்பிட்ட, அமைதியான கடற்பரப்பு கொண்ட சில பகுதிகளில் 'பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு சிறப்புத் திட்டம்' என்ற திட்டத்தின்மூலம் மீனவர்களின் பங்கேற்புடன் 'மிதவைக் கூட்டில் கலவா மீன்கள் வளர்ப்பு' என்ற முன்னோடித் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது வெற்றி பெறும் நிலையில், மேலும் பல பகுதிகளில் கலவா மீன்கள் மற்றும் பிற முக்கிய மீன் இனங்களை கடல்வாழ் உயிரின வளர்ப்பு மூலம் பரவலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் சுமார் 4,000 மீனவ மக்களுக்குப் பல்வேறு கடல்வாழ் உயிரின வளர்ப்புப் பயிற்சி அளித்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.



## 5.4 பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்குதல்

அரசு பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்கும் பொருட்டு, நாட்டுப் படகுகளில் வெளிப்பொருத்தும் இயந்திரங்களை வாங்கி பொருத்துவதற்காக ரூ.20,000/- மானியத் தொகையினை மீனவர்களுக்கு வழங்க தற்போது வழிவகை செய்துள்ளது. இதுவரை 17,572 வெளிப்பொருத்தும்/உள்பொருத்தும் இயந்திரங்களைத் துறை வழங்கியுள்ளது. 2006-2007இல் பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்குவதற்கு மீனவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் வகையில், 1,050 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வாங்குவதற்கு மானியமாக அரசு ரூ.210 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

## 5.5 மீன்பிடி விசைப்படகுகளுக்கு வாங்கும் அதிவேக எரியெண்ணெய்க்கான மத்திய கலால் வரித் தொகையினைத் திரும்ப அளித்தல்

மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களின் பொருளாதார சிரமங்களைக் குறைக்கும் வகையில், அதிவேக எரியெண்ணெய்க்காகச் செலுத்தப்படும் கலால் வரித் தொகையினை அரசு மானியமாகத் திருப்பி அளித்து, மீன்பிடி விசைப்படகுகளின் இயக்கச் செலவினைக் குறைக்க வழிவகை செய்துள்ளது. தற்போதைய நிலவரப்படி மாநில அரசு, லிட்டருக்கு ரூ. 0.30-ம் மத்திய அரசு ரூ. 1.20-ம் அளித்து மொத்தமாக லிட்டருக்கு ரூ. 1.50 வீதம் மீனவர்களுக்கு எரியெண்ணெய் மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால், 5,000 மீனவர்கள் பயன்பெற்று வருகிறார்கள். 2006-2007ஆம் ஆண்டிற்கான நிலுவை மானியத்தில் ரூ. 2.59 கோடி மானியத்தை மத்திய அரசு மார்ச் 2007-ல் வழங்கியுள்ளது. இத்திட்டம், மத்திய அரசின் நிதியுதவியுடன் 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 5.6 மீனவர்களால் மீன்பிடிப்பிற்குப் பயன்படுத்தப்படும் அதிவேக எரியெண்ணெய்க்கு விற்பனை வரி விலக்களித்தல்

இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடி விசைப்படகுகளையும், இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளையும் சொந்தமாக வைத்துள்ள தமிழக மீனவர்கள் அதிவேக எரியெண்ணெய் விலை ஏற்றத்தினால் மிகவும் சிரமப்படுகின்றனர். இச்சிரமத்தினைக் குறைக்கும் பொருட்டு, மீன்பிடிப்பிற்கு மீனவர்களால் பயன்படுத்தப்படும் அதிவேக எரியெண்ணெய்க்கு 100% விற்பனை வரி விலக்களித்து புதிய திட்டமொன்றை அரசு அறிவித்தது. இதன்படி விசைப்படகு மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகுகளில் பயன்படுத்திட

[2007 ஏப்ரல் 27

மீனவர்கள் வாங்கும் ஒவ்வொரு லிட்டர் அதிவேக எரியெண்ணெய்க்கும் தோராயமாக ரூ.6.22 குறைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி 20,200 மீனவ பயனாளிகள் பயன்பெறுகிறார்கள். தமிழக அரசு 1-8-2006 முதல் விசைப்படகு மீனவர்கள் பயன்படுத்தும் வரிவிலக்குப் பெறும் அதிவேக எரியெண்ணையின் அளவினை மாதம் 1,000 லிட்டரிலிருந்து 1,500 லிட்டராக அதிகரித்து வழங்கி வருகிறது. இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 6. மீனவர் நலத் திட்டங்கள்

மாநிலத்தில் உள்ள மீனவர்களின் நலன் அரசின் செயல் திட்டங்களில் ஒரு முக்கியமான திட்டமாகும். அதன்படி, கீழ்க்காணும் நலத் திட்டங்கள் அரசின் முழு ஆதரவோடு, தொடர்ந்து தீவிரமாக செயல்படுத்தப்படும்:

1. மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்
2. தேசிய கடல் மீனவர் மற்றும் மீனவ மகளிருக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்
3. மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம்
4. ஈமச்சடங்கிற்காக மீனவர் குடும்பங்களுக்கு நிதி உதவித் திட்டம்
5. சுனாமி பேரழிவால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரண உதவித் திட்டம்

### 6.1 மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்

தமிழகத்தில் வாழும் மீனவ மக்களின் இன்னல்களைக் களைந்திட மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்க கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, 1975-1976 முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 51,926 வீடுகள் மீனவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

2006-2007ஆம் ஆண்டில் மாநில அரசு திட்டத்தின்கீழ் 2,000 வீடுகள் கட்டிட அரசால் அனுமதி வழங்கப்பட்டு ரூ.740 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



2007 ஏப்ரல் 27]

### 6.2 (அ) தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

கடலில் மீன்பிடிப்பிற்குச் செல்ல இயலாத காலங்களில், கடற்பகுதியில் வாழும் கடல் மீனவர்களின் துயர் களையும் பொருட்டு அரசினால் தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில், மத்திய அரசின் திட்ட விதிமுறைகளின்படி ஒவ்வொரு வருடமும் 8 மாதங்களுக்கு, மாதம் ஒன்றிற்கு ரூ.75/- வீதம் பயனாளி மீனவர்களிடம் வசூல் செய்யப்படுகிறது. இவ்வாறு வருடத்தில் பயனாளிகளிடம் வசூலிக்கப்படும் தொகை ரூ.600/- உடன் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்குத்தொகையாக தலா ரூ.300/- வீதம் சேர்க்கப்படுகிறது. மொத்தத் தொகையான ரூ.1,200/- மீன்பிடிப்புக்குச் செல்ல இயலாத நான்கு மாதங்களில் ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 2006-2007 ஆம் ஆண்டில் 1,79,853 மீனவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### (ஆ) கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

2006-2007 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் திட்டம் மாநிலத் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 8 மாதங்களுக்கு, மாதம் ஒன்றிற்கு ரூ.75/- வீதம் பயனாளி மீனவ மகளிர் செலுத்துகின்றனர். மாநில அரசின் பங்காக ரூ.600/- வழங்கப்படுகிறது. இதன்படி, மொத்தத்தொகையான ரூ.1200/- கடலில் மீன்பிடிப்பு இல்லாத நான்கு மாதங்களில் மீனவ மகளிர் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் 1,02,993 மீனவ மகளிர் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 6.3 மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் மீனவரின் ஆண்டுக் காப்புறுதித் தவணைத் தொகையான ரூ.14/-ஐ மாநில மற்றும் மத்திய அரசுகள் சமமாகச் செலுத்துகின்றன. காப்புறுதித் தவணைத் தொகை மீனவர்களிடமிருந்து வசூல் செய்யப்படுவதில்லை. இத்திட்டத்தின்கீழ், விபத்தினால் இறக்க நேரிடும்/நிரந்தர முழு ஊனமடையும் மீனவர் குடும்பத்திற்கு ரூ. 50,000/-ம், பகுதி ஊனமடையும் மீனவருக்கு ரூ. 25,000/-ம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மீனவர்/மீனவ மகளிர் பயனாளிகளுக்காக ரூ.39.74 இலட்சம் சந்தா தொகை செலுத்தி,

புதுடில்லியிலுள்ள மீனவர் கூட்டுறவு இணையத்தின் மூலமாக காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 6.4 ஈமச்சடங்கிற்காக மீனவர் குடும்பங்களுக்கு நிதி உதவி அளித்தல்

இறந்துபோன மீனவரின் ஈமச்சடங்கிற்காக அரசு ரூ.5 இலட்சம் அனுமதித்துள்ளது. மீனவர்கள் இறப்பின்போது, இறந்த மீனவர்களின் குடும்பத்தினருக்கு, ஈமச்சடங்கு செலவு உதவியாக ரூ. 500/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினை வருவாய்த் துறையினருடன் இணைந்து 2007-2008 ஆம் ஆண்டு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 7. மீனவர் கடல் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள்

### 7.1 பிற நாடுகளில் சிறைவைக்கப்படும் மீனவரின் குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள், மீன்பிடிக்கும்போது அயல்நாடு அரசுகளால் கைது செய்யப்படும்போது இத்தகைய மீனவர் குடும்பங்களின் துன்பங்களைக் களையும் பொருட்டு, அயல்நாட்டில் இருந்து அம்மீனவர்கள் திரும்பி வரும் வரை அவர்கள் குடும்பத்தினருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.50/- வீதம் நிவாரணம் வழங்கப்படுகிறது. உடனடி நிவாரணத்திற்கென நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### 7.2 இலங்கைக் கடற்படை தாக்குதலால் இறக்கும் மீனவர் குடும்பங்களுக்கு நிதி உதவி அளித்தல்

நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் இந்திய எல்லைக்குட்பட்ட கடலில் மீன்பிடிக்கிறார்கள். மோசமான வானிலை மற்றும் படகின் இயந்திரக் கோளாறு காரணமாக சில நேரங்களில் சர்வதேச கடல் எல்லைக் கோட்டை அவர்கள் தாண்டி இலங்கை கடற்பகுதிக்குள் செல்லும் சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. இவ்வாறு இந்திய மீனவர்கள் சர்வதேச கடல் எல்லைக் கோட்டைக் கடக்கும் பட்சத்தில் இலங்கைக் கடற்படையால் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். அத்தகைய



சமயங்களில், அப்பாவி இந்திய மீனவர்கள்மீது துப்பாக்கிச் சூடும் நடத்தப்படுகிறது. இத்தகைய நிகழ்வுகளை இந்திய அரசாங்கத்தின் மூலம் இலங்கை அரசுக்குத் தெரிவித்து உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம் இறந்த மீனவர் குடும்பத்திற்கு ரூ.1 இலட்சம் நிவாரணமாக வழங்கப்படுகிறது.

### 7.3 உயிர் காக்கும் கவச உடை

மீனவர்களுக்கு கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை அளித்தல், கடலில் மோசமான வானிலை மற்றும் இக்கட்டான சூழ்நிலைகளில் உதவுதல் ஆகியவை சமீப காலங்களில் முக்கியத்துவம் அடைந்துள்ளன. பாரம்பரிய மற்றும் விசைப்படகு மீனவர்களுக்குத் தேவையான உயிர்காக்கும் உபகரணங்கள் வழங்குதலின் அவசியத்தையும் ஒரு முக்கிய அங்கமாகத் தமிழக அரசால் கருத்தில் கொள்ளப்பட்டது. தமிழக மீனவர்களுக்கு உயிர்காக்கும் கவச உடைகள் வழங்குவதன் மூலம் இறப்பு மற்றும் விபத்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சுனாமி கூடுதல் நிவாரணத் திட்டத்தின்கீழ் 1,68,000 கவச உடைகள், 2007 ஆம் ஆண்டில் வழங்கபபட உள்ளன.

## 8. உள்நாட்டு மீன்வளம்

மீன்வள மேம்பாட்டிற்கு தகுதி வாய்ந்த 52,000 ஹெக்டேர் பரப்பளவுள்ள நீர்த்தேக்கங்கள், 97,000 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட பெரிய மற்றும் பருவ காலங்களில் தண்ணீர் பெறும் பாசனக் குளங்கள், 1,58,000 ஹெக்டேர் பரப்பளவுள்ள சிறிய மற்றும் குறுகிய கால தண்ணீர் வசதி கொண்ட குளங்கள் மற்றும் 7,400 கி.மீ. நீளமுள்ள ஆறுகள் மற்றும் உப வாய்க்கால்கள், 63,000 ஹெக்டேர் பரப்பளவுள்ள கழிமுகம், உவர்நீர் மற்றும் உப்பளப்பகுதி என 3.7 இலட்சம் ஹெக்டேர் உள்நாட்டு நீர்வள ஆதாரங்களைத் தமிழ்நாடு கொண்டுள்ளது. 30,000 ஹெக்டேர் பரப்பளவுள்ள அரசுடமையாக்கப்பட்ட நீர்நிலைகளில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்யவும், அவற்றில் மீன்பிடிக்கவும் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குத்தகைக்கு விடப்படுகின்றன.

மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் மூலம் சுமார் 5,000 ஹெக்டேர் பரப்புள்ள கிராமக் குளங்கள் மற்றும் குட்டைகளில் கூட்டின மீன்வளர்ப்பு முறையை மேற்கொள்ள மேம்படுத்தப் பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 4.5 இலட்சம் மெட்ரிக் டன் மீன்கள் உற்பத்தி

செய்ய வாய்ப்புகள் இருப்பினும். தற்சமயம் 1.55 இலட்சம் மெட்ரிக் டன் மீன்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. கூட்டின மீன்வளர்ப்பு, நன்னீர் இறால் வளர்ப்பு, வண்ண மீன் உற்பத்தி / வளர்ப்பு ஆகியவற்றை மேற்கொள்ள மீன்வளர்ப்போர் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

நீர்த்தேக்கங்கள் மற்றும் பெரிய நீர்ப்பாசனக் குளங்கள் மூலம் அதிக உள்நாட்டு மீன்உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பு உள்ளதால், அறிவியல் ரீதியான நவீன நீர்வாழ் உயிரின வளர்ப்பு முறைகளுக்கான சாத்தியக்கூறு உள்ள இடங்களில் மேற்கொண்டு, அதிக மீன்உற்பத்தி செய்து உள்நாட்டு மீனவர்களின் வருவாயை அதிகரிப்பதை முக்கிய நோக்கமாக மீன்துறை கொண்டுள்ளது.

## 8.1 மீன்குஞ்சு உற்பத்தி

மீன்வளத் துறையில் 8 தூண்டுதல் முறை மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் உள்ளன. 2007-2008ஆம் ஆண்டில் 3,200 இலட்சம் நுண்மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் உற்பத்திக்கும், தேவைக்கும் இடையே உள்ள இடைவெளியினை குறைக்க துறையின் நுண்மீன் குஞ்சுகள் உற்பத்தி நிலையங்களின் வசதிகளை மேம்படுத்தவும், தனியாருக்கு மான்ய உதவி அளித்து நுண்மீன் குஞ்சுகள் உற்பத்தி நிலையங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு நிதியுதவி அளிக்கத் தேவையான நிதி தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திலிருந்து பெறப்படும்.

## 8.2 மீன்குஞ்சு வளர்ப்பிடங்கள்

மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டில், 16 ஹெக்டேர் பரப்பளவுள்ள 27 மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள் உள்ளன. இவற்றில் தற்சமயம் 7.5 ஹெக்டேர் பரப்பளவு மட்டும் மீன்குஞ்சு வளர்ப்புப் பணிக்குப் பயன்படுத்தப்படுகிறது. எஞ்சிய இடம் பழுதடைந்துள்ளது. பழுதடைந்துள்ள வளர்ப்பிடங்களைப் படிப்படியாக செப்பனிட்டு, மீன்குஞ்சுகள் வளர்த்தெடுக்கும் பணியை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 2006-2007ஆம் ஆண்டு, 3500 சதுர மீட்டர் பரப்பளவுள்ள வளர்ப்பிடங்கள் பழுது பார்க்கப்பட்டதன் மூலம், 17.5 இலட்சம் விரலிகள் கூடுதலாக வளர்த்தெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வளர்த்தெடுக்கப்பட்ட விரலிகள், துறையின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்நிலைகளில் இருப்பு செய்யப்பட்டும் மற்றும் தனியாருக்கு விற்பனையும் செய்யப்பட்டன. 2007-2008ஆம் ஆண்டில், 370 இலட்சம் விரலிகள் வளர்த்தெடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



## 8.3 தமிழ்நாட்டில் மீன்குஞ்சு உற்பத்தியில் தன்னிறைவு அடைய நடவடிக்கைகள்

3.07 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள நீர்த்தேக்கங்கள், பெரிய பருவகால குளங்கள், கிராமிய செயல்முறை மீன்வளர்ப்புக் குளங்கள் மற்றும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைக் குளங்கள் ஆகிய மீன்வளர்ப்புக்குத் தகுந்த உள்நாட்டு நீர்நிலைகள் உள்ளன. அனைத்து உள்நாட்டு நீர்நிலைகளிலும், தரமான மீன்குஞ்சுகள் இருப்பு செய்ய 232 மில்லியன் மீன்குஞ்சுகள் தேவைப்படுகின்றன. தற்போது மீன்வளத் துறை மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் ஆகியவை ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யும் 80 மில்லியன் மீன்குஞ்சுகளைத் தவிர, தனியார் துறையினர் 80 மில்லியன் மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்து வருகின்றனர். தற்சமயம் அனைத்து நீர்நிலைகளிலும் மீன்குஞ்சு இருப்புத் தேவையினைப் பூர்த்தி செய்ய 72 மில்லியன் இடைவெளி உள்ளது. இந்த இடைவெளியை பூர்த்தி செய்திட 15 ஹெக்டேர் பரப்பில் மீன்குஞ்சுகள் உற்பத்தி மற்றும் வளர்ப்பிடங்களை ஏற்படுத்துவது அவசியமாகிறது. தற்போது துறையின் வசம் உள்ள 8.5 ஹெக்டேர் பரப்பளவுள்ள பழுதடைந்த மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளை மேம்படுத்த வேண்டும். 15 ஹெக்டேர் பரப்பளவுள்ள நுண்மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பிடங்களை மேம்படுத்திட அரசு மற்றும் தனியாரிடமிருந்து முதலீடாக ரூ.450 இலட்சம் தேவைப்படுகிறது. தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் மூலம் மானிய உதவி பெற்று தனியாரை ஊக்கப்படுத்தி, 4 ஆண்டு காலத்திற்குள் மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பிடங்களைப் படிப்படியாக மேம்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 8.4 நீர்த்தேக்கங்கள்

துறையின் கட்டுப்பாட்டில் 53 நீர்த்தேக்கங்கள் உள்ளன. இவற்றில் மீன்வளத் துறையால் தரமான மீன்விரலிகளை இருப்பு செய்து, பின்வரும் முறைகளில் மீன்பிடிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது:

(அ) உரிமச்சீட்டு வழங்கல்

(ஆ) அருகிலுள்ள உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களைக் கொண்டு பங்கு அடிப்படையில் மீன்பிடித்தல்

(இ) குத்தகைக்கு விடுதல்

நீர்த்தேக்கங்கள் உள்நாட்டு மீன்வள அபிவிருத்திக்குப் பெரிதும் உதவுகின்றன. நீர்த்தேக்கங்களில் மீன் உற்பத்தியைப் பெருக்கிட, ஆண்டொன்றுக்கு 1000 ச.மீ. வீதம் வலைக்கூண்டுகளில் (Cage culture) மீன்வளர்ப்பினை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2007-2008ஆம் ஆண்டில் 1750 மெட்ரிக் டன் மீன்களை நீர்த்தேக்கங்களிலிருந்து உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 8.5 மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

நீர்நிலைகளின் அனைத்து மட்டத்திலும் உள்ள தண்ணீரை முழுமையாகப் பயன்படுத்தி, அறிவியல் ரீதியான மீன்வளர்ப்புப் பணியை மேற்கொள்வதன் மூலம், அதிக அளவில் மீன் உற்பத்தி செய்யும் பணியையும், கிராமப்பகுதிகளிலுள்ள படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கவும், மீன்வளர்ப்பினை அனைவரும் அறியும் வண்ணம் செய்வதுமே மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் முக்கியக் கொள்கையாகும். தற்சமயம் மீன்வளர்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மீன்வளர்ப்போருக்கு மானிய நிதி உதவி அளித்திடும் பணியை 12 மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் செய்து வருகின்றன. இம்முகமைகள் குளங்கள் மற்றும் மீன்வளர்ப்போரைத் தேர்வு செய்து, அவர்களுக்கு மீன்வளர்ப்பில் பயிற்சி அளித்தல், குத்தகை அடிப்படையில் குளங்களை ஒப்படைத்தல், மீன்களை அறுவடை செய்யும் வரை தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றன. தற்சமயம், இத்திட்டத்தின்கீழ் 5000 ஹெக்டேர் பரப்பளவுப் பகுதி மட்டும் உள்நாட்டு மீன்வளர்ப்பிற்கென உள்ளது. மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் பணிகளை மேம்படுத்த, கிராமப்புற இளைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்குத் தீவிர உள்நாட்டு மீன்வளர்ப்பில் பயிற்சி அளிக்கவும், கூடுதலாக ஊராட்சிக் குளங்களை இத்திட்டத்தின்கீழ் கொணர்ந்து முகமையின் பணிகளை விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழக அரசு, அரசாணை எண் 47, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை நாள் 29-3-2007ல் ரூ.50.00 இலட்சம் உள்நாட்டு மீன்வள மேம்பாட்டிற்காக, மத்திய அரசின் பங்களிப்புத் திட்டத்தின்கீழ் ஒப்பளித்துள்ளது.

### 8.6 குளங்கள் மற்றும் நீர்நிலைகளில் ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பினைப் பிரபலப்படுத்துதல்

மீன் வளர்ப்பின்மூலம் பெறக்கூடிய வருவாயை அதிகரித்திட, கூட்டின மீன்வளர்ப்புடன் நன்னீர் இறால் வளர்ப்பையும் ஒருங்கிணைத்து, மீன்வளர்ப்போருக்கு வர்த்தக ரீதியாகக் கூடுதல் வருவாய் அளிக்கும் நன்னீர் இறால் மற்றும் கெண்டை மீன்களை ஒருங்கிணைத்து வளர்ப்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்தின்படி மீன்வளர்ப்போருக்கு, குளங்களில் இருப்பு செய்ய வாங்கப்படும் நன்னீர் இறால் குஞ்சுகளுக்கு மானியம் வழங்கப்படும். 2006-2007ஆம் ஆண்டில் இதுவரை 499.90 ஹெக்டேர் பரப்பில் நன்னீர் இறால் குஞ்சுகளை இருப்பு செய்திட 185 மீன்வளர்ப்போருக்கு ரூ.9.62 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.





### 8.7 தீவிர உள்நாட்டு மீன்உற்பத்தி மற்றும் விற்பனைத் திட்டம்

தமிழ்நாட்டில், விழுப்புரம், மதுரை, தேனி மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட மாவட்டங்களில் சுமார் 16,000 ஹெக்டேர் பரப்பளவிலுள்ள பருவகால மற்றும் பெரிய பாசனக் குளங்கள் மேம்படுத்தப்பட்டு மீன்வளப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், நீர்நிலைகள் திறந்த ஒப்பந்தப் புள்ளிமூலம் மீன்பாசி குத்தகைக்கு விடப்படுகின்றன. இத்திட்டம் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருப்பதுடன், ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்பும் அதிகரித்துள்ளது. 2006-2007ஆம் ஆண்டில், இத்திட்டத்தில் 9827.98 ஹெக்டேர் பரப்புள்ள 280 குளங்கள் குத்தகைக்கு விடப்பட்டு 905 மெட்ரிக் டன் மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. 2007-2008ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 1,000 மெட்ரிக் டன் மீன்உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 8.8 நீர்நிலைகளில் வலைக்கூண்டுகளில் (Cage culture) மீன் வளர்த்தல்

தமிழகத்தில் உள்ள நீண்டகால நீர் இருப்பு கொண்ட நீர்நிலைகள்/ நீர்த்தேக்கங்கள், வலைக் கூண்டுகளின்மூலம் மீன்வளர்ப்பதற்கு உகந்தவையாகும். நீர்நிலைகளின் மேற்பரப்பினை உபயோகித்து, வலைக் கூண்டுகள்மூலம் மீன் உற்பத்தியினை அதிகரித்திடலாம். வலைக் கூண்டுகள்மூலம் மீன் உற்பத்தியினை அதிகரித்திடலாம். வலைக் கூண்டுகளில் மீன்வளர்த்தல்மூலம் அதிக மீன்குஞ்சு இருப்பு செய்வதும், எளிதாக பராமரிப்பதும் மற்றும் அதன்மூலம் மீன் உற்பத்தியினை அதிகரிப்பதற்கும் வாய்ப்புகள் உள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆழியார் நீர்த்தேக்கத்தில் சோதனை அடிப்படையில் முன்னோடித் திட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஆரம்பநிலையில் இத்திட்டத்தின் செயல்பாடுகள் ஊக்கமளிப்பதாக இருந்தாலும், திடீரென நீர்த்தேக்கத்தில் ஏற்பட்ட அதிகக் காற்று வீச்சின் காரணமாக இத்திட்டம் கைவிடப்பட்டது. நீர் நிலைகளில் வலைக்

[2007 ஏப்ரல் 27

கூண்டுகள் கொண்டு மீன்வளர்ப்பினை மேற்கொள்ளுமுன் அந்நீர்நிலைகளில் காற்று வீச்சு மற்றும் நீர்நிலையின் தன்மைக்கு ஏற்ற வகையில் அதற்குத் தகுந்த வலைக்கூண்டுகளை வடிவமைக்க வேண்டும். வலைக்கூண்டுகளில் மீன்வளர்த்தல்மூலம், மீன் உற்பத்தியினை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதால் உகந்த நீர்நிலைகளில் இத்திட்டத்தினைச் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 8.9 மீன்கள் பிடிக்கப்பட்டபின் தேவைப்படும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்

மத்திய அரசின் பங்களிப்புத் திட்டத்தின்கீழ், உள்நாட்டு மீன்களை விற்பனை செய்ய தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைப் பலப்படுத்திட, தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் அரசாணை நிலை எண் 46, நாள் 29-03-2007-ன் வாயிலாக ரூ.50 இலட்சத்தினை ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்தில் வெப்பம் கட்டுப்படுத்தப்பட்ட சிறு ஊர்திகள் (insulated mini trucks), குளிர்பதன வசதிகளுடன்கூடிய சுகாதாரமான நவீன சில்லரை விற்பனை அங்காடிகள் அமைப்பது ஆகியவை முக்கிய அங்கங்களாகும். இத்திட்டம் ஜூன் 2007-க்கு முன்னர் செயலாக்கப்படும்.

## 8.10 குளிர் நீர் மீன்வளர்ப்பு மேம்பாடு (Cold water fisheries)

தமிழ்நாட்டில், குளிர்நீர் மீன்வளர்ப்பு மேற்கொள்ள அதிக வாய்ப்புகள் உள்ளன. நீலகிரி மாவட்டத்தில் இவ்வகையிலான ஆதாரங்கள், உயிர் மண்டலப்பகுதிகளாக (Bio-sphere Reserve) அறிவிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் உள்ள 'டிரௌட்' மீன் குஞ்சு பொரிப்பகத்தினை, மத்திய மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் ரூ.51.50 இலட்சத்தில் மேம்படுத்திடத் திட்டமிட்டு, அதன்படி முதற்கட்டமாக மத்திய அரசிடமிருந்து ரூ.20 இலட்சமும், மாநில அரசிடமிருந்து ரூ.5 இலட்சமும் பெறப்பட்டு, திட்டப்பணிகள் ஜூன் 2007-க்குள் முடிக்கப்படும். எஞ்சிய பணிகளை முடிக்கத் தேவையான ரூ.26.50 இலட்சம், 2007-2008ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள உயர்மட்ட நீர்நிலைகளில் விளையாட்டு மீன்பிடிப்பிற்கு (Sport Fishing) அதிக வாய்ப்புகள் உள்ளன. இந்நீர்நிலைகளில் மீன்வளத் துறைமூலம், 'டிரௌட்' இன மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு, அவற்றைப் பிடிக்க உரிமங்கள் வழங்கப்படுகின்றன. தூண்டில்மூலம் விளையாட்டு மீன்பிடிப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன் நீர்நிலைகளில் மீன்வள



2007 ஏப்ரல் 27]

ஆதாரங்களை அதிகரித்து, அதன்மூலம் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2007-2008ஆம் ஆண்டில் 350 உரிமங்கள் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 8.11 மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் வசிக்கும் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக, மத்திய அரசு நிதியுதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2006-2007-ம் ஆண்டிற்கு, மத்திய அரசு 'பொம்மீன்' குஞ்சு பொரிப்பகம் சோலையாறு நீர்த்தேக்கப் பகுதியில் நிறுவிட ரூ.10 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இத்திட்டப்பணிகள் ஜூலை 2007 இல் முடிவடையும்.

2007-2008ஆம் ஆண்டில், 33 தாலுகாக்களில் 135 நீர்வடிப் பகுதிகளில் ரூ.10 இலட்சம் செலவினத்தில் மீன்வளர்ப்பு மற்றும் வண்ண மீன்வளர்ப்பினை மேம்படுத்திட மைய திட்டக் குழு ஒப்பளிக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தேவையான ஆய்வக வசதியுடன் மாதிரி நன்னீர் இறால் வளர்ப்புப் பண்ணை திருநெல்வேலி மாவட்டத்திலும், வண்ண மீன்உற்பத்தி செய்வோருக்கு மானிய உதவியும், வண்ண மீன்காட்சியகம் விருதுநகர் மாவட்டத்தில் அமைத்திட மானிய உதவியும் செய்ய 2007-2008ஆம் ஆண்டிற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 8.12 வண்ண மீன் வளர்ப்பு மேம்பாடு

சமீப காலமாக வண்ண மீன்வளர்ப்பு பொதுமக்களிடையே வரவேற்பைப் பெற்றுவருகிறது. இத்திட்டம் அதிக ஏற்றுமதி வாய்ப்புகளையும் கொண்டுள்ளது. எங்கெல்லாம் தகுதி வாய்ந்த நன்னீர் ஆதாரங்கள் உள்ளனவோ, அப்பகுதிகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்திட வாய்ப்புகள் உள்ளன. வண்ண மீன் உற்பத்திமூலம் ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கிடலாம். வண்ண மீன்உற்பத்தி மிகவும் எளிதாகவும், வீடுகளின் பின்புறத்தில் உள்ள இடத்தில் குறைந்த முதலீட்டுடன் மேற்கொள்ளக்கூடிய தொழில் நுட்பம் உடையதாகவும் உள்ளது. சென்னைக்கு அருகே கொளத்தூர் பகுதியில் சுமாராக 600-க்கு மேற்பட்டவர்கள் இல்லங்களின் பின்புறத்தில் வண்ண மீன்உற்பத்திப் பணியை மேற்கொண்டுள்ளனர். ஆயினும், இத்தகைய மீன் வளர்ப்போர் அதிக அளவில் பயனடைய, இத்தொழில்நுட்பம் மேம்படுத்தப்பட வேண்டும். வண்ண மீன் உற்பத்தியினை பொதுமக்களுக்குச் செயல்முறையில் விளக்கிட,

செம்பரம்பாக்கத்தில் ரூ.6.75 இலட்சம் மதிப்பீட்டில் வண்ண மீன் உற்பத்தி மற்றும் வளர்ப்பு நிலையம் அமைத்திட அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. செம்பரம்பாக்கம் நிலையத்தில் ஏற்படுத்தப்படும் வசதிகள், சுய உதவிக் குழுவினர் மற்றும் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பயன்படுத்தப்படும். வண்ண மீன் உற்பத்தியாளர்களால் தற்போது எதிர்நோக்கப்படும் பல்வேறு பிரச்சினைகளைக் களைய, தண்ணீர் தரச்சோதனை ஆய்வுக் கூடம், உயிர் உணவு வளர்ப்பு முறை, மீன் குஞ்சுத்தீவனம் தயாரித்தல், மானியம் அளித்தல் போன்றவை குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவை தவிர, வண்ண மீன்வளர்ப்பில் 150 நபர்களுக்குத் தொழில்நுட்பத்தினை மேம்படுத்திட பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புச் சிறப்பு திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மீன்வளத் துறை மற்றும் மீன்வளத் தொழில்நுட்ப வல்லுநர்கள் கூட்டமைப்பு ஆகியவை இணைந்து 22-2-2007 மற்றும் 23-2-2007 ஆகிய நாட்களில், இந்தியாவில் வண்ண மீன்வளர்ப்பு மற்றும் உற்பத்தி குறித்து தேசிய அளவிலான கருத்தரங்கு நடத்தியது. இக்கருத்தரங்கின் வெளிப்பாடுகள் கருத்தில் கொள்ளப்பட்டு வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனையை மேம்படுத்த 2007-2008இல் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

## 8.13 நீர்வாழ் உயிரின வளர்ப்பு மேம்பாட்டிற்காக உள்நாட்டு மற்றும் கடலோரப் பகுதி நீர்நிலைகள் மற்றும் நிலங்களைக் குத்தகைக்கு விடுதல்

கிராமப்புறப் பொருளாதாரத்தில் மீன்வளர்ப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. பெருகிவரும் மக்கட் தொகைக்கு மீன் விலைகுறைந்த புரதச்சத்து மிக்க உணவாகும். உள்ளூர் பயன்பாட்டுடன் அந்நியச் செலாவணி ஈட்டுவது மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குவதில் மீன்வளம் குறிப்பிடத்தக்க அங்கமாக உள்ளது. உள்நாடு மற்றும் கடல் மீன் உற்பத்திக்குத் தகுதி வாய்ந்த ஏராளமான வளங்களைத் தமிழ்நாடு கொண்டுள்ளது. மீன்வள ஆதாரங்களை அதிகம் சார்ந்திருத்தல், சுற்றுச்சூழல் மாசு, மீன்வளத்தின் பல பிரிவுகளில் தொழில்நுட்ப முன்னேற்றம், உலகத் தரத்திற்கு ஏற்ற தரக்கட்டுப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய மற்றும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ள ஒருங்கிணைந்த மீன்வளக் கொள்கையை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தற்சமயம் பொதுப் பணித் துறை, ஊரக வளர்ச்சித் துறை, இந்து சமய அறநிலையத் துறை, வனத் துறை போன்ற





பல்வேறு துறைகள் நீர்நிலைகளைக் குத்தகைக்கு விடுதல் குறித்து தனித்தனிக் கொள்கைகளைக் கொண்டுள்ளன. எனவே மேற்கண்ட அனைத்துக் கொள்கைகளையும் கருத்தில் கொண்டு, தேசிய மீன்வளக் கொள்கையின் வெளிப்பாடு, இதர மாநிலங்களின் கொள்கைகள், தேசிய மற்றும் உலகளவில் கையாளப்படும் தற்போதுள்ள சட்டங்கள், ஒழுங்குபடுத்தும் விதிகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த மீன்வளக் கொள்கையை அரசு ஏற்படுத்தும்.

இவ்வாறு ஏற்படுத்தப்படவுள்ள உத்தேச மீன்வளக் கொள்கை, மீன்வள ஆதாரங்களைச் சரியாகப் பயன்படுத்துதல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், விற்பனை வசதிகளை வலுப்படுத்துதல், சமூக-பொருளாதார வளர்ச்சியை மீன்வளம்/மீன்வளர்ப்போருக்கு ஏற்படுத்துதல், நிலையான நீர்வாழ் உயிரினங்கள் வளர்ப்பை மேம்படுத்துதல், கிராமப்புற வேலைவாய்ப்பினை அதிகரிக்கச் செய்தல் மற்றும் ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்யும் கொள்கை ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டதாக இருக்கும். மீன்வளத்தினை நிர்வகித்திட பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து நீர்நிலைகளையும் மேம்படுத்தும் சரியான, பொதுவான குத்தகைக் கொள்கையை ஏற்படுத்த முக்கியத்துவம் அளிக்கப்படும்.

இவ்வாறான கொள்கையை வகுக்கும் முன், நீர்வள ஆதாரங்களைப் பயன்படுத்துவோர், நீர்வளங்களைப் பாதுகாத்து மேம்படுத்தும் பணியைச் செய்துவரும் அரசு சாரா நிறுவனங்கள், மத்திய/மாநில ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் வரைமுறைப்படுத்தும் அமைப்புகள் ஆகியவற்றின் கருத்தறிந்து, அதனடிப்படையில் மீன்வள ஆதாரங்களை மேம்படுத்தும் குத்தகைக் கொள்கை குறித்த முடிவுகள் எடுக்கப்படும்.

## 8.14 உவர்நீர் வாழ் உயிரின வளர்ப்பு

தமிழ்நாட்டில், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்திட 56,000 ஹெக்டேர் பரப்புள்ள கழிமுகப் பகுதியும் 14,880 ஹெக்டேர் கடலோர நிலமும் உள்ளன. இதில் 7,610 ஹெக்டேர் பகுதியில் மட்டுமே இறால் வளர்க்கப்படுகிறது. தமிழகத்தில் செயல்படுத்தப்படும் இறால் வளர்ப்பிற்காக அமைக்கப்பட்ட நீர்வாழ் உயிரின ஆணையச் சட்டம், 2005-ன்படி, அனைத்து இறால் பண்ணைகளையும் வரன்முறைப்படுத்திடும் பொருட்டு கடல்நீர்வாழ் உயிரின ஆணையத்திடம் கட்டாயமாகப் பதிவு செய்திட வேண்டும்.

மாறிவரும் தற்போதைய சூழ்நிலையில், அனைத்துக் கடலோர இறால் பண்ணைகள் குறித்த விவரங்களைக் கணக்கெடுத்தல்

அவசியமாகிறது. 2006-2007ஆம் ஆண்டிலிருந்து அனைத்து இறால் பண்ணைகளையும் கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இறால் வளர்ப்புப் பணியை ஊக்கப்படுத்தும்வண்ணம், 2 ஹெக்டேருக்குக் குறைவான நீர்ப்பரப்பில் இறால் வளர்ப்பை மேற்கொள்ளும் சிறிய இறால் வளர்ப்பாளர்களுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.40,000/- வீதம் மத்திய அரசின் பங்களிப்புத் திட்டத்தில் மானியம் வழங்கப்படுகிறது.

**8.15 பாசன வேளாண்மையை நவீனப்படுத்துதல் மற்றும் நீர்நிலைகளைச் சீராக்கி, பராமரித்து மேலாண்மை செய்தல் (IAMWARM)**

தண்ணீரின் பயன்பாட்டினை ஆதாரமாகக் கொண்டு, பல்வேறு துறைகளின் செயல்பாடுகளை ஒருமுகப்படுத்தி, அதன்மூலம் உற்பத்தித் திறனை அதிகரித்து வேளாண்மையின்மூலம் கிடைக்கக்கூடிய வருவாயை அதிகரித்திடவும், செயல்படுத்தப்படும் "பாசன வேளாண்மையை நவீனப்படுத்துதல் மற்றும் நீர்நிலைகளைச் சீராக்கிப் பராமரித்து மேலாண்மை செய்தல்" திட்டம், உலக வங்கியின் நிதியுதவியுடன் செயலாக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் பயன்பாடுகள் :—

- தண்ணீர் பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல்
- நிலையான பண்ணை வருவாயினை அதிகரித்தல்
- நீர் ஆதார அமைப்பை மேம்படுத்துதல்

மீன்வளத் துறையின்மூலம் 63 உப திட்டப் பகுதிகளில் ரூ.17.30 கோடி செலவினத்தில் திட்டச்செயலாக்கம் செய்து, மேற்கண்ட குறிக்கோள்களை அடைய உலக வங்கி ஏற்பளித்துள்ளது. 2007-2008ஆம் ஆண்டில், 9 உப திட்டப்பகுதிகளில் இத்திட்டச் செயல்பணி மேற்கொள்ளப்படும். இத்திட்டப்பணிகளை மேற்கொள்ளும் பலதுறைகளில் ஒன்றான மீன்வளத் துறையின்மூலம், பண்ணைக் குட்டைகளில் நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், மீன்குஞ்சு இருப்பு வங்கிகள் ஏற்படுத்துதல், மிதவைக் கூண்டுகளில் மீன்குஞ்சுகளை வளர்த்தல், அரசு மீன்பண்ணைகளை மேம்படுத்துதல், வண்ண மீன்வளர்ப்பு மற்றும் மீன்பிடி உபகரணங்கள் வழங்குதல், மீன் விற்பனை சிற்றங்காடிகள் ஏற்படுத்துதல் ஆகியவற்றை ஐந்தாண்டுகளில் மேற்கொள்ள ரூ.361.13 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.



**8.16 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

11-9-2006 நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசாணை எண் 115-இன்படி அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு கிராமத்திலும் ரூ.3 இலட்சம் முதல் ரூ.5 இலட்சம் வரையிலான நிதி ஒதுக்கீட்டில் ஒரு கிராமத்திற்கு ஒரு குளம் மேம்படுத்தப்படும். தண்ணீரை நல்லமுறையில் சுத்தமாகப் பராமரித்தல், உள்ளாட்சிகளுக்கு அதிக வருவாய் ஈட்டுதல், மகளிர் சுய உதவிக் குழுக்களை ஈடுபடுத்தி மீன்வளர்ப்பு செய்து தொடர்ந்து வருவாய் ஈட்ட உதவுதல், உள்ளாட்சிகளை மீன்வளர்ப்பு மேற்கொள்ளச் செய்து கூடுதல் வருவாய் பெறச் செய்தல் போன்றவை இத்திட்டக் குறிக்கோள்களாகும்.

இத்திட்டத்தின்படி, 25 மாவட்டங்களில் 1,073 கிராமங்களில் உள்ள 1,073 நீர்நிலைகள் தேர்வு செய்யப்பட்டு, இதுவரை 9,69,720 மீன்குஞ்சுகள் இக்குளங்களில் இருப்பு செய்யப்பட்டுள்ளன.

**9. ஆராய்ச்சி**

**9.1 துறை நடவடிக்கைகள்**

மீன்வளப் பிரிவை அபிவிருத்தி செய்ய ஆராய்ச்சி மேற்கொள்ளும் பொருட்டு, சென்னை மற்றும் தூத்துக்குடியில் இரு ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநில மீன்வள ஆராய்ச்சிக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 19 திட்டத் தலைப்புகளில் ஆராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மத்திய அரசு நிறுவனங்களான மத்திய நன்னீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய உவர்நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய கடல்வள ஆராய்ச்சி நிலையம் மற்றும் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றோடு இணைந்து மீன்வளத் துறை ஆராய்ச்சிப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. துறையின்மூலமாக மேற்கொள்ளப்படும் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :—

(1) பெருரகக் கெண்டை மீன் இனங்களின் விரிவான இனப்பெருக்கம்/பன்முறை இனப்பெருக்கம்.

(2) தனி மற்றும் கூட்டின நன்னீர் இறால் வளர்ப்பு.

(3) சுற்றுச்சூழல் விளைவு மதிப்பீடு.

(4) கடல் மீன் வளர்ப்பில் செயல்முறை விளக்கம்.

(5) வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த நன்னீர் மீன்கள்/வண்ண மீன்கள்/நன்னீர் இறால்களுக்கான உணவு வகைகளை மதிப்பிட்டு அறிதல்.

## 9.2 இதர ஆராய்ச்சி நடவடிக்கைகள்

'மகளிர் சுய உதவிக் குழு' எனும் முயற்சி அனைத்துப் பிரிவுகளிலும் பெரும் வரவேற்பைப் பெற்று வருகிறது. எனவே, மீன்வள அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

வலைக்கூண்டுகளிலும், அடைப்புகளிலும் நண்டு மற்றும் சிங்கி இறால்களைக் கொழுக்க வைத்தல் பற்றிய செயல் விளக்கம் மற்றும் நிலைப்படுத்துவதற்கு அரசு ரூ.13.075 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இது பழவேற்காடு ஏரி மீனவர்களின் மாற்றுத் தொழில் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் அமைந்துள்ளது. சென்னை தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிலையத்துடன் இணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, முழுத்தொகையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. பழவேற்காடு பகுதி மீனவர்களுக்கு மிதக்கும் தன்மை கொண்ட பிளாஸ்டிக் குழாய்களுடன்கூடிய கண்ணாடி நாரிழையால் செய்யப்பட்ட நவீன வலைக்கூண்டுகள் அமைக்கவும், நண்டு மற்றும் சிங்கி இறால் கொழுக்க வைக்கும் தொழில்நுட்பம் பற்றிய விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், பழவேற்காடு ஏரி மீனவர்களுக்காக, மாற்றுத் தொழில் வாழ்வாதார உதவித் திட்டத்தில், கடற்பாசி வளர்ப்புப் பயிற்சி மற்றும் செயல் விளக்கம் அளித்திட அரசு ரூ.5.20 இலட்சம் தொகைக்கு ஒப்பளிப்பு செய்தது. கடற்பாசி வளர்ப்புப் பயிற்சி மற்றும் நேரிடை செயல்விளக்கம் மூலமாக 60 மீனவ மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெற்றுள்ளனர்.

பழவேற்காடு ஏரி மீனவர்களுக்கு பழவேற்காடு பகுதியில் கிடைக்கக்கூடிய இறால் தலைக் கழிவுகளைக் கொண்டு கோழி/மீன் தீவனம் தயாரிக்க விழிப்புணர்வு ஏற்படுத்தவும், திறன் வாய்ந்த தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தவும், அரவை மற்றும் உலரவைக்கும் இயந்திர சாதனங்கள் வாங்கவும் அரசு ரூ.8 இலட்சம் ஒப்பளிப்பு செய்தது. அரவை மற்றும் உலரவைக்கும் இயந்திர சாதனங்கள்



வாங்கப்பட்டு, பழவேற்காடு மீனவ மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் செயல் விளக்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. கோழி/மீன் தீவனம் வெற்றிகரமாகத் தயாரிக்கப்பட்டு, மீன் பண்ணையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறாக, பழவேற்காடு பகுதி மீனவர்களிடையே இத்தொழில்நுட்பம் பற்றி நிறைவான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 10. விரிவாக்கம் மற்றும் பயிற்சி

## 10.1 பயிற்சி நிலையங்கள் அமைத்தல்

மத்திய அரசின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் (80:20) மீன் துறை பயிற்சி மற்றும் விரிவாக்கம் திட்டத்தில் 3 மீன்வளப் பயிற்சி நிலையங்களும், ஒரு விழிப்புணர்வு மையமும் கட்டப்பட்டுள்ளன. இதன்மூலம் மீனவர்கள், விவசாயிகள் மற்றும் மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றது.

## 10.2 மீனவ இளைஞர்களுக்குப் பயிற்சி

மீன்பிடி படகுகளை இயக்கவும் மற்றும் பராமரிக்கவும், நவீன மீன்பிடி கருவிகளை இயக்கவும் பயிற்சி பெற்ற போதுமான நபர்களை உருவாக்கவும், தமிழகத்தில் நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய நான்கு இடங்களில் மீனவ இளைஞர்களுக்கு 10 மாத காலப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு நிலையமும் 50 முதல் 60 மீனவ இளைஞர்களுக்கு இப்பயிற்சியை வழங்கி வருகிறது. இதுமட்டுமன்றி இந்தப் பயிற்சி நிலையங்களில், இளநிலை இயந்திரக் கம்மியர்களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி மேற்கொள்ளும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ரூ.400/- வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

## 10.3 அடிப்படைத் தகவல் பரிமாற்றத்தினை வலுப்படுத்துதல்

மீன்வளப் பிரிவில் அடிப்படைத் தகவல்கள் மற்றும் இணைய தளச் செய்திகள் பரிமாற்றத்தினை வலுப்படுத்தும் திட்டத்தினைச் செயல்படுத்த மத்திய அரசு ரூ.68.19 இலட்சத்தை அங்கீகரித்து ரூ.23.50 இலட்சத்தை வழங்கியுள்ளது. துறையின் மாவட்டத் தலைமை நிலையங்களுக்கென 34 கணினிகள் மற்றும் சாதனங்கள் வாங்கப்பட்டு மாவட்டத் துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 10.4 தொடுதிரை (Touch Screen)

மீன்வளத் துறையின் நலத்திட்டங்கள், தொழில்நுட்பங்கள், மீனவர் மற்றும் மீன்பிடிப்பு சம்பந்தமான பிற புள்ளிவிவரங்கள் ஆகியவற்றை மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பொதுமக்கள் குறிப்பாக மீனவ சமுதாயத்தினர் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் ஒரு தொடுதிரை, மீன்வளத் துறை இயக்குநர் அலுவலக நூலகத்தில் முதல்முறையாக நிறுவிட, அரசு ரூ.2 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. "எல்காட்" நிறுவனத்தால் வரும் ஜூன் 2007இல் தொடுதிரை நிறுவப்படும்.

### 10.5 மீனவ சமுதாயத்தைச் சார்ந்த 10ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்குதல்

மீனவ சமுதாயத்தைச் சார்ந்த மாணவ மாணவிகளை அவர்களின் கல்வியில் உற்சாகப்படுத்தும்பொருட்டு பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ/மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தியுள்ளது. இதற்காக 2006-2007இல் ரூ.4.12 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்திட்டம் 2007-2008ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 11. மீன்வளத்தில் கூட்டுறவு

மீன்வளத் துறையில் 3,46,445 உறுப்பினர்களைக் கொண்ட 539 கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 1,44,692 உறுப்பினர்களைக் கொண்ட 389 கடல் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும், 68,844 உறுப்பினர்களைக் கொண்ட 281 உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 7,735 உறுப்பினர்களைக் கொண்ட 72 உள்நாட்டு மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்களும், 5,835 உறுப்பினர்களைக் கொண்ட 23 இதர வகை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 762 உறுப்பினர்களைக் கொண்ட 11 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்களும், 589 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையமும் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் மீனவர் மற்றும் மீனவ மகளிரின் முன்னேற்றத்திற்கான முக்கிய நிறுவனங்களாகச் செயல்படுகின்றன.

## 12. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 1974ஆம் ஆண்டு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகத்தின்





அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.500 இலட்சமாகும். இன்றுவரை செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.445.52 இலட்சமாகும்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தற்போது கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

1. கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் தரமான மீன்குஞ்சுகளை இருப்பு செய்து வர்த்தக ரீதியில் மீன்பிடித்தல், நீர்த்தேக்கங்களை நிர்வகித்தல்.
2. தூண்டுதல் முறை இனவிருத்திமூலம் தரமான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்து நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்தல் மற்றும் மீன்வளர்ப்போருக்கு விற்பனை செய்தல்.
3. மண்டபம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் மீன்களைப் பதப்படுத்தும் வசதிகளைக் கொண்ட குளிர்பதன நிலையங்கள் மற்றும் பனிக்கட்டி நிலையங்களை நிர்வகித்தல்.
4. மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களில் அமைக்கப்பட்டுள்ள எரியெண்ணெய் வழங்கு நிலையங்கள் மூலம் மீன்பிடி விசைப்படகுகளுக்கு மானிய விலையில் எரியெண்ணெய் வழங்குதல்.
5. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருவண்ணாமலை மற்றும் இதர முக்கிய நகரங்களில் பொதுமக்களுக்குத் தரமான மீன்களை நியாயமான விலையில் விற்பனை செய்தல்.
6. இராயபுரத்தில் உள்ள மீன்வலை தயாரிப்பு நிறுவனத்தை நிர்வகித்தல் மற்றும் மீனவர்களுக்குத் தரமான மீன் வலைகளை விற்பனை செய்தல்.
7. சென்னைக்கு அருகில் நீலாங்கரையில் உள்ள இறால் குஞ்சுகள் உற்பத்தி செய்யும் நிலையத்தினை நிர்வகித்தல் மற்றும் தேசிய கடல்சார் தொழில் நுட்ப நிலையத்துக்குக் கடல்வாழ் உயிரின அதிகரிப்புத் திட்டம் நிறைவேற்றிட வசதி செய்து கொடுத்தல்.
8. காரங்காடு மாதிரி இறால் பண்ணை நிர்வகித்தல்.
9. அலங்கார மீன் உற்பத்தி, விற்பனை செய்தல் மற்றும் அலங்கார மீன்காட்சியகம் நிர்வகித்தல்.

[2007 ஏப்ரல் 27

10. பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்கிட மானியம் வழங்கும் திட்டத்தின்படி வெளிப்பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் இயந்திரங்களை விற்பனை செய்தல்.

## 12.1 நீர்த்தேக்கங்கள்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகப் பராமரிப்பில் உள்ள கீழ்க்கண்ட நீர்த்தேக்கங்களில் முறையாக மீன்குஞ்சு இருப்பு செய்யப்பட்டு மூன்றில் ஒரு பங்கு என்ற அடிப்படையில் உள்ளூர் மீனவர்களைப் பணியமர்த்தி தினசரி மீன் பிடிப்பு நடத்தப்படுகிறது:—

(1) சாத்தனூர் அணை (2) பவானிசாகர் (3) ஆழியார் (4) அமராவதி (5) திருமூர்த்தி (6) உப்பாறு (7) பாலாறு-பொறந்தலாறு (8) பெரும்பள்ளம்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களிலிருந்து 2006-2007ஆம் ஆண்டில் 396.2 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.142.98 இலட்சம் (குத்தகை வருவாய் உட்பட) வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

2007-2008ஆம் ஆண்டிற்கு மீன்பிடிப்பு 450 டன்கள் எனவும், வருவாய் ரூ. 200 இலட்சம் எனவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 12.2 மீன்குஞ்சு உற்பத்தி

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் சாத்தனூர் அணை மற்றும் ஆழியார் அணையிலுள்ள மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு நிலையங்களுடன் அமராவதி, திருமூர்த்தி, உப்பாறு மற்றும் பாலாறு-பொறந்தலாறு ஆகிய இடங்களில் மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களையும் நிர்வகித்து வருகிறது. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மீன்குஞ்சுகளின் பெரும்பகுதி, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதோடு மீன்வளத் துறை மற்றும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளுக்கும் மற்றும் தனிநபர்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. 2006-2007ஆம் ஆண்டு 173 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. 2007-2008ஆம் ஆண்டிற்கு 300 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 27]

## 12.3 மீன் பதப்படுத்தும் நிலையங்கள்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள் மற்றும் மீன் பதப்படுத்தும் நிலையங்கள் உள்ளன. அவற்றில் மண்டபத்தில் உள்ள பனிக்கட்டி உற்பத்தி நிலையம் தனியாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

## 12.4 எரியெண்ணெய் வழங்கும் நிலையங்கள்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் சென்னை, மல்லிப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் பழையாறு ஆகிய மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் துறைமுக மீன் இறங்கு தளங்களில் 26 எரியெண்ணெய் வழங்கு நிலையங்களை மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகு இயக்குபவர்களின் நலன் கருதி இயக்கி வருகிறது. 2006-2007ஆம் ஆண்டு 77,265 கி.லி. இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 67,258 கிலோ லிட்டர் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2007-2008ஆம் ஆண்டிற்கு 83,716 கிலோ லிட்டர் எரியெண்ணெய் மற்றும் மசகு எண்ணெய் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ.445.35 இலட்சம் வருவாய் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 12.5 மீன் விற்பனை

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் சென்னை, மதுரை, கோவை மற்றும் திருவண்ணாமலை போன்ற நகரங்களில் சில்லறை விற்பனை நிலையங்கள்மூலமாக மீன்களையும், பொறித்த மீன்களையும் விற்பனை செய்து வருகிறது. 2006-2007ஆம் ஆண்டு 816.34 டன் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு, ரூ.477.05 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. 2007-2008ஆம் ஆண்டு, 1,020 டன் மீன் விற்பனை செய்து, ரூ.623.11 இலட்சம் வருவாய் ஈட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 12.6 மீன் வலை பின்னும் நிலையம்

இராயபுரத்தில் செயல்பட்டு வரும் மீன் வலை பின்னும் நிலையம் ஆண்டொன்றுக்கு 75 டன் வலை தயாரிக்கும் திறன் கொண்டதாகும். 2006-2007ஆம் ஆண்டு 39.10 டன் நைலான் வலைகள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.107.98 இலட்சத்திற்கு மீனவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2007-2008ஆம் ஆண்டு, 57 டன் நைலான் வலைகள் தயாரித்து ரூ.157.75 இலட்சங்களுக்கு விற்பனை செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 12.7 இறால் குஞ்சு பொரிப்பகம்

சென்னைக்கு அருகே உள்ள நீலாங்கரையில் இயங்கி வந்த இறால் குஞ்சு பொரிப்பகம் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் பொறுப்பில் உள்ளது. இப்பொரிப்பகத்தில் ஒரு பகுதி கட்டமைப்பு வசதிகள், தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிலையத்திற்குக் 'கடல்வாழ் உயிரின அதிகரிப்புத் திட்டம்' நிறைவேற்றிடும் பொருட்டு வழங்கப்பட்டுள்ளது. இறால் குஞ்சு பொரிப்பகத்தில் பிற பகுதிகள் கடல் பொருள் ஏற்றுமதி ஆணையத்தின் பொறுப்பிலுள்ள "ராஜீவ் காந்தி நீர்வாழ் உயிரின மையத்துக்கு" குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

## 12.8 மாதிரி இறால் வளர்ப்புப் பண்ணை

காரங்காட்டில் ஒரு மாதிரி இறால் பண்ணை நிறுவப்பட்டுள்ளது. இப்பண்ணை தனியாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

## 12.9 வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனை

தமிழ்நாடு அரசு நிதியுதவியின்கீழ் மீன் வளர்ச்சிக் கழகம், ஆழியார் மற்றும் திருமூர்த்திநகர் ஆகிய இடங்களில் வண்ண மீன் உற்பத்தி நிலையங்களை அமைத்துள்ளது. மேலும், ஆழியார் மற்றும் திருமூர்த்திநகரில் வண்ண மீன் விற்பனையுடன்கூடிய வண்ண மீன் காட்சியகங்களை நிறுவி, பராமரித்து வருகிறது. சென்னை மாநகரில் வண்ண மீன் விற்பனை நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. வண்ண மீன் மற்றும் உபகரணங்கள் விற்பனை செய்யப்பட்ட வகையில் 2006-2007ஆம் ஆண்டு ரூ10.48 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது. 2007-2008ஆம் ஆண்டு வண்ண மீன் மற்றும் உபகரணங்கள் விற்பனை மூலம் ரூ.20.20 இலட்சம் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 12.10 பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்கிட மானியம் வழங்கும் திட்டத்தின்படி வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் விற்பனை

பாரம்பரிய மீன்பிடி கலன்களை, இயந்திரமயமாக்கிட மானியத்துடன் வெளிப்பொருத்தும் இயந்திரங்களை மீனவர்களுக்குத் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் விற்பனை செய்கிறது. 2006-2007ஆம் ஆண்டு 39 இயந்திரங்கள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2007-2008ஆம் ஆண்டு 200 இயந்திரங்கள் மீனவர்களுக்கு வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



## 12.11 புதிய திட்டங்கள்:–

### 1. நவீன மீன் விற்பனை அங்காடிகள் நிறுவுதல்

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய நகரங்களில் நவீன வசதிகளைக் கொண்ட மீன் விற்பனை அங்காடிகள் நிறுவப்படும்.

### 2. தேனாம்பேட்டை மீன் விற்பனை அங்காடியை நவீனப்படுத்துதல்

சென்னை தேனாம்பேட்டையில் ஏற்கெனவே இயங்கி வரும் மீன் விற்பனை அங்காடியை, மீன் உணவகம் மற்றும் மீன்காட்சியகத்துடன் கூடிய மீன் விற்பனை நிலையமாக மேம்படுத்தப்படும்.

### 3. பயிற்சி அளித்தல்

மீனவர், தனியார் நிறுவனத்தினர் மற்றும் சுய உதவிக் குழுவினருக்கு, வண்ண மீன் உற்பத்தி மற்றும் மதிப்பூட்டிய மீன் உணவு தயாரிப்பது தொடர்பாக மீன் வளர்ச்சிக் கழகத்தில் பயிற்சி அளிப்பதற்குச் சென்னையில் பயிற்சி நிலையம் அமைக்கப்படும்.

## 13. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம்

1983ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவு சட்ட விதிகளின்படி பதிவு செய்யப்பட்டு, சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டு தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது) 6-11-1991 முதல் இயங்கிவருகிறது. தற்போது 589 தொடக்க நிலை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 9 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்களும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் உறுப்பினராக இணைந்து, ரூ89.095 இலட்சத்தைப் பங்குத் தொகையாகச் செலுத்தியுள்ளனர்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம், தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் நிதியைப் பெற்று, ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தினை இரண்டு கட்டங்களில், அதன் திட்ட குறிக்கோளின்படி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம், அதன் உறுப்பு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்களுக்கு மீன்பிடி கலன்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வழங்கியுள்ளது. இதன்படி 147 மீனவ கூட்டுறவுச்

சங்கங்களின் 5,669 பயனாளி உறுப்பினர்களுக்கு 2,736 மீன்பிடி உபகரணங்களை வாங்கிட ரூ.19.79 கோடி கடன் உதவி அளித்துள்ளது.

31-7-2005 அன்றைய நிலையில் நிலுவையாக இருந்த ரூ.19.56 கோடிக்கான அசல், வட்டி, அபராத வட்டி மற்றும் பங்கு மூலதனத் தொகையை தமிழ்நாடு அரசு தள்ளுபடி செய்துள்ளது. இத்தொகை பாரதப் பிரதமரின் தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. இதனால் 147 மீனவ கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 5,635 கடல் மீனவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

சுனாமிக்குப் பின்னர், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம், கடல் மீனவர்கள் பயன்பெறும் வகையில் எரியெண்ணெய் விற்பனை நிலையம் அமைத்தல், வெளிப்பொருத்தும் இயந்திரம் விற்பனை செய்தல், பழுது பார்க்கும் பணியமனைகள் ஆகிய பலதரப்பட்ட பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

## 13.1 எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள்

கடல் மீனவர்களுக்கு எரியெண்ணெய் வழங்கும்பொருட்டு தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் தற்போது பின்வரும் இடங்களில் எரியெண்ணெய் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது:

| மாவட்டம் | கிராமத்தின் பெயர் | விற்பனை செய்த எரியெண்ணெய் (லிட்டரில்) |
|---|---|---|
| தஞ்சாவூர் | சேதுபாவா சத்திரம் | 19,74,784 |
| திருவள்ளூர் | பழவேற்காடு | 13,01,081 |
| தூத்துக்குடி | வேம்பார் | 12,22,728 |
| கடலூர் | அன்னங்கோவில் | 7,77,170 |
| நாகர்கோவில் | சின்னமுட்டம் | 12,000 |
| நாகப்பட்டினம் | நாகூர் | 12,000 |

கடல் மீனவர்களுக்கு மானிய விலையில், இந்த விற்பனை நிலையங்களில் எரியெண்ணெய் விற்கப்படுகிறது.



காஞ்சிபுரம் மாவட்டத்தில் நீலாங்கரை மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் தருவைக்குளம் ஆகிய இடங்களில் டீசல் விற்பனை நிலையக் கட்டுமானப் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் இந்திய அரசின் வெடிப்பொருட்கள் துறையிலிருந்து முதற்கட்ட அனுமதியைப் பெற்றுள்ளதால், கோட்டைப்பட்டினம் மற்றும் கீழக்கரை ஆகிய இடங்களில் எரியெண்ணெய் விற்பனை நிலையங்களை நிறுவவும் திட்டமிட்டுள்ளது.

## 13.2 பழுதுபார்க்கும் பணிமனைகள்

கடல் மீனவர்களுக்குத் தேவையான இயந்திர உதிரி பாகங்கள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் இஞ்சின் ஆயில் ஆகியவற்றை விற்பனை செய்வதற்காகத் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மல்லிப்பட்டினத்தில் பழுதுபார்க்கும் பணிமனையை இணையம் ஏற்படுத்தியுள்ளது.

## 13.3 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் விற்பனை செய்தல்

கடல் மீனவர்களுக்கு வெளிப்பொருத்தும் இயந்திரங்களை மத்திய அரசின் பங்களிப்புடன்கூடிய திட்டத்தின்கீழ் விற்பனை செய்து வருகிறது. இத்திட்டத்தில் ஒரு மீனவப் பயனாளிக்கு அதிகபட்சமாக ஒரு இயந்திரத்திற்கு ரூ.20,000 மானியம் வழங்கப்படுகிறது. 2006-2007ஆம் ஆண்டில், 558 வெளிப்பொருத்தும் இயந்திரங்களை தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் விற்பனை செய்துள்ளது.

தற்சமயம் தமிழ்நாட்டிலுள்ள மீனவர்களுக்குப் பயனுள்ள பணிகளை ஆற்ற தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் பணிகளைச் சீரமைப்பது அவசியமாகிறது. எனவே மாநிலத்தில் உள்ள மீன்வளப் பணிகளுக்கான கடனுதவித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தேவையான எதிர்காலத் திட்டங்களுக்கான செயல்முறை ஆக்கத்திற்கான வரைவு தயாரித்திட தேசிய கூட்டுறவு மேலாண்மைக் கழகத்தின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

இக்கொள்கை விளக்கக் குறிப்பின்மூலம் மீனவ சமுதாயத்திற்கும், மீன்வளத்தை மேம்படுத்துவதற்கும் இவ்வரசு பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது என்பது நன்கு புலனாகும்.



## இணைப்பு-III

*(118 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 8—பால்வளத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

புதிய சங்கங்கள் அமைத்தல், சிறந்த கால்நடை பராமரிப்பு, இனப்பெருக்கத் திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு போன்ற சீரிய நடவடிக்கைகள்மூலம் பால்வளத் துறையின் செயல்பாடுகள் தமிழ்நாட்டின் பெரும்பான்மையான கிராமங்களை எட்டியுள்ளது. தமிழகத்தில் உள்ள வருவாய் கிராமங்களில் 50 விழுக்காடு கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இது மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் பீகார் மற்றும் மேற்கு வங்காளத்தில் 6 விழுக்காடு ஆகவும், மத்திய பிரதேசத்தில் 7 விழுக்காடு ஆகவும், உத்தரபிரதேசத்தில் 14 விழுக்காடு ஆகவும், இராஜஸ்தானில் 24 விழுக்காடு ஆகவும் உள்ளது. இதனால், தமிழக விவசாயிகளுக்கு வறட்சி மற்றும் வெள்ளப் பெருக்கு காலங்களிலும்கூட தொடர்ச்சியான மற்றும் நிலையான வருவாய் கிடைக்கப்பெறுகிறது.

பால் உற்பத்தி மையங்களிலிருந்து, பாலைப் பதப்படுத்தி பாக்கெட்டுகளில் நிரப்பும் வரை பணியிலிருக்கும் அனைத்து நபர்களுக்கும் 'தரமான தூய பால் உற்பத்தி' செயல்பாட்டு கொள்கையினை அறிமுகப்படுத்தி, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, பாலின் தரம் உறுதி செய்யப்படுவதால் ஆவின் தயாரிப்புகளுக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

குளிரூட்டப்பட்ட பால், குளிரூட்டும் நிலையங்களிலிருந்து, நேரடியாகப் பால் பதப்படுத்தப்படும் பண்ணைகளுக்குக் கொண்டுவரப்படுவதன்மூலம் பாலை இருமுறை பதப்படுத்தும் பணி முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கூட்டுறவு மற்றும் தனியார் அமைப்புகளின்மூலம் நாளொன்றுக்கு 43.45 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, 37.82 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது. கூட்டுறவு பால் பண்ணைகளின் கையாளும் திறன் முழுமையாக பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு கூட்டுறவு பால் பண்ணைகள் வெற்றிகரமாக தேசியப் பால் தேவையினைப் பூர்த்தி செய்தது. புது டில்லி, கேரளா, ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கும் பால் மற்றும் பால் பொருட்களை வழங்கியது.

[2007 ஏப்ரல் 27

பால்வளத் துறையின் சிறப்பான செயல்பாடுகளின்மூலம் கிராமப்புற விவசாயிகளின் வருவாயைப் பெருக்குவதோடல்லாமல், நகர மற்றும் புறநகர்ப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பையும் உருவாக்கி வருகிறது. மேலும் மகளிருக்கு சுய வேலைவாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளது.

2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பால் கூட்டுறவுகளில் நாளொன்றிற்கு சராசரி பால் உற்பத்தி 19.94 இலட்சம் லிட்டராக இருந்தது. இது 2006-2007ஆம் ஆண்டில் 26.10 இலட்சம் லிட்டராக உயர்ந்து 31 விழுக்காடு வளர்ச்சியடைந்துள்ளது.

2000-2001 ஆம் ஆண்டில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின்மூலம் 13.71 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டது. 2006-2007ஆம் ஆண்டில் பால் விற்பனை 19.29 இலட்சம் லிட்டராக உயர்ந்து 40 விழுக்காடு வளர்ச்சியடைந்துள்ளது. மேலும் 4-9-2006 அன்று ஆவின் பால் விற்பனை 22.38 இலட்சம் லிட்டர் என்னும் மிக உயர்ந்த அளவை எட்டியது.

பால் கூட்டுறவு அமைப்புகளின் சந்தைப் பங்களிப்பு வெகுவாக உயர்ந்துள்ளது. மேலும் தமிழ்நாட்டில் "ஆவின்" வணிகச் சின்னம், சந்தைப் பங்களிப்பில் பெரும்பான்மையான இடத்தை பெற்றுள்ளது. 26-6-2006 அன்று மாவட்ட ஒன்றியங்கள் அதிகபட்சமாக 25.37 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்துள்ளன. சிறிய, நடுத்தர மற்றும் நிலமற்ற ஏழை விவசாயக் கூலிகள் விவசாயத்திற்கு அடுத்தபடியாக வருமானம் ஈட்டும் தொழிலாகப் பால்வளத்தை மேற்கொண்டுள்ளது, என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதைப்போலவே கூட்டுறவு அமைப்புகளின்மூலம் சென்னை நகரில் விற்கப்பட்ட பால் விற்பனை 21-2-2007 அன்று 10.77 இலட்சம் லிட்டராக மிக உயர்ந்த அளவை எட்டியது. மேலும் 4-9-2006 அன்று மாவட்ட ஒன்றியங்கள்மூலம் விற்பனை செய்யப்பட்ட பால், 12.27 இலட்சம் லிட்டராக உயர்ந்தது. கிராமப்புற பால் கூட்டுறவு அமைப்புகள், பால் உற்பத்தியின் தரத்தை உயர்த்தவும், தரமான தூய பாலை நுகர்வோருக்கு வழங்குவதை உறுதி செய்யவும் முனைப்புடன் செயல்படுகின்றன.

வறட்சி மற்றும் பூமியின் வெப்ப உயர்வு ஆகிய காரணங்களால், உலக அளவிலான பால் உற்பத்தி இறங்குமுகமாக உள்ளது. இந்தியாவிலும் பால் கொள்முதல் குறைந்து வருவது அறியப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 27]

இருப்பினும் முனைப்பான முயற்சிகள் மற்றும் சிறப்பான சந்தை உத்திகள்மூலம், தமிழ்நாட்டில் பால் கொள்முதல் கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் 5 விழுக்காடு உயர்ந்துள்ளது. நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்ட பாலின் அளவு சென்ற ஆண்டுடன் ஒப்பு நோக்குகையில் 11 விழுக்காடு வளர்ச்சி கண்டுள்ளது. நாட்டின் இதர மாநிலங்களுடன் ஒப்புநோக்குகையில் பாலின் விற்பனை விலை தமிழகத்தில்தான் குறைவாக உள்ளது.

பால் கொள்முதலை உயர்த்த இணையம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது:—

**பால் உற்பத்தியாளர் நலன்**

(1) ஒன்றியங்களிலிருந்து சங்கங்களுக்கும், சங்கங்களிலிருந்து பால் உற்பத்தியாளர்களுக்கும், வழங்கப்படும் பால் கொள்முதல் விலை தமிழகம் முழுவதும் ஒரே சீரான விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(2) கால்நடை தீவன ஆலையின் உற்பத்தி தடையின்றி செய்யப்பட்டு, தீவன மூட்டைகள் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

(3) பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு, கால்நடைப் பராமரிப்புத் துறை உதவியுடன் நோய்த் தடுப்பூசிகள் போடப்படுகின்றன.

(4) அதிக அளவில் கால்நடை பாதுகாப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

(5) இப்போது பால் உற்பத்தியாளர்கள், குழு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நபர் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.50/- கட்டணத்தில் சேர்க்கப்படுகின்றனர். தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை, பால் உற்பத்தியாளர்களின் கலப்பினக் கறவை மாடுகள் இந்திய அரசின் 50 விழுக்காடு மானியம் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் 50 விழுக்காடு பங்களிப்புடன் காப்பீட்டுத் திட்டத்தினை வேலூர், கோயம்புத்தூர், சேலம், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறது.

[2007 ஏப்ரல் 27

மேலும் பால் உற்பத்தியாளர் நலன் கருதி கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன:—

(1) கால்நடை காப்பீட்டுத் திட்டம் இதர மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(2) ரூ.8500/- மதிப்பிலான மின்னணு பால் எடை இயந்திரம் மாதாந்திரத் தவணையில் சங்கங்களுக்கு வழங்கப்படும்.

(3) முன்னோடித் திட்டமாகக் கோவை மற்றும் நாமக்கல் மாவட்டங்களின் பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, அச்சங்க நிதியுதவியுடன் தானியங்கிப் பால் கறவை இயந்திரங்கள் வழங்கப்படும்.

(4) தகுதி வாய்ந்த பால் உற்பத்தியாளர்கள் தங்களுக்குரிய நலன்களைப் பெறுவதற்காக வேளாண் துறை தொழிலாளர் நல வாரியத்தில் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்படுவர்.

(5) 30 கிலோ கால்நடைத் தீவன மூட்டைகள் அறிமுகப்படுத்தப்படும்.

(6) ஈரோடு, தருமபுரி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் பால் உற்பத்தியாளர்களுக்கான கொள்முதல் தொகையில் லிட்டர் ஒன்றுக்கு ரூ.0.50 பிடித்தம் செய்யப்படுவதை 'தொழில்நுட்பக் கண்காணிப்புக் குழு' மறுபரிசீலனை செய்யும்.

**சங்கப் பணியாளர்களின் நலன்**

(1) அனைத்துச் சங்கப் பணியாளர்களுக்கும் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையாக ரூ.825/- வழங்கப்பட்டுள்ளது.

(2) சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு, சங்கப் பணியாளர்களுக்குப் பணி வரன்முறை மற்றும் ஊதியம் நிர்ணயம் செய்யப்படும்.

(3) ஒன்றியங்களின் நிர்வாகச் செலவினங்களுக்காகப் பிடித்தம் செய்யப்படும் தொகை அதிகப்படியாக லிட்டருக்கு 10 பைசா என்ற அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சங்கங்களின் நிர்வாகச் செலவிற்காக லிட்டருக்கு 40 பைசா வீதம் உற்பத்தியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும்.



2007 ஏப்ரல் 27]

**தொழிலாளர் நலன்**

(1) பால் பண்ணை, போக்குவரத்து மற்றும் விற்பனைப் பிரிவுகளின் பணியாளர்களுக்கு மழை அங்கி வழங்குதல், தையற் கூலி உயர்வு, இரவுப் பணிப் படி மற்றும் சலவைப் படி உயர்வு ஆகியவை செயல்படுத்தப்பட்டுள்ளன.

(2) எலக்ட்ரீசியன் நிலை-I மற்றும் கொதிகலன் பணியாளர் நிலை-II-க்கான ஊதியத் திருத்தங்கள் வழங்குதல், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு பின்னர் பணியில் சேர்க்கப்பட்ட பணியாளர்களுக்கு 5 விழுக்காடு தனி ஊதியம், ஈடுசெய் தனி ஊதியம் போன்றவை வழங்கப்பட்டுள்ளன.

(3) மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்ட நோயுற்ற பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு நீண்டக் காலமாக வழங்கப்படாமல் இருந்த மருத்துவ மீட்சித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

(4) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய வரலாற்றில் முதன்முறையாக, அதன் பணியாளர்களுக்குப் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு தொடர்பாக நிலையான ஆணைகளை வழங்க வழிவகை மேற்கொள்ள உயர்மட்டக் குழு ஒன்றை அரசு அமைத்து நடவடிக்கை எடுத்துள்ளது.

**நுகர்வோர் நலன்**

இணையம், நுகர்வோர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி வருகிறது. தரமான தூய பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. குறித்த நேரத்தில் பால் விநியோகம் செய்யப்படுகிறது. சென்னையில் உள்ள நந்தனத்தில் 24 மணி நேர நுகர்வோர் சேவை மையம் செயல்பட்டு வருகிறது. புகார்களின்மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நுகர்வோர் கட்டணமில்லாத் தொலைபேசி எண் 1800 4253300 மூலம் ஆவின் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

**பால் வளத் துறையின் குறிக்கோள்**

(அ) பால் உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தி செய்யப்படும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்கச் செய்தல்.

[2007 ஏப்ரல் 27

(ஆ) நுகர்வோருக்கு, பதப்படுத்தப்பட்ட தரமான தூய பால் மற்றும் பால் பொருட்கள் சுகாதாரமான முறையில் நியாயமான விலையில் கிடைக்கச் செய்தல்.

## குறிக்கோளை நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

(1) பால் உற்பத்தியாளர்களுக்குச் சொந்தமான கறவை மாடுகளுக்கு மருத்துவ சிகிச்சை, தீவனம் வழங்குதல் மற்றும் கறவை மாடுகள் மேம்பாடு.

(2) கறவை மாடுகளின் மேம்பாடு மற்றும் பால் உற்பத்தியை அதிகரித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல். ஒன்றிய நிலத்தில் அதிக தரமான பசும்புல் விளைவித்து பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குதல்.

(3) சங்கப் பணியாளர்களுக்கு முதலுதவி பயிற்சி அளித்தல் மற்றும் செயற்கை முறை கருவூட்டல், நவீன கால்நடைப் பராமரிப்பு முறை மற்றும் நடைமுறைப் பயிற்சிகள்மூலம் விவசாயிகளை ஊக்குவித்தல். மேலும் பால் கறவை மாடுகளுக்குத் திறன்மிகுந்த, சமன்படுத்தப்பட்ட மற்றும் சிக்கன முறையில் தீவனம் வழங்கப் பயிற்சி அளித்தல்.

(4) சங்க உறுப்பினர்களிடமிருந்து தரமான பாலைச் சேகரித்துப் பெறுதல், பால் சேகரிப்புத் தடங்கள்மூலம் சங்கத்தில் உற்பத்தியாகும் பாலைச் சேகரம் செய்தல், புதிய பால் போக்குவரத்துத் தடம் ஏற்படுத்துதல், நவீன பால் பண்ணைகளில் பால் பதப்படுத்துதல் மற்றும் பால் பாக்கெட்டுகளில் நிரப்புதல், தரக்கட்டுப்பாடு முறை செயல்படுத்துதல்.

(5) பால் உற்பத்தி அதிகமாக உள்ள இடத்தில் குளிரூட்டும் நிலையம் / மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல், துருவுறா எஃகு (Stainless Steel) பால் கேன்கள் வழங்குதல், பால் பரிசோதனைக் கருவி, திரவ நைட்ரஜன் குடுவை, செயற்கைமுறைக் கருவூட்டல் கருவி, தானியங்கி பால் சேகரிப்பு நிலையம் மற்றும் சங்கத்திற்குத் தேவையான பரிசோதனைக் கருவிகள் வழங்குதல்.

(6) உபரிப்பாலினை, சமன்படுத்தும் பண்ணைகளில் பால்பவுடர், வெண்ணெய் மற்றும் நெய்யாக மாற்றுதல்.



2007 ஏப்ரல் 27]

(7) சென்னை மாநகரில் பால் பதப்படுத்தும் இயந்திரங்களின் திறனை அதிகரித்து, உபரிப் பாலை கையாளுதல், பன்னாட்டுத் தரக்கட்டுப்பாட்டுக் கொள்கைகளைப் பால் பதப்படுத்தும் பல நிலைகளில் கடைப்பிடித்தல் (ISO, HACCP), உள்கட்டமைப்பு வசதிகள் அதிகரித்து நுகர்வோருக்குத் தரமான பால் மற்றும் பால் பொருட்களை வழங்குதல்.

(8) மத்திய/மாநில அரசின் பால் வளத் திட்டங்களை அமல் படுத்துதல்.

(9) பால் உற்பத்தியாளர்களுக்கு நிலுவையின்றி பால் பணம் பட்டுவாடா செய்ய ஒன்றியத்திற்கு உதவுதல் மற்றும் நலிவடைந்த ஒன்றியங்களை நிதி இழப்பிலிருந்து தடுத்து உதவுதல்.

(10) சங்கங்கள் இலாபத்தில் இயங்குவதற்கும் பால் பண பட்டுவாடா குறித்த காலத்தில் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

(11) சென்னை மாநகரில் யோகர்ட், ஐஸ்கிரீம், பால்கோவா, குலாப் ஜாமூன், மோர், தயிர், மைசூர்பா, லஸ்ஸி மற்றும் சர்க்கரை சேர்க்கப்படாத ஐஸ்கிரீம் போன்ற பால் பொருட்களை உற்பத்திச் செய்தல்.

மாவட்ட ஒன்றியங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து அவற்றிற்குத் தேவையான தொழில்நுட்பங்களை அவ்வப்பொழுது இணையம் வழங்கி வருகிறது. மேலும் திட்டமிடல், விரிவாக்கம், குளிர்விப்பான் மற்றும் குளிரூட்டும் நிலையங்கள் நிறுவுதல் ஆகிய பணிகளை முழுமையாக மேற்கொள்கிறது. மாவட்ட ஒன்றியங்களில் உற்பத்தி செய்யப்படும் பால்பவுடர், நெய், வெண்ணெய், பாலாடைக்கட்டி மற்றும் டெட்ரா பால் வகைகளை தமிழ்நாடு மற்றும் மற்ற மாநிலங்களில் இணையம் விற்பனை செய்து உதவுகிறது.

## பால் வளத் துறை

பால் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துப் பதிவு செய்து அவற்றின் செயல்பாடுகளை மேற்பார்வை செய்தல், மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவற்றின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் ஆகிய பணிகளைப் பால்வளத் துறை செய்து வருகிறது.

மேற்கொள்ள அவசர கால சிகிச்சை மையங்கள் உள்ளன. மாவட்ட ஒன்றியங்களில், 50 நிலையான மருத்துவச் சேவை மையங்களும், 56 அவசர கால சேவை மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

செயற்கை முறைக் கருவூட்டல் கண்காணிப்புத் திட்டத்தின்மூலம், கிராமத்தில் மேற்கொள்ளப்படும் கருவூட்டல் பணிகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு, கருத்தரித்தல் விகிதம், கன்றுகள் பிறப்பு விகிதம் மற்றும் பொலிகாளையின் சினைப்படுத்தும் திறன் ஆகியவை கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

## அட்டவணை-I

### முக்கியத் தகவல்கள்

| வ. எண் | விவரம் | 31-3-2007 ஆம் தேதி நிலவரப்படி |
|---|---|---|
| 1 | செயல்படும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் | 7,662 |
| 2 | புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சங்கங்கள் | 352 |
| 3 | தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் | 21.93 இலட்சம் |
| 4 | பால் வழங்கும் உறுப்பினர்கள் | 3.98 இலட்சம் |
| 5 | சங்கங்களில் பால் கொள்முதல் (நாளொன்றிற்கு) | 26.10 இலட்சம் லிட்டர் |
| 6 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை | 17 |
| 7 | மாநில அளவிலான இணையம் | 1 |
| 8 | ஒன்றியங்களில் பால் கொள்முதல் (நாளொன்றிற்கு) | 22.10 இலட்சம் லிட்டர் |
| 9 | சென்னை மாநகரில் பால் விற்பனை (நாளொன்றிற்கு) | 9.87 இலட்சம் லிட்டர் |
| 10 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் பால் விற்பனை (நாளொன்றிற்கு) | 9.42 இலட்சம் லிட்டர் |



| வ. எண் | விவரம் | 31-3-2007 ஆம் தேதி நிலவரப்படி |
|---|---|---|
| 11 | ஒன்றியங்களில் பால் பதப்படுத்தும் பால்பண்ணைகளின் எண்ணிக்கை | 15 |
| 12 | இணையத்தின் பால் பண்ணைகள் எண்ணிக்கை | 4 |
| 13 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றிற்கு) | 19.42 இலட்சம் லிட்டர் |
| 14 | இணையத்திலுள்ள பால் பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றிற்கு) | 10.00 இலட்சம் லிட்டர் |
| 15 | செயல்படும் குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை | 36 |
| 16 | குளிரூட்டும் நிலையங்களின் கையாளும் திறன் (நாளொன்றிற்கு) | 13.55 இலட்சம் லிட்டர் |
| 17 | செயல்படும் மொத்த பால் குளிர்விப்பான்கள் | 22 |
| 18 | மொத்த பால் குளிர்விப்பான் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) | 0.87 இலட்சம் லிட்டர் |
| 19 | பால் கொள்முதல் வழித்தடங்கள் | 483 |
| 20 | ஒன்றியங்களில் பால் விநியோக வழித்தடங்கள் | 194 |
| 21 | சென்னை மாநகர பால் விநியோக வழித்தடங்கள் | 106 |
| 22 | பால் பவுடர் பண்ணைகள் | 4 |
| 23 | பால் பவுடர் உற்பத்தித் திறன் (நாளொன்றிற்கு) | 70 மெட்ரிக் டன் |
| 24 | சென்னையில் உள்ள தானியங்கி பால் விநியோக நிலையங்களின் எண்ணிக்கை | 218 |

## பால் கொள்முதல்

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் 2005-2006 மற்றும் 2006-2007 ஆம் ஆண்டுகளில் சராசரி பால் கொள்முதல் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

### அட்டவணை-II

(நாளொன்றுக்கு ஆயிரம் லிட்டரில்)

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | 2005-2006 | 2006-2007 |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம்- திருவள்ளூர் | 55 | 54 |
| 2 | விழுப்புரம் | 162 | 167 |
| 3 | வேலூர் | 294 | 298 |
| 4 | தருமபுரி | 148 | 146 |
| 5 | சேலம் | 371 | 397 |
| 6 | ஈரோடு | 234 | 216 |
| 7 | கோயம்புத்தூர் | 207 | 219 |
| 8 | நீலகிரி | 21 | 20 |
| 9 | மதுரை | 188 | 208 |
| 10 | திண்டுக்கல் | 39 | 41 |
| 11 | திருச்சி | 292 | 298 |
| 12 | தஞ்சாவூர் | 24 | 28 |
| 13 | புதுக்கோட்டை | 10 | 11 |
| 14 | சிவகங்கை | 29 | 28 |
| 15 | விருதுநகர் | 12 | 12 |
| 16 | திருநெல்வேலி | 65 | 61 |
| 17 | கன்னியாகுமரி | 8 | 6 |
| | மொத்தம் | 2,159 | 2,210 |

2005-2006 ஆம் ஆண்டில் 7,640 கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் நாளொன்றுக்கு 25.09 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. 2006-2007 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களின்



எண்ணிக்கை 7,662 ஆக உயர்ந்து பால் உற்பத்தி நாளொன்றுக்கு 26.10 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

2005-2006 ஆம் ஆண்டில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள்மூலம் கொள்முதல் செய்யப்பட்ட பால் நாளொன்றுக்கு 21.59 இலட்சம் லிட்டரிலிருந்து 2006-2007 ஆம் ஆண்டில் 22.10 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

## பால் கொள்முதல் விலை

பசும்பாலின் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.10.50லிருந்து (கொழுப்புச்சத்து 4.5%, இதரச் சத்து 8.5%) ரூ.12.00 ஆகவும், எருமைப் பாலின் விலை லிட்டர் ஒன்றுக்கு (கொழுப்புச்சத்து 7%, இதரச் சத்து 8.8%) ரூ.12.50-லிருந்து ரூ.14.00 ஆகவும் 7-3-2007 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் ஒரே மாதிரியான கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் சென்னை மாநகர பால் விற்பனை

மாவட்ட ஒன்றியங்களில் 2005-2006 மற்றும் 2006-2007 ஆண்டுகளில் சராசரியாக நாளொன்றுக்கு விற்பனை செய்யப்பட்ட பால் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

### அட்டவணை-III

(நாளொன்றுக்கு ஆயிரம் லிட்டரில்)

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | 2005-2006 | 2006-2007 |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம்-திருவள்ளூர் | 1 | 1 |
| 2 | விழுப்புரம் | 43 | 25 |
| 3 | வேலூர் | 47 | 69 |
| 4 | தருமபுரி | 15 | 18 |
| 5 | சேலம் | 112 | 123 |
| 6 | ஈரோடு | 92 | 90 |
| 7 | கோயம்புத்தூர் | 173 | 182 |
| 8 | நீலகிரி | 20 | 21 |

[2007 ஏப்ரல் 27

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | 2005-2006 | 2006-2007 |
|---|---|---|---|
| 9 | மதுரை | 132 | 156 |
| 10 | திண்டுக்கல் | 16 | 22 |
| 11 | திருச்சி | 116 | 103 |
| 12 | தஞ்சாவூர் | 11 | 21 |
| 13 | புதுக்கோட்டை | 5 | 6 |
| 14 | சிவகங்கை | 25 | 27 |
| 15 | விருதுநகர் | 5 | 6 |
| 16 | திருநெல்வேலி | 53 | 49 |
| 17 | கன்னியாகுமரி | 21 | 23 |
| | மொத்தம் | 887 | 942 |
| 18 | சென்னை மாநகரில் பால் விற்பனை | 849 | 987 |
| | ஆக மொத்தம் | 1736 | 1929 |

**சென்னை மாநகரப் பால் விற்பனை**

24 வட்டார அலுவலகங்கள், 516 பால் டிப்போக்கள், 364 பால் விற்பனை மையங்கள், 35 மொத்த பால் விற்பனையாளர்கள், 89 பால் சில்லறை விற்பனையாளர்கள், 48 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகப் பால் பாக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

42 ஆவின் பாலகங்கள், 185 சில்லறை உரிமம் பெற்றவர்கள், 12 மொத்த விற்பனையாளர்கள், 4,824 சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாகப் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்கான பால் மற்றும் பால் பொருட்களின் தேவையை ஆவின் நிறுவனம் சிறப்பு விற்பனை மூலம் பூர்த்தி செய்கிறது.

218 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் மற்றும் 110 கண்ணாடி இழைத் தொட்டிகள்மூலமாக நுகர்வோருக்கு நிலைப்படுத்திய பால் விற்பனை செய்யப்படுகிறது. சில தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில் பால் பொருட்கள் விற்கப்படுகின்றன. தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில், பாக்கெட் பாலும் விற்பனை செய்யப்படுகிறது.



2007 ஏப்ரல் 27]

சமீபத்தில் பாலின் விற்பனை விலை உயர்த்தப்பட்டபொழுதும், விற்பனையில் எந்த மாற்றமும் இல்லாமல் ஆவின் நிறுவனம் பால் விற்பனை அளவை தொடர்ந்து பராமரித்து வருகிறது.

**2006-2007-ல் எடுக்கப்பட்ட பிற நடவடிக்கைகள்**

**(அ) உள்கட்டமைப்பு மேம்பாடு**

அதிகரித்து வரும் பால் உற்பத்தியை எதிர்கொள்ளும் வகையில், ரூ.715.45 இலட்சம் செலவில் இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பால் பண்ணை மற்றும் குளிரூட்டும் நிலையங்களின் உள்கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**(ஆ) கால்நடைத் தீவனம்**

2006-2007 ஆம் ஆண்டு, 9,935 மெட்ரிக் டன் கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு, 9,812 மெட்ரிக் டன் கால்நடைத் தீவனம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**(இ) புல் வளர்ப்புத் திட்டம்**

மாவட்ட ஒன்றியங்களில் 34 ஹெக்டேர் நிலத்தில் பசும்புல் வளர்க்கப்படுகிறது. இதில் 25 ஹெக்டேர் நிலத்தில் மத்திய அரசின் "பசும்புல் வளர்ப்புத் திட்டத்தின்" கீழ் பசும்புல் வளர்க்கப்படுகிறது.

**(ஈ) உறைவிந்து குச்சி உற்பத்தி**

2006-2007 ஆம் ஆண்டில் உதகை பொலிகாளைப் பண்ணையில் 17.32 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**மத்திய அரசின் பங்களிப்புத் திட்டங்கள்**

**(1) மகளிர் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம்**

பால்பண்ணை தொழிலில் ஆர்வம் உடைய சொத்துக்கள் இல்லாத கிராமப்புறப் பெண்கள், தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் சார்ந்த பெண்கள் 'சுய உதவிக் குழு அங்கத்தினர்களைத் தேர்வு செய்து அவர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்குடன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம், ரூ.649.464 இலட்சம் மதிப்பீட்டில் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. அதில் 90 விழுக்காடு தொகையான ரூ.584.518 இலட்சம் மத்திய அரசின்

பங்காகும். மீதமுள்ள 10 விழுக்காடு தொகையான ரூ.64.946 இலட்சம் நடைமுறைப்படுத்தும் ஒன்றியங்களின் பங்காகும். 2002-2005 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட வேண்டிய இத்திட்டம், மார்ச் 2008 வரை மத்திய அரசால் நீட்டிக்கப்பட்டுள்ளது. மைய அரசிடமிருந்து வர வேண்டிய ரூ.281.929 இலட்சம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டம் சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், வேலூர், விழுப்புரம், தருமபுரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 7 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் ஆளுகைக்குட்பட்ட 13 மாவட்டங்களில் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

மத்திய அரசு முதலாம் ஆண்டில் ரூ.227.839 இலட்சம் விடுவித்துள்ளது. இரண்டாம் ஆண்டில் விடுவிக்கப்படவேண்டிய ரூ.197.999 இலட்சத்தில் முதல் தவணையாக ரூ.74.75 இலட்சம் விடுவித்துள்ளது. இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் 7 மாவட்ட ஒன்றியங்களும் மற்றும் இணையமும் சேர்ந்து ரூ.227.599 இலட்சம் செலவு செய்துள்ளது. மொத்தக் குறியீடான 145 மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் நிறுவப்பட்டு 10150 மகளிர் சேர்க்கப்பட்டுள்ளனர். நாளொன்றிற்குச் சராசரியாக 26,283 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒரு நபருக்கு நாளொன்றிற்குச் சராசரியாக ரூ.60/- வருமானம் கிடைக்கிறது. இத்திட்டத்தின் முடிவில் குழு உறுப்பினரின் ஆண்டு வருமானம் ரூ.7,000 லிருந்து ரூ.20,000 ஆக உயரும்.

### (2) தீவிர பால் பெருக்குத் திட்டம்

சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தீவிர பால் பெருக்குத் திட்டத்தை செயல்படுத்த சிவகங்கை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு ரூ.312.15 இலட்சம் 100 சதவிகிதம் மானியமாக 2005-2006 ஆம் ஆண்டில் வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கு முதல் தவணையாக மத்திய அரசு வழங்கிய ரூ.55.45 இலட்சம் செலவிடப்பட்டு, பயன்பாட்டுச் சான்றிதழ் (Utilisation Certificate) மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 2006-2007 ஆம் ஆண்டில் இரண்டாவது தவணையாக மத்திய அரசிடம் ரூ.102.14 இலட்சம் பெறப்பட்டு, தற்பொழுது உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் பால் பண்ணை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி பால் கொள்முதல், பால் பதப்படுத்துதல், விற்பனை, மனிதவள மேம்பாடு மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் ஐந்தாண்டுக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.



2006-2007 ஆம் ஆண்டில் மத்திய அரசு இத்திட்டத்தை திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்ட ஒன்றியங்களில் செயல்படுத்த முறையே ரூ.554.06 மற்றும் ரூ.291.77 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் பயன்பெறும்.

கன்னியாகுமரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் ஆண்டிற்கான மானியத் தொகை ரூ.49.83 இலட்சம் வரப்பெற்று செலவிடப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்குரிய முதலாமாண்டு மானியத் தொகை ரூ.204.50 இலட்சத்தினை மத்திய அரசிடமிருந்து பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதைத் தவிர, தஞ்சாவூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் இத்திட்டத்தினை ரூ.899.875 இலட்சத்தில் செயல்படுத்த மத்திய அரசுக்குக் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### (3) தரமான தூய பால் உற்பத்திக்கு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

கிராமப்புறங்களிலிருந்து பெறப்படும் பால் தூய்மையானதாகவும் தரமானதாகவும் உள்ளதா என்பதை உறுதி செய்யும் பொருட்டு உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு "தரமான தூய பால் உற்பத்தி" என்னும் ஒரு திட்டத்தை உருவாக்கி உள்ளது. இத்திட்டம் இரண்டாண்டுகள்/மூன்றாண்டுகளில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் குறிக்கோள், விவசாயிகளுக்குத் தரமான தூய பால் உற்பத்தி குறித்து பயிற்சிகள் அளித்தல், பால் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் நுண்மத்தடை திரவங்கள் (Antiseptic) வழங்குதல் ஆகும். மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் குளிரூட்டும் நிலையங்களில் உள்ள பரிசோதனைக்கூடங்களை மேம்படுத்துதல், ஆரம்ப நிலையிலேயே பால் உடனடியாகக் குளிரூட்டப்படுவதற்காகச்

சங்கங்களுக்குத் தேவைப்படும் இடங்களில் மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல் ஆகியவை ஆகும்.

இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு வழங்கும் பயிற்சி, எவர்சில்வர் பாத்திரங்கள், நுண்மத்தடை திரவம் மற்றும் தரக்கட்டுப்பாடு, பரிசோதனைக்கூடத்தை மேம்படுத்துதல், திட்டமிடுதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றிற்கு மத்திய அரசு 100 விழுக்காடு மானியமாக வழங்குகிறது. மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுவதற்கு மட்டும் மத்திய அரசு 75 விழுக்காடு மானியம் வழங்குகிறது. மீதமுள்ள 25 விழுக்காடு செலவினத்தை பயனடையும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் ஏற்கும்.

இத்திட்டத்தை வேலூர், விழுப்புரம், திருச்சி, தருமபுரி, சேலம், ஈரோடு, நீலகிரி, காஞ்சிபுரம்-திருவள்ளூர் மற்றும் மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் செயல்படுத்த மத்திய அரசு ரூ.1,224.21 இலட்சத்தை வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 48,001 உற்பத்தியாளர்கள் பயன்பெறுவர். 90 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்படவுள்ளன. இதன்மூலம் பால் குளிரூட்டும் திறன் நாளொன்றுக்கு 3.71 இலட்சம் லிட்டர் உயரும்.

## (4) சிறந்த கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறனை பதிவு செய்தல் திட்டம்

பால் உற்பத்தியாளர்களிடம் உள்ள கறவை மாடுகளின் இனப்பெருக்கத்திற்குத் தேவையான கலப்பினக் காளைகளை உற்பத்தி செய்வதற்கு "களவெளி செயல் திறன் பதிவுத் திட்டம்" மத்திய அரசின் உதவியுடன் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை (TNLDA) மூலமாக இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் பால் உற்பத்தியாளர்களிடம் உள்ள பசுக்களில் அதிகபட்சமாக ஒரு நாளில் 12 லிட்டர் பால் கறந்த கறவை மாடுகளில், 1,898 நோயற்ற கறவை மாடுகளைத் தேர்வு செய்து, செயற்கை முறைக் கருவூட்டல்மூலம் கருத்தரிக்கச் செய்து, கன்று ஈன்றவுடன் அதன் பால் அளவு கணக்கிடப்படும். அதிக பால் கறந்த கறவை மாடுகள் எதிர்வரும் காலங்களில் கலப்பினக் காளைக் கன்றுகள் உற்பத்தி செய்வதற்குரிய தாய்ப் பசுக்களாகத் தேர்வு செய்யப்படும்.

## (5) வம்சாவழி சோதனைத் திட்டம்

பால் உற்பத்தியாளர்களிடம் உள்ள கறவை மாடுகளைச் சிறந்த கலப்பினக் காளைகளைக் கொண்டு இனப்பெருக்கம் செய்வதற்காக



மத்திய அரசின் உதவியுடன் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை (TNLDA)யுடன் இணைந்து, இணையத்தின்மூலமாக "வம்சாவழி சோதனைத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மரபுத் திறன் மிகுந்த காளைகளைத் தேர்ந்தெடுப்பதற்காக, ஒவ்வோர் ஆண்டும் குறைந்தபட்சம் 20 கலப்பினப் பொலிகாளைகளின் விந்தைச் சேகரித்து, செயற்கை முறைக் கருவூட்டல்மூலம் பால் உற்பத்தியாளர்களிடம் உள்ள கறவை மாடுகளைக் கருத்தரிக்கச்செய்து, அக்கறவை மாடுகள் ஈன்ற கிடாரிகளின் முதல் ஈற்று பால் அளவு, கொழுப்பு சத்து, இதர சத்து மற்றும் முதல் கன்று ஈனுகையில் அவற்றின் வயது போன்ற பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த குணநலன்களை ஆராய்ந்து, ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் கலப்பின பொலிகாளைகள் தேர்வு செய்யப்படுகின்றன.

## (6) கால்நடைக் காப்பீட்டுத் திட்டம்

இந்திய அரசின் நிதியுதவியுடன், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின்மூலமாக, கால்நடைக் காப்பீட்டுத் திட்டம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2006-2007 ஆம் ஆண்டில், கோவை, சேலம், நாமக்கல், ஈரோடு மற்றும் வேலூர் மாவட்டங்களில் 46,000 கறவை மாடுகளை இத்திட்டத்தின்கீழ் காப்பீடு செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டத்தின் வழிமுறைகளின்படி, காப்பீட்டுப் பிரிமியத் தொகையில் 50 விழுக்காடு அரசு மானியமாகவும் மீதமுள்ள 50 விழுக்காடு உற்பத்தியாளர் பங்களிப்பாகவும் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் 53,114 கறவை மாடுகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.

## (7) புனரமைப்புத் திட்டம்

### மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டம்- "கூட்டுறவுகளுக்கு உதவுதல்" - ஒன்றியங்களில் புனரமைப்பு

நட்டத்தில் இயங்கும் மாவட்ட ஒன்றியங்களைச் சீரமைப்பதற்காகவும், நட்டத்தைச் சரி செய்து இலாபகரமாகச் செயல்படுத்தவும் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு, "கூட்டுறவுகளுக்கு உதவுதல்" என்னும் திட்டத்தை உருவாக்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் நட்டத்தில் செயல்படும் மாவட்ட ஒன்றியங்கள் தங்களது நட்டத்தை ஈடுகட்ட மத்திய மற்றும் மாநில அரசுகள் சரி சமமாக 50 விழுக்காடு தொகையை மானியமாக வழங்கும்.

தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தை ரூ.970.990 இலட்சம் செலவில் 2005-2006 ஆம் ஆண்டிலிருந்து புனரமைப்பதற்காக மத்திய அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

இதில், ரூ.175.00 இலட்சம் மத்திய அரசின் பங்காகவும், ரூ.350.00 இலட்சம் மாநில அரசின் பங்காகவும் தருமபுரி மாவட்ட ஒன்றியத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் ஒன்றியத்திற்கு 'கூட்டுறவுகளுக்கு உதவுதல்' திட்டத்தின் கீழ் ரூ.180.00 இலட்சம் வழங்குவதற்கான திட்டச் செயற்குறிப்பு மத்திய அரசிற்கு, மாநில அரசின் பரிந்துரையுடன் அனுப்பப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**சுனாமி பாதித்த மாவட்டங்களில் மக்கள் மறுவாழ்வுத் திட்டம்**

சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களில் ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank) உதவியுடன் 100 சதவிகித மானியத்துடன் பால் உற்பத்திக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெருக்க ஒரு சிறப்புத் திட்டத்தை இணையம் அறிமுகப்படுத்தவுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.619.15 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்றப்படவுள்ளன.

(1) பல்வேறு சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 5,000 உறுப்பினர்களுடன் 200 புதிய பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் தொடங்கப்படும். ரூ.100.00 இலட்சம் மதிப்புள்ள சங்க உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படும்.

(2) 19 பால் குளிர்விப்பான்கள் ரூ.309.00 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

(3) 45 சுய உதவிக் குழுக்களுக்கு 45 இடங்களில் பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்ய ரூ.201.15 இலட்சம் செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

(4) இத்திட்டத்தின்கீழ், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்குப் பால் பண்ணை தொழிலில் ரூ.9.00 இலட்சம் செலவில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.





இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசு முதல் தவணையாக ரூ.200.00 இலட்சத்தை விடுவித்துள்ளது.

**மாநில அரசுத் திட்டங்கள்**

**2007-2008 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டங்கள்**

பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ.418.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் அதிகபட்ச பங்கீடாக ரூ.218.00 இலட்சம் பால் வளத் துறைக்கு வழங்கப்பட உள்ளது. மீதமுள்ள ரூ.200.00 இலட்சத்தைப் பயனாளி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் / சங்கங்கள் ஏற்கும்.

(அ) 1,000 பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில், கேன் ஒன்றுக்கு ரூ.4,000/- விலை மதிப்பில், 5,000 துருவுறா எஃகு (Stainless Steel) பால் கொள்கலன்கள் கொள்முதல் செய்யப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டில் தமிழக அரசு 50 சதவிகிதமும், மீதமுள்ள 50 சதவிகிதம் பயன் அடையும் சங்கங்களும் ஏற்கும்.

(ஆ) 50 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவையான பால் சேகரிக்கும் தட்டு, புனல், வடிகட்டி, அளவு பாத்திரம் மற்றும் பரிசோதனை பாட்டில் அடங்கிய துருவுறா எஃகு (Stainless Steel) உபகரணங்கள், சங்கம் ஒன்றுக்கு ரூ.6,000/- மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் ஆகும்.

(இ) பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள 10 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்படும். ஒரு குளிர்விப்பானின் விலை ரூ.20.00 இலட்சம் ஆகும். மொத்த மதிப்பீடான ரூ.200.00 இலட்சத்தில் 50 விழுக்காடு மானியமாகத் தமிழக அரசு வழங்கும். மீதமுள்ள 50 விழுக்காடு பயன் பெறும் ஒன்றியம் ஏற்கும்.

(ஈ) 10 பால் கூட்டுறவுச் சங்கங்களில் கணினியுடன் இணைந்த பால் சேகரிக்கும் நிலையங்கள் ஒன்று ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.15.00 இலட்சம் செலவில் நிறுவப்படவுள்ளது. இச்செலவினத்தை அரசு ஏற்கும்.

[2007 ஏப்ரல் 27

**மாவட்ட அபிவிருத்தி மற்றும் சீர்திருத்தத் திட்டம்**

(அ) பிற்படுத்தப்பட்ட பகுதி மானிய நிதியுதவியின்கீழ் சிவகங்கை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் 119 சங்கங்களில் தரமான தூய பால் உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்தவும் 2 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவவும் ரூ.100.361 இலட்சம் தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் செயலாக்கத்தில் உள்ளது.

(ஆ) தஞ்சாவூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு, கால்நடை பாதுகாப்பு முகாம்கள்மூலம் பால் உற்பத்தியைப் பெருக்கவும், பால் உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், பசும்புல் வளர்ப்புத் திட்டம் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும் ரூ.110.29 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(இ) திண்டுக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு, பால் பதப்படுத்தும் இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்காக ரூ.43.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**பால் உற்பத்தி, திட்டமிடுதல் மற்றும் கண்காணித்தல் 2007-2008**

**(1) புதிய சங்கங்களை உருவாக்குதல்/வலுவிழந்த சங்கங்களைப் புனரமைத்தல்**

2007-2008 ஆம் ஆண்டில் 250 புதிய சங்கங்களை உருவாக்கவும் மற்றும் 50 சங்கங்களைப் புனரமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**(2) பால் கொள்முதல்**

2007-2008 ஆம் ஆண்டில் சங்கங்களிலிருந்து நாளொன்றுக்கு 28 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(3) பால் விற்பனை**

சென்னை மாநகரில் 2006-2007 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 9.87 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 10.25 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படும். ஒன்றியங்களில் 2006-2007 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 9.42 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 9.95 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படும்.



2007 ஏப்ரல் 27]

**(4) பால் பதப்படுத்தும் திறனை அதிகரித்தல்**

2007-2008 ஆம் ஆண்டில் அதிகப்படியான பால் பதப்படுத்துதல், பால் பாக்கெட்டுகளில் அடைத்தல் ஆகிய பணிகளுக்கு அந்தந்த மாவட்ட ஒன்றியங்களில் உள்ள நிதி ஆதாரத்தைக் கொண்டு ரூ.1,733.50 இலட்சம் மதிப்பீட்டில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

சிறிய ஒன்றியங்களுக்குத் தேவையான பால் மற்றும் பால் பொருட்களை அந்தப் பகுதியைச் சேர்ந்த பால் சமன்படுத்தும் பண்ணைகள்மூலம் வழங்கும் வகையில் பண்ணைகள் மேம்படுத்தப்படும்.

**(5) மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல்**

2007-2008 ஆம் ஆண்டில் 86 மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைத்து இயக்கப்படவுள்ளது.

**(6) பால் உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சி**

'தரமான தூய பால் உற்பத்தி' திட்டத்தின்கீழ் ரூ.37.00 இலட்சம் செலவில் 29,600 பால் உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். மேலும் ரூ.30.00 இலட்சம் செலவில் 8,000 பால் உற்பத்தியாளர்களுக்குக் கறவை மாடுகள் பராமரிப்பு குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

**11-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 2007-2008-இல் உருவாக்கப்படவுள்ள முன்னோடித் திட்டங்கள்:—**

**ஆய்வுக் கூட தொழில்நுட்பங்களைக் கிராம அளவில் செயல்படுத்துதல்**

**(1) தானியங்கி பால் சேகரிப்பு இயந்திரம்**

நாளொன்றுக்கு 1,000 லிட்டருக்கு மேல் பால் சேகரம் செய்யும் 30 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் ரூ.45.00 இலட்சம் செலவில் கணினியுடன் கூடிய தானியங்கி பால் சேகரிப்பு இயந்திரங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் சங்கங்களில் பால் சுகாதார முறையில் கையாளப்படும். பால் உற்பத்தியாளர்களுக்குத் தரத்தின் அடிப்படையில் பால் பணம் வழங்கப்படும்.

**(2) தீவனத் தயாரிப்பு இயந்திரம்**

நாளொன்றிற்கு 1,000 லிட்டருக்குமேல் பால் கொள்முதல் செய்யும் சங்கங்களில், ரூ.250.00 இலட்சம் மதிப்பில் நாளொன்றிற்கு 1,000 கிலோ மாட்டுத் தீவனம் உற்பத்தி செய்யக்கூடிய சிறு அளவிலான 50 மாட்டுத் தீவனத் தயாரிப்பு இயந்திரம் அமைக்கப்படும்.

**(3) தானியங்கி பால் கறவை இயந்திரம்**

பால் கறக்கப்படும்பொழுது சுகாதாரத்தை உறுதி செய்யவும், அதிகப் பால் தரும் பசுக்களைப் பராமரிக்கும் உற்பத்தியாளர்களுக்குக் கூடுதல் செலவினத்தைக் குறைக்கவும், தேர்ந்தெடுக்கப்பட்டச் சங்கங்களில் 4 தானியங்கி பால் கறவை இயந்திரங்கள் ரூ.5.80 இலட்சம் மதிப்பில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக மாட்டிலிருந்து கறந்த பாலின் ஆரம்பத் தரம் பாதுகாக்கப்படும்.

**(4) உணவுப் பூங்கா (Food park)**

முன்னோடித் திட்டமாக ரூ.2.00 இலட்சம் செலவில் மாவட்ட ஒன்றியத்தினால் சங்க அளவில் பால் பொருட்கள் தயாரித்து வழங்கும் 'உணவுப் பூங்கா' எனப்படும் புதிய திட்டம் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் (TANUVAS) தொழில்நுட்ப உதவியுடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(5) கிடேரிக் கன்று வளர்ப்புத் திட்டம்**

11-வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ.600.00 இலட்சம் மதிப்பில் 10,000 கலப்பினப் பசு மற்றும் எருமைக் கிடேரிக் கன்றுகள் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**கொள்கை உருவாக்கம்**

பசுவின் மடியிலிருந்து வரும் பாலின் ஆரம்பத் தரத்தைக் காக்கவும், கிராமப்புறங்களில் "தரமான, தூய பால் உற்பத்தி" நடவடிக்கைகளைச் செயல்படுத்தவும் 2007-2008 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.



**(அ) மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல்**

'தரமான தூய பால் உற்பத்திக்' கொள்கையின் அடிப்படையில் அருகிலுள்ள சங்கங்களை இணைத்து பிரதான சங்கத்தில் பால் குளிர்விப்பான் நிறுவப்படவுள்ளது. கறந்த பால் 30 நிமிடத்திற்குள் குளிர்விக்கப்படுகிறது. நுண்ணுயிர்களின் (Bacteria) வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டு பாலின் தூய்மை காக்கப்படுகிறது. பால் பொருட்களின் தரம் வெகுநாட்களுக்கு நீட்டிக்கப்படுகிறது. பால் போக்குவரத்துச் செலவு குறைக்கப்படும். 157 பால் குளிர்விப்பான்கள் ரூ.15.00 கோடி செலவில் 31-03-2008-க்கு முன் நிறுவப்படவுள்ளன.

இதுவரை, 22 பால் குளிர்விப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன. 49 பால் குளிர்விப்பான்கள் கொள்முதல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில், 86 பால் குளிர்விப்பான்கள் சங்கங்களில் நிறுவப்படவுள்ளன. இதனால் மாநில அளவில் பால் குளிர்விக்கும் திறன் 4.00 இலட்சம் லிட்டர் அதிகரிக்கும்.

**(ஆ) தரமான, தூய பால் உற்பத்தி**

சங்கங்களிலிருந்து தரமான, தூய பாலைக் கொள்முதல் செய்வதில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் முழு கவனம் செலுத்துகிறது.

தரமான, தூய பால் உற்பத்தி என்பது, பால் உற்பத்தி மட்டும் அல்லாமல் கால்நடைப் பராமரிப்பு, தீவனம், செயற்கை முறைக் கருவூட்டல், விவசாயிகளுக்குப் பயிற்சி, சங்கப் பணியாளர்களுக்கு பயிற்சி, பால் சேகரிக்கும் இடங்களில் தூய்மை, சுத்தமான துருவுறா எஃகு (Stainless Steel) பால் பாத்திரங்கள் உபயோகித்தல் மற்றும் பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல் ஆகியவை ஆகும். இதன் பயனாகப் பாலில் உள்ள நுண்ணுயிர் (Bacteria) எண்ணிக்கை குறையும்.

தரமான, தூய பால் உற்பத்தித் திட்டத்தின்கீழ், பால் கூட்டுறவுச் சங்கங்களால் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(1) அலுமினியப் கொள்கலன்கள் மற்றும் உபகரணங்களுக்குப் பதிலாக துருவுறா எஃகு (Stainless Steel) பொருட்களாக படிப்படியாக மாற்றப்படும்.

[2007 ஏப்ரல் 27

(2) பசுவின் மடியைச் சுத்தம் செய்ய 'Saaf kit' போன்ற கிருமி நாசினி (Antiseptic), தரமான பாலைப் பெறத் துருப்பிடிக்காத பால் பாத்திரம் (Pails) ஆகியவை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

(3) அதிக அளவில் தரமான, தூய பால் உற்பத்திக்கான விழிப்புணர்ச்சி பயிற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

(4) தரமான, தூய பால் உற்பத்தி முறையை விளக்கும் தமிழ்ப் புத்தகங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

(5) கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை ஆகியவைகளுடன் இணைந்து கால்நடை பராமரிப்பு மற்றும் இனவிருத்திமூலம் அதிக அளவில் கறவை மாடுகளைப் பெருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நடமாடும் இன அபிவிருத்தி வசதி - தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் திட்டம்

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையுடன் ஒருங்கிணைந்து கறவை மாடுகளுக்கு காப்பீடு செய்வது மட்டுமல்லாமல் பல்வேறு இன அபிவிருத்தித் திட்டங்களும் செயல்படுத்தப்படும். தனியார் நடமாடும் செயற்கைமுறை கருவூட்டல் எனும் உத்தியைக் கொண்டு, செயற்கை முறை கருவூட்டல் சேவை கிடைக்கப்பெறாத பகுதிகளில் உள்ள பால் கூட்டுறவுச் சங்கங்கள் பயன் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

## பால் கூட்டுறவுத் தணிக்கைத் துறை

பால் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கைத் துறை 1-10-1987 அன்று தொடங்கப்பெற்றது. மாநில அளவிலான தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம், மாவட்ட அளவிலான பால் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் கிராம அளவிலான பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் கணக்குகளைச் சட்டபூர்வமாகத் தணிக்கை செய்யும் பொறுப்பு இத்துறையைச் சார்ந்தது. கூட்டுறவுத் துறையிலிருந்து 335 பணியாளர்கள் அயற்பணியில் இத்துறையில் பணிபுரிந்து வருகின்றனர்.



2007 ஏப்ரல் 27]

## அரசு வருவாய்

2005-2006 ஆம் ஆண்டுக்குரிய தணிக்கைக் கட்டணம் மொத்த கேட்பு ரூ.59.01 இலட்சம் ஆகும். இத்தொகையில் ரூ.56.07 இலட்சம் இதுவரையில் வசூலிக்கப்பட்டுள்ளது. அடிப்படைத் தணிக்கை விதிக் கட்டணம் மொத்த கேட்புத் தொகை ரூ.58.40 இலட்சம் ஆகும். இதில் ரூ.53.60 இலட்சம் இதுவரையில் வசூல் செய்யப்பட்டுள்ளது.

## கூட்டு நடவடிக்கைத் திட்டம்

பால்வளத் துறை ஆணையர், காலமுறை தோறும் பால் கூட்டுறவு அமைப்புகளின் தணிக்கை முன்னேற்றம் குறித்து பால்வளத் துறை, இணையம், மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்கிறார்.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மாவட்ட ஒன்றியங்கள் தொடர்பான தணிக்கை முன்னேற்றம், முறையே ஒவ்வொரு மாதமும் முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது புதன்கிழமையன்று கூட்டப்படும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்படுகிறது.

தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்படும் குறைபாடுகள் தொடர்பாக ஆய்வு செய்யக் குழு ஒன்று அமைக்கப்பட்டு காலமுறைதோறும் கூட்டம் கூட்டப்பட்டு குறைகளைக் களைய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## தேசிய பால்வள வாரியத்தின் (National Dairy Development Board) பாராட்டு

தேசிய பால்வள வாரியம் வெளியிட்டுள்ள நவம்பர் 2006 செய்தி இதழில், தேசிய பால்வள வாரியம் ஆவின் நிறுவனத்தின் வளர்ச்சியைப் பாராட்டியுள்ளது. இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களால் நுகர்வோருக்கு வழங்கப்படும் பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தினைத் தொடர்ந்து நல்ல நிலையில் தக்க வைத்திருப்பது ஆவின் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் என்று இவ்விதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 27

கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை ஆகியவற்றின் வல்லுநர்களுடன் இணைந்து செயலாற்றி பால்வளத் துறையின் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்க, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் பகுப்பாய்வு மேற்கொண்டுள்ளது. கறவை மாடுகளுக்கு நோயற்ற மண்டலங்களை உருவாக்குதல், உலகத்தரத்திற்கேற்ப தரமான தூய பால் உற்பத்தி செய்தல், மதிப்புக் கூட்டப்பட்ட பால் மற்றும் பால் பொருட்கள் தயாரித்தல், புதிய வியாபார உத்திகளை மேற்கொள்ளுதல் போன்ற செயல்களினால் பால்வளத் துறையின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.



## இணைப்பு-IV

*(185 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

### பால் வளத் துறை

### அறிவிப்புகள், 2007–2008—தொடர்ச்சி

(1) 2007-2008 ஆம் ஆண்டில் 250 புதிய சங்கங்கள் உருவாக்கவும், 50 சங்கங்களைப் புனரமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(2) நடப்பு ஆண்டில் பால் உற்பத்தியில் சங்கங்களிலிருந்து நாளொன்றுக்கு 28 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

(3) 2007-2008 ஆம் ஆண்டில் அதிகப்படியான பால் பதப்படுத்துதல், பால்பைகளில் அடைத்தல் ஆகிய பணிகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் அந்தந்த மாவட்ட ஒன்றியங்களிலுள்ள நிதி ஆதாரத்தைக் கொண்டு ரூபாய் 1,733.50 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட உள்ளது.

(4) "தரமான தூய பால் உற்பத்தி" (Clean Milk Production) திட்டத்தின்கீழ் ரூபாய் 37 இலட்சம் செலவில் 29,600 பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். மேலும் ரூபாய் 30 இலட்சம் செலவில் 8,000 பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் பராமரிப்பு குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

(5) இதுவரை 22 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன. 49 மொத்த பால் குளிர்விப்பான்களுக்கு கொள்முதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் 86 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்படும். இதனால் மாநில அளவில் பால் குளிர்விக்கும் திறன் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் அதிகரிக்கும்.

**11–வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 2007–2008 இல் உருவாக்கப்படவுள்ள முன்னோடித் திட்டங்கள்:**

(6) நாளொன்றுக்கு 1,000 லிட்டருக்குமேல் பால் கொள்முதல் செய்யும் 30 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் ரூபாய் 45 இலட்சம் செலவில் கணினியுடன் கூடிய தானியங்கி பால் சேகரிப்பு இயந்திரங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(7) நாளொன்றுக்கு 1,000 லிட்டருக்குமேல் பால் கொள்முதல் செய்யும் 50 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் ரூபாய் 2.50 இலட்சம் மதிப்பில் நாளொன்றுக்கு 1,000 கிலோ மாட்டுத் தீவனம் உற்பத்தி செய்யும் அரைவை இயந்திரங்கள் அமைக்கப்படும்.

(8) தேர்ந்தெடுக்கப்பட்ட 4 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சோதனை அடிப்படையில் ரூபாய் 5.80 இலட்சம் செலவில் பால் கறவை இயந்திரங்கள் நிறுவப்படும்.

(9) 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2007-2012 ஆம் ஆண்டுக்குள் ரூபாய் 600 இலட்சம் மதிப்பில் 10,000 கலப்பினப் பசு மற்றும் எருமைக் கிடாரிக் கன்றுகள் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

**பணியாளர்களின் நலன்**

(10) அனைத்துச் சங்கப் பணியாளர்களுக்கும் 5 ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருந்த உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை பொங்கல் போனஸாக ரூ.825/- வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூபாய் 1.99 கோடி செலவிடப்பட்டுள்ளது.

(11) சங்கப் பணியாளர்களுக்கு சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு, பணிவரன்முறை மற்றும் ஊதிய நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(12) பால் பண்ணை, போக்குவரத்து மற்றும் விற்பனைப் பிரிவுகளின் பணியாளர்களுக்கு மழைக்கோட்டு வழங்குதல், தையற்கூலி உயர்வு, இரவுப் பணிப்படி உயர்வு மற்றும் சலவைப்படி உயர்வு ஆகியவை செயல்படுத்தப்பட்டுள்ளன.

(13) எலக்ட்ரீஷியன் நிலை-I மற்றும் கொதிகலன் பணியாளர் நிலை-II இவர்களுக்கான ஊதிய திருத்தங்கள் வழங்குதல், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு பணியில் சேர்க்கப்பட்ட பணியாளர்களுக்கு 5 சதவிகிதம் தனி ஊதியம், ஈடுசெய் தனி ஊதியம் போன்றவைகள் வழங்கப்பட்டுள்ளன.



(14) மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்ட நோயுற்ற பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு கடந்த காலங்களில் வழங்கப்படாமல் இருந்த மருத்துவ மீட்சித் தொகை ரூபாய் 6.80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(15) ஆவின் வரலாற்றில் முதன்முறையாக, இணையம் மற்றும் ஒன்றியப் பணியாளர்களுக்கு பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு தொடர்பாக, நிலை ஆணைகள் வழங்க வழிவகை மேற்கொள்ள உயர்மட்டக் குழு ஒன்றை அரசு நியமனம் செய்து மேல்நடவடிக்கை எடுத்து, தொழிலாளர் நலத் துறைமூலமாக வெளியிடப்பட உள்ளது.

(16) இந்த அரசு பொறுப்பேற்றபின் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க பணிக்காலத்தில் உயிர் நீத்த ஆவின் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு இணையத்தில் மட்டும் 25 வாரிசுதாரர்களுக்கு முதல்கட்டமாக நியமன ஆணை பிறப்பிக்கப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். ஏனைய தகுதியான வாரிசுதாரர்களுக்கு இணையம் மற்றும் ஒன்றியங்களில் பணி நியமன ஆணை விரைவில் வழங்கப்படும்.

(17) சென்ற நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டவாறு, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இதுவரை இணையம் மற்றும் ஒன்றியத்தில் 63 ஆவின் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய தகுதி உள்ள பணியாளர்களுக்கு பதவி உயர்வு அளித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(18) ஆவின் போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்படும் தினப்படியில் கூடுதலாக 25 சதவிகிதம் உயர்த்தித் தரப்படும்.

(19) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் தொழில்நுட்ப உதவியுடன் மாவட்ட ஒன்றியத்தினால் பால் உற்பத்தியாளர்கள் சங்க அளவில் பால் பொருட்கள் தயாரித்து வழங்கிட Food Park எனப்படும் 'உணவுப் பூங்கா' சுற்றுலாத்தலமாகிய வால்பாறையில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்படும்.

(20) சென்ற நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டவாறு நுகர்வோர் தேவையைக் கருத்தில் கொண்டு சென்னை பெருநகரில் சர்க்கரை இல்லாத ஐஸ்கிரீம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(21) கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் நடத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் நடத்தப்படும்.



# இணைப்பு-V

(190 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மீன்வளத் துறை

## அறிவிப்புகள், 2007-2008—தொடர்ச்சி

### மீனவ கிராமங்களுக்கு விளையாட்டுச் சாதனங்கள் வழங்குதல்

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களிலுள்ள 591 கிராமங்களிலுள்ள மீனவர் மற்றும் மீனவ மகளிர் பயனடையும் வகையில் மாண்புமிகு பாரதப் பிரதமரின் தேசிய பொது நிவாரண நிதியுதவியின்கீழ் தலா ரூ.10,000/- மதிப்பீட்டில் விளையாட்டுச் சாதனங்களாக கிரிக்கெட், கைப்பந்து, கால்பந்து, கபடி, கேரம், செஸ் வாங்கிட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இறுதி செய்யப்பட்டது. இதில் முதற்கட்டமாக நடப்பாண்டில் ஒரு கிராமத்திற்கு ரூ.5,976/- மதிப்புடைய விளையாட்டுச் சாதனங்கள் வாங்கி வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.23.78 இலட்சத்தினை 591 மீனவ கிராமங்களிலுள்ள மீனவர்/ மீனவ மகளிர் பயன்பெறும் வகையில் விளையாட்டு உபகரணங்கள் 2007-2008-இல் வாங்கி வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாட்டில் உள்நாட்டு மீனவர்களுக்கு தேசிய சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் அமலாக்குதல்

கடல் மீனவர்களுக்கு வழங்கப்படுவதுபோல், உள்நாட்டு மீனவர் வாழ்க்கைத்தரம் மற்றும் வாழ்வாதாரங்களை உயர்த்தும் பொருட்டும், குறைந்தபட்ச வருவாயை உறுதிப்படுத்திடும் வகையிலும், மீன்பிடிப்பு இல்லாத மற்றும் குறைவாக உள்ள காலங்களில், அவர்களுக்குப் பொருளாதார ரீதியில் உதவிட, "தேசிய சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்" உள்நாட்டு மீனவர்களுக்கு விரிவு செய்யப்பட்டு, சுமார் 68,844 உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் 2007-2008 முதல் செயல்படுத்தப்படும்.

### வண்ண மீன் தொழில்நுட்பப் பூங்கா அமைத்தல்

வண்ண மீன் உற்பத்தியாளர், வளர்ப்போர் மற்றும் வர்த்தகர்களின் நியாயமான கோரிக்கையை உணர்ந்து அவர்களின் துயர்களைத் துடைத்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வர்த்தகத்தை ஊக்குவிக்கும்பொருட்டு, மீன் உற்பத்தித் தரத்தினை மேம்படுத்திடவும்

மற்றும் ஏற்றுமதியினை அதிகரிக்கவும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின்மூலம் மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம் (MPEDA) ஆகியவற்றின் நிதி உதவி மற்றும் தொழில்நுட்ப உதவியோடு வண்ண மீன் தொழில்நுட்பப் பூங்காவினை ஏற்படுத்தி, வண்ண மீன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியினை உயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**நவீன மீன் உணவகம் நிறுவுதல்**

மீன் உணவு நுகர்வோரின் விருப்பத்திற்கேற்றபடி வெவ்வேறு வகைச் சமையல் முறைகளில், வெவ்வேறு வகை மீன் பதார்த்தங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தி, மீன் உணவினைப் பிரபலப்படுத்தும் நோக்கோடு, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மேம்படுத்தப்பட்ட நிலையில் நவீன மீன் உணவகம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் ரூ.60.00 இலட்சம் செலவில், விரைவில் அதனைச் சென்னையில் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சூரை மீன்பிடித்தலை நவீனப்படுத்துதல்**

சூரை மீன் பிடிப்பினைப் பிரபலப்படுத்தி, கடல் மீனவர்களின் வருவாயைப் பெருக்கிடவும், சுற்றுச்சூழல் மற்றும் மீன்வளப் பாதுகாப்பு அடிப்படையில் இழுவகை மீன்பிடிப்புக்கு மாற்றாகச் சூரை மீன்பிடிப்பினைப் பிரபலப்படுத்தி ஆழ்கடல் மீன்பிடிப்பினை ஊக்குவிக்கவும், அதன்மூலம் நவீன வகை ஏற்றுமதி ரக சூரை மீன்பிடிப்பை ஊக்குவிக்கவும் மற்றும் சூரை மீன் பதப்படுத்துதலை ஏற்றுமதித் தரத்திற்கு நவீனப்படுத்தவும் மத்திய, மாநில அரசுகள் மற்றும் கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணைய நிதி உதவியோடு கலன்கள் மற்றும் கட்டமைப்புகள் நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மீனவர் வாழ்க்கைத்தரம் உயர்வதோடு, கணிசமான ஏற்றுமதி மற்றும் அன்னியச் செலாவணி முன்னேற்றமும் ஏற்பட வாய்ப்புள்ளது.

**மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்களைச் சர்வதேச தரக்கட்டுப்பாட்டிற்கேற்பப் பராமரிக்க நிர்வாகக் குழு ஏற்படுத்துதல்**

தமிழ்நாட்டில் இயங்கி வரும் 13,164 மீன்பிடி விசைப்படகுகளையும் மற்றும் 59,741 நாட்டுப்படகுகளையும் பாதுகாப்பாக நிறுத்த மீன்பிடித் துறைமுகங்களும், மீன் இறங்கு தளங்களும் பயன்படுத்தப்படுவதால், மத்திய அரசின் பங்களிப்புத் திட்டத்தின்கீழ் 3 பெரிய மீன்பிடித் துறைமுகங்கள் 4 நடுத்தர மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் 12 மீன்



இறங்கு தளங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது. இவை தவிர, தேசிய இயற்கை இடர்ப்பாடு சிறப்பு நிதியிலிருந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை மேம்படுத்தும் விதமாக 10 மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்பட உள்ளன. இயந்திரம் பொருத்தப்பட்ட மற்றும் இயந்திரம் பொருத்தப்படாத பாரம்பரிய கலன்களும், சில மீன் இறங்கு தளங்களைப் பயன்படுத்தி வருகின்றன. ஐரோப்பிய கூட்டமைப்பு, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இறக்குமதி செய்யும்போது சர்வதேசத் தரக்கட்டுப்பாடுகளை அமலாக்கிட வற்புறுத்துவதால் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களில் அவர்கள் கோரக்கூடிய சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் இதர நிலைப்பாடுகளைச் சர்வதேசத் தரக்கட்டுப்பாட்டிற்கேற்பப் பராமரிப்பது கட்டாயமாகிறது.

எனவே, சர்வதேசத் தரக்கட்டுப்பாடு வரையறைகளின்படியான மீன்பிடித் துறைமுகம், மீன் இறங்கு தளம் ஆகியவற்றின் சுகாதார நிலைப்பாடுகளை மேலாண்மை புரியும்பொருட்டு, மாவட்ட நிர்வாகம், அரசுத் துறை தொழில் நுட்ப அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் பிரதிநிதி ஆகியோர் கூடிய குழுவை ஏற்படுத்தி மேலாண்மை புரிய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்மேலாண்மைக் குழு, பயனாளிகளிடமிருந்து பயன்பாட்டுக் கட்டணம் மற்றும் படகு தங்கு தளக் கட்டணம் ஆகியவைகளை வசூலிக்கும் பொறுப்போடு மீன்பிடித் துறைமுகத்தை நிர்வகித்தல், தினப்படி நிர்வாகம் செய்தல் மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பால் வரையறுக்கப்பட்ட விதிகளின்படி வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும்.

**தமிழ்நாட்டின் மீன்குஞ்சு உற்பத்தியில் தன்னிறைவு இலக்கு நோக்கிக் கையாளப்படவுள்ள முறைகள்**

தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வளப் பயன்பாட்டிற்கேற்ற 3.70 இலட்சம் எக்டேர் நீர்வள ஆதாரத்தில், 52,000 எக்டேர் நீர்த்தேக்கங்கள், 97,000 எக்டேர் பெரிய மற்றும் பருவகாலக் குளங்கள், 1,58,000 எக்டேர் சிறிய மற்றும் குறுகிய பருவ காலக் குளங்கள் மற்றும் 63,000 எக்டேர் உவர்நீர் மற்றும் கழிமுகப் பகுதிகள் அடங்கியதாகும். இவற்றில் உவர்நீர் மற்றும் கழிமுகப் பகுதிகள் நீங்கலாக மீதமுள்ள உள்நாட்டு நீர்நிலைகள் உள்நாட்டு மீன்வள அபிவிருத்திக்கு உகந்ததாகும். தற்சமயம் 4.50 இலட்சம் மெட்ரிக் டன் மீன் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ள நிலையில் 1.55 இலட்சம் டன் உள்நாட்டு மீன் உற்பத்தி மட்டுமே செய்யப்படுகிறது. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை ஏற்பட்டதால் ஊரகப் பகுதிகளில் மீன் வளர்ப்பில் புரட்சிகர மாற்றங்கள் ஏற்பட்டன.

[2007 ஏப்ரல் 27

தமிழ்நாட்டிலுள்ள மீன்வளர்ப்பிற்கேற்ற நீர்நிலைகளில் இருப்பு செய்திட ஆண்டுதோறும் 232 மில்லியன் தரமான மீன்குஞ்சுகள் தேவைப்படுகின்றன. மீன்வளத் துறை மற்றும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மீன் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் 80 மில்லியன் மீன்குஞ்சுகளைத் தவிர, தனியார் 80 மில்லியன் மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்தாலும், மீன்குஞ்சுகளின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே 72 மில்லியன் இடைவெளியுள்ளது. இந்த இடைவெளியினைக் குறைத்திட 15 எக்டேர் மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பிடங்களை மேம்பாடு செய்வது அவசியமாகிறது.

மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பழுதடைந்துள்ள 8.5 எக்டேர் பண்ணையினை சீர்படுத்தவும், தனியார்மூலம் 6.5 எக்டேர் ஏற்படுத்தி ஊக்கப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவைப்படும் ரூ.450.00 இலட்சம் நிதியில், தனியார் துறையை ஊக்கப்படுத்த தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திலிருந்து நிதியுதவி பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணியை 4 ஆண்டு காலத்தில் படிப்படியாக மேற்கொள்ள வேண்டி, 11-ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இதற்கு ரூ.200.00 இலட்சம் நிதியும் கோரப்பட்டுள்ளது.

## உள்நாட்டு. மற்றும் கடலோர நீர் ஆதாரங்களை மீன்வளர்ப்பும் பணிக்காகக் குத்தகைக்கு விடுதல்

ஊரகப் பொருளாதாரத்தில் மீன்வளம் வேளாண்மைக்கு இணையான தொன்மையான தொழிலாக ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உகந்த புரதம் நிறைந்த உணவாக மீன் கருதப்படுகிறது. வேலைவாய்ப்பை, குறிப்பாக ஊரக மக்களிடையே ஏற்படுத்துவதுடன், உள்நாட்டுப் பயன்பாட்டிற்கும் குறிப்பிடத்தக்க அளவில் ஏற்றுமதியின்மூலம் வருவாய் பெறவும், மீன்வளம் உதவுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலும் நன்னீர் மற்றும் கடல் வளத்தில் மீன்வளத்தை அபிவிருத்தி செய்திட ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

தற்போது பொதுப் பணித் துறை, ஊரக வளர்ச்சித் துறை, இந்து சமய அறநிலையத் துறை மற்றும் வனத் துறை ஆகிய பல்வேறு துறைகள் தங்களுடைய கட்டுப்பாட்டிலுள்ள நீர்நிலைகளை மீன்வளம் உள்ளிட்ட இதர வகையிலான பணிகளுக்கு நீரைப் பயன்படுத்துவோருக்குக் குத்தகைக்கு விட நடவடிக்கை மேற்கொள்கின்றனர். தமிழக அரசு, "தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனப்படுத்துதல், நீர்நிலைகள் சீரமைப்பு மற்றும் மேலாண்மை" எனும் திட்டத்தினை உருவாக்கி அதனில் மீன்வள அபிவிருத்தியை ஒருங்கிணைத்து 9 உப நதி



2007 ஏப்ரல் 27]

நீர்த்திட்டங்களில் ஐந்தாண்டுகளில் செயல்படுத்திட ரூ.3.61 கோடி ஒப்பளித்துள்ளது. தமிழ்நாடு நீர்ப்பாசன மேலாண்மைத் திட்டம், 2000 சட்டம், நீர் உபயோகிப்போராகிய விவசாயிகளுக்கு மட்டுமே நீரினை உபயோகித்திடவும் அதிலுள்ள மீன்வளத்தை அனுபவிக்கவும் உரிமை அளிக்கிறது. இதன்காரணமாக மீன்வளத்தையே நம்பியிருக்கும் மீனவர்களின் உரிமை மறுக்கப்படுவதால் பிரச்சினைகள் எழுகின்றன. இத்துடன் அனைத்து நீர்நிலைகளிலும் மீன்குஞ்சுகளை இருப்பு செய்து தன்னிறைவு அடைய தமிழக அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பல்வேறு துறைகளில் கடைப்பிடிக்கப்படும் வெவ்வேறு விதமான குத்தகைக் கொள்கைகள், உள்நாட்டு நீர் ஆதாரங்களில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்து மீன்வளத்தைப் பெருக்கிட உகந்ததாக அமையவில்லை. இவ்வாறான குறைபாடுகளை நீக்குவதற்கும், உள்நாட்டு மீனவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், தகுதிவாய்ந்த குத்தகைக் கொள்கையை உருவாக்குதல் அவசியமாகிறது.

உத்தேசிக்கப்பட்டுள்ள மீன்வளக் குத்தகைக் கொள்கை, மீன்வளத்தைக் குறைவுபடாமல் பயன்படுத்துதல், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், சந்தைப்படுத்துதலைப் பலப்படுத்துதல், நீர்வாழ் உயிரின வளர்ப்பினைத் தொய்வின்றி மேம்படுத்துதல், மீன்வளம்/மீன்வளர்ப்போரின் சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி வாய்ப்பை அதிகரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

இக்குத்தகைக் கொள்கை, பயன்படுத்துவோர், அரசு சாரா நிறுவனங்கள், மத்திய மற்றும் மாநில ஆராய்ச்சி நிறுவனங்கள் தொடர்புடைய துறைகள் மற்றும் நீர்வள ஆதாரங்கள் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு செய்வதற்கான கட்டுப்பாடுகள் செய்யும் நிறுவனங்கள் ஆகியவற்றைக் கலந்து ஏற்படுத்தப்படும்.

இக்கொள்கையை ஏற்படுத்தும் ஒரு செயலாக, மும்பையில் இயங்கும் மத்திய மீன்வளக் கல்வி நிறுவனத்துடன் இணைந்து ஒரு பொதுவான குத்தகைக் கொள்கையை ஏற்படுத்திடும் செயலை மீன்வளத் துறை ஏற்கெனவே தொடங்கியுள்ளது.

## தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள்

தமிழ்நாட்டின் 13 கடலோர மாவட்டங்களில் 13,164 இயந்திரப் படகுகளும், 59,741 பாரம்பரிய மீன்பிடி கலன்களும் செயல்படுகின்றன.

இவ்வாறான பல்வகை மீன்பிடி படகுகள் மற்றும் பாரம்பரிய கலன் செய்து வரும் மீன்பிடிப்புப் பணியை முறைப்படுத்திட வேண்டி, 1983-இல் தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம் இயற்றப்பட்டு, அவ்வப்போது தேவையான மாற்றங்கள் காலப்போக்கில் மேற்கொள்ளப்பட்டன.

சமீப காலங்களில் அண்மைக்கடல் பகுதியில் உள்ள மீன்வளம் அதிக அளவில் பிடிக்கப்படுவதாலும், இழுவலையை அதிகம் சார்ந்து மீன்பிடிக்கப்படுவதாலும், கடல் மீன்பிடிப்பின்போது இவ்வளங்களைப் பயன்படுத்துவோரிடையே சச்சரவும் மோதல்களும் ஏற்பட்டுள்ளன. பாரம்பரிய மரக்கலன்கள், மாறி வரும் போக்கிற்கேற்ப கண்ணாடி நாரிழை, எஃகு ஆகிய பொருளால் செய்யப்பட்ட கலனாக மாறிவரும் இந்த முக்கியச் சூழ்நிலையில், மீன்வளத்தினைப் பாதுகாக்கவும், மாற்று மீன்பிடிப்பு முறையான சூரை போன்ற மாற்றுவகை மீன்பிடிப்பு மற்றும் ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்கப்படுத்த வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது.

மீன்பிடி முறை, மீன்பிடி கலன்கள் மற்றும் கருவிகள் ஆகியவை நவீனப்படுத்தப்பட்டு ஆழ்கடல் வளத்தினைப் பயன்படுத்தவும் , சூரை மற்றும் ' மாற்று வகை மீன்களைப் பிடிக்க ஊக்கப்படுத்தப்படும் நிலையில், கடலில் மீன்பிடிக்க வேண்டிய நேரத்தை நிர்ணயம் செய்தல், உரிமம் வழங்கும் முறை, மீன்பிடி கலன்கள் கருவிகளை மறுவகைப்படுத்துதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு. தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ள உத்தேசிக்கப்படுகிறது.

**நூற்றாண்டு விழா காணும் மீன்வளத் துறை நூலகத்தை மேம்படுத்துதல்**

நூறு ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் பாரம்பரியப் புகழ் பெற்ற மீன்வளத் துறையின் நூலகத்தில் விலை மதிப்புள்ள மீன்வளம் சம்பந்தப்பட்ட 3,000 புத்தகங்கள், 109 பிரசுரங்கள், 32 தொழில்நுட்பக் காலமுறை ஆங்கில இதழ்கள், சஞ்சிகைகள், 10 தொழில்நுட்ப தமிழ் காலமுறை இதழ்கள், சஞ்சிகைகள் மற்றும் 29 துறை வெளியீடுகள் ஆகியன பராமரிக்கப்படுகின்றன. தேசிய மற்றும் சர்வதேச அளவிலான புத்தகங்கள், சஞ்சிகைகள் போன்றவை, மீன்வள ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோருக்கும், துறை வளர்ச்சிக்கும் மிகவும் இன்றியமையாதனவாகக் கருதப்படுவதால் 2007-2008 ஆம் ஆண்டில் மீன்வளத் துறை நூலக மேம்பாட்டிற்கு ரூ.8.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து மேம்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.



**அண்மைக் கடல் பகுதிகளில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்து, கடல் மீன் உற்பத்தியினை அதிகரித்தல்**

சமீப காலங்களில் கடல்வாழ் உயிரினங்கள் அதிக அளவில் பிடிக்கப்படுவதால் அண்மைக்கடல் மீன்வளம் பெருமளவில் பாதிக்கப்படுவதோடு, இதனால் அதனையே நம்பி வாழும் பாரம்பரிய மீனவர்களின் வருவாய் பாதிக்கப்படுவதால், மீன் இருப்பு பாதிப்பினை ஈடு செய்ய, செயற்கை மீன் உறைவிடங்களை உருவாக்கி மீன்வளத்தைப் பெருக்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் கடல்வாழ் உயிரினங்களின் இருப்பு அதிகரித்து, மீன்வளமும், மீன்பிடிப்பும் அதிகரிக்கும். இத்திட்டத்தினால், மீனவரின் வருவாய் அதிகரித்து, மீனவரின் வாழ்க்கைத்தரம் உயர்வடையும். 2007-2008 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் ரூ.20.00 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

**உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்பிடி சாதனங்கள் மானியத்துடன் அளித்தல்**

மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 53 நீர்த்தேக்கங்களிலும், மீன்வளத் துறை மூலம் தரமான மீன்குஞ்சுகளை இருப்பு செய்து, உரிமச்சீட்டு வழங்கி அல்லது உள்ளூர் மீனவர்களை ஈடுபடுத்தி, பங்குமுறையில் நடத்தப்படும் மீன்பிடிப்புக்குப் பரிசல்கள் மற்றும் மீன்பிடி வலைகள் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய மீன்பிடிச் சாதனங்கள் வாங்குவதற்கு, 2 அல்லது 3 மீனவர்கள் உள்ள ஒவ்வொரு பங்கு மீனவர் குழுவிற்கும் ஒரு கண்ணாடி நாரிழை பரிசலும், சுமார் 10 கிலோ மீன்பிடி நைலான் வலையும் 50 விழுக்காடு மானிய விலையில் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் செலவில் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் 200 பங்கு மீனவர்கள் பயன்பெறுவார்கள்.

**தமிழ்நாடு மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகளை மேம்படுத்துதல்**

மீன்வளத் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் 8 மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகளையும், 27 மீன்குஞ்சு வளர்ப்பிடங்களையும் பயன்படுத்தி ஆண்டுக்கு 3,025 இலட்சம் நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்ய இடவசதியிருப்பினும், மொத்தமுள்ள 16 எக்டேர் பரப்பளவு பண்ணையில் 8.5 எக்டேர் பரப்பளவுள்ள பண்ணை பழுது

காரணமாகச் செயல்படாதுள்ளது. இப்பழுதுகளை நிவர்த்திக்க ரூ.30.00 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 37.5 இலட்சம் மீன்குஞ்சு விரலிகள் கூடுதலாக உற்பத்தி செய்திட இயலும்.

## ஆழியார் மீன்பண்ணையில் உள்ள பழுதுற்ற மீன்குஞ்சு வளர்த்தெடுப்புக் குளங்களைச் சிறப்புப் பழுதுபார்த்தல் மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்துதல்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில், கோயம்புத்தூர் ஆழியார் நீர்த்தேக்கம் மீன்பண்ணையில் நுண்மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் குஞ்சு வளர்த்தெடுத்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மொத்தமுள்ள 20,175 சதுர மீட்டரில், பழுதடைந்துள்ள, 1,680 சதுர மீட்டர் பரப்பளவு மீன் பண்ணையினை ரூ.18.80 இலட்சம் செலவில் பழுது நிவர்த்திக்க 2007-2008-இல் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இப்பண்ணையில் ஆண்டுக்கு 8.40 இலட்சம் மீன்குஞ்சுகள் கூடுதலாக உற்பத்தி செய்திட இயலும்.

## கொசுக்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தி, ஒழிப்பதற்குக் கொசுப் புழுக்களை உண்ணும் வகை மீன்களை இருப்பு செய்தல்

ஆழம் குறைந்த, செடி கொடிகள் மண்டியுள்ள நீர்நிலைகள், குளங்கள் மற்றும் நீர் தேங்கும் சிறுகுட்டைகள் ஆகியன கொசுக்கள் முட்டையிட்டு உற்பத்தி பெருக்கும் இடங்களாகக் கருதப்படுவதால், கொசுக்களை உற்பத்தி நிலையிலேயே அழித்திட வேண்டி, கொசுப்புழுக்களை உண்ணும் மீன்களை அத்தகு நீர்நிலைகளில் வளர்ப்பதே கொசுக்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் மற்றும் ஒழிக்கும் சிறந்த முறையாகும். இதற்கென கம்பூசியா அபினிஸ், லெபிஸ்டஸ் ரெடிகுலேடஸ் வகை மீன்கள், சேத்துப்பட்டு, அரூர், குளித்தலை மற்றும் மேட்டூர் அணை ஆகிய இடங்களில் உள்ள மீன் பண்ணைகளில் வளர்த்தெடுக்கப்பட்டு, கொசுக்கள் அழிக்கப்படவேண்டிய நீர்நிலைகளில் இருப்பு செய்யப்படும். இதற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் இத்திட்டத்திற்கெனச் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.



# இணைப்பு-VI

*(196 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கால்நடை பராமரிப்புத் துறை

## அறிவிப்புகள், 2007–2008

## அறிவிப்புகள்

1. கால்நடை வளர்ப்போரின் நலனைக் கருத்தில் கொண்டு கால்நடை மருத்துவ சேவைகள் பரவலாகக் கிடைக்க நடப்பு நிதியாண்டில் புதியதாக 40 கால்நடை மருந்தகங்கள் சுமார் ரூ.575.00 இலட்சம் செலவில் தொடங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. ஒரத்தநாடு மற்றும் அபிஷேகப்பட்டி மாவட்ட கால்நடை பண்ணைகளில் கூடுதலாக 100 ஏக்கர் நிலம் பசுந்தீவன சாகுபடிக்குக் கொண்டு வந்து பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தஞ்சை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் மரபுசார் மூலிகை மருத்துவ முறைகளுக்கான ஆய்வு மற்றும் பயிற்சிக்கூடம் ஒன்றினை 18 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள்.

4. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் மடிவீக்க நோய்க்கு தடுப்பூசி தயாரிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 17 இலட்சம் ரூபாய் வழங்கி உத்தரவிட்டுள்ளார்கள்.

5. நாமக்கல் பகுதியில் உற்பத்தியாகும் கோழி முட்டைகளைத் தரம் கெடாமல் பாதுகாப்பதற்காக சுமார் ஒரு கோடி ரூபாய் அரசு equity-யுடன், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும் (TIDCO), தொழில்முனைவோரும் இணைந்து நடத்தும் (Joint Venture) குளிர்ப்பதன வசதி வைப்பறை தொடங்க அரசு நடவடிக்கை

எடுத்து வருகிறது என்பதை இம்மான்றத்திற்கு மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக அரசு ஒரு கோடி ரூபாய் தொடராச் செலவினமாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு வழங்கும். இதன்மூலம் சுமார் 7 முதல் 10 கோடி முட்டைகள் பாதுகாக்கப்படும். இதனால் அப்பகுதியில் உள்ள அனைத்து கோழி வளர்ப்போரும் பயன்பெறுவர்.

6. திருநெல்வேலி மாவட்டம், அபிஷேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் இயங்கி வரும் பன்றி வளர்ப்புப் பிரிவின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, புதிய ஆண் பன்றிகளை வாங்கி இனப்பெருக்கம் செய்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 33 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் வழங்கி உத்தரவிட்டுள்ளார்கள்.

7. நாமக்கல் மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு புதிய மண்டல இணை இயக்குநர் பதவி இவ்வாண்டு தோற்றுவிக்கப்படும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

8. குக்கிராமங்களில் வசிக்கும் விவசாயிகள் வளர்க்கும் கால்நடைகளுக்கு மருத்துவம் மற்றும் இனப்பெருக்க சேவையை அளிக்க 55 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் செயல்படுகின்றன. இவற்றில் 12 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் கடந்த 5 ஆண்டுகளாகச் செயல்படவில்லை. அவ்வாறு செயல்படாத 12 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகளில் ஆறு நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் சென்ற நிதிநிலை அறிக்கையில் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு அவை தற்போது சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. செயல்படாமல் உள்ள ஆறு நடமாடும் கால்நடைப் பிரிவுகளில் உள்ள ஊர்திகளை நடப்பு நிதியாண்டில் மாற்றி அவைகளுக்குப் பதிலாக புதிய 6 ஊர்திகளை 28 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

9. கால்நடைகளுக்கான நோய்களைக் கண்காணித்து கட்டுப்படுத்திட தற்போது மாநிலத்தில் 19 மாவட்டங்களில் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. அண்டை மாநிலமான கர்நாடகத்திலிருந்து நோய் பரவுவதை அறிதல் மற்றும் தடுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு 26 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் செலவில் நடப்பு ஆண்டில் தருமபுரியில் ஒரு புதிய கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு ஏற்படுத்திட முத்தமிழ் வித்தகர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள்.



10. கால்நடை மருந்தகங்களுக்கு தொலைபேசி வசதி செய்யும் பொருட்டு முதற்கட்டமாக 385 ஊராட்சி ஒன்றிய தலைமையிடங்களில் செயல்பட்டு வரும் கால்நடை மருந்தகங்களுக்கு நடப்பு நிதியாண்டில் 18 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் 385 செல்போன்கள் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

11. சென்னை மாநகர செல்லப்பிராணிகள் வளர்ப்போரின் வசதியினைக் கருத்தில்கொண்டு அடையாறில் செல்லப்பிராணிகள் மருந்தகம் 14-9-2006-ல் தொடங்கப்பட்டது. இம்மருந்தகத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 20 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளார்கள்.

12. தமிழகத்தில் 2,126 பார்வைக் கிளை நிலையங்கள் கழக ஆட்சியில் கடந்த ஜூலை 1997-ம் ஆண்டு தொடங்கப்பட்டன. இப்பார்வைக் கிளை நிலையங்களில் வாரம் இருமுறை பிற்பகல் நேரங்களில் கால்நடை ஆய்வாளர்மூலமாக செயற்கை முறை கருவூட்டல் மற்றும் முதலுதவி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. பின்னர் பிப்ரவரி 2005 முதல் இப்பார்வைக் கிளை நிலையங்கள் யாவும் முழுவதுமாக மூடப்பட்டன. முதற்கட்டமாக ஏற்கெனவே மூடப்பட்ட பார்வைக் கிளை நிலையங்களில் உள்கட்டமைப்பு வசதியுடன் கூடிய 55 பார்வைக் கிளை நிலையங்கள் நடப்பு நிதியாண்டில் ரூ.1.65 இலட்சம் செலவில் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் அறிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

13. கால்நடை ஆய்வாளர் நிலை-2 பதவிக்கான 11 மாத பயிற்சி துறையிலுள்ள கால்நடை பண்ணைகளான மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒசூர் மற்றும் ஒரத்தநாடு ஆகிய

இடங்களில் 250 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வந்தன. தற்பொழுது உள்ள தேவையினை ஈடுசெய்ய 425 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட வேண்டியுள்ளது. இதற்கென 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் ஒசூர் பண்ணையில் உள்ள பயிற்சி வகுப்பறை மற்றும் தங்கும் விடுதிகளின் உள்கட்டமைப்பு வசதிகள். ஒரத்தநாடு பண்ணையில் 16 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் பயிற்சி வகுப்பறை மற்றும் தங்கும் விடுதிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். மேலும். முகுந்தராயபுரம் ஆட்டுப்பண்ணையில் 52 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் செலவில் உள்கட்டமைப்பு வசதிகள், செம்மறி ஆடுகள் வாங்குதல் மற்றும் தீவனப் புல் உற்பத்தி ஆகிய பணிகள் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். 425 கால்நடை ஆய்வாளர் பயிற்சிக்கு தகுதியானவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பயிற்சியளிக்கப்படுவார்கள்.

14. தமிழகத்தில் கடைப்பிடிக்க வேண்டிய இனவிருத்திக் கொள்கை தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலம் புதிதாக வகுக்கப்பட்டு உள்ளது.

15. செயற்கைமுறை கருவூட்டல் பணி வெற்றிகரமாக நடைபெறும் பொருட்டு, விவசாயிகளின் வீட்டிற்கே சென்று அப்பணியினை செய்யத் தேவையான உபகரணங்கள் கால்நடை பராமரிப்புத் துறையில் உள்ள 771 நிலையான செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டு, அவை நிலையான மற்றும் நடமாடும் செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் 1,700 நிலையான செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள், நிலையான மற்றும் நடமாடும் செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களாக 1 கோடியே 8 ஆயிரம் ரூபாய் செலவில் மாற்றம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

16. ஈச்சங்கோட்டை அயலின கால்நடைப் பெருக்குப் பண்ணை மற்றும் உதகை மாவட்ட கால்நடை பண்ணையிலுள்ள உறைவிந்து உற்பத்தி நிலையங்களுக்கு சர்வதேசத் தரச் சான்றிதழ் (ISO) நடப்பாண்டில் பெறப்படும்.



17. செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்படும் உறைவிந்துக் குச்சிகளின் தரத்தினை உறுதி செய்ய, தங்குதடையற்ற சீரான திரவ நைட்ரஜன் விநியோகம் இன்றியமையாததாகும். திரவ நைட்ரஜன் விநியோகத்தில் ஏற்படக்கூடிய இடர்களை நீக்க 3,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட திரவ நைட்ரஜன் கலன்கள் முதற்கட்டமாக 10 மாவட்டங்களில் நிறுவப்பட்டன. நடப்பாண்டில் மேலும் 10 இடங்களில் 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் 6,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட திரவ நைட்ரஜன் சேமிப்புக் கலன்கள் நிறுவ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

D
V24, 31'07.
P07.33.1

227660